
சமூக அரசியல்
ஆரம்ப நூல் வரிசை

# முதலாளித்துவம் என்றால் என்ன?

அ. புசுயெவ்



முன்னேற்றப் பதிப்பகம்

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

V


அ. புசுயெவ்


# முதலாளித்துவம் என்றால் என்ன?


முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: டாக்டர் இரா. பாஸ்கரன்

நூல் வரிசையின் பதிப்பாசிரியர் குழு:

எஃப். எம். வோல்கவ் (தலைமைப் பதிப்பாசிரியர்),
ஈ. எஃப். குப்ஸ்கி (துணைப் பதிப்பாசிரியர்),
எஃப். எம். புர்லாட்ஸ்கி, வி. டி. ஸோதவ், வி. வி. கிரபிவின்,
யூ. என். பொபோவ், வி. வி. ஸோபலெவ்,
எஃப். என். யூர்லொவ்

ABC СОЦИАЛЬНО-ПОЛИТИЧЕСКИХ ЗНАНИЙ

**Бузуев А.**

ЧТО ТАКОЕ КАПИТАЛИЗМ?

*на тамильском языке*

ABC OF SOCIAL AND POLITICAL KNOWLEDGE

**Buzuev A.**

WHAT IS CAPITALISM?

*in Tamil*

© Progress Publishers, 1985

© தமிழ் மொழிபெயர்ப்பு, முன்னேற்றப் பதிப்பகம், 1989

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$Б\frac{0602010200-471}{014(01)-89}313-89$

ISBN 5—01—001466—1

## பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . . . 9

அத்தியாயம் ஒன்று
முதலாளித்துவத்தின் தோற்றமும் சாரமும் . 13

கா. மார்க்சின் "மூலதனம்" . . . . . . . . 14
முதலாளித்துவத்தின் பிறப்பு . . . . . . . 18
மூலதனத்தின் ஆதித் திரட்சி . . . . . . . . 23
எளிய மற்றும் முதலாளித்துவப் பண்ட உற்பத்தி 27
பண்டமும் அதன் தன்மைகளும் . . . . . 30
பண்ட மதிப்பின் அளவு . . . . . . . . 33
பணத்தின் சாரமும் அதன் செயற்பாடுகளும் . 35
பணம் மூலதனமாதல் . . . . . . . . . 37
உழைப்புச் சக்தி என்ற பண்டம் . . . . . . . 40

அத்தியாயம் இரண்டு
தொழிலாளர்களின் குருதியை உறிஞ்சும் பிசாசு 44

முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளா
தார விதி . . . . . . . . . . . . . . 44

மூலதனமும் அதன் உட்கூறுகளும் . . . . 49
உழைப்பாளிகளின் சுரண்டல் மட்டத்தை அதிகரிக்கும் இரண்டு முறைகள் . . . . . . . . 52
முதலாளித்துவத்தில் ஊதியம் . . . . . . . 57
பெயரளவு ஊதியமும் உண்மை ஊதியமும் . 63

அத்தியாயம் மூன்று
சுரண்டலாளர்களின் ''புனிதக் கூட்டு'' . . . . 67

சராசரி லாபமும் உற்பத்தியின் விலையும் . . 68
வர்த்தக மூலதனமும் வர்த்தக லாபமும் . . 72
கடன் மூலதனமும் வட்டியும் . . . . . . . . 75
முதலாளித்துவ நிலவாடகை . . . . . . . . 80

அத்தியாயம் நான்கு
பொருளாதார மற்றும் சமூக பகை முரண்பாடுகள் . . . . . . . . . . . . . . . . . . . . 88

மூலதனத் திரட்சியும் வேலையில்லாதோரின் படை உருவாதலும் . . . . . . . . . . . 97
முதலாளித்துவத் திரட்சியின் சர்வபொது விதி . 105
வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் . . . . 110

அத்தியாயம் ஐந்து
ஏகாதிபத்தியம்: பொருளாதாரமும் அரசியலும் . . . . . . . . . . . . . . . . . . . 121

ஏகாதிபத்தியம் என்றால் என்ன? . . . . . . 121
உற்பத்திக் குவிப்பும் ஏகபோகங்களும் . . . . 123
நிதி மூலதனமும் நிதி மூலதன ஏகபோகக் குழுவும் . . . . . . . . . . . . . . . 127

மூலதன ஏற்றுமதி . . . . . . . . . . . 129
உலகைப் பொருளாதார ரீதியிலும் பிரதேச ரீதியிலும் பங்கு போடுதல் . . . . . . . . 132
பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியின் சமமின்மை . . . . . . . . . . . 136
ஏகாதிபத்தியம்—ஒட்டுண்ணித்தனமான அழுகிவரும் முதலாளித்துவம் . . . . . . . . 139
ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கை . . . . . . . . . . 143

அத்தியாயம் ஆறு
பன்னாட்டு ஏகபோக வலைப் பின்னல் . . . . 156

உலகப் பொருளாதாரப் பேரரசுகள் . . . . . 156
உள்நாட்டை விட அயல் நாடு என் சிறந்தது? . 160
ஏகபோகங்களின் வெளிநாட்டு விஸ்தரிப்பின் பொருளாதாரப் பின்விளைவுகள் . . . . . 162
பன்னாட்டு ஏகபோகங்களால் என்ன பயன்? . 166

அத்தியாயம் ஏழு
ஏகபோகங்களுக்கும் பூர்ஷ்வா அரசிற்கும் இடையிலான கூட்டு . . . . . . . . . . 175

அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் தோற்றமும் அதன் சாரமும் . . . . . . . . . . 176
பூர்ஷ்வா அரசுச் சொத்து . . . . . . . 182
அரசு ஏகபோக ஒழுங்கமைப்பு . . . . . . . 187
தேசிய வருமானத்தின் மறுபங்கீடு . . . . . 189

அத்தியாயம் எட்டு
இராணுவ தொழிற்துறை இணையம் . . . . 194

இராணுவ தொழிற்துறை இணையத்தின் சாரம் 196
ஆயுத வர்த்தகம் . . . . . . . . . . . . . . 198
இராணுவ தொழிற்துறை இணையத்தின் பிற்போக்கு சித்தாந்தங்கள் . . . . . . . . . . 205
இராணுவமயப்படுத்தலின் பின்விளைவுகள் . . 207

அத்தியாயம் ஒன்பது
நவீன காலனியாதிக்கம் . . . . . . . . . . 213

காலனியாதிக்க முறையின் நெருக்கடியும் அதில் ஏற்பட்ட சிதைவும் அதன் வீழ்ச்சியும் . 214
நவீன காலனியாதிக்கத்தின் சாரம் . . . . . . 217
''பொருளாதார ஏகாதிபத்தியம்'' . . . . . . 219
''உதவி'' என்ற போர்வையின் கீழ் . . . . . 224
நவீன காலனியாதிக்கமும் ஆயுதப் போட்டியும் 228
எப்பாதையைத் தேர்ந்தெடுப்பது? . . . . . . 231

அத்தியாயம் பத்து
முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி . . 234

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் தோற்றமும் அதன் முக்கிய கட்டங்களும் . . . 235
முதலாளித்துவப் பொது நெருக்கடியின் கட்டங்கள் . . . . . . . . . . . . . . . . 237
பொருளாதார முரண்பாடுகள் கூர்மையடையும் போக்கு . . . . . . . . . . . . . . 242
ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான போராட்டம் . . . . . . . . . . . . . . . . 243

அத்தியாயம் பதினொன்று
நவீன முதலாளித்துவத்தின் அரசியல் மற்றும் ஆன்மீக நெருக்கடி . . . . . . . . . . 250

அரசியல் துறையில் நெருக்கடி . . . . . . . 251
ஏகாதிபத்திய சித்தாந்த நெருக்கடி . . . . . 254
ஒழுக்கம் மற்றும் சட்ட நெருக்கடி . . . . . . 261

சொற்றொடர் விளக்கம் . . . . . . . . . . . 269

# முன்னுரை

விதவிதமாகக் கண் சிமிட்டும் வண்ண விளக்குகள், பல வேறு பொருட்கள் நிரம்பி வழியும் கடைகள், "சமமான வாய்ப்புகளைப்" பற்றிய தித்திக்கும் கதைகள் ஆகியவற்றின் பின்னணியில் முதலாளித்துவத்தின் உண்மையான முகத்தைப் பார்ப்பதும் பூர்ஷ்வா உலக எதார்த்தம் முன் வைக்கும் பல்வேறு பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதும் சில நேரங்களில் கடினமாயிருக்கும்.

உலகில் சமமின்மையும் பாகுபாடும் சமூக அநீதியும் பட்டினியும் ஏழ்மையும் யுத்த அபாயமும் நிலவுவதற்குக் காரணம் யார்? மூலதனம் ஆதிக்கம் செலுத்தும் எல்லா நாடுகளிலும் சமூகக் கட்டமைவு ஏன் வெவ்வேறானதாக இருக்கிறது? வர்க்க முரண்பாடுகள் ஏன் சமரசப்படுத்த இயலாதவையாக, கடுமையானவையாக இருக்கின்றன?

ஒரு சில செல்வந்தர்கள் செல்வத்தில் மூழ்கித் திளைக்கும் அதே நேரத்தில் முதலாளித்துவ நாடுகளில் உள்ள பெரும்பாலான மக்கள் ஒரு பிடிச் சோற்றுக்காக ஏன் இடையறாமல் போராட வேண்டி வருகிறது? ஏன் ஒரு சிலர் ஆடம்பரத்தில் மிதமிஞ்சி கிடக்கின்றனர், பெரும் மியூசியங்கள் கூடப் பொறாமை படும்படியான ஓவியங்களின் திரட்டை தம் வீட்டில் வைத்திருக்கின்றனர், பல நூறு

ஹெக்டேர் நிலப்பரப்பை வேலியிட்டுத் தடுத்து வேட்டைக் களங்களாகப் பயன்படுத்துகின்றனர், அதே நேரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் தாம உணவிற்காக வரிசைகளில் நிற்கின்றனர், நடைபாதைகளில் படுத்துறங்குகின்றனர்? ஏன் ஆடம்பர மாடமாளிகைகளுக்கு அருகே மின்சாரமும் தண்ணீர் வசதியும் கூட இல்லாத குடிசைகள் நிரம்பிய சேரிகள் இருக்கின்றன? முதலாளித்துவ உலகில் ஏன் பெரும்பாலோருக்குக் கல்வி பெறும் வசதியும் மருத்துவ உதவியும் கிடைப்பதில்லை? லட்சோப லட்சம் ஆண்களும் பெண்களும் ஏன் வேலையின்றித் தவிக்கின்றனர்? அதே நேரத்தில், பலர் வறுமையில் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இருப்பிடமும் இன்றி இருக்கும் பொழுது அதற்குப் பயன்படுத்தாமல் நிதி ஏன் ஆயுதப் போட்டிக்காக தாராளமாய் செலவிடப்படுகிறது?

முதலாளித்துவ அமைப்பின் உள் முரண்பாடுகள் இச்சமுதாயத்தில் மிகக் கடுமையான பொருளாதார, சமூக நோய்களைத் தோற்றுவித்துள்ளன; இவை இன்று பெருகி வருகின்றன. பெருமளவிலான வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், அதிகரித்து வரும் குற்றங்கள், அடிக்கடி ஏற்படும் பொருளாதார அதிர்ச்சிகள், அழிவுகரமான நெருக்கடிகள், எதிர்காலத்தைப் பற்றி அதிகரித்து வரும் அச்சம் ஆகியவை இந்நோய்களில் சிலவாகும். முதலாளித்துவத்திற்கு நல்ல ஓர் எதிர்காலமுண்டு என்று கணித்துக் கூற இன்று யாரும் துணிவதில்லை. முதலாளித்துவ நாடுகளில் யார் ஆட்சிப் பீடத்திலிருந்தாலும், எந்த ஒரு பூர்ஷ்வாக் கட்சி அரசியலை நிர்ணயித்தாலும் இந்த "நோய் பிடித்த சமுதாயத்தை" யாராலும் குணப்படுத்த முடியாது.

முதலாளித்துவம் எப்போதுமே நோயால் பீடிக்கப்பட்டிருக்கவில்லை. தன் இளமைப் பருவத்தில், நிலப்

பிரபுத்துவத்திற்கு மாற்றாக வந்த பொழுது அது உற்சாகம் மிக்கதாய், ஆக்கபூர்வமான ஆற்றல் உள்ளதாய் விளங் கியது. அது மனிதகுலத்திற்கு சுதந்திரத்தையும் நல் வாழ்வையும் வழங்கும் என்று தோன்றியது. ஆனால் விரைவிலேயே மாயை விலகத் துவங்கியது. காலப் போக்கில் முதலாளித்துவம் தன்னுடைய முன்னோக்கிய வளர்ச்சியில் உச்ச கட்டத்தை அடைந்த பின் பொதுவான மனிதகுல முன்னேற்றத்திற்கு மேன்மேலும் தடையாகியது, அழுகக் கூடிய, அழியக் கூடிய, தன் மரணத்தை நோக்கித் தவிர்க்க இயலாது செல்லக் கூடிய சமுதாயமாகியது.

1980ஆம் ஆண்டுகளில், மின்னணுத் துறையும் கம்ப்யூட்டர்களும் ராபட்டுகளும் வளர்ந்து பெருகியுள்ள சகாப்தத்தில் முதலாளித்துவம் இளைஞர்கள், கல்வி கற்றவர்கள் உட்பட மேன்மேலும் லட்சக்கணக்கானோரை வேலைகளிலிருந்து வீதிக்குத் தள்ளுகிறது. செல்வமும் ஆட்சியும் ஒரு சிலரின் கரங்களில் மேன்மேலும் குவிகின் றன. 20ஆம் நூற்றாண்டின் மிகக் குரூரமான, ஆபத்தான புலப்பாடாக மாறியுள்ள இராணுவவெறி ஆயுதப் போட்டி யில் மூழ்கித் திளைத்து, கொழுத்து வருகிறது, இது மிக முற்போக்கான விஞ்ஞான சிந்தனையைப் பேரழிவுக் கருவி யாக மாற்றி வருகிறது.

விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி வளர்முக நாடுகளின் முன் பின்வரும் கேள்வியை மிகக் கடுமையாக வைத்துள் ளது; விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளை முழுமை யாகப் பயன்படுத்தி, நவீன காலனியாதிக்கம், ஏகாதிபத்திய விஸ்தரிப்பிற்கு எதிரான போராட்டத்தில் பலத்தைப் பெற இயலுமா அல்லது இந்நாடுகள் உலக வளர்ச்சியிலிருந்து பின்தங்கித்தான் இருக்க வேண்டுமா என்ற கேள்வி கடுமை யானதாக முன்நிற்கிறது.

பல நாடுகள் புதிய, சோஷலிச சமுதாயத்தைக் கட்டி

வருகின்றன. ஏராளமான வளர்முக நாடுகள் சோஷலிச வளர்ச்சி பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளன. அதே பொழுது முதலாளித்துவம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் கோடானுகோடி மக்களுக்கு இன்று வரை இன்னல்களைக் கொண்டுவருகிறது. முதலாளித்துவம் என்றால் என்ன, உற்பத்தியை மிகப் பெருமளவில் வளர்த்த பின் இது என் சமுதாய முன்னேற்றத்தின் தடையாக மாறியுள்ளது என்பவற்றை ஒவ்வொரு உழைப்பாளியும் அறிவது அவசியம்.

முதலாளித்துவம் என்றால் என்ன? இது எப்போது, எப்படி உதித்தது? எத்திசையில் இது வளர்ச்சியடைகிறது? உழைப்பாளிகளுக்கு, மனிதகுலத்திற்கு இது எதைக் கொண்டுவருகிறது? நவீன வளர்ச்சி கட்டத்தில் முதலாளித்துவத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் யாவை? இக்கேள்விகளுக்கான பதில்களை இந்நூலில் காணலாம்.

அத்தியாயம் ஒன்று

# முதலாளித்துவத்தின் தோற்றமும் சாரமும்

மனிதகுலம் தன் வரலாற்று வளர்ச்சியில் நீண்ட பாதையைக் கடந்து வந்துள்ளது: வில், அம்புகள், ஈட்டிகளைக் கொண்டு காட்டு விலங்குகளை வேட்டையாடித் திரிந்த மனிதர்கள் இன்று செயற்கை விண்கோள்கள், ராபட்டுகள், மின்னணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் நிலை வரை உயர்ந்துள்ளனர்.

எதிர்காலத்தில் எது நம்மை எதிர்நோக்கியுள்ளது என்று மனிதர்கள் எப்போதுமே சிந்தித்து வந்துள்ளனர். எதிர்காலத்தை முன்கூட்டியே பார்ப்பது சாத்தியமா? ஆரம்பத்தில் மனிதர்கள் நட்சத்திரங்கள், கிரகங்களின் நிலையை வைத்தும், இதைப் போன்ற இன்னும் பிற எளிய வழிகளிலும் எதிர்காலத்தைக் கணிக்க முயன்றனர். இத்தகைய கணிப்புகள் பெரிதும் நம்பகரமானவையாக இருக்கவில்லை என்பது புரியக் கூடியதே.

மனித சமுதாயம் முற்றிலும் திட்டவட்டமான விதிகளின்படி வளர்ச்சியடைகிறது என்பதை மனிதர்கள் பின்னால் புரிந்து கொண்டனர். இவ்விதிகளை அறிந்திருப்பதானது கடந்த காலத்தைச் சரிவரப் புரிந்து, நிகழ்காலத்தை மதிப்பிட உதவுவதோடு கூட எதிர்காலத்தைக் கணிக்க

வும் ஓரளவு உதவுகிறது. இவ்விதிகளின் சாரத்தினுள் உட்புக தலைசிறந்த அறிஞர்கள் முயன்றனர். கடந்த காலத்தில் பல தத்துவஞானிகளும் பொருளாதார அறிஞர்களும், அரசியல் பிரமுகர்களும் மதவாதிகளும் வரலாற்று வளர்ச்சி எப்படி நடைபெறுகிறது என்பதைப் பற்றி யோசித்தனர். பூர்ஷ்வா சமுதாயம்தான் நாகரிக வளர்ச்சியின் சிகரம், இதற்கு அப்பால் வளர இடமில்லை என்று இந்த அறிஞர்களில் சிலர் கடந்த ஒரு சில நூற்றாண்டுகளாகக் கருதி வந்தனர். வேறு சிலரோ முதலாளித்துவத்தைக் கடுமையாகச் சாடி, அது அழிந்து போகும் என்றனர். ஆனால் ஒருவராலும் தம் கருத்தை விஞ்ஞான அடிப்படையில் இறுதி வரை ஆதாரத்தோடு கூற முடியவில்லை. முதலாளித்துவம் என்றால் என்ன என்ற கேள்விக்கு முதன் முதலாகப் பன்முக ரீதியில், விஞ்ஞான பூர்வமான பதிலைத் தந்தவர் மாபெரும் ஜெர்மன் சிந்தனையாளரும் புரட்சியாளருமாகிய கார்ல் மார்க்ஸ் (1818—1883) ஆவார்.

### கா. மார்க்சின் ''மூலதனம்''

கா. மார்க்ஸ் தன் வாழ்நாள் முழுவதையும் பூர்ஷ்வா சமுதாயத்தை ஆராய்வதற்குச் செலவிட்டார். **மூலதனம்** என்ற நூலில் இவர் தன்னுடைய பொருளாதார கருத்துகளை வெளியிட்டார். இந்நூலை எழுத இவருக்கு 40 ஆண்டுகளாயின.

**மூலதனம்** நூலை எழுதியது ஓர் உண்மையான விஞ்ஞான சாதனையாகும். கா. மார்க்ஸ், தாங்க இயலா அளவிற்குக் கடுமையான சூழ்நிலைகளில் உழைக்க வேண்டியிருந்தது. அவரும் அவரது குடும்பத்தினரும் நிரந்தர வறுமையில் வாடினர், வீட்டு வாடகை செலுத்தவும் அத்தியாவசியப் பண்டங்களை வாங்கவும் கூட அவர்களிடம் பண

மிருக்கவில்லை. தன் வாழ்நாளின் இறுதியில் நண்பர் ஒரு வருக்கு எழுதிய கடிதத்தில் கா. மார்க்ஸ், **மூலதனம்** நூலை எழுதுவதற்காகத் தான் பலவற்றைத் தியாகம் செய்ய நேர்ந்ததாயும் ஆனால் அதைக் குறித்து வருந்த வில்லை என்றும் குறிப்பிட்டார். "'நடைமுறை' மனிதர்கள் என்றழைக்கப்படுபவர்களையும் அவர்களுடைய ஞானத் தையும் கண்டால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. எரு மைமாடாக இருக்க வேண்டுமென்றால், நிச்சயமாக, மனித குலம் படும் வேதனைகளைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு, சொந்த இன்பதுன்பங்கள் மீது மட்டும் கவனம் செலுத்தலாம். ஆனால் என்னுடைய நூலை முழுமை யாக முடிக்காமல்—கையெழுத்துப் பிரதி வடிவத்திலா வது—நான் மட்டும் மூச்சை விட்டிருந்தேன் என்றால் என்னை நானே உண்மையில் **நடைமுறைக்கு ஒவ்வாதவ னாகக்** கருதியிருப்பேன்'' என்று கா. மார்க்ஸ் எழுதினார்.*

துரதிர்ஷ்டவசமாக, **மூலதனம்** நூலின் அனைத்து தொகுதிகளையும் கா. மார்க்சால் எழுதி முடிக்க முடிய வில்லை. இந்நூலை முழுமையாக வெளிகொண்டுவருவ தில் கா. மார்க்சின் உற்ற நண்பரும் சகதோழருமான பிரெ டெரிக் எங்கெல்ஸ் (1820—1895) பெரும் பங்காற்றினார்.

சமுதாயத்தைப் பற்றிய விஞ்ஞானத்தில் கா. மார்க்ஸ் ஒரு புரட்சியைச் செய்தார். பூர்ஷ்வா சமுதாயத்தின் பொரு ளாதாரம், அரசியல், சித்தாந்தம், சட்டம், குடும்ப உறவுகள் ஆகியவற்றை ஆழமாகப் பயின்ற அவர், ஓர் உயிருள்ள சமூக உறுப்பாக முதலாளித்துவம் எப்படிப் பிறந்து, வளர்ந்து, இறுதியில் தன் சொந்த முரண்பாடுகளினா லேயே தவிர்க்க இயலாது அழியப் போகிறது என்று பன்முக நோக்கில் படம்பிடித்துக் காட்டினார்.

---

* K. Marx, F. Engels, *Selected Correspondence*, Moscow, Progress Publishers, 1975, p. 173.

பூர்ஷ்வா சமுதாயத்தை ஆராய்ந்த பொழுது கா. மார்க்ஸ் தானும் பி. எங்கெல்சும் சேர்ந்து உருவாக்கிய புதிய விஞ்ஞான முறையைப் பயன்படுத்தினார்; இதுதான் **இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம்** ஆகும். சமுதாய வளர்ச்சி எளிய வடிவங்களிலிருந்து உயர் வடிவங்களை நோக்கி, சுருள்வில்லை முறையில் நடைபெறுகிறது, சுருள் வில்லையின் ஒவ்வொரு சுற்றிலும் இது ஒரு படி உயருகிறது என்று காட்ட மேற்கூறிய முறை உதவியது.

மக்கள் தம் வரலாற்றைத் தாமே படைக்கின்றனர் என்பதை ஒப்புக் கொண்டதுதான் புதிய முறையின் முக்கிய அம்சமாகும். இதில் முக்கியப் பங்கு அவர்களின் உற்பத்தி, உழைப்பு நடவடிக்கையைத்தான் சாரும்.

சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு பெரிய கட்டத்திற்கும் ஒவ்வொரு வகையான **உற்பத்தி உறவுகள்** (பொருளாயத செல்வங்களின் உற்பத்தி, பரிவர்த்தனை, வினியோகம் மற்றும் நுகர்வுப் போக்கில் மனிதர்களிடையே தோன்றும் குறிப்பிட்ட உறவுகள்) உண்டு. இவ்வுறவுகள் தம் அடிப்படையில், **உற்பத்திச் சக்திகளின்** வளர்ச்சியால்—உற்பத்திச் சாதனங்கள் (உழைப்பின் கருவிகள், சாதனங்கள், ஆதாரப் பொருட்கள்) மற்றும் நேரடி உற்பத்தியாளனாகிய உழைப்பாளியின் வளர்ச்சியால்—நிர்ணயிக்கப்படுகின்றன. உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான ஒற்றுமை, மனித வாழ்க்கைக்கு அவசியமான பொருளாயத செல்வங்களைத் தோற்றுவித்து பயன்படுத்துவது சம்பந்தமான வரலாற்று ரீதியில் திட்டவட்டமான முறையை—**உற்பத்தி முறையை**—ஏற்படுத்துகிறது. இதுதான் சமுதாயத்தின் **பொருளாதார அடித்தளத்தை** உருவாக்கும், இதன் மீது இதனால் நிர்ணயிக்கப்படும் **மேற்கட்டுமானம்** (கருத்துகளும் இவற்றிற்கேற்ப தோன்றும் அரசு,

அரசியல் கட்சிகள், நீதிமன்றம், மதஸ்தாபனம் போன்றவை) எழுகிறது.

உற்பத்தி முறையும் மேற்கட்டுமானமும் சேர்ந்து **சமூக பொருளாதார அமைப்பு** எனப்படும்.

மனித வரலாற்றில் 5 சமூக பொருளாதார அமைப்புகள் இருந்துள்ளன; புராதனக் கூட்டுச் சமூக அமைப்பு, அடிமையுடைமை அமைப்பு, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், கம்யூனிசம் (இதன் முதல் கட்டம்தான் சோஷலிசம்) ஆகியவை அந்த 5 அமைப்புகளாகும். ஓர் அமைப்பையடுத்து அடுத்த அமைப்பு தொடர்ச்சியாக வருவதென்பது புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்காகும், இது மக்களின் சித்தத்தையோ உணர்வையோ சாராதது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிப் போக்கே சமூக பொருளாதார அமைப்புகளின் மாற்றத்திற்குக் கட்டளையிடுகிறது. உற்பத்தி உறவுகள், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையிடும் விலங்குகளாக மாறி, அவற்றுடன் முரண்படும் பொழுது ஒரு சமூக பொருளாதார அமைப்பு இன்னொன்றால் புரட்சிகரமாக மாற்றப்படுவது தவிர்க்க இயலாததாகிறது. முதலாளித்துவத்தின் விஷயத்தில் இப்படித்தான் நடந்தது. 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஹாலந்திலும், 17ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும், 18ஆம் நூற்றாண்டில் பிரான்சிலும் நடைபெற்ற பூர்ஷ்வாப் புரட்சிகள் நிலப்பிரபுத்துவ முறைகளைக் கடுமையாகத் தாக்கி, தகர்த்து, இந்நாடுகளில் முதலாளி வர்க்கத்தின் வெற்றியைப் பறைசாற்றின. பின்னால் ஜெர்மனி, ருஷ்யா, இதர நாடுகளிலும் முதலாளித்துவம் நிலைபெற்றது.

**மூலதனம்** நூலில் கா. மார்க்ஸ், முதலாளித்துவத்தை ஒரு சமூக பொருளாதார அமைப்பு என்ற வகையில் பன்முக ரீதியில் ஆராய்கிறார்.

**மூலதனம்** நூல் கா. மார்க்சின் வியத்தகு அறி

வாற்றலையும் உண்மையிலேயே கலைக்களஞ்சிய ஞானத்தையும் நம் கண் முன் கொண்டுவந்து நிறுத்துகிறது. அதே பொழுது இந்நூல் தெட்டத் தெளிவாக, எல்லோருக்கும் புரியும்படி, உயிரோட்டமான நடையில் எழுதப்பட்டுள்ளது.

இன்றும் கூட எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தும் சமுதாய அமைப்பின் அடிப்படைகளும் அந்த அமைப்பு தோன்றிய விதமும் **மூலதனம்** நூலில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இந்த அடிப்படைகளைப் புரிந்து கொண்டால்தான் நவீன முதலாளித்துவத்தையும் அதற்கு உரித்தான பல்வேறு புதிய புலப்பாடுகளையும் சாராம்சத்தில் புரிந்து கொள்ள முடியும்.

## முதலாளித்துவத்தின் பிறப்பு

முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தின் இடிபாடுகளில் வளர்ந்தது. இதன் முதல் தளிர்கள் நிலப்பிரபுத்துவ அமைப்பினுள் முளை விட்டன. இந்த அமைப்பினுள் வளர்ந்த இத்தளிர்கள் இதை உள்ளிருந்தே ஆட்டங் காண வைத்தன, புதிய பூர்ஷ்வா சமூக உறவுகள் வளருவதற்கான அடிப்படையை ஏற்படுத்தின. நிலப்பிரபுத்துவத்தின் உள்ளே முதலாளித்துவ அம்சங்கள் தோன்றியதானது தற்செயலானதாயிருக்கவில்லை. ஏனெனில் முதலாளித்துவமும் நிலப்பிரபுத்துவமும் ஒன்றையொன்று பெரிதும் ஒத்தவையாகும். இரண்டுமே உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையையும் மனிதனை மனிதன் சுரண்டுவதையும் அடிப்படையாகக் கொண்டவை.

நிலப்பிரபுத்துவ சமுதாயம் பெரும்பாலும் நிலப்பிரபுத்துவப் பண்ணைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது;

இங்கே உற்பத்தி செய்யப்பட்டவை முழுவதும் கிட்டத்தட்ட இங்கேயே நுகரப்பட்டன. தனிப்பட்ட முறையில் நிலப்பிரபுகளைச் சார்ந்திருந்த பண்ணையடிமை விவசாயிகள் பல தரப்பட்ட வேலைகளைச் செய்தனர். இந்நிலையைப் பற்றி பிரபல ருஷ்யக் கவிஞர் நி. அ. நிக்ராசவ் தன் கவிதைகளில் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். சாவ்கா என்ற பெயரை உடைய பண்ணையடிமை விவசாயி திங்கட் கிழமையன்று மாவரைக்கிறான், செவ்வாய்கிழமை குதிரைக்கு சேணம் பூட்டுகிறான், புதனும் வியாழனும் எஜமானர்களின் வீட்டு வேலையாளாக இருக்கிறான், பின் விறகு வெட்டுகிறான், ரொட்டி தயாரிக்கிறான், இன்ன பிற வேலைகளைச் செய்கிறான். காலப் போக்கில், சகலகலா வல்லுநர்களாகிய இத்தகைய ‘‘சாவ்காக்களால்’’ மேன்மேலும் பல்கிப் பெருகிய சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. குறிப்பிட்ட துறையில் நிபுணரின் தேவை அவசியமாகியது. எனவேதான் நிலப்பிரபுத்துவ அமைப்பின் வரம்புகளுக்குள்ளாகவே—மெதுவாக என்ற போதிலும்—பட்டறை உற்பத்தி வளர்ந்தது, நகரங்கள் வளர்ச்சியடைந்தன, வர்த்தகமும் பணப் புழக்கமும் விரிவடைந்தன, அதாவது சமுதாய வாழ்க்கையின் எந்த அம்சங்கள் இயற்கைப் பொருள் நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தைப் படிப்படியாகச் சீர்குலைத்தனவோ அந்த அம்சங்கள் வளரலாயின.

இயற்கைப் பொருள் பொருளாதாரம் படிப்படியாகச் சந்தையில் விற்பதற்காகப் பொருட்களை உற்பத்தி செய்யும் முறைக்கு அதாவது பண்டப் பொருளாதாரத்திற்கு வழி விட்டு ஒதுங்கியது. பண்ட உற்பத்தியாளர்களிடையே கடும் போட்டி நிலவியது, இது ஒரு சிலர் எழ்மையடையவும் வேறு சிலர் செல்வந்தர்களாகவும் வழியமைத்தது, பண்ட உற்

பத்தியாளர்கள் வறியவர்கள் என்றும் பணக்காரர்கள் என்றும் பிரிக்கப்பட்டனர்.

**வியாபார மூலதனம்** நிலப்பிரபுத்துவ அடிப்படைகளைக் குலைப்பதில் பெரிதும் உதவியது. இது பண்ட-பண உறவுகளின் துறையை விரிவுபடுத்தியது மட்டும் இதற்குக் காரணமல்ல. முதலில் வியாபாரிகள், பண்டப் பரிவர்த்தனையில் மட்டுமே இடைநிலைத் தரகர்களாக இருந்தனர். பின்னர் இவர்கள் அடிக்கடி சிறு தொழில் புரிவோரிடம் பண்டங்களை வாங்கலானார்கள், சிறு தொழில் புரிவோருக்குத் தேவையான மூலப்பொருட்களை வழங்கத் தொடங்கினர், பணத்தையும் கடனாகக் கொடுக்கத் துவங்கினர். சிறு தொழில் புரிவோரில் பலர் காலப் போக்கில் இந்த வியாபாரிகளைப் பண ரீதியில் சார்ந்திருக்கலாயினர். இதற்குப் பின் முன்னர் சுதந்திரமாயிருந்த சிறு தொழில் புரிவோர் ஒரு கூரையின் கீழ் அணி திரட்டப்பட்டனர், இங்கே இவர்கள் தமக்காக வேலை செய்யவில்லை, பட்டறை எஜமானர்களுக்காக வேலை செய்தனர். இவ்வாறாக வியாபாரிகள், செல்வம் கொழிக்கும் பட்டறை உடைமையாளர்களைப் போல பகுதியளவிற்கு தொழில் நிறுவனங்களின் உடைமையாளர்களாக மாறலாயினர்.

கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தது, வாஸ்கோடா காமா ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்குச் செல்லும் கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்தது ஆகிய மாபெரும் பூகோள கண்டுபிடிப்புகளின் (15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி—17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி) பயனாய் வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்தது, உலகச் சந்தை தோன்றியது. இது தொழிற்துறைப் பொருட்களின் தேவையைப் பெரிதும் அதிகப்படுத்தியது. ஆனால் சிதறுண்டு கிடந்த சிறு தொழில்களால்—இவற்றின் உற்பத்தி கறாராக முடிவு செய்யப்பட்டிருந்தது, உடலுழைப்பின் அடிப்படையில்

அமைந்திருந்தது—இத்தேவையைப் பூர்த்தி செய்ய முடிய வில்லை.

நிலப்பிரபுத்துவ உறவுகள் சமுதாயத்தின் பொருளா தார முன்னேற்றத்திற்கு மேன்மேலும் தடையாயின. நிலப் பிரபுத்துவத்தைப் புதிய சமூக பொருளாதார அமைப்பால் மாற்றுவது தவிர்க்க இயலாததாகியது.

நிலப்பிரபுத்துவத்துடன் ஒப்பிடும் பொழுது முதலாளித் துவம், சமுதாய வளர்ச்சியில் முன்னோக்கி எடுத்து வைக் கப்பட்ட ஒரு பெரும் அடியாக விளங்கியது. இது உற்பத்திச் சக்திகளை நிலப்பிரபுத்துவ தளைகளிலிருந்து விடுவித்தது, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தியின் விரை வான வளர்ச்சிக்கான வாய்ப்புகளைத் தோற்றுவித்தது. ஆரம்பத்தில் முதலாளித்துவம் ஒரு மந்திரவாதியைப் போல் விளங்கி, மனிதர்களுக்குப் பல இரகசியங்களைத் திறந்து காட்டியது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வாக் கில்—அதாவது 100 ஆண்டுகளுக்கும் குறைவான கட்டத் தில்—முந்தைய தலைமுறைகள் அனைத்தும் சேர்ந்து தோற்றுவித்ததை விட அதிகமான, பிரம்மாண்டமான உற் பத்திச் சக்திகளை முதலாளித்துவம் படைத்தது. இயந்திர உற்பத்தி, விவசாயத்தில் இரசாயனத்தைப் பயன்படுத்தல், இருப்புப் பாதை, நீராவி என்ஜின்கள், மின் தந்தி— இத்தகைய பொக்கிஷங்கள் மனித சமுதாயத்தில் மறைந் திருந்ததை முந்தைய நூற்றாண்டுகளில் கற்பனை கூட செய்து பார்த்திருக்க முடியாது.

முந்தைய நிலப்பிரபுத்துவ உறவுகளை முதலாளி வர்க் கம் உறுதியோடு அழித்தது. இது மனிதனை தன் எஜ மானனுடன் கட்டிப் போட்ட இழைகளை ஈவிரக்கமின்றி அறுத்தது, அப்பட்டமான பண உறவைத் தவிர வேறெந்த உறவும் மனிதர்களிடையே நிலவ முடியாமல் செய்தது.

ஆட்சிக்கு வந்த முதலாளி வர்க்கம் “சுதந்திரம்”,

“சமத்துவம்”, “சகோதரத்துவம்” என்ற கோஷங்களை முன்வைத்தது. மனிதர்களுக்கு இடையில் நிலவிய மேல் குடி, கீழ்குடி வேறுபாடுகளை அகற்றி, எல்லோரும் சம மானவர்கள், யாருக்கும் ஒருவரை மிஞ்சி ஒருவர் நிற்க உரி மை கிடையாது என்று இப்புதிய அமைப்பு அறிவித்தது. ஆனால் “சமத்துவம்” என்பது வெற்று கோஷம், “சுதந் திரம்”, “சகோதரத்துவம்” என்பவை மதிப்பின்றி காகி தத்தில் மட்டுமே எஞ்சும் என்பது விரைவிலேயே தெளி வாயிற்று, ஏனெனில் தனியுடைமையும் மனிதனை மனி தன் சுரண்டுவதும் தொடர்ந்தன. முதலாளி வர்க்கம் சுரண் டலின் வடிவத்தை மட்டும் மாற்றி, முன்னாள் பண் ணையடிமை விவசாயிகளைக் கூலித் தொழிலாளிகளாக் கியது. மருத்துவர்கள், பாதிரிகள், கவிஞர்கள், விஞ்ஞானி கள் ஆகிய அனைவரையும் முதலாளி வர்க்கம் கூலிக்கு வேலை செய்பவர்களாக்கியது. ஏன், குடும்ப உறவுகளின் மீது கூட இது பொருளாதார அக்கறை என்ற பூச்சைப் பூசியது.

நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் முத லாளித்துவம் சில கட்டங்களைக் கடந்து வந்தது. இவற்றில் முதலாவது கட்டம் **எளிய கூட்டுறவாகும்.** முன்னர் தனித் தனியே செய்த அதே வேலையைச் செய்யும் கூலித் தொழி லாளர்களை இது உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் ஒன்றி ணைத்தது. இந்த எளிய கூட்டுறவு, அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்த தனி உற்பத்தியை விட நல்ல பயன்களைத் தந்தது. காலப் போக்கில் இதற்குப் பதில் இதைவிட முத லாளித்துவ உற்பத்தியின் உயர்ந்த கட்டமாகிய **பட்டறை உற்பத்தி முறை** வந்தது. பட்டறை உற்பத்தி என்பது முத லாளியால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில் நிறுவனமாகும், எளிய கூட்டுறவைப் போன்றே இதுவும் உடல் உழைப்பின் அடிப்படையிலானது. ஆனால் இதில் ஒவ்வொரு வேலை

யாளும் தயாரான பொருளைத் தானே தயாரிக்கவில்லை, இத்தயாரிப்புடன் தொடர்புடைய ஒரு செயலிலோ அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட செயலிலோ அவன் பங்கேற்க மட்டுமே செய்தான். பட்டறை உற்பத்தியானது, உற்பத்தியில் இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான அடிப்படையை ஏற்படுத்தியது. பல்வேறு வகையான உழைப்புக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கான சூழ்நிலைகளை இது தோற்றுவித்தது, இயந்திரங்களை உருவாக்க அவசியமான தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கு வழியமைத்தது.

முதலாளித்துவ தொழிற்துறையின் வளர்ச்சியில் மூன்றாவது கட்டம் **இயந்திர உற்பத்தியாகும்.** பட்டறை உற்பத்தியிலிருந்து இதை நோக்கிய முன்னேற்றம் **தொழிற் புரட்சி** என்றழைக்கப்படுகிறது. முதலில் இங்கிலாந்தில் ஆரம்பமாகிய இது (18ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதி, 19ஆம் நூற்றாண்டின் முற்பாதி) பின்னர் மற்ற பல நாடுகளுக்குப் பரவியது. உடலுழைப்பிலிருந்து இயந்திர உழைப்பிற்கு மாறியதானது, முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தைக் கணிசமாக விஞ்சியதற்கு சான்று பகர்ந்தது.

## மூலதனத்தின் ஆதித் திரட்சி

மூலதனத்தின் ஆதித் திரட்சி என்பது ஒரு வரலாற்று நிகழ்ச்சிப் போக்காகும், இந்நிகழ்ச்சிப் போக்கில் சிறு உற்பத்தியாளர்கள் (விவசாயிகளும் கைத்தொழிலாளர்களும்) கூலித் தொழிலாளர்களாக மாறினர், உற்பத்திச் சாதனங்களும் பணமும் மூலதனமாயின. இந்நிகழ்ச்சிப் போக்கில் உழைக்கும் மக்களுக்கு எதிரான வெட்கங்கெட்ட முறையிலான வலுக்கட்டாயம், நிர்ப்பந்தம், கொள்ளை, சூறையாடல், காலனி ஆக்கிரமிப்பு, அடிமைகளை வாங்கி விற்றல் ஆகியவை நடைபெற்றன. புதிதாகப் பிறந்த மூலதனத்

தைப் பற்றி மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்: "மூல தனம் தலை முதல் கால் வரை உடலின் ஒவ்வொரு துவா ரத்திலிருந்தும் ரத்தமும் அழுக்கும் சொட்டிய வண்ணம் வருகிறது."*

மூலதனத்தின் ஆதித் திரட்சி முதலில் இங்கிலாந்து, ஹாலந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் 16—18ஆம் நூற் றாண்டுகளில் ஆரம்பமாகியது, குறிப்பாக கடுமையான வடி வங்களைப் பெற்றது. உதாரணமாக, இங்கிலாந்தில் இது நில அடைப்பு சட்டத்தின் கீழ் விவசாயிகளின் நிலங்கள் ஆடுகளுக்கான மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்படுவதற்கு இட்டுச் சென்றது, இதனால் விவசாயிகளின் நிலங்கள் பிடுங்கப்பட்டதோடு கூட அவர்களுக்கு வாழ்க்கைச் சாத னங்களும் மறுக்கப்பட்டன: நிலத்தை இழந்த விவசாயி கள் எல்லாவற்றையும் இழந்து சொத்தற்றவர்களாயினர். "ஆடுகள் மனிதர்களைத் தின்று விட்டன" என்று அந் நாட்களில் ஆங்கிலேயர்கள் கூறினர்.

நிலங்களை இழந்து, கிராமங்களிலிருந்து விரட்டியடிக் கப்பட்ட விவசாயிகளுக்கு எதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் "இரத்தக் களறியான" சட்டங்களை வெளியிட்டது, தண் டனைகளைக் காட்டி அச்சுறுத்தி அவர்களை முதலாளித் துவ ஆலைகளுக்குத் தள்ளி, கூலித் தொழிலாளிகளாக் கியது.

முதலாளித்துவத்தின் ஆரம்பத்தில் வேலை நாள் மிக நீண்டதாயிருந்தது. மிக மோசமான சூழ்நிலைகளில் நாள் தோறும் 12—14 மணி நேரம், என் அதற்குக் கூடுதலாகக் கூலித் தொழிலாளர்கள் (பெரியவர்கள், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி) உழைத்தனர். இப்பிரச்சினை மீது தனி கவனம் செலுத்திய கா. மார்க்சும் பி. எங்கெல்சும்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 6, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1986, பக்கம் 124.

கூலித் தொழிலாளர்களின் மிக மோசமான நிலைக்குச் சான்று பகரும் ஏராளமான விவரங்களைத் தம் படைப்புகளில் சுட்டிக் காட்டினர். தொழிலாளர்கள் அசுத்தமான, நெருக்கடி மிக்க குடிசைகளில் வாழ்ந்தனர், அரை வயிறுதான் சாப்பிட்டனர், தாம் செய்த வேலைக்கு மிக சொற்பமான கூலியைப் பெற்றனர். குறிப்பாகக் குழந்தைகள் பெரிதும் கஷ்டப்பட்டனர். உதாரணமாக, லங்காஷயர் (இங்கிலாந்து) நகரிலிருந்த ஏழைக் குழந்தைகள் (7—14 வயதினர்) ஆலைகளில் வேலை செய்தனர், மிக மோசமான சோதனைகளுக்கு ஆளாயினர். இவர்களுக்கு அளவிற்கதிகமான வேலையை அளித்தனர், அடித்து துன்புறுத்தினர், சங்கிலிகளால் கட்டிப் போட்டனர். பட்டினியால் வாடிய இவர்கள் இளைத்துத் துரும்பாகி, நடமாடும் எலும்புக் கூடுகளாயினர், சில நேரங்களில் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

காலனி நாடுகளின் பரப்புகள் ஈவிரக்கமின்றி கொள்ளையடிக்கப்பட்டன. அமெரிக்க கண்டத்திலிருந்த மூல மக்கள்—ஆதிவாசியினர்—பெருமளவில் அழிக்கப்பட்டனர். விலை மதிப்புள்ள அனைத்தும், குறிப்பாக தங்கமும் வெள்ளியும் ஐரோப்பாவிற்குக் கொண்டுவரப்பட்டன. ஐரோப்பிய காலனியாட்சியாளர்களின் கொள்ளை வேட்கை அமெரிக்காவின் மூலக் குடிமக்களின் தொன்மை நாகரிகங்களை அழித்தது. இன்னொரு கண்டமாகிய ஆப்பிரிக்க கண்டம், நீக்ரோக்களைப் பிடிக்கும் வேட்டைக் களமாகியது, இவ்வாறு பிடிக்கப்பட்ட நீக்ரோக்கள் பின்னர் பெருந் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு விற்கப்பட்டனர். இந்த எஜமானர்கள் தம் நீக்ரோ அடிமைகளை ஆடுமாடுகளை விடக் கேவலமாக நடத்தினர். எந்த ஒரு விதத்தில் கீழ்படியாமல் போனாலும் இவர்களை மிகக் கடுமையாக அடித்தனர், ஏன் கொல்லக் கூடச் செய்தனர். இந்த துரதிர்ஷ்ட அடிமைகள் தம்

வாழ்நாள் முழுவதும் மேற்பார்வையாளனின் சாட்டையைக் கண்டு அஞ்சி நடுங்கினர்.

''மூலதனத்தின் ஆதித் திரட்சி'' சகாப்தத்தில் ஐரோப்பாவில் பயன்படுத்தப்பட்ட அதே கொடுமையான, காட்டுமிராண்டித்தனமான முறைகள் இன்று முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் உள்ள ஒரு சில வளர்முக நாடுகளில் தொழிலாளிகளின் விஷயத்தில் பயன்படுத்தப் படுகின்றன.

''மூலதனத்தின் ஆதித் திரட்சி'' என்பது ஒரு புறம், உழைப்பாளிகள் பெருமளவில் திவாலாகி, ''சுதந்திரமான'' உழைப்புச் சக்தியாக மாறியதையும், அதே நேரத்தில் மறு புறம், கொள்ளையடிக்கப்பட்ட செல்வம் ஒரு சிலரின் கரங்களில் திரளுவதையும், பணம் மூலதனமாக மாறுவதையும் குறித்தது.

முதலாளித்துவத்தின் தோற்றமானது, இயற்கைப் பொருள் பொருளாதாரம் கிட்டத்தட்ட முழுமையாகப் பண்டப் பொருளாதாரமாக மாற்றப்பட்டதைக் குறித்தது. பண்ட உற்பத்தி முழுமுதலாக ஆதிக்கம் செலுத்துவதென்பது முதலாளித்துவத்தின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். எனவே சமுதாய அமைப்பு என்ற வகையில் முதலாளித்துவத்தின் சாரத்தைப் புரிந்து கொள்ள நாம் முதலில் அதன் பொருளாதார அடிப்படையாகிய முதலாளித்துவப் பண்ட உற்பத்தியை ஆராய வேண்டும். முதலாளித்துவ உலகில் வீடு, நிலம், ஆலை, கௌரவம், பதவி, திருப்தி, மனசாட்சி, செல்வாக்கு, உடல், ஆன்மா எல்லாமே வாங்கி விற்கப்படுகின்றன.

பண்ட உற்பத்தி என்பது என்ன? அதன் முக்கிய அம்சங்கள் யாவை?

## எளிய மற்றும் முதலாளித்துவப் பண்ட உற்பத்தி

பண்ட உற்பத்தி என்றால் சொந்த நுகர்விற்காக இல்லாமல், கொள்வினை-கொடுப்பினை மூலமான பரிவர்த்தனைக்காகப் பொருட்களை உற்பத்தி செய்வதாகும். ஒரு பொருளின் சொந்தக்காரன் அதைச் சந்தையில் விற்று, அதனால் கிட்டும் பணத்தில் தனக்குத் தேவையான இன்னொரு பொருளை வாங்குகிறான்.

பரிவர்த்தனைக்காகப் பொருட்களை உற்பத்தி செய்வது ஒரு சில ஆயிரமாண்டுகளாக நிலவி வருகிறது. புராதனக் கூட்டுச் சமூகம் சிதறிய பொழுது தோன்றிய இது அடிமையுடைமை அமைப்பிலும் பின் நிலப்பிரபுத்துவத்திலும் நிலவியது. ஆனால் அங்கெல்லாம் பண்ட உற்பத்தி என்பது இரண்டாம் பட்சமானதாக மட்டுமே இருந்தது. இயற்கைப் பொருளாதாரம்தான் ஆதிக்கம் செலுத்தியது; அதாவது சமுதாயம் பெரும்பாலும் ஒரே மாதிரியான பல பொருளாதார அலகுகளால் ஆனதாயிருந்தது, இவற்றில் ஒவ்வொன்றும் எல்லா முக்கிய பொருட்களையும் உற்பத்தி செய்து தானே பயன்படுத்தியது. முதலாளித்துவத்தில்தான் பண்ட உற்பத்தி என்பது சர்வபொது வடிவமாகி ஆதிக்கம் செலுத்தத் துவங்கியது.

இரண்டு முக்கிய நிபந்தனைகள் உருவாகிய பின்தான் பண்ட உற்பத்தி தோன்றியது. முதலாவதாக, சமூக உழைப்புப் பிரிவினை ஓரளவு வளர்ச்சியடைந்தது, இதனால் தனிப்பட்ட மனிதர்களோ அல்லது மனித குழுக்களோ பல்வேறு பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டனர். உதாரணமாக, சிலர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டனர், சிலர் கால்நடைகளை வளர்த்தனர், சிலர் ஆடை நெய்தனர், காலணி

தயாரித்தனர். இரண்டாவதாக, உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையின் அடிப்படையில், தாம் உற்பத்தி செய்யும் பொருட்களின் உடைமையாளர்கள் என்ற வகையில் உற்பத்தியாளர்கள் பொருளாதார ரீதியில் பிரிந்தனர். இச்சூழ்நிலையில் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடையிலான தொடர்பு சந்தையின் மூலம், பொருட்களை பரிவர்த்தனை செய்வதன் மூலம்தான், அதாவது அவற்றை வாங்கி விற்பதன் மூலமாக மட்டுமே சாத்தியமானது.

உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையின் அடிப்படையிலான பண்ட உற்பத்தியில் இரண்டு முக்கிய வகைகள்—எளிய மற்றும் முதலாளித்துவப் பண்ட உற்பத்தி—உள்ளன.

**எளிய பண்ட உற்பத்தி** என்பது சிறு, தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் உற்பத்தி, இது சொந்த உழைப்பின் அடிப்படையிலானது. **முதலாளித்துவப் பண்ட உற்பத்தியிலோ** கூலித் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. எளிய பண்ட உற்பத்தி, முதலாளித்துவப் பண்ட உற்பத்தி இரண்டிற்கும் பொருளாதார அடிப்படை தனியுடைமையாகும். இரண்டும் தன்னிச்சையாக, அராஜகப் போக்கில், போட்டியில் வளர்ச்சியடைகின்றன.

அதே பொழுது, இரண்டிற்கும் இடையில் கணிசமான வேறுபாடுகளும் உண்டு. எளிய பண்ட உற்பத்தியில் உற்பத்திச் சாதனங்கள் நேரடியான உற்பத்தியாளனுக்குச் சொந்தமானவை, முதலாளித்துவப் பண்ட உற்பத்தியிலோ அவை முதலாளிக்குச் சொந்தமானவை. முதலாவது, பண்ட உற்பத்தியாளன் மற்றும் அவனுடைய குடும்பத்தாரின் தனிப்பட்ட உழைப்பின் அடிப்படையிலானது, இரண்டாவதோ கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவதன் அடிப்படையிலானது. எளிய பண்ட உற்பத்தியின் இறுதி

லட்சியம் பண்ட உற்பத்தியாளனின் தனிப்பட்ட தேவை களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதாகும், முத லாளிகளோ லாபம் சம்பாதிக்க வேண்டும், ஆதாயமடைய வேண்டும் என்பதற்காகவே உற்பத்தி செய்கின்றனர்.

எளிய மற்றும் முதலாளித்துவப் பண்ட உற்பத்தி முறைகளுக்கு இடையிலான ஒற்றுமைகளும் வேற்றுமை களும் விவசாயி, சிறு தொழில் புரிபவன் (கைவினைஞன்) என்ற சிறு பண்ட உற்பத்தியாளர்களின் இரட்டைத் தன் மையை நிர்ணயிக்கின்றன. ஒரு புறம் இவர்கள் உழைப் பாளிகள், மறு புறம் உடைமையாளர்கள். உடைமையாளர் கள் என்ற வகையில் இவர்கள் "செல்வாக்கில் உயர்ந்து" செல்வம் சேர்க்க விழைகின்றனர். இதற்காக மற்றவர் களைச் சுரண்டவும் கூட இவர்கள் தயார். அதே பொழுது, பூர்ஷ்வா சமுதாயத்தில் உழைப்பாளிகள் என்ற வகை யில் இவர்களுடைய நிலை மிகக் கடினமானது. பெரும் பாலான சந்தர்ப்பங்களில் பெரும் விவசாயப் பண்ணை கள் அல்லது தொழில் நிறுவனங்களுடன் போட்டியிட இயலாத சிறு பண்ட உற்பத்தியாளர்கள் விரைவிலேயே திவாலடைகின்றனர்.

குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலைகளில் எளிய பண்ட உற் பத்தி என்பது முதலாளித்துவ உற்பத்தி தோன்றுவதற் கான அடிப்படை வடிவமாகத் திகழுகிறது. உற்பத்திச் சாதனங்களும் பெருமளவில் பணமும் ஒரு சிலரின் கரங் களில் குவிவதும் உழைப்புச் சக்தி பண்டமாக மாற்றப் படுவதும் இத்தகைய சூழ்நிலைகளாகும். தனிப்பட்ட முறையில் சுதந்திரமான, ஆனால் உற்பத்திச் சாதனங்கள் எதுவுமில்லா வேலையாள், பட்டினியால் மாளாம லிருக்கத் தன் உழைப்புத் திறனை விற்கும் கட்டாயத் திற்கு ஆளாகிறான்.

பண்டம் என்றால் என்னவென்று இப்போது பார்ப்

போம். பண்டத்தின் சாரத்தைப் புரிந்து கொள்ளாமல் முதலாளித்துவச் சுரண்டலின் தன்மையைப் புரிந்து கொள்ள இயலாது என்றார் கா. மார்க்ஸ். எனவேதான் கா. மார்க்ஸ் **மூலதனம்** நூலில் முதலாளித்துவ உற்பத்தியின் பகுப்பாய்வை பண்டத்தைப் பற்றிய பகுப்பாய்விலிருந்து துவக்குகிறார்.

### பண்டமும் அதன் தன்மைகளும்

பண்டம்தான் முதலாளித்துவப் பண்ட உற்பத்தியின் அடிப்படை செல் ஆகும். "முதலாளித்துவ (பண்ட) சமூகத்தின் மிகவும் எளிமையான, மிகவும் சாதாரணமான மற்றும் அடிப்படையான, மிகப் பொதுப்படையான மற்றும் அன்றாட **உறவை,** பல கோடி முறைகள் சந்திக்கின்ற உறவை..."* என்று வி. இ. லெனின் பண்டப் பரிவர்த்தனையைப் பற்றி எழுதுகையில் குறிப்பிடுகிறார்.

பண்டம் என்பது பரிவர்த்தனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருளாகும். எந்த ஒரு பண்டத்திற்கும் இரண்டு பண்புகள் உண்டு: இது மனிதனின் குறிப்பிட்ட ஒரு தேவையைப் பூர்த்தி செய்கிறது, மற்ற பண்டங்களுடன் பரிமாறிக் கொள்ளப்படுகிறது.

ஏதாவது ஒரு மனிதத் தேவையைப் பூர்த்தி செய்ய பண்டத்திற்கு உள்ள மதிப்பு அதன் **பயன் மதிப்பு** எனப்படும். ஒரு பண்டம் மனிதனின் தனிப்பட்ட தேவையை நேரடியாகப் பூர்த்தி செய்யலாம் அல்லது வாழ்க்கைச் செல்வங்களின் உற்பத்திச் சாதனமாகத் திகழலாம். உதாரணமாக, ரொட்டி, வெண்ணெய், இறைச்சி ஆகியவை மனிதனின் உணவுத் தேவையையும், ஆடைகள் உடுப்புத்

* வி. இ. லெனின், **இயக்கவியல் பிரச்சினையைப் பற்றி,** மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1988, பக்கம் 11.

தேவையையும், எரிவாயுவும் விறகும் எரிபொருள் தேவை யையும் பூர்த்தி செய்கின்றன. இயந்திரங்கள், மூலப் பொருள், பிற உற்பத்திச் சாதனங்கள் பொருளாயத செல் வங்களின் உற்பத்திக்குப் பயன்படுகின்றன. ஒரு பொரு ளுக்கு பயன் மதிப்பில்லாவிடில் அது என்றுமே பண்ட மாகாது. அது யாருக்குமே தேவையில்லாததாகும்.

பண்டத்தின் பயன் மதிப்பு பெரும்பாலும் பொருட் களின் இயற்கைத் தன்மைகளுடன் தொடர்புடையது, எந்த ஒரு சமுதாயத்திலும் செல்வத்தின் பொருள் சாரத்தை ஏற்படுத்துகிறது. பண்ட உற்பத்தியில் பயன் மதிப்பு பரிவர்த்தனை மதிப்பை ஏந்தி நிற்கிறது.

**பரிவர்த்தனை மதிப்பு**—இது குறிப்பிட்ட அளவுநிலை விகிதங்களின்படி மற்ற பண்டங்களுடன் மாற்றிக் கொள்ள ஒரு பண்டத்திற்கு உள்ள திறமையாகும். பரிவர்த் தனையில் பல்வேறு பண்டங்களை ஒன்றுடன் ஒன்று ஒப் பிடுவதற்கு, அவற்றிடம் ஏதாவது ஒரு பொது அம்சம் இருக்க வேண்டும். பயன் மதிப்புகள் என்ற வகையில் பண்டங்கள் பண்பு ரீதியில் வெவ்வேறானவை. இவற்றில் பொதுவான அம்சம் என்னவெனில் இவையெல்லாம் உழைப்பின் விளைபொருட்களாக இருப்பதாகும், மனித உழைப்புதான் இவற்றை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட உதவு கிறது. பண்ட உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட உழைப்பு இவற்றின் **மதிப்பை** உருவாக்குகிறது. மதிப்புகள் என்ற வகையில்தான் பண்டங்களை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட முடியும்.

ஒரு பண்டத்தின் தயாரிப்பிற்கு எவ்வளவுக்கெவ் வளவு அதிகமான உழைப்பு செலவிடப்பட்டுள்ளதோ அவ் வளவுக்கவ்வளவு அதன் மதிப்பு அதிகம். ஆனால் ஒரு பண்டத்தின் மீது அதைத் தயாரிக்க எவ்வளவு உழைப்பு செலவிடப்பட்டது என்று குறிப்பிட முடியாது. பண்டத்தின்

மதிப்பு பரிவர்த்தனையில்தான், பரிவர்த்தனை மதிப்பின் மூலம் வெளிப்படுகிறது. ஒவ்வொரு முறையும் மனிதர்கள் ஒரு பண்டத்தை இன்னொரு பண்டத்துடன் பரிவர்த்தனை செய்து கொள்ளும் பொழுது, இப்பண்டங்களின் உற்பத்திக்குச் செலவிடப்பட்ட உழைப்பு ஒப்பிடப்படுகிறது, மதிப்புகள் என்ற வகையில் பண்டங்கள் ஒப்பிடப்படுகின்றன.

இவ்வாறாக, பண்டம் என்பது பயன் மதிப்பு மற்றும் மதிப்பின் ஒட்டுமொத்தமாகத் திகழுகிறது. பண்டத்தின் இரட்டைத் தன்மை பண்ட உற்பத்தியாளனின் உழைப்பின் இரட்டைத் தன்மையால் நிர்ணயிக்கப்படுகிறது. உழைப்பின் இரட்டைத் தன்மையை முதன்முதலில் கார்ல் மார்க்ஸ் சுட்டிக்காட்டினார். முதலாளித்துவச் சுரண்டலின் இரகசியத்தைச் சுட்டிக்காட்ட இதுதான் அவருக்கு உதவியது.

ஒவ்வொரு பண்ட உற்பத்தியாளனின் உழைப்பும் ஒரு புறம் **ஸ்தூலமான** உழைப்பாகத் திகழுகிறது. இது குறிப்பிட்ட வேலை அல்லது தொழிலின் உழைப்பாகும், இது குறிப்பிட்ட பயன் மதிப்பைத் தோற்றுவிக்கிறது. உதாரணமாக, கொல்லன் ஓர் இரும்புக் கருவியையும், ரொட்டி சுடுபவன் ரொட்டியையும், தையல்காரன் ஆடையையும் தயாரிக்கிறான். ஸ்தூலமான உழைப்பில் ஆயிரக் கணக்கான வகைகள் உண்டு, என்றாலும் இவற்றில் ஒரு பொது அம்சம் உண்டு; அதாவது இவை ஒவ்வொன்றிற்கும் மனிதன் தன் ஆற்றலை, உடல் பலத்தை, மூளை பலத்தை, பொதுவில் உழைப்புச் சக்தியைச் செலவிட்டுள்ளான். இந்த வகையில் ஒவ்வொரு உழைப்பும் **சூக்குமமான** உழைப்பாகும். சந்தையில் பரிவர்த்தனையின் பொழுது ஒவ்வொரு வகையான ஸ்தூலமான உழைப்பும் பண்டங்களுக்கு அளித்த வடிவத்திலிருந்து அப்பண்டம் சூக்கு

மப்படுத்துவது நடைபெறுகிறது. பண்டங்கள், குணாப ரீதியில் ஒரே மாதிரியான சூக்குமமான உழைப்பின் படி கங்களாக ஒன்றுடன் ஒன்று ஒப்பிடப்படுகின்றன.

எளிய பண்ட உற்பத்தியிலும் சரி, முதலாளித்துவப் பண்ட உற்பத்தியிலும் சரி, இரண்டிலும் பண்ட உற்பத்தி யாளனின் உழைப்பு நேரடியாகத் தனிப்பட்ட உழைப் பாகத் திகழுகிறது, ஏனெனில் இது தனியுடைமையின் அடிப்படையிலானது. அதே பொழுது, இந்த உழைப்பு மொத்த சமூக உழைப்பின் ஒரு அங்கமாகவும் திகழு கிறது, ஏனெனில் இது சமூக உழைப்புப் பிரிவினையின் சூழ்நிலையில் நடைபெறுகிறது. தனிப்பட்ட உழைப்பிற்கும் சமூக உழைப்பிற்கும் இடையில், ஸ்தூலமான உழைப் பிற்கும் சூக்குமமான உழைப்பிற்கும் இடையில் ஆழ்ந்த உள் முரண்பாடுகள் நிலவுகின்றன. பயன் மதிப்பிற்கும் மதிப்பிற்கும் இடையிலான முரண்பாடு—பண்டமானது நுகர்விற்கானது, ஆனால் இது விற்பனைக்காக உற்பத்தி செய்யப்படுகிறது—இவற்றில் வெளிப்படுகிறது. குறிப்பிட்ட பண்டமானது, ஒரு மதிப்பாகக் கருதப்பட்டு விற்கப்படா விடில் அது பயன் மதிப்பு என்ற வகையில் நுகர்வாளனைச் சென்றடையாது, நுகரப்படாது என்பதில் இம்முரண்பாடு வாழ்க்கையில் வெளிப்படுகிறது. முதலாளித்துவத்தில் மிகையுற்பத்தி நெருக்கடிகளில் இது குறிப்பாகக் கடுமை யாக வெளிப்படுகிறது.

### பண்ட மதிப்பின் அளவு

பண்டத்தின் மதிப்பு உழைப்பால் தோற்றுவிக்கப்படுவ தால் இதன் அளவு, பண்டத்தில் அடங்கியுள்ள உழைப் பின் அளவால் அளக்கப்படுகிறது. உழைப்பின் இயற்கை யான அளவு **உழைப்பு நேரம்** ஆகும் (மணி, நாள்,

வாரம்). வெவ்வேறு வகையான பண்டங்களை உற்பத்தி செய்ய மட்டுமல்ல, ஒரே வகையான பண்டத்தை உற்பத்தி செய்யவும் உற்பத்தியாளர்கள் வெவ்வேறு அளவு நேரத்தைச செலவிடக் கூடும். இது உழைப்புக் கருவிகள், வேலையாட்களின் பயிற்சி, திறமை, இன்னும் பலவற்றைப் பொறுத்தது.

ஏதாவது ஒரு குறிப்பிட்ட பண்டத்தை உற்பத்தி செய்யத் தனிப்பட்ட உழைப்பாளி செலவிடும் நேரம் அவனுடைய தனிப்பட்ட உழைப்பு நேரமாகும். ஆனால் பண்ட மதிப்பின் அளவு தனிப்பட்ட முறையில் எவ்வளவு உழைப்பு செலவாகிறது என்பதால்—இது கணிசமான அளவு நபருக்கு நபர் வேறுபடக் கூடும்—நிர்ணயிக்கப்படுவதில்லை. மதிப்பில் சமூக உழைப்பு அடங்கியுள்ளது. எனவே பண்டத்தினுடைய மதிப்பின் அளவானது சமூக ரீதியில் அவசியமான உழைப்பால் அல்லது சமூக ரீதியில் அவசியமான உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. சமூக ரீதியில் அவசியமான உழைப்பு நேரம் என்பது, சராசரியான மாமூலான உற்பத்திச் சூழலில், குறிப்பிட்ட கால கட்டத்தில் சராசரியான உழைப்புத் திறமை மற்றும் வேகத்தில் ஒரு குறிப்பிட்ட பண்டத்தைத் தயாரிக்க ஆகும் உழைப்பு நேரத்தை வெளிப்படுத்துகிறது. சமூக ரீதியில் அவசியமான உழைப்பு நேரம் என்பது நிரந்தரமானதல்ல. தொழில்நுட்பம் வளர்ந்து, உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் பொழுது இது மாற்றமடையும், பொதுவில் குறையும். இது ஒரு புறவய நிகழ்ச்சிப் போக்காகும், உற்பத்தியாளர்களின் சித்தம், உணர்வைச் சாராமல் இது நடக்கிறது.

இவ்வாறாக, பண்ட மதிப்பின் அளவு என்பது அதன் உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட சமூக உழைப்பின் அளவால் அளவிடப்படுகிறது, மதிப்பு என்பது மனிதர்களுக்கு

இடையிலான சமூக உறவைப் பண்டங்களின் மூல வெளிப்படுத்துகிறது. சந்தையில் பண்டங்களின் பரிமாற றம், அவற்றின் சமூக மதிப்பின் அளவிற்கேற்ப, சம மதிப் பிற்கு சம மதிப்பு என்ற கோட்பாட்டின்படி நடக்கிறது. பண்ட உற்பத்தியின் மிக முக்கிய விதிகளில் ஒன்றாகிய **மதிப்பு விதியின்** சாரம் இதில்தான் அடங்கியுள்ளது.

ஏற்கெனவே நாம் மேலே கூறியபடி, பண்டத்தின் மதிப்பைப் புலனுறுப்புகளால் உணர முடியாது, சந்தை யில் பண்டங்களைப் **பணத்தின்** மூலம் (இதுவே ஒரு விசேஷப் பண்டமாகும்) ஒப்பிடும் பொழுதுதான், இது வெளிப்படுகிறது.

### பணத்தின் சாரமும் அதன் செயற்பாடுகளும்

பூர்ஷ்வா சமுதாயத்தில் பணத்திற்கு விசேஷ இடமுண்டு. பணத்தின் வரலாறு பழமையானது. முதலாளித்துவம் தோன்றுவதற்கு நீண்டகாலம் முன்னராகவே, பல நூற் றாண்டுகளுக்கு முன்னரே பணம் தோன்றியது. முத லாளித்துவ பண்ட உற்பத்தியில் இதன் பங்கு பன்மடங்கு அதிகரித்தது. முதலாளி வர்க்கத்தைப் பொறுத்தமட்டில் பணம் என்பது எதைக் குறிக்கிறது என்று எமீல் ஸோலா **பணம்** என்னும் தன் நாவலில் பின்வருமாறு எழு தினார்: ''பணம் என்பது ஒரு பேரரசன், கடவுள்; பணம் இரத்தத்தை விட, கண்ணீரை விட உயர்ந்து நிற்கிறது. சாதாரண மனித உணர்வை கூட மறந்து விட்டு, எல்லை யற்ற வல்லமை வாய்ந்ததாகப் பணத்தை வழிபடுகின்ற னர்.'' பணத்தின் ''சமூகக் கடமைகளில்'', செயற்பாடு களில் அதன் சாரம் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. பணம் மற்றெல்லா பண்டங்களின் மதிப்பையும் குறிக்கப் பயன்படுகிறது. பண்ட மதிப்பின் பண வெளிப்பாடுதான்

அதன் **விலை** ஆகும். நாம் சிந்தனையில் பண்டத்தைப் பணத்துடன் ஒப்பிட்டுத்தான் பண்டங்களை அவற்றின் விலைகள் மூலம் புரிந்து கொள்கிறோம்.

பணம் பண்டங்களின் சுழற்சிக்கு ஊடகமாகத் திகழுகிறது. சுழற்சிச் சாதனம் என்ற வகையில் பணம் ஒரு பரிவர்த்தனையிலிருந்து இன்னொன்றிற்கு மாறுகிறது, இப்பணியை கண நேரத்தில் செய்கிறது. இது உள்நாட்டு பணச் சுழற்சியில் உண்மையான தங்கப் பணத்தை மாற்றி அதற்குப் பதில் காகிதப் பணத்தைக் கொண்டுவர உதவியது; இந்த காகிதப் பணத்திற்கு பெயரளவு மதிப்பு, அதாவது அரசால் நிலைநாட்டப்பட்ட மதிப்பு உண்டு.

முதலாளித்துவ சமுதாயத்தில் செல்வத்தின் சர்வ பொது பிரதிநிதி என்ற வகையில் பணம், பொக்கிஷம் உருவாகும் சாதனமாகத் திகழுகிறது, அதாவது சேமிக்கப்பட்டு, நீண்ட காலத்திற்குப் பாதுகாக்கப்படுகிறது.

பணமானது பண்ட உற்பத்தி, பரிவர்த்தனையிலிருந்து தோன்றி, அவற்றுடன் சேர்ந்து வருகிறது. பண்டப் பரிவர்த்தனையில் பணம் சர்வபொது சமானமாக விளங்குகிறது, அதாவது எந்த ஒரு பண்டத்தையும் பணத்துடன் ஒப்பிடலாம், இப்பணத்தைக் கொண்டு வேறொரு பண்டத்தை வாங்கலாம். வரலாற்று ரீதியில், தங்கமும் வெள்ளியும் தன்னிச்சையாகப் பணப் பண்டமாகப் பணியாற்ற முன்வைக்கப்பட்டன. இந்த உலோகங்கள் சிறு அளவில், எடையில் கணிசமான மதிப்பை உடையவை, இவற்றை எளிதாகப் பங்கிடலாம், சேதமின்றி நீண்ட காலம் பாதுகாக்கலாம், சுருங்கக் கூறின், தம் இயற்கைத் தன்மைகளில் இவை சர்வபொது சமானமாகப் பங்காற்ற மிக வசதியானவை. பணம் தோன்றி, வளர்ந்ததையடுத்து ஒரு வல்லமை மிக்க சக்தி தோன்றியது, இதை வைத்திருப்பவர்களுக்குச் செல்வமும் ஆட்சியும் கிட்டின. முத

லாளித்துவ சமுதாயத்தில் பணம் என்பது ஒரு மந்திர சாதனமாகும், இது எந்த ஒரு பொருளாயும் மாற வல்லது.

ஒரு பண்டத்தைத் தவணை முறையில் பணம் கொடுத்து வாங்கும் பொழுது அது செலுத்துதலின் சாதனமாக இருக்கிறது. கடன் நடவடிக்கைகள், வரி செலுத்துதல், இன்னும் பிற சந்தர்ப்பங்களில் பணம் இப்பணியை நிறைவேற்றுகிறது. முதலாளித்துவ நாடுகளில் காசோலைகளும் கடன் பத்திரங்களும் செலுத்துதலின் சாதனங்களாகப் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

உலக பண்டப் பரிவர்த்தனையில் பணம் சர்வதேச செலுத்துதல் மற்றும் வாங்கும் சாதனமாக விளங்குகிறது. சில நேரங்களில் இது தன் ''தேசிய ஆடைகளைக்'' களைந்தெறிந்து விட்டு, விலைமதிப்புள்ள உலோகப் பாளங்களாகிறது.

முதலாளித்துவ சமுதாயத்தில் ஏன் பணம் மிகப் பெரும் சக்தியாக உள்ளது? ஏன் அதிகாரமும் ஆதிக்கமும் இதன் கரங்களில் உள்ளன? பிறரைச் சுரண்டி வாழும் வாய்ப்பை ஏன் இது ஒரு சிலருக்கு அளிக்கிறது? ஏனெனில் முதலாளித்துவத்தில் பணத்தால் **மூலதனமாக** மாற முடியும்.

## பணம் மூலதனமாதல்

பணம் என்பது எளிய பண்ட உற்பத்தியின் வளர்ச்சியில் இறுதிப் பொருளாகும், அதே நேரத்தில், மூலதனம் தோன்றுவதன் முதல் வடிவமாகும். ஆனால் பணம் தானாகவே மூலதனமாகாது, குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலைகளில்தான் மூலதனமாகிறது.

எளிய பண்ட உற்பத்தியில் நடைபெறும் பண்டச் சுழற்

சியைப் பின்வரும் சூத்திரத்தால் விளக்கலாம்: பண்டம்—பணம்—பண்டம் (C—M—C). இங்கே பணம் (M) பண்டங்களைப் பரிவர்த்தனை செய்வதற்கான இடைச் சாதனமாக விளங்குகிறது. பண்டப் பரிவர்த்தனையின் லட்சியம் தெளிவு. உதாரணமாக, ஒரு விவசாயி தன்னிடமுள்ள தானியத்தை விற்று, அதனால் கிடைக்கும் பணத்தில் துணியை வாங்குகிறான். இங்கே பணம் வாங்குதலுக்காகச் செலவிடப்படுகிறது, இங்கு மூலதனமாக மாறுவதில்லை.

மூலதனம் என்ற வகையில் பணத்தின் சுற்றோட்டம் பின்வரும் சூத்திரத்தால் வெளிப்படுத்தப்படுகிறது: பணம்—பண்டம்—பணம் (M—C—M). இங்கே பணம் செலவிடப்படுவதில்லை, இது முன் பணமாக முதலாளியால் தரப்படுகிறது, அவ்வளவுதான். அவன் மீண்டும் பணத்தைப் பெறும் நோக்கத்துடன் முதலில் அதைத் தன் கையிலிருந்து வெளிவிடுகிறான்.

மூலதனம் என்ற வகையில் பணச் சுற்றோட்டத்தின் இறுதி லட்சியம் பணம்தான். அமெரிக்க எழுத்தாளர் டிரைசர் தன்னுடைய **மேதை** என்ற நூலில் முதலாளி சம்மர்ஃபீல்டைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்: "நாள் பூராவும் அவனுக்காகத் தங்கத்தையும் வெள்ளியையும் நாங்கள் பெற்றுத் தந்தது அவனுக்குப் போதவில்லை, அவன் மறுநாள் இன்னமும் அதிக அளவில் தங்கமும் வெள்ளியும் வேண்டுமென்றான். அவனுடைய பொறாமைக்கு ஓர் எல்லையே இருக்கவில்லை...."

பணம்—பண்டம்—பணம் என்ற சூத்திரத்தின்படியான பணச் சுழற்சியில் பணம் வைத்திருப்பவன் முதலில் எவ்வளவு பணம் போடுகின்றானோ அதே அளவு பணத்தை இறுதியிலும் பெற்றால் இது பொருளற்றதாய், நோக்கமற்றதாயிருக்கும். முதலில் போட்ட பணத்தை விட

அதிகமான பணம் கிட்டினால்தான் இந்நடவடிக்கைக்கு அர்த்தமிருக்கும். மூலதனம் என்ற வகையில் பணச் சுற்றோட்டத்தின் உண்மையான சூத்திரம் பின்வருமாறு: பணம்—பண்டம்—முதலிட்ட பணமும் இன்னமும் கூடுதலான தொகையும் (M—C—M′). இந்த கூடுதல் பணத்தைத்தான் கா. மார்க்ஸ் **உபரி மதிப்பு** என்றார்.

மூலதனம் என்ற வகையில் பணமானது தன் சுற்றோட்டத்தில் தானே அதிகரிக்கிறது, "பொன் முட்டையிடும்" திறமையைப் பெறுகிறது, உபரி மதிப்பைத் தோற்றுவிக்கிறது. மூலதனம் என்பது தானே அதிகரிக்கும் மதிப்பு அல்லது உபரி மதிப்பைக் கொண்டுவரும் மதிப்பாகும்.

பண அதிகரிப்பு எப்படி நடைபெறுகிறது? உபரி மதிப்பின் மூல ஊற்று எங்கேயுள்ளது?

மதிப்பின் அதிகரிப்பு, சுழற்சிப் போக்கிலேயே நடைபெறுகிறது என்று ஒரு சில பூர்ஷ்வாப் பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். மதிப்பு விதியின்படி, புழக்கத் துறையில் சமானங்கள்தான், ஒரே அளவுள்ள மதிப்புகள்தான் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன. ஒரு சில முதலாளிகள் தந்திரங்களைக் கையாண்டு மற்றவர்களை ஏமாற்றக் கூடும். ஆனால் விற்பவர்கள் என்ற வகையில் சிலர் பெறும் ஆதாயம் வாங்குபவர்கள் என்ற வகையில் வேறு சிலரின் இழப்பாகும். மூலதன அதிகரிப்போ முதலாளி வர்க்கம் முழுவதிடமும் நடக்கிறது.

எல்லா பண்டங்களும் மதிப்பின்படி விற்கப்படுகின்றன, வாங்கப்படுகின்றன என்றால் உபரி மதிப்பு எங்கிருந்து தோன்றுகிறது? உபரி மதிப்பின் இரகசியத்தை முதன் முதலில் கா. மார்க்ஸ்தான் கண்டுபிடித்தார்.

விஷயம் என்னவெனில், தன்னுடைய மதிப்பை விட அதிகமான மதிப்பைத் தோற்றுவிக்க வல்ல ஒரு ஈடு

இணையற்ற தன்மையைத் தன் பயன் மதிப்பில் கொண்ட ஒரு பண்டத்தை முதலாளி சந்தையில் கண்டுபிடிக்கிறான். அந்த விசேஷப் பண்டம்தான் **உழைப்புச் சக்தியாகும்.**

## உழைப்புச் சக்தி என்ற பண்டம்

உழைப்புச் சக்தி என்பது மனிதனுடைய உடல்பலம் மற்றும் மனபலத்தின் ஒட்டுமொத்தமாகும்; பொருளாயத செல்வங்களைத் தோற்றுவிக்கும் பொழுது மனிதன் இவற்றைப் பயன்படுத்துகிறான். எந்த ஒரு சமுதாயத்திலும் உழைப்புச் சக்தி என்பது உற்பத்திக்கு அவசியமானதொரு அங்கமாகும். ஆனால் முதலாளித்துவத்தில்தான் இது பண்டமாகிறது. இதற்கு முதலில் உழைப்புச் சக்தியின் சொந்தக்காரனுக்குத் தனிப்பட்ட முறையில் சுதந்திரம் வேண்டும்: என்றாலும் இது மட்டும் போதாது. தொழிலாளி தனிப்பட்ட முறையில் சுதந்திரமானவனாக இருந்து, தன் குடும்பத்திற்கு உணவளிக்க அவனிடம் வேறு வழிகள் இருந்தால் அவன் முதலாளியிடம் செல்ல மாட்டான். கா. மார்க்ஸ் **மூலதனம்** நூலில் ஒரு சுவாரசியமான உதாரணத்தைத் தருகிறார். பிரிட்டிஷ் ஆலை முதலாளி பீல் ஆஸ்திரேலியாவில் ஒரு தொழில் நிறுவனத்தைக் கட்ட முடிவெடுத்தார். அவர் இயந்திரங்களையும் மூலப்பொருளையும் கப்பலில் ஏற்றி விட்டு, ஒரு சில ஆயிரம் ஆண்கள், பெண்கள், குழந்தைகளை வேலை செய்வதற்காக அழைத்துக் கொண்டு புறப்பட்டார். ஆனால் ஆஸ்திரேலியாவில் பீலிடம் சொந்த வேலைக்காரர்கள் கூட எஞ்சவில்லை. ஆஸ்திரேலியாவில் அப்போது எல்லோருக்கும் போதுமான அளவு வெற்று நிலமிருந்ததால் பீலுடன் சென்றவர்கள் பயிர்த் தொழிலிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட விரும்பினர். கொள்ளை

லாபம் சம்பாதிக்க விரும்பிய பீலின் பொறாமை ஆசைகள் ஆகாயத்தில் கட்டப்பட்ட கோட்டையைப் போல் இடிந்து விழுந்தன.

தனிப்பட்ட முறையில் சுதந்திரமான வேலையாளை கூலித் தொழிலாளியாக மாற்ற அவசியமான நிபந்தனை அவனிடமிருந்து உற்பத்திச் சாதனங்களை, எனவே வாழ்க்கைச் சாதனங்களைப் பிடுங்குவதாகும்.

எந்த ஒரு பண்டத்தையும் போன்றே உழைப்புச் சக்தி என்ற பண்டத்திற்கும் மதிப்பும் பயன் மதிப்பும் உண்டு. உழைப்புச் சக்தி என்ற பண்டத்தின் மதிப்பு, அதன் "உற்பத்திக்கு" அவசியமான உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. உழைப்புச் சக்தி என்பது ஒரு விசேஷப் பண்டமாகும். உழைப்புச் சக்தியை வைத்திருப்பவன் மனிதன் ஆவான், இவன் உயிர் வாழ்ந்து, உழைக்க வேண்டுமானால் இவனுக்கு உணவும் உடுப்புகளும் ஓய்வும் அவசியம். இப்பண்டத்தை "உற்பத்தி செய்ய" தொழிலாளிக்கு அவசியமான வாழ்க்கைச் சாதனங்களை வழங்க வேண்டும், இவற்றைப் பெற தொழிலாளியிடம் குறிப்பிட்ட அளவு பணம் இருக்க வேண்டும். அதாவது, தொழிலாளி தன் உழைப்புச் சக்தியை முதலாளிக்கு விற்பதால் கிடைக்கும் பணம் தனக்குத் தேவையான பொருளாயத நலன்களை வாங்கப் போதுமானதாயிருக்க வேண்டும்.

முதலாளித்துவ உற்பத்திக்குப் புதிய உழைப்புச் சக்தி இடையறாது தேவைப்படுவதால், தொழிலாளியின் குடும்பத்திற்கு அவசியமான நுகர்வுப் பொருட்களின் மதிப்பு உழைப்புச் சக்தி என்ற பண்டத்தின் மதிப்பில் அடங்கும். தொழிலாளியின் குழந்தைகளை முதலாளி எதிர்காலச் சுரண்டல் பொருளாகத்தான் பார்க்கிறான். ஒரு பருந்து தன் இரையை எப்படிப் பார்க்குமோ அதே போல்தான் தொழிலாளிகளின் குழந்தைகளை முதலாளி பார்க்கிறான். பண்

டைய கதை ஒன்றில் ஒரு பருந்து கௌதாரியைப் பார்த்து, அது அவ்வளவு குட்டிகளைப் பேணிக் காத்து வளர்ப்பதற்காகப் பாராட்டு தெரிவித்தது. பின் அக்குட்டிகளை ஒன்றன் பின் ஒன்றாக கவ்வி எடுத்துச் சென்றது. இதையறிந்த கௌதாரி பருந்தைப் பார்த்து கூறிற்று: "உன்னுடைய பேராசையின் காரணமாகத்தான் நீ என்னைப் பாராட்டினாய் என்பது எனக்கு இப்போது புரிகிறது.'' அதே போல்தான் முதலாளியும் தொழிலாளி குடும்பத்துக் குழந்தைகள் எப்போது வளர்ந்து பெரியவர்கள் ஆவார்கள், அவர்களை அப்போது இயந்திரத்தின் அருகில் நிறுத்தி பணம் சம்பாதிக்கலாம் என்று காத்துக் கிடக்கிறான்.

தொழிலாளிக்கு ஏதாவது ஒரு உற்பத்தித் துறையில் அனுபவமும் தொழில் திறமையும் வேண்டும். இத்திறமையைப் பெறவும் கல்வி கற்கவும் ஆகும் செலவுகளும் உழைப்புச் சக்தியின் மதிப்பிலடங்கும். தொழிலாளியின் தேர்ச்சி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பு அதிகம். உழைப்பாளியின் ஆன்மீகத் தேவைகளும் (திரைப்படம் பார்த்தல், பத்திரிகை, சஞ்சிகைகளைப் படித்தல், இத்தியாதி) பூர்த்தி செய்யப்பட வேண்டும். இவற்றிற்காகும் செலவுகளும் உழைப்புச் சக்தியின் மதிப்பிலடங்கும்.

பண வடிவில் வெளிப்படுத்தப்பட்ட உழைப்புச் சக்தியின் மதிப்புதான் **உழைப்புச் சக்தியின் விலை** எனப்படும். முதலாளித்துவத்தில் இது **ஊதிய** வடிவில் உள்ளது. சாதாரணமாக, முதலாளிகள் உழைப்புச் சக்தியை அதன் மதிப்பை விடக் குறைவான விலைக்கு வாங்குவார்கள், அதன் மூலம் தம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வர்.

பண்டம் என்ற வகையில் உழைப்புச் சக்திக்கு பயன் மதிப்பும் உண்டு; தம் உழைப்புச் சக்தியின் மதிப்பை விட அதிகமான புதிய மதிப்பைத் தோற்றுவிக்கக் கூலித் தொழி

லாளிகளுக்கு உள்ள திறமையில் இது வெளிப்படுகிறது. இத்திறமைக்காகத்தான் முதலாளிகள் தொழிலாளிகளை வேலைக்கமர்த்துகின்றனர்.

கூலி வழங்கப்படாத தொழிலாளியின் உழைப்புதான் உபரி மதிப்பின் மூல ஊற்றாகும்; இதைத்தான் உழைப்புச் சக்தியை வாங்கிய முதலாளி இலவசமாக சுவீகரிக்கிறான். இதுதான் முதலாளித்துவத்திற்கே உரித்தான அம்சம், முதலாளித்துவ சுரண்டலின் சாரம் ஆகும்.

அத்தியாயம் இரண்டு

# தொழிலாளர்களின் குருதியை உறிஞ்சும் பிசாசு

உழைப்பாளிகளைச் சுரண்டி, உபரி மதிப்பை உற்பத்தி செய்து, அதை அபகரிப்பதன் மூலம்தான் முதலாளிகள் செல்வம் சேர்க்கின்றனர். கா. மார்க்ஸ் மூலதனத்தைக் குருதியை உறிஞ்சும் பிசாசுடன் ஒப்பிட்டார்; இது உயிர் வாழ வேண்டுமானால் குருதியை உறிஞ்சியாக வேண்டும்.* உபரி மதிப்பைப் பற்றிய போதனையைத் தோற்றுவித்த மார்க்ஸ் முதலாளித்துவ சுரண்டலின் சாரத்தை வெளிப்படுத்தினார். கா. மார்க்ஸ் தோற்றுவித்த உபரி மதிப்புத் தத்துவத்தை வி. இ. லெனின் அவருடைய பொருளாதார போதனையின் கோடிக்கல் என்றார்.

## முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதி

அளவின்றி, இடையறாது முதலாளி வர்க்கம் செல்வம் சேர்க்க வேண்டும் என்பதுதான் முதலாளித்துவ உற்பத்தி

* K. Marx, *Capital,* vol. 1, Moscow, Progress Publishers, 1984, p. 224 பார்க்க.

யின் ஒரே முக்கிய நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடையும் முறை, உபரி மதிப்பு தோற்றுவிக்கப்பட்டு, சுவீ கரிக்கப்படும் முறை ஆகியவற்றை **மூலதனம்** நூலில் கா. மார்க்ஸ் சுட்டிக்காட்டினார்.

முதலாளி தன்னிடமுள்ள பணத்தை வைத்து தொழிற் சாலை கட்டிடத்தை எழுப்புகிறான், அதில் தேவையான இயந்திரங்களைக் கொண்டுவந்து வைக்கிறான், மூலப்பொ ருள், எரிபொருளுக்கு ஏற்பாடு செய்கிறான், அதே நேரத் தில் மதிப்பைத் தோற்றுவிக்க வல்ல உழைப்புச் சக்தி என்ற பண்டத்தைச் சந்தையில் வாங்குகிறான்.

உழைப்புச் சக்தியை வாங்கியதும் முதலாளி அதை உற்பத்திச் சாதனங்களுடன் இணைக்கிறான், தொழிலாளி யை இயந்திரங்களின் முன் நிறுத்துகிறான், உற்பத்தி ஆரம்பமாகிறது. இந்நிகழ்ச்சிப் போக்கை கா. மார்க்ஸ் அடையாளச் சிறப்போடு பின்வருமாறு வர்ணிக்கிறார்: "முன் னர் பணத்தை வைத்திருந்தவன் முதலாளியாக முன் னால் நடைபோடுகிறான், உழைப்புச் சக்தியை வைத்திருப் பவனோ தொழிலாளியாக அவன் பின் செல்கிறான்; முத லாமவன் பல்பொருள் தொனிக்க நகைக்கிறான், காரியத் தில் குறியாக இருக்கிறான்; இரண்டாமவனோ, தன் சொந்தத் தோலைச் சந்தையில் விற்று விட்டு, இதை எப் படி அடித்துப் பதப்படுத்தப் போகின்றனர் என்று காத்துக் கிடப்பதை விட வேறெந்த எதிர்காலமும் இல்லாத மனித னாக வருத்தம் தோய புலம்பித் திரிகிறான்."*

முதலாளித்துவத் தொழில் நிறுவனத்தில் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கிற்கு இரண்டு சிறப்பு அம்சங்கள் உண்டு: முதலாளியின் கண்காணிப்பின் கீழ் தொழிலாளி வேலை செய்கிறான், உற்பத்தி செய்யப்பட்ட பண்டம் முதலாளிக்குச்

---

* *Ibid.*, p. 172.

சொந்தமானது. எதை, எவ்வளவு, எந்த முறையில் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை முதலாளிதான் முடிவு செய்கிறான். முதலாளித்துவத்தின் கீழ் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கிற்குள்ள இச்சிறப்பியல்புகள் கூலித் தொழிலாளியின் உழைப்பைச் சுதந்திரமற்ற நிர்ப்பந்த உழைப்பாக்குகின்றன.

முதலாளித்துவ உற்பத்திக்கும் இரட்டை தன்மை உண்டு. ஒரு புறம், இது பயன் மதிப்புகளைத் தோற்றுவிக்கிறது, மறு புறமோ, இது மதிப்பை அதிகரிக்கிறது. இந்த இரட்டைத் தன்மை, இறுதியாகப் பார்க்குமிடத்து கூலித் தொழிலாளர்களுடைய உழைப்பின் இரட்டைத் தன்மையால் நிர்ணயிக்கப்படுகிறது. தொழிலாளிகளின் ஸ்தூலமான உழைப்பு புதிய பயன் மதிப்புகளைத் தோற்றுவிக்கிறது, உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு இவற்றிற்கு மாற்றப்படுகிறது. அதே நேரத்தில், இவர்களின் சூக்குமமான உழைப்பு புதிய மதிப்பைத் தோற்றுவிக்கிறது; இதில் உழைப்புச் சக்தியின் மதிப்பிற்கு சமமான அளவும் குறிப்பிட்ட அளவு மிகையான பகுதியும், அதாவது முதலாளி இலவசமாக விழுங்கி ஏப்பம் விடும் உபரி மதிப்பும் அடங்கும். ''செயலிலுள்ள உழைப்புச் சக்தி, உயிர் வாழும் உழைப்பு பெற்றிருப்பதான மதிப்பைச் சேர்க்கின்ற, அதே நேரத்தில் மதிப்பைப் பாதுகாப்பதென்ற குணாதிசயம் உழைப்பாளிக்கு இலவசமாகக் கிடைத்த, ஆனால்... முதலாளிக்கு மிக ஆதாயமுள்ளதான இயற்கையின் ஒரு பரிசாகும்'' என்றார் கா. மார்க்ஸ்.*

உபரி மதிப்பு என்பது கூலித் தொழிலாளிகளால் தோற்றுவிக்கப்பட்டு முதலாளியால் இலவசமாக அபகரிக்கப்படும் மதிப்பாகும். முதலாளிகள் உற்பத்திச் சாதனங்களையும் உழைப்புச் சக்தியையும் அவற்றின் மதிப்பிற்கேற்ப வாங்கி,

* *Ibid.*, p. 200.

உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை மதிப்பிற்கேற்ப விற்றாலும் கூலித் தொழிலாளர்களின் உழைப்பிலிருந்து அவர்கள் உபரி மதிப்பைப் பெறுகின்றனர்.

இது எப்படி நடைபெறுகிறது?

முதலாளித்துவ உற்பத்தியில் தொழிலாளர்களின் உழைப்பு முழுவதையும் இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். வேலை நாளின் ஒரு பகுதியில் தொழிலாளி, தன் உழைப்புச் சக்திக்கு சமமான மதிப்பைத் தோற்றுவிக்கிறான். இப்பகுதி, தன் உழைப்புச் சக்தியைப் புனர் நாட்டவும், தன் வாழ்க்கைக்கும் தன் குடும்பத்தின் வாழ்க்கைக்கும் தேவையான சாதனங்களைப் பெறவும் அவசியமாகும், இதுதான் **அவசியமான உழைப்பு நேரம்** எனப்படுகிறது. அவசியமான உழைப்பு நேரத்தின் பொழுது செலவிடப்பட்ட உழைப்பு **அவசியமான உழைப்பு** எனப்படும். ஆனால் முதலாளி, அவசியமான உழைப்பு நேரத்திற்கு மேல் உழைக்குமாறு தொழிலாளியை நிர்ப்பந்திக்கிறான். இதற்காகத் தான் முதலாளி தொழிலாளிகளை வேலைக்கமர்த்தியிருக்கிறான். அவசியமான உழைப்பு நேரத்திற்கு மேல் வேலை செய்வதற்குக் கூலித் தொழிலாளிக்கு எதுவும் கிடைப்பதில்லை. அவன் தன் உழைப்புச் சக்தியின் மதிப்பிற்குக் கூடுதலான மதிப்பை, அதாவது **உபரி மதிப்பைத்** தோற்றுவிக்கிறான், இதுதான் முதலாளிகளின் லாபம், செல்வத்திற்கான மூல ஊற்றாகும். வேலை நாளின் இப்பகுதி **உபரி உழைப்பு நேரம்** எனப்படும், இந்நேரத்தில் செலவிடப்பட்ட உழைப்பு **உபரி உழைப்பாகும்.** முதலாளிகள் உபரி மதிப்பைப் பெறுவதானது கூலித் தொழிலாளிகளின் கூலி தரப்படாத உபரி உழைப்பை சுவீகரிப்பதாகும், அதாவது இது தொழிலாளிகள் சுரண்டப்படுவதைக் குறிக்கிறது.

இயன்ற அளவு அதிகமான உபரி மதிப்பைத் தோற்றுவித்து சுவீகரிப்பதுதான் முதலாளித்துவ உற்பத்தியின்

அடிப்படையாகும். இதுதான் இதன் முக்கியமான, முழுமுத லான பொருளாதார விதியாகும். இது முதலாளித்துவ உற் பத்தியின் முக்கிய நோக்கத்தை—லாபம் பெறுதல்—நிர் ணயிக்கும் அதே நேரத்தில் இதை அடையும் முக்கிய வழி யையும்—கூலித் தொழிலாளிகளைச் சுரண்டுதல்—சுட்டிக் காட்டுகிறது. "...இயன்ற அளவு மூலதனம் தானே பெருகு வதுதான், அதாவது இயன்ற அளவு அதிகமான உபரி மதிப்பை அடைவதுதான், எனவே உழைப்புச் சக்தியை முதலாளி இயன்ற அளவு அதிகமாகச் சுரண்டுவதுதான் முதலாளித்துவ உற்பத்தியின் உந்து சக்தியும் இறுதி நோக் கமும் ஆகும்" என்கிறார் கா. மார்க்ஸ்.*

முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படைப் பொ ருளாதார விதி முதலாளித்துவ சுரண்டலின் இரகசியத்தை வெட்ட வெளிச்சமாக்குகிறது, பூர்ஷ்வா சமுதாயத்தில் நடை பெறும் நிகழ்ச்சிப் போக்குகள், புலப்பாடுகளை ஆழமாயும் விஞ்ஞான ரீதியிலும் விளக்கும் வாய்ப்பையளிக்கிறது. உபரி மதிப்பின் விதி, முதலாளிகள் கூலித் தொழிலாளிகளைச் சுரண்டுவதை, உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையில், தொழிலாளர்களுக்கும் முதலாளி வர்க்கத்தினருக்கும் இடையிலான உறவுகளை—இவைதான் முதலாளித்துவத் தில் நிலவும் அடிப்படை வர்க்க உறவுகளாகும்—வெளிப் படுத்துகிறது. இறுதியாகப் பார்க்குமிடத்து, இவ்விதியின் தாக்கத்தினால்தான் முதலாளித்துவ முரண்பாடுகள் அனைத்தும் வளர்ந்து, கூர்மையடைகின்றன.

---

* *Ibid.*, p. 313.

உபரி மதிப்புதான் மூலதனச் செயற்பாட்டின் அடிப்படையும் இறுதி நோக்கமுமாகும்.

மூலதனம் என்பது எப்படிப்பட்டது?

மிகப் பொதுவில் பின்வருமாறு இக்கேள்விக்குப் பதிலளிக்கலாம்.

மூலதனம் என்பது கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவதன் மூலம் தன் சொந்தக்காரனுக்கு உபரி மதிப்பைத் தரும் மதிப்பு, அதாவது தானே பெருகும் மதிப்பாகும் (இது பணம் மற்றும் உற்பத்திச் சாதனங்களின் வடிவிலானது). இவ்வாறாக, மூலதனம் என்னும் கருத்தில் பூர்ஷ்வா சமுதாயத்தின் முக்கிய வர்க்கங்களாகிய முதலாளிகளுக்கும் (இவர்களிடம் உற்பத்திச் சாதனங்கள் உள்ளன), கூலித் தொழிலாளிகளுக்கும் (இவர்களிடம் உழைப்புச் சக்தியைத் தவிர எதுவுமில்லை, இதை விற்றுத்தான் இவர்கள் உயிர் வாழுகின்றனர்) இடையிலான சமூக உற்பத்தி உறவு கட்டாயமாக அடங்கியுள்ளது.

மூலதனம் எப்படித் தோன்றியது?

மூலதனம் என்பது பணம் வைத்திருந்தவர்களின் உழைப்பார்வத்தால் தோன்றியது என்ற ஒரு கருத்து இன்று வரை மேலைய நாடுகளில் நிலவுகிறது. ஏதோ சிக்கனமாக இருந்தவர்கள் பணக்காரர்களானதாயும் சோம்பேறிகளும் பணத்தை வாறியிரைத்து செலவு செய்தவர்கள் கூலித் தொழிலாளர்களானதாயும் கதை சொல்லப்படுகிறது.

அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஜார்ஜ கில்டெர் எழுதிய **செல்வமும் ஏழ்மையும்** என்ற நூல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. செல்வம் என்பது முயற்சிகளின் வெளிப்பாடு, இதை சகலவிதங்களிலும் ஊக்குவிக்க வேண்டும், ஏழ்மை என்பதோ சோம்பேறித்தனம், முயற்சியின்

மையின் அறிகுறி என்ற கருத்து இந்நூல் பூராவும் இழை யோடுகிறது. மக்கள் ஏன் ஏழைகளாக இருக்கின்றனர் என்று கேள்வி கேட்கும் கில்டெர் பின்வருமாறு தானே பதில் சொல்கிறார்: ஏனெனில் அவர்கள் மோசமாக வேலை செய் கின்றனர். ஏழ்மையைத் தவிர்க்க வேண்டுமெனில் அதி காலையில் எழுந்து, இரவு நெடு நேரம் கழித்து படுக்கச் செல்ல வேண்டும், நாள் பூராவும் நன்கு உழைக்க வேண்டும். ஏழைகள் ஏழ்மையிலிருந்து மீள என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று முகஸ்துதியாகச் சொல்லித் தரும் நூலா சிரியர், அதே நேரத்தில் முதலாளிகளைப் பெரிதும் ஆதரிக் கிறார். இவருடைய கருத்துப்படி, ஏழைகளுக்கு நிறைய தர வேண்டுமென்பதற்காகச் செல்வந்தர்களின் வருமானங் களையும் தொழிற்துறையில் அவர்களின் முதலீடுகளையும் குறைப்பதால் உற்பத்தித் திறன் குறையும், வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும், இதனால் ஏழ்மைதான் இன்னமும் அதிகரிக்கும். இம்மாதிரியான கருத்துகள்தான் இன்றைய அமெரிக்க, பிரிட்டிஷ், இன்னும் பல முத லாளித்துவ நாடுகளில் உள்ள அரசாங்கங்களின் பொருளா தார கொள்கையின் அடிப்படையாகத் திகழுகின்றன.

செல்வம் என்பது முதலாளிகளின் அளவிற்கதிகமான உழைப்பார்வத்தின் விளைவு அல்ல. ஒரு சில முதலாளிகள் உழைக்கும் குடும்பப் பின்னணியைக் கொண்டிருந்தாலும் இது பொது சித்திரத்தை மாற்றவில்லை. உபரி மதிப்பைத் தோற்றுவிக்கும் கூலித் தொழிலாளர்கள் சுரண்டப்படாம லிருந்தால் இம்முதலாளிகள் தம்முடைய ஆரம்ப மூல தனத்தை விரைவிலேயே செலவிட்டு ஒன்றுமில்லா நிலை யை அடைந்திருப்பர்.

ஆனால் முதலாளிகளோ தம் மூலதனத்தை ஆண்டுகள் செல்லச் செல்ல பெருக்குகின்றனர். அமெரிக்க கோடீஸ் வரர்கள் டியுப்போன் குடும்பம், ராக்ஃபெல்லர் குடும்பம்,

ஃபோர்டு குடும்பம், மெல்லொன் குடும்பம் ஆகியவற்றிடம் ஏராளமான சொத்துகள் குவிந்துள்ளன. உதாரணமாக, நியூயார்க்கைச் சேர்ந்த டேனியல் கேய்ட் லுட்விகிடம் உள்ள தனிப்பட்ட சொத்தின் மதிப்பு 2 பில்லியன் டாலர்களாகும்.

மூலதனத்தின் சாரத்தையும் முதலாளித்துவச் சுரண்டல் முறையையும் ஆழமாகப் புரிந்து கொள்ள, மூலதனம் எப்படி உட்கூறுகளாகப் பிரிக்கப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். முதலாளித்துவச் சுரண்டல் முறையை ஆழமாக விளக்குவதற்காக இப்பிரிவினையை கா. மார்க்ஸ் முன் வைத்தார்.

மார்க்ஸ் மூலதனத்தை **மாறா மூலதனம்**, **மாறும் மூலதனம்** என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்தார். மாறா மூலதனம் உற்பத்திச் சாதனங்களில் உருக்கொண்டுள்ளது, மாறும் மூலதனம் உழைப்புச் சக்தியை வாங்குவதற்காகச் செலவிடப்படுகிறது. மாறும் மூலதனம்தான், அதாவது கூலித் தொழிலாளர்களை சுரண்டுவதுதான் உபரி மதிப்பைத் தோற்றுவிக்கிறது. தொழிலாளி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான உபரி மதிப்பை முதலாளிக்காகத் தோற்றுவிக்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக மூலதனம் கூடுகிறது, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக முதலாளி செல்வந்தனாகிறான்.

தொழிலாளிகள் முதலாளிகளால் எந்த அளவிற்கு சுரண்டப்படுகின்றனர் என்பதை நிர்ணயிக்க கா. மார்க்ஸ் பின்வரும் இரண்டு குறியீடுகளை முன்வைத்தார்: **உபரி மதிப்பின் மொத்தம்** (அல்லது முழுமுதல் அளவு), **உபரி மதிப்பின் விகிதம்** (அல்லது மாறும் மூலதனத்தின் அளவுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவிலானது).

முதலாளித்துவம் வளர வளர உபரி மதிப்பின் மொத்தமும் விகிதமும் கூடி வருகின்றன. உதாரணமாக, 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின்

தொழிற்துறையில் உபரி மதிப்பின் விகிதம் 100%க்குச் சற்று கூடுதலாயிருந்தது; 1980ஆம் ஆண்டுகளின் நடுப் பகுதியிலோ பல்வேறு துறைகளின் பெரும் தொழில் நிறுவனங்களில் இது 300%, அதற்கும் கூடுதலாயிருந்தது. நியூயார்க்கில் தொழிற்துறைத் தொழிலாளர்கள் தாம் பெற்ற ஊதியத்தை விட 4.25 மடங்கு அதிகமான மதிப்பைத் தோற்றுவித்தனர்.

உபரி மதிப்பின் விகிதமும் (தொழிலாளர்களின் சுரண்டல் மட்டம்) முதலாளித்துவத் தொழில் நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, அவ்வளவுக்கவ்வளவு அதிக அளவில் உபரி மதிப்பின் மொத்தம் முதலாளியால் சுவீகரிக்கப்படுகிறது, அவனுடைய லாபம் அவ்வளவுக்கவ்வளவு அதிகமானது.

முதலாளிகள் எந்த வகைகளில் உபரி மதிப்பின் மொத்தத்தையும் விகிதத்தையும் பெருக்குகின்றனர்?

### உழைப்பாளிகளின் சுரண்டல் மட்டத்தை அதிகரிக்கும் இரண்டு முறைகள்

தொழிலாளர்களின் சுரண்டல் மட்டத்தை அதிகரிக்க முதலாளிகள் இரண்டு முக்கிய முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

முதல் முறையில் வேலை நாள் நேரடியாகக் கூட்டப்படுகிறது. இதனால் அவசியமான உழைப்பு நேரத்தின் அளவு அப்படியே மாறாமலிருக்க, உபரி உழைப்பு நேரத்தின் அளவு கூடும், இது தொழிலாளியின் சுரண்டல் மட்டத்தின் அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லும். உதாரணமாக, ஒரு முதலாளி வேலை நாளை 8 மணியிலிருந்து (இதில் 4 மணி நேரம் அவசியமான உழைப்பு நேரம், 4 மணி உபரி உழைப்பு நேரமாகும்) 10 மணி நேரமாக உயர்த்தினால்

உபரி உழைப்பு நேரம் 4 மணியிலிருந்து 6 மணி நேர மாகும். உபரி மதிப்பின் விகிதம் 1.5 மடங்கு கூடும், அதன் மொத்தம் அதிகரிக்கும்.

வேலை நாளில் அவசியமான உழைப்பு நேரத்திற்கு மேலாகக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் உபரி மதிப்பு **தனிமநிலை உபரி மதிப்பு** எனப்படும். எல்லையற்று உபரி மதிப்பைப் பெற வேண்டுமென்ற பேராசை முதலாளிகளிடம் இருப்பதால் அவர்கள் எப்போதுமே வேலை நாளைக் கடைக் கோடி நிலை வரை நீட்டிக்க முயற்சித்து வந்துள்ளதை வரலாறு காட்டுகிறது. வாய்ப்பு மட்டும் இருந்திருந்தால் ஒரு நாளின் 24 மணி நேரமும் வேலை செய்யுமாறு கூட சுரண்டலாளர்கள் தொழிலாளர்களைக் கட்டாயப்படுத் தியிருப்பர். ஆனால் இது இயலாதது, ஏனெனில் குறிப்பிட்ட அளவு நேரத்திற்கு மனிதன் உண்டு, ஓய்வெடுக்க வேண் டும், உறங்க வேண்டும். **வேலை நாளின் இயல்பான வரம்பு கள்** இதனால்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. இது தவிர **தார்மீக வரம்புகளும்** உள்ளன. தன்னுடைய கலாசார, சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் தொழி லாளிக்கு நேரம் வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் நீண்ட, உறுதியான போராட்டத்தின் விளைவாய் பெரும் பாலான முதலாளித்துவ நாடுகளில் வேலை நாள் சட்டப் படி மட்டுப்படுத்தப்பட்டது. இன்று முக்கிய முதலாளித்துவ நாடுகளில் சராசரி வேலை நேரம் வாரத்திற்கு 40—46 மணிகளாகும்.

நவீன சூழ்நிலைகளிலும் முதலாளிகள் வேலை நேரத் தை நீட்டிக்கும் வழிகளைத் தேடிக் கண்டுபிடிக்கின்றனர். உதாரணமாக, பிரிட்டனிலும் பிரான்சிலும் தொழிலாளர் களில் 25—30% வாரத்தில் 45 மணி நேரத்திற்கும் கூடுத லாக உழைக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டிலோ 20 மில்லியனுக்கும் கூடுதலானோரின் நடைமுறை வேலை

நேரம் சட்ட பூர்வமானதை விட அதிகமாயுள்ளது, இவர்களில் 6 மில்லியன் பேர் வாரத்திற்கு 60 மணி நேரம், அதற்கும் கூடுதலாய் உழைக்கின்றனர். இந்தக் கூடுதல் வேலைக்கான கூடுதல் ஊதியம் எல்லோருக்கும் கிடைக்கிறது என்று கூற முடியாது. அயல்நாட்டுத் தொழிலாளர்களின் நிலை குறிப்பாகக் கடினமானது. இத்தாலியில் 80% அயல்நாட்டுத் தொழிலாளர்கள் அன்றாடம் 10 மணி நேரம், அதற்கும் கூடுதலாய் உழைக்கின்றனர், இத்தாலியத் தொழிலாளர்களை விடக் குறைவான ஊதியத்தையே பெறுகின்றனர்.

முதலாளிகள் வேலை நேரத்தில் மாற்றம் எதையும் செய்யாமல், உழைப்பின் தீவிரத் தன்மையை அதிகரிப்பதன் மூலம் தனிமநிலை உபரி மதிப்பைப் பெருக்குகின்றனர்.

இதை எவ்விதத்தில் செய்கின்றனர்?

உழைப்பின் தீவிரத் தன்மை அதிகரிக்கப்படுகிறது என்றால் அதற்குப் பொருள் அதே வேலை நேரத்தில் தொழிலாளி அதிக சக்தியைச் செலவிட்டு அதிக மதிப்பையும் எனவே அதிகமான உபரி மதிப்பையும் தோற்றுவிக்கிறான் என்பதாகும். முதலாளிகள் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தை அதிகபட்சம் பயன்படுத்தி, தொழிலாளர்கள் அதிகபட்ச பதட்டத்தோடு, தீவிரமாக வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டில் "ஜெனரல் மோட்டர்ஸ்", "ஜெனரல் எலெக்ட்ரிக்", இன்னும் பல பெரிய கம்பெனிகளில் பெரும்பாலான தொழிலாளர்கள் எப்படி வேலை செய்கின்றனர் என்று கண்காணிக்கத் தானியங்கி "தொலைகாட்சி காமிராக்கள்" நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு 36 நொடியும் இந்த அமைப்பு நிர்வாகத்திற்கு ஒலி, ஒளி சமிக்கைகள் மூலம் தகவல் தருகிறது. அமெரிக்க கார் தொழிற்சாலை இணையம் "கிரைஸ்லர்" டெட்

ராய்டில் உள்ள தன் தொழிற்சாலைகளில் ஒவ்வொரு தொழிலாளியின் உழைப்பின் தீவிரத் தன்மையையும் பெருக்குவதற்காக நவீன கணிப்பொறிகளைப் பயன்படுத்துகிறது. புதிய "விஞ்ஞான பூர்வமான" கோட்பாடுகளின்படி உற்பத்தியில் தொழிலாளர்களை அமர்த்துவதானது தொழிலாளர்களிடமிருந்து முன்னர் இருந்ததை விட 20—25% அதிகச் சக்தியைப் பிழிந்தெடுக்க உதவுகிறது.

உபரி மதிப்பை அதிகரிக்கும் இரண்டாவது முறையின்படி, வேலை நேரத்தின் அளவு மாறாமலிருக்க, அவசியமான உழைப்பு நேரம் குறைக்கப்படும்; இது உபரி உழைப்பு நேர அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லும்.

உதாரணமாக, 8 மணி நேர வேலையில் அவசியமான உழைப்பு நேரம் 4 மணியிலிருந்து 3 மணியாகக் குறைக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது உபரி உழைப்பு நேரம் 5 மணியாகும், உபரி மதிப்பின் விகிதம் 100%இலிருந்து (4 மணி:4மணி × 100%) 167%ஆக (5 மணி:3 மணி × 100%) உயரும். இவ்வழியில் பெறப்படும் உபரி மதிப்பு **ஒப்பீட்டு உபரி மதிப்பு** எனப்படும்.

முதலாளிகள் அவசியமான உழைப்பு நேரத்தை எப்படிக் குறைக்கின்றனர்?

ஏற்கெனவே நாம் மேலே குறிப்பிட்டபடி, அவசியமான உழைப்பு நேரம் உழைப்புச் சக்தியின் மதிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது. இது வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பால் (உணவுப் பண்டங்கள், ஆடை, காலணியின் மதிப்பு, வீட்டு வாடகை, இதரவை) நிர்ணயிக்கப்படுகிறது. வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பு குறையும் பொழுது, தொழிலாளி தனக்காகக் குறைவாக வேலை செய்து, முதலாளிக்காக அதிகம் வேலை செய்கிறான். உழைப்பின் உற்பத்தித் திறனைக் கூட்டுவதன் மூலம்—குறிப்பாகப் பரவலான மக்கள்

திரளினருக்குப் பண்டங்களை உற்பத்தி செய்யும் துறைகளில்—இது அடையப்படுகிறது.

பெண்கள், குழந்தைகளின் உழைப்பைப் பரவலாகப் பயன்படுத்துவதும் உழைப்புச் சக்தியின் மதிப்பைக் குறைக்கும் காரணிகளில் அடங்கும். தொழிலாளர்களின் மனைவிமாரும் குழந்தைகளும் வேலை செய்கின்றனர், ஆண்களைவிடக் குறைந்த அளவு ஊதியத்தைப் பெறுகின்றனர்.

இன்று பல முதலாளித்துவ நாடுகளில் பெண்கள், குழந்தைகளின் உழைப்பு சுரண்டப்படுவது பரவலாக நடைபெறுகிறது. ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இத்தாலி, ஸ்பெயின், பிரிட்டனில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் சுரண்டப்படுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டில் விவசாயத் துறையில் உள்ள தொழிலாளர்களில் $^1/_5$ பங்கினர் குழந்தைகள். துருக்கியில், அதிகாரப் பூர்வமான விவரங்களின்படி கிட்டத்தட்ட 10 லட்சம் குழந்தைகள் வேலை செய்கின்றனர். பிரேஸிலில் சுமார் ஒரு கோடி குழந்தைகள் பல்வேறு உற்பத்தித் துறைகளில் வேலை செய்கின்றனர், அதுவும் இவர்களில் பலர் 6—7 வயதிலிருந்தே வேலை செய்கின்றனர்.

எனவே, பெண்கள், குழந்தைகளின் உழைப்பைப் பரவலாகப் பயன்படுத்துவதானது வயது வந்த தொழிலாளி உழைப்பின் மதிப்பைக் குறைத்து, ஒப்பீட்டு உபரி மதிப்பைக் கூட்டும் காரணியாகத் திகழுவது இயற்கையே.

**அமித** (அல்லது கூடுதல்) **உபரி மதிப்பு** என்பது ஒப்பீட்டு உபரி மதிப்பின் வகைகளில் ஒன்றாகும். புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்துதல் அல்லது உழைப்பு ஒழுங்கமைப்பை மேம்படுத்துவதன் மூலம் தம் பண்டங்களின் தனிப்பட்ட மதிப்பை சமூக மதிப்பின் மட்டத்திற்குக் கீழாகக் குறைக்கும் முதலாளிகளிடம் இது தோன்றுகிறது. சந்தை விலைகள் சமூக மதிப்பால் ஒழுங்கமைக்கப்படுவதால் இம்முத

லாளிகள் சாதாரண உபரி மதிப்போடு கூட கூடுதல் உபரி மதிப்பையும் பெறுகின்றனர். மற்ற முதலாளிகள் தம் பண்டங்களின் மதிப்பைக் குறைக்காத வரை இது நீடிக்கும்.

நவீன உழைப்பு ஒழுங்கமைப்பு முறைகளும் நவீன தொழில்நுட்பப் புதினங்களும் எல்லா இடங்களிலும் பரவலாகப் பரவும் வரை இவற்றைப் பயன்படுத்தும் முதலாளிகள்தான் அமித உபரி மதிப்பைப் பெறுகின்றனர். இதனால் முதலாளிகள் அதிகபட்ச அமித உபரி மதிப்பைப் பெறும் நோக்கத்தோடு தம் உற்பத்தி "இரகசியங்களைப்" பேணிக் காப்பர், போட்டியாளர்கள் இதை நெருங்கவிடாது செய்வர்.

இவையெல்லாம் போதாதென்று முதலாளிகள், தொழிலாளர்களின் உழைப்புச் சக்திக்கு உரியதை அவர்களுக்கு முழுமையாக அளிக்காமல் வேறு சுரண்டிக் கொழுக்கின்றனர். உழைப்புச் சக்தி என்ற பண்டத்தின் விலையின் விசேஷ வடிவமாகிய ஊதியத்தை, தொழிலாளர்களின் சுரண்டலை அதிகப்படுத்தும் சாதனமாயும், அதே சமயம் இச்சுரண்டலை மூடி மறைக்கும் சாதனமாயும், முதலாளிகள் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தொழிலாளர்களின் வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்பட்டு விட்டது, இங்கே எவ்விதச் சுரண்டலுக்கும் இடமேயில்லை என்கின்றனர்.

## முதலாளித்துவத்தில் ஊதியம்

பூர்ஷ்வா சமுதாய புலப்பாடுகளின் மேலோட்டத்தில் பார்க்குங் காலை ஊதியம் என்பது உழைப்பிற்கான விலையாக, குறிப்பிட்ட அளவு உழைப்பிற்காக அளிக்கப்படும் குறிப்பிட்ட அளவு பணமாகத் தென்படுகிறது. இது வெளிப்பார்வைக்கு மட்டுமே இப்படித் தெரிகிறது, இதற்குப் பல காரணங்களுண்டு.

உழைப்புச் சக்தி என்ற பண்டத்தை வாங்கும் பொழுது அதிலிருந்து இயன்ற அளவு உழைப்பை உறிஞ்ச வேண்டு மென்று முதலாளி திட்டமிடுகிறான். தன் பங்கிற்கு தொழி லாளி, தன் உழைப்பிற்காகக் குறிப்பிட்ட அளவு பணத்தை எதிர்பார்க்கிறான். முதலாளி மற்றும் தொழிலாளியின் அக வய ரீதியான அணுகுமுறை, ஏதோ உழைப்பு—உழைப்புச் சக்தியல்ல—வாங்கி, விற்கப்படுவதைப் போன்றதொரு மாயையை ஏற்படுத்துகிறது.

அடுத்து, உழைப்புச் சக்திக்கான ஊதியம், அதன் வடிவங் களின் காரணமாய் வேலை முடிந்த பின் தொழிலாளிக்கு ஏதோ ஊதியம் வழங்கப்படுவது போன்ற தோற்றம் ஏற் படுகிறது; இதனால் வெளிப்பார்வைக்கு இது முழு உழைப் பிற்கான கூலியாகப்படுகிறது. தொழிலாளி 1—2 வாரங் கள், ஒரு மாதம் உழைக்கிறான், பின் ஏதோ தன் உழைப்பு முழுவதற்குமான ஊதியத்தைப் பெறுகிறான். ஊதிய மானது, உழைப்பு அவசியமான உழைப்பு என்றும் உபரி உழைப்பு என்றும் பிரிக்கப்படுவதையும், சுரண்டல் உறவு களையும் மறைக்கிறது. மேற்கூறிய வெளித்தோற்றத்தை பூர்ஷ்வாத் தத்துவகர்த்தாக்கள் ஊதியத்தின் சாரமாகச் சித்தரித்து, இதன் அடிப்படையில், தொழிலாளியின் ஊதி யம் என்பது அவனுடைய முழு உழைப்பிற்கான ஊதிய மாகும், இங்கே எவ்வித சுரண்டலும் இல்லை, இருக்கவும் முடியாது என்று கூறுகின்றனர்.

ஆனால் உண்மையில், நாம் ஏற்கெனவே மேலே பார்த் தபடி, முதலாளிகள் தொழிலாளிகளின் உழைப்பையல்ல, அவர்களின் உழைக்கும் திறமையை, அதாவது உழைப்புச் சக்தியைத்தான் வாங்குகின்றனர். தொழிலாளியின் உழைப் பை ஏன் வாங்க முடியாது?

முதலில், தொழிலாளியை முதலாளி வேலைக்கு அமர்த் தும் பொழுது இன்னமும் உழைப்பு நிலவவில்லை.

உழைப்பு என்பது, உழைப்புச் சக்தி உற்பத்தி நோக்கத்துடன் நுகரப்படும் நிகழ்ச்சிப் போக்காகும், அதாவது தொழிலாளிதன் உழைப்புச் சக்தியை விற்ற பின் உற்பத்தித் துறையில் நடக்கும் நிகழ்ச்சிப் போக்கு. உற்பத்தியில்தான் உழைப்புச் சக்தி உற்பத்திச் சாதனங்களுடன் இணைக்கப்படுகிறது, உழைப்பு என்ற நிகழ்ச்சிப் போக்கு நடக்கிறது; இதன் விளைபயன்கள் தொழிலாளிக்கு அல்ல, முதலாளிக்குச் சொந்தமானவை.

இரண்டாவதாக, உழைப்பு மதிப்பைத் தோற்றுவிக்கிறது, ஆனால் உழைப்பிற்கு மதிப்பு எதுவுமில்லை. மதிப்பு என்பது பண்டங்களில் உருக்கொள்ளப்பட்ட உழைப்பாகும்; உழைப்பிற்கே மதிப்பு இருந்திருந்தால், உழைப்பு உழைப்பால் தோற்றுவிக்கப்படுகிறது என்றாகியிருக்கும்.

மூன்றாவதாக, தொழிலாளியின் உழைப்பிற்கு முதலாளி முழுமையாக ஊதியம் வழங்கியிருந்தால், முதலாளியால் உபரி மதிப்பை விழுங்கி ஏப்பம் விட முடியாது, முதலாளியைப் பொறுத்தமட்டில் தனக்கும் தொழிலாளிக்கும் இடையிலான கொள்வினை-கொடுப்பினை சகல பொருளையும் இழந்திருக்கும்.

முதலாளித்துவத்தில் ஊதியத்தின் சாரம் என்னவெனில், இது உழைப்புச் சக்தியின் மதிப்பு அல்லது விலையின் மாற்றியமைக்கப்பட்ட (மூடிமறைக்கப்பட்ட) வடிவமாய் விளங்குகிறது என்பதாகும். கா. மார்க்ஸ் எழுதினார்: ''... **ஊதியம்** என்பது அது எதுவாகத் **தென்படுகிறதோ** அதுவாக இல்லை, அது **உழைப்பின் மதிப்போ** அல்லது **விலையோ** அல்ல, அது **உழைப்புச் சக்தியின் மதிப்பு** அல்லது **விலையின்** மூடிமறைக்கப்பட்ட வடிவம் மட்டுமே.'' *

* K. Marx, F. Engels, *Selected Works,* in three volumes, vol. 3, Moscow, Progress Publishers, 1977, p. 23.

முதலாளித்துவத்தில் ஊதியத்தின் சாரம் நேரடியாக அதன் வடிவங்களில் வெளிப்படுகிறது; இவற்றில் முக்கிய மானவை காலவீதக் கூலியும் (இங்கே தொழிலாளியின் உழைப்பிற்கான ஊதியம், அவன் எவ்வளவு நேரம்—மணி, நாள், வாரம், மாதம்—வேலை செய்தான் என் பதைப் பொறுத்தது), வேலைவீதக் கூலியுமாகும் (இங்கே ஊதியம், ஒரு அலகு நேரத்தில் செய்யப்பட்ட வேலை யின் அளவைப் பொறுத்தது). வேலைவீதக் கூலி என்பது காலவீதக் கூலியின் மாற்றியமைக்கப்பட்ட வடிவமாகும்.

மேற்கூறிய இரண்டு ஊதிய வடிவங்களின் அடிப்படை யில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு சில கடும் உழைப்பு ஊதிய முறைகள் தோன்றின. சுரண்டல் மட்டத் தை அதிகப்படுத்தி, இதை இன்னமும் மூடிமறைப்பதுதான் இவற்றின் நோக்கமாகும். அமெரிக்கப் பொறியியலர் டெய்ல ரால் உருவாக்கப்பட்ட ஊதிய முறை மேற்கூறிய கடும் உழைப்பு ஊதிய முறைகளின் அடிப்படையாகத் திகழ்ந் தது. இம்முறையில் ஒரு குறிப்பிட்ட அலகு நேரத்தில் நடத் தப்படும் மாதிரி பரிசோதனைகளின் அடிப்படையில் மிக அதிகமான வேலை வரையளவுகள் நிர்ணயிக்கப்படுகின் றன; இவ்வரையளவுகளை நிறைவேற்றினாலும், விஞ்சி னாலும் ஒப்பீட்டளவில் அதிக ஊதியம் வழங்கப்படும்; நிறைவேற்றாவிடில் "அபராதம்" உண்டு, ஊதியம் குறை யும். அதிலும் இந்த வரையளவுகள் பல தொழிலாளர்களால் நிறைவேற்ற முடியாத அளவிற்கு உயர்வானவையாக இருக் கும். டெய்லரின் முறை "முதலாளித்துவச் சுரண்டலின் நேர்த்தி நயம் வாய்ந்த மிருகத்தனத்தோடு... பெரிய பல விஞ்ஞான சாதனைகளும் இணைந்து அமைந்ததாகும்"* என்றார் வி. இ. லெனின்.

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 8, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1980, பக்கம் 83.

அமெரிக்கப் பொறியியலரும் தொழிலதிபருமான ஃபோர்டு உருவாக்கிய கடும் உழைப்பு ஊதிய முறையின் நோக்கமும் இதுவே—அதாவது தொழிலாளியிடமிருந்து இயன்ற அளவு அதிக உழைப்பைப் பிழிந்தெடுக்க வேண்டும். இங்கே கன்வேயரின் வேகம் அதிகப்படுத்தப்படுவதன் மூலம் தொழிலாளர்களின் சுரண்டல் அதிகப்படுத்தப்படுகிறது. உதாரணமாக, முதலில் கன்வேயர் நிமிடத்திற்கு 2 மீட்டர் வேகத்தில் சென்றது, பின்னர் இது நிமிடத்திற்கு 3 மீட்டராயும், 4 மீட்டராயும் அதிகரிக்கப்பட்டது. இதனால் தொழிலாளி மேன்மேலும் தீவிரமாக உழைக்க வேண்டி வருகிறது, அவன் அதிகச் சக்தியைச் செலவழிக்கிறான், ஊதியமோ கிட்டத்தட்ட முன்னிருந்த மட்டத்திலேயே இருக்கிறது அல்லது மிகச் சிறிதளவு மட்டுமே அதிகரிக்கிறது. இம்முறையில் பலர் 40—50 வயதில் தம் சக்தி முழுவதையும் பறிகொடுக்கின்றனர், வேலையை இழக்கும் நிலை ஏற்படுகிறது.

"லாபத்தில் பங்கு", "போனஸ்" முறைகள் போன்றவை நவீன ஊதிய முறைகளில் அடங்கும். "லாபத்தில் பங்கு" என்ற முறையில், வழக்கமான ஊதியத்தைத் தவிர கூடுதல் தொகையும் வழங்கப்படும்; இது வருட இறுதியில் தொழில் நிறுவனத்தின் "லாபத்தில் பங்காக" அமையும். இந்த விஷயத்திலும் கூட நடைமுறையில் தொழிலாளியின் ஊதியம் அவனுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பை விட அதிகமாக இருக்காது, ஏனெனில் அன்றாட அடிப்படை பணத் தொகைகள் குறையும். மேலும், "பகிர்ந்தளிக்கப்படும் லாபமும்" மிகக் குறைவானது. மொத்தத்தில் பார்த்தால், கம்பெனியின் ஊதிய நிதியில் 2%க்கும் குறைவாகத்தான் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

"போனஸ்" முறையில், அதிக வேலை செய்ததற்காக, நல்ல தரமான பொருட்களுக்காக ஊதியத்தோடு சேர்ந்து

கூடுதல் தொகை வழங்கப்படும். இந்த "போனஸ்" முறை யால் தொழிலாளர்களை மேன்மேலும் தீவிரமாக வேலை செய்யும்படி தூண்டுகின்றனர், ஆனால் இவ்வுழைப்பை ஈடு செய்வதில்லை.

பல்வேறு உழைப்பாளர் பிரிவுகளுக்கு ஊதியம் வழங்கு வதில் முதலாளிகள் பரவலாகப் பாகுபாட்டைப் பின் பற்றுகின்றனர், இதுவும் தம் லாபத்தைப் பெருக்க அவர் கள் கடைப்பிடிக்கும் வழிகளில் ஒன்றாகும். குறிப்பாக, இன்று இந்த அடிப்படையில், அயல்நாட்டுத் தொழிலாளர் கள் அளவிற்கதிகமாகச் சுரண்டப்படுகின்றனர்.

1980ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் மேற்கு ஐரோப் பாவிலிருந்த அயல்நாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக் கை மிக அதிகமானதாயிருந்தது. பல்வேறு மதிப்பீடுகளின் படி, இது 15—20 மில்லியனாகும். குறிப்பாக பொதுச் சந்தை நாடுகளில் ஏராளமான அயல்நாட்டுத் தொழி லாளர்கள் உள்ளனர். இவர்களில் பலர் சட்டவிரோதமாக இந்நாடுகளில் இருப்பவர்கள். அமெரிக்க ஐக்கிய நாட்டில் அதிகாரப் பூர்வமான அனுமதியின்றி நாட்டினுள் வந்து குடியேறியுள்ள அயல்நாட்டுத் தொழிலாளர்களின் எண் ணிக்கை 10 மில்லியனுக்கும் அதிகமாகும். இவர்கள் சாதாரணமாக அதிகம் ஒழுங்கமைக்கப்படாதவர்கள், முத லாளிகளின் அளவிற்கதிகமான கட்டுப்பாடுகளை இவர் களால் எதிர்த்துச் சமாளிக்க இயலாது, இவற்றால்தான் இவர்கள் பெரிதும் சுரண்டலுக்கு ஆளாகின்றனர். அயல் நாட்டவரில் நன்றாக வேலை செய்யக் கூடியவர்களாகப் பார்த்து முதலாளிகள் தேர்ந்தெடுத்து வேலைக்கமர்த்து கின்றனர், இவர்களுக்காக சமூகப் பாதுகாப்புச் செலவு, நோய் விடுப்பு, ஓய்வூதியம் போன்ற எந்த செலவையும் முதலாளிகள் ஏற்பதில்லை. மேலும், உழைப்புப் பாதுகாப்பு முறை, வேலைச் சூழலை ஏற்படுத்தல் போன்றவற்றில்

முதலாளிகள் சிக்கனம் பிடிக்கின்றனர். இத்தொழிலாளர்கள், 19ஆம் நூற்றாண்டை நினைவுபடுத்தும் மிக மோசமான சூழ்நிலைகளில் வேலை செய்கின்றனர். சிறு ஆலைகள், கட்டுமான அமைப்புகள், பண்ணைகள், பட்டறைகளில்தான் இப்படிப்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்; இவற்றின் சொந்தக்காரர்கள் குறைந்தபட்ச ஊதியம், ஓவர்டைம், குழந்தை உழைப்பு பற்றிய சட்டங்களை மதிப்பதேயில்லை.

### பெயரளவு ஊதியமும் உண்மை ஊதியமும்

முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களில் அபூர்வமாகத்தான் தொழிலாளிக்கு முழு ஊதியத்தையும் பணமாக வழங்கினர். சாதாரணமாக முதலாளி தன் ஆலையிலேயே ஒரு கடையை வைத்திருந்தான், தொழிலாளிகள் தமக்குத் தேவையான மளிகைப் பொருட்களையும் மற்ற பொருட்களையும்—இவற்றின் தரமோ குறைவு, விலையோ அதிகம்—வாங்க வேண்டிவரும். மாத இறுதியிலோ பருவ இறுதியிலோ தொழிலாளி எவ்வளவு சம்பாதித்தான், கடையிலிருந்து எவ்வளவு பொருட்களை எடுத்துச் சென்றான் என்று முதலாளி கணக்கிடுவான். இவ்வாறு கணக்கிட்ட பின் பல நேரங்களில் தொழிலாளிக்குப் பண வடிவில் ஊதியம் எதுவுமே கிடைக்காது (என் அவன் முதலாளிக்கு ஏதாவது தொகை செலுத்த வேண்டுமென்ற நிலைகூட ஏற்படும்) அல்லது மிகக் குறைவான அளவு பணம் மட்டுமே கிட்டும். இன்று இம்முறை ஒரு சில வளர்முக நாடுகளில் மட்டுமே எஞ்சியுள்ளது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பண வடிவிலான ஊதிய முறைதான் மேலோங்கியுள்ளது.

பண வடிவிலான ஊதியம் **பெயரளவு ஊதியம்** எனப்

படும். இதன் அளவை மட்டும் வைத்து தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றி முடிவு செய்யக் கூடாது, ஏனெனில் இது நுகர்வுப் பண்டங்கள் மற்றும் சேவை வசதிகளுக்கான விலைகளைப் பொறுத்தது. எனவே **உண்மை ஊதியத்தின்** அளவுதான் தொழிலாளியின் நிலையைப் பற்றிய சரியான கருத்தைத் தரும்; அதாவது, வரி, மற்ற பிடித்தங்கள் போக தொழிலாளியால் தன் ஊதியத்தைக் கொண்டு வாங்க முடிந்த பொருட்கள், பெற முடிந்த வசதிகளின் அளவுதான் தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றிய சரியான கருத்தைத் தரும்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் தொழிலாளர்களின் உண்மை ஊதியம் சிறிது அதிகரித்துள்ளது. உழைப்பின் தீவிரத் தன்மை பெரிதும் அதிகரித்தது, வர்க்கப் போராட்டம் கடுமையாகியது போன்ற பல காரணங்கள் இதற்கு உண்டு. சோஷலிச நாடுகள் நிலவி வருவதும், பொருளாதார, சமூகத் துறைகளில் இவற்றின் சாதனைகளும் குறிப்பிட்ட இணக்கங்களுக்கு இறங்கி வருமாறு முதலாளிகளை நிர்ப்பந்தித்தன. ஆனால் முதலாளிகளும் பின்தங்கி விடாமல் தொழிலாளர்களின் சுரண்டலைப் பெரிதும் அதிகப்படுத்தியுள்ளனர். உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு தொழிலாளி உற்பத்தி செய்யக் கூடிய பொருளின் அளவை (உண்மை மதிப்பீட்டில்) 100%க்கும் மேலாக, அதாவது இரு மடங்கு அதிகரிப்பதில் தந்திரங்கள் செய்து வெற்றி கண்ட முதலாளிகள் தொழிலாளியின் உண்மை ஊதியத்தை 15% மட்டுமே உயர்த்தியுள்ளனர்.

அதே பொழுது, இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் உண்மை ஊதியம் குறையும் போக்கும் காணப்பட்டது. குறிப்பாகப் பணவீக்கம், பணத்தின் மதிப்பு குறைந்தது, அதன் வாங்கும் திறன் வீழ்ச்சி

யடைந்ததானது பரவலான உழைப்பாளிகளின் நிலையைப் பாதித்தது. அன்றாட வாழ்க்கையில் இது பண்டங்கள், சேவைகளுக்கான விலைகள் கூடி வருவதில் வெளிப்படுகிறது.

இரண்டாவது யுத்த ஆண்டுகள், யுத்தம் முடிந்ததற்குப் பிந்தைய முதலாண்டுகளைக் கணக்கில் சேர்க்காவிடில், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் 1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பம் வரை விலையேற்றம் ஓரளவு மிதமானதாயிருந்தது. 1970ஆம் ஆண்டுகளில் விலைகள் கடுமையாகக் கூடலாயின. விலையேற்றம் எல்லா இடங்களுக்கும் பரவியது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன: ஆயுதப் போட்டி போன்ற உற்பத்தியல்லா நோக்கங்களுக்காகப் பெருமளவு பணம் செலவிடப்பட்டது, பல்வேறு விதமான கடன் நடவடிக்கைகள் கட்டுப்பாடற்று, பெருமளவில் வளர்ச்சியடைந்தன, விலைகளை நிர்ணயிப்பதில் முக்கிய தொழிற்துறை கார்ப்பரேஷன்கள் தன்னிச்சையாகச் செயல்பட்டன, சில இடங்களில் காகிதப் பணம் அளவிற்கதிகமாக அச்சடித்து வெளியிடப்பட்டது.

விலையேற்றத்திற்கு ஏற்றபடி ஊதியம் உயரவில்லை, எனவே தொழிலாளர்களும் அலுவலக ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுபவர்களும்தான் இதனால் முதலில் பாதிக்கப்படுகின்றனர். பணவீக்கத்தின் முக்கிய சுமையைப் பரவலான உழைப்பாளிகளின் தோள்கள் மீது சுமத்த முதலாளிகள் முயலுகின்றனர். பல முதலாளிகள், சமுதாயத்தில் தமக்கு ஆதரவாக வருமானங்களை மறுபங்கீடு செய்யவும், தம் லாபத்தைப் பெருக்கவும் இதைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறாக முதலாளிகள், தொழிலாளிகளிடமிருந்து அதிகபட்ச உபரி மதிப்பைப் பிழிந்தெடுக்க எல்லா சாத்தியமான வழிகளையும், அனுமதிக்கப்படா முறைகளையும்

கூட பயன்படுத்துகின்றனர். உபரி மதிப்பைத் தோற்றுவித்து அபகரிப்பதுதான் முதலாளிகளின் முக்கிய நோக்க மாகும். முதலாளித்துவ சமுதாயத்தின் வாழ்க்கை முழுவதும் இந்நோக்கத்திற்குத்தான் கட்டுப்பட்டது.

அத்தியாயம் மூன்று

## சுரண்டலாளர்களின் "புனிதக் கூட்டு"

பல நூற்றாண்டுகளுக்கு முன் பண்டைய ஆர்மீனிய பூமியில் ஒரு கதை நிலவியது: ஒரு குதிரையும் எருதும் தம்மில் யார் முக்கியம் என்று சண்டை போட்டன. குதிரை எருதைப் பார்த்துச் சொன்னது: "யார் நீ? என்னுடன் விவாதிக்க உனக்கு எப்படித் துணிவு வந்தது? நான் ஒரு குதிரை. பேரரசர்களும் சிற்றரசர்களும் மற்ற கௌரவ மனிதர்களும் என்னை விலையுயர்ந்த அணிகளால் அலங்கரிக்கின்றனர், உயர் தரமான கோதுமையைத் தீனியாகப் போடுகின்றனர்." அதற்கு எருது பதிலளித்தது: "நான்தான் நாட்டின் செல்வமாகும். நான் உழைக்கிறேன், இன்னல்களை அனுபவிக்கிறேன், களைப்படைகிறேன். பின்னர்தான் நீயும் உன் எஜமானர்களும் என் ரொட்டியை சாப்பிடுகிறீர்கள். நான் மட்டும் உழைக்காமலிருந்தால் பேரரசர்களும் சிற்றரசர்களும் நீயும் பட்டினியால் மாள்வீர்கள்."

பிறர் உழைப்பைச் சுரண்டி வாழுபவர்கள் பண்டைய காலத்தில் பலதரப்பட்டவர்கள் — அடிமையுடைமையாளர்கள், நிலப்பிரபுகள், வர்த்தகர்கள், கடும் வட்டிக்காரர்கள் — இருந்தனர். இன்றும் அத்தகைய ஒடுக்குமுறையாளர்கள் பல இருக்கின்றனர். குறிப்பாக, கூலித் தொழிலா

ளர்களின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பை அப்படியே விழுங்கி ஏப்பம் விடும் முதலாளிகள் இவர்களில் அடங்குவர்.

பொருளுற்பத்தியில், முக்கியமாகத் தொழிற்துறை, விவசாயம், கட்டுமானத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்களின் உழைப்பால் உபரி மதிப்பு தோற்றுவிக்கப்படுகிறது. இத்துறைகளில் முதலீடு செய்யும் முதலாளிகள்தான் இந்த உபரி மதிப்பை அபகரிக்கின்றனர். வர்த்தகம், நிதியமைப்புகள், கடன் நடவடிக்கைகள் ஆகியவற்றில் தம் பணத்தை முதலீடு செய்யும் சுரண்டலாளர்களும் பூர்ஷ்வா சமுதாயத்தில் இருக்கின்றனர். வர்த்தக முதலாளிகள், வங்கியதிபர்கள் ஆகியோர் இவர்களில் அடங்குவர். பெரும் நிலவுடைமையாளர்களுக்கு விசேஷ இடமுண்டு. இக்குழுக்கள் ஒவ்வொன்றும் ஒருவித சுரண்டலாளர் ‘‘சகோதரத்துவத்தை’’, ‘‘புனிதக் கூட்டை’’ ஏற்படுத்தி, முதலாளி வர்க்கத்தின் லாபத்தில் தத்தம் பங்கிற்காகப் போட்டியிடுகின்றன, போட்டியிட்டு அதைப் பெறுகின்றன. தொழிலாளி வர்க்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட மொத்த உபரி மதிப்பைத் தொழிலதிபர்கள், வியாபாரிகள், வங்கியதிபர்கள், நிலவுடைமையாளர்கள் ஆகியோர் எப்படி, ஏன் தம் மத்தியில் பகிர்ந்து கொள்கின்றனர் என்று இப்போது பார்ப்போம்.

### சராசரி லாபமும் உற்பத்தியின் விலையும்

பல்வேறு முதலாளிகளுக்கு இடையில் உபரி மதிப்பு மறு பங்கீடு செய்யப்படுவதானது பொருளுற்பத்தித் துறையிலேயே ஆரம்பமாகிறது.

முதலாளித்துவ உற்பத்தியின் முக்கிய உந்து சக்தி **லாபம்** ஆகும்.

லாபம் என்பது உபரி மதிப்புதான். ஆனால் இது தன்

முன்பணம் முழுவதாலும், மாறும் மற்றும் மாறா மூல தனத்திற்கான செலவுகளால், **உற்பத்திச் செலவுகளால்** தோற்றுவிக்கப்படுகிறது என்று முதலாளி கருதுகிறான். முதலாளியைப் பொறுத்தமட்டில் லாபம் என்பது பண்டத்தின் விற்பனை விலைக்கும் உற்பத்திச் செலவுகளுக்கும் இடையிலான வித்தியாசமாகும். எனவேதான் கா. மார்க்ஸ் லாபம் என்பதை உபரி மதிப்பின் மாற்றியமைக்கப்பட்ட வடிவம் என்றார். லாப வடிவத்தில் உபரி மதிப்பானது, அதன் மூல ஊற்றுடன் (தொழிலாளியின் கூலி வழங்கப் படா உழைப்பு) உள்ள சகலவித தொடர்பையும் இழக்கிறது.

முதலாளி தொழிற்சாலையின் லாப மட்டத்தை லாப விகிதத்தால் மதிப்பிடுகிறான். **லாப விகிதம்** என்பது உபரி மதிப்பிற்கும் செலவிடப்பட்ட மூலதனம் முழுவதற்கும் இடையிலான விழுக்காட்டு உறவாகும். உதாரணமாக, முன்னிடப்பட்ட மூலதனம் 4,00,000 டாலர்கள், இவற்றில் 3,20,000 டாலர்கள் மாறா மூலதனத்திற்கும், 80,000 டாலர்கள் மாறும் மூலதனத்திற்கும் செலவாயின, ஆண்டொன்றிற்குக் கிட்டிய உபரி மதிப்பின் எண்ணிக்கை 80,000 டாலர்கள் (உபரி மதிப்பின் விகிதம் 100%) என்றால் லாப விகிதம் 20% ஆகும்.

உபரி மதிப்பின் உண்மையான மூல ஊற்றை—தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை—லாப விகிதம் திரையிட்டு மூடிமறைக்கிறது.

லாப விகிதம் எதைப் பொறுத்தது? முதலில் இது உபரி மதிப்பின் விகிதத்தை அல்லது சுரண்டல் மட்டத்தைப் பொறுத்தது. இது எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, லாப விகிதமும் அவ்வளவுக்கவ்வளவு அதிகம். மாறும் மூல தனத்திற்கும் மாறா மூலதனத்திற்கும் இடையிலான விகிதமும், மூலதனச் சுழற்சியின் வேகமும் இதன் மீதும் தாக்கம் செலுத்தும். அதிகபட்ச லாப விகிதத்திற்கான வேட்

டையில் முதலாளிகள் கடுமையாகப் போட்டியிடுகின்றனர். போட்டி என்பது அதிகபட்ச லாபத்திற்காகவும் முதலீடு செய்வதற்கான சாலச்சிறந்த சூழ்நிலைகளைப் பெறவும் தனியுடைமையாளர்கள் மத்தியில் நடக்கும் போராட்ட மாகும். முதலாளிகளுக்கு இடையிலான இப்போட்டி—போ ராட்டம்—எப்போதுமே நிற்பதில்லை. தம் போட்டியாளர் களை யார் விழுங்கி ஏப்பம் விடுகின்றாரோ அவர் மட்டுமே உயிர் பிழைத்து வாழுவார். பி. எங்கெல்சின் வார்த்தை களில் சொன்னால் இப்போட்டி, முதலாளித்துவ சமு தாயத்தில் "எல்லோருக்கும் எதிராக எல்லோரும் நடத்தும் யுத்தத்தின்" * மிக முழுமையான வெளிப்பாடாகும்.

இப்போட்டி ஒரு துறைக்குள்ளும் பல்வேறு துறை களுக்கு இடையிலும் நடக்கலாம்.

**ஒரு துறைக்குள்ளே நடக்கும் போட்டி**—இது ஒரே வித மான பொருளை உற்பத்தி செய்யும் ஒரே துறையைச் சேர்ந்த முதலாளிகளுக்கு இடையிலான போட்டியாகும். எந்த முதலாளிகளிடம் உற்பத்திச் சூழ்நிலைகள் மேலான வையோ அவர்கள் கூடுதல் லாபம் பெறுகின்றனர், மோச மான உற்பத்திச் சூழ்நிலைகளை உடைய முதலாளிகள் நஷ்டம் அடைகின்றனர், இவர்கள் நொடித்துப் போகக் கூடும். ஒரு துறைக்குள் நடக்கும் போட்டி, குறிப்பிட்ட துறையின் முதலாளிகளுடைய தனிப்பட்ட லாப விகிதங் களைச் சமன்படுத்துகிறது.

**பல்வேறு துறைகளுக்கு இடையிலான போட்டி**—இது பல்வேறு துறைகளைச் சேர்ந்த முதலாளிகளுக்கு இடையி லான போட்டியாகும். இது பல்வேறு தொழிற்துறைகளில் லாப விகிதம் சமன்படுத்தப்பட இட்டுச் செல்கிறது. அதிகபட்ச லாப விகிதத்திற்காக மூலதனங்கள் தன்னிச்சையாக ஒரு

* K. Marx, F. Engels, *Collected Works,* vol. 4, Moscow, Progress Publishers, 1975, p. 375.

துறையிலிருந்து இன்னொரு துறைக்குச் செல்வதன் விளை வாக பல்வேறு துறைகளில் நிலவும் வெவ்வேறு லாப விகி தங்கள் சமன்பட்டு **சராசரி லாப விகிதமாக** மாறுகின்றன. எத்துறைகளில் லாப விகிதம் அதிகமோ அங்கே மூலதனம் அதிகமாகச் செல்வதையடுத்து, அங்கே உற்பத்தி விரி வடைகிறது, பண்ட உற்பத்தி பெருகுகிறது, விலைகள் குறை கின்றன, எனவே லாப விகிதம் குறைகிறது. அப்போது மூல தனங்கள் இந்தத் துறையிலிருந்து, எங்கே லாப விகிதம் அதிகமோ அந்தத் துறைகளுக்கு மாறுகின்றன. ஓரளவு சம மான சராசரி லாப விகிதம் ஏற்படும் வரை இந்நிகழ்ச்சிப் போக்கு தொடருகிறது.

சமுதாயத்தில் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பு முழுவ தும் முதலாளி வர்க்கத்தின் பொது லாப நிதியாக மாறு கிறது; இதிலிருந்து ஒவ்வொரு முதலாளியும் தான் இட்ட முதலீட்டிற்கேற்ப தன் லாபத்தைப் பெறுகிறான். சராசரி லாப விகிதம், சமுதாயத்தில் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பு முழுவதற்கும் முன்னிடப்பட்ட மூலதனத்திற்கும் இடையிலான உறவால் நிர்ணயிக்கப்படுகிறது. இது உருவா கும் முறை, ஏன் பாட்டாளிகளுக்கு எதிராக முதலாளிகள் அணிதிரண்டு செயல்படுகின்றனர் என்று காட்டுகிறது, தொழி லாளி வர்க்கத்தைச் சுரண்டுவதை அதிகப்படுத்துவதில் முதலாளிகளுக்குள்ள பொது வர்க்க அக்கறையை வெளிப் படுத்துகிறது.

வெவ்வேறு லாப விகிதங்கள் சராசரி லாப விகிதமாகச் சமன்படுத்தப்படுவதால், முதலாளித்துவத்தில் பண்டங்கள் அவற்றின் உண்மையான மதிப்பின்படி விற்கப்படுவதில் லை, மாறாக **உற்பத்தி விலையின்**படி விற்கப்படுகின்றன. முதலாளித்துவ உற்பத்திச் செலவுகளும் (முன்னிடப்பட்ட மாறும் மூலதனம், மாறா மூலதனம்), மூலதனத்தின் மீதான சராசரி லாபமும் சேர்ந்துதான் உற்பத்தி விலையை

ஏற்படுத்துகின்றன. ஆனால் இதனால் மதிப்பு விதி சீர் குலைக்கப்படுவதாகப் பொருளாகாது. சமுதாயம் தழுவிய அளவில், உற்பத்தி விலைகளின் மொத்தம் பண்டங்களின் மதிப்புகளுடைய மொத்தத்திற்குச் சமமானது, முதலாளி வர்க்கம் முழுவதன் லாபம் சமுதாயத்தில் தோற்றுவிக்கப் பட்ட உபரி மதிப்பின் மொத்தத்திற்குச் சமமானது. இவ் வாறாக, முதலாளித்துவ பண்ட உற்பத்தியில் மதிப்பு விதி உற்பத்தி விலைகளின் மூலம் செயல்படுகிறது.

### வர்த்தக மூலதனமும் வர்த்தக லாபமும்

மூலதனத்தின் அளவிற்கேற்ற லாபம் என்ற கோட்பாட் டின்படி தொழிற்துறை முதலாளிகள் மொத்த லாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் அதே சமயம், இதில் குறிப்பிட்ட பகு தியை மற்ற முதலாளிகளுக்கு, உதாரணமாக, வர்த்தக முதலாளிகளுக்குக் கொடுக்கும்படி நேரிடுகிறது. ஏன் என்று இப்போது பார்ப்போம்.

மூலதனம் இடையறா இயக்கத்தில் இருக்கும் பொழுது தான், உற்பத்திச் சாதனங்களும் உழைப்புச் சக்தியும் இணைந்து இடையறாமல் செயல்படும் பொழுதுதான் உபரி மதிப்பு தோற்றுவிக்கப்படுகிறது. இந்த இயக்கத்தை நிறுத் தினால், முதலாளித்துவத் தொழில் நிறுவனத்தில் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கை நிறுத்தினால் புதிய மதிப் போ, உபரி மதிப்போ எதுவும் தோற்றுவிக்கப்படாது. "...மூலதனத்தை ஓர் இயக்கமாகத்தான் புரிந்து கொள்ள வேண்டுமே தவிர அமைதியாக ஓரிடத்தில் நிற்கும் பொரு ளாகப் புரிந்து கொள்ளக் கூடாது" என்றார் கா. மார்க்ஸ்.*

மூலதனத்தின் இயக்கம் எப்படி நடைபெறுகிறது?

* K. Marx, *Capital,* vol. 2, p. 108.

முதலாளி தனக்குத் தேவையான உற்பத்திச் சாதனங்களையும் உழைப்புச் சக்தியையும் வாங்கக் குறிப்பிட்ட பணத்தைச் செலவிடுகிறான் என்பதிலிருந்து மூலதனத்தின் இயக்கம் ஆரம்பமாகிறது. பண்டப் புழக்கத் துறையில் மூலதனம் தன் இயக்கத்தின் முதல் கட்டத்தைக் கடக்கிறது: பண வடிவம் உற்பத்தி வடிவமாக மாறுகிறது. இரண்டாவது கட்டத்தில் பண்ட உற்பத்தி நடைபெறுகிறது. இப் பண்டங்களின் மதிப்பு, வாங்கப்பட்ட உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உழைப்புச் சக்திகளின் மதிப்பை விட அதிகமாயிருக்கும், இந்த வேறுபாடு உபரி மதிப்பின் அளவிற்குச் சமமானது. மூன்றாவது கட்டத்தில் மூலதனம் மீண்டும் புழக்கத் துறைக்கு திரும்புகிறது: உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் விற்கப்படுகின்றன, தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பு சுவீகரிக்கப்படுகிறது. மூலதனமானது தன் பண்ட வடிவத்திலிருந்து மீண்டும் பண வடிவத்திற்குத் திரும்புகிறது.

இவ்வாறு கிட்டிய பணத்தைக் கொண்டு முதலாளி மீண்டும் உற்பத்திச் சாதனங்களையும் உழைப்புச் சக்தியையும் வாங்குகிறான், மூலதனத்தின் இயக்கம் மீண்டும் நடைபெறுகிறது. மூலதனம் தொடர்ந்தாற்போல் ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்திற்கு மாறி, அது மேற்கூறிய மூன்று கட்டங்களையும் கடந்து வருவதைத்தான் **மூலதனச் சுழல் வட்டம்** என்கிறோம். இச்சுழல் வட்டத்தில் மூலதனம் புழக்கக் கட்டத்தை இரண்டு முறையும் உற்பத்திக் கட்டத்தை ஒரு முறையும் கடக்கிறது. உற்பத்திக் கட்டம்தான் தீர்மானகரமான பங்காற்றுகிறது, ஏனெனில் இதில்தான் உபரி மதிப்பு தோற்றுவிக்கப்படுகிறது.

மூலதனத்தின் இயக்கம் ஒரு சுழல் வட்டத்துடன் முடிந்துவிடுவதில்லை. இச்சுழல் வட்டங்கள் இடையறாமல் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெறுகின்றன. மூலதனச் சுழல்

வட்டம் ஒரு தனிப்பட்ட செயலாக அல்லாமல், முறைப்படி மீண்டும் மீண்டும் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்காக இருக்கும் பொழுது இது **மூலதன புரள்வு** எனப்படும். மூலதன புரள்வைத் துரிதப்படுத்துவதில் முதலாளிகள் பெரிதும் அக்கறை செலுத்துகின்றனர், ஏனெனில் உபரி மதிப்பின் ஆண்டு விகிதம், ஓராண்டில் பெறப்பட்ட உபரி மதிப்பின் மொத்தத்திற்கும் முன்னிடப்பட்ட மாறும் மூலதனத்தின் அளவிற்கும் இடையிலான விகிதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. மூலதன புரள்வைத் துரிதப்படுத்துவதால் அதே அளவு மாறும் மூலதனத்தை வைத்து ஓராண்டில் அதிக அளவு தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி, சுரண்டும் வாய்ப்பு கிட்டும், இதனால் அதிக அளவு உபரி மதிப்பைப் பெற முடியும்.

மூலதன புரள்வைத் துரிதப்படுத்துவதன் தேவைகளுக்கேற்ப, மூலதனத்தில் பண்ட மற்றும் பண வடிவில் நிலவும் பகுதி, முதலாளித்துவம் வளர வளர மேன்மேலும் தனியே பிரிந்து, சுயமான வர்த்தக மற்றும் கடன் மூலதனமாகச் செயல்படத் துவங்குகிறது. வியாபாரிகள், வங்கியதிபர்கள், மற்ற கடன் வழங்கும் முதலாளிகள் போன்ற பல்வேறு முதலாளி வர்க்கத்தினர் இந்த மூலதனங்களை கையாளுகின்றனர்.

**வர்த்தக மூலதனம்** புழக்கத் துறையில் செயல்படுகிறது. தொழிற்துறை மூலதனத்தின் ஒரு பகுதியாகிய இது அதிலிருந்து பிரிந்து, அதன் பண்ட வடிவப் பணியை நிறைவேற்றுகிறது. தொழிற்துறை முதலாளிகள் தம் பொருளை வியாபாரிகளுக்கு விற்கின்றனர், இவர்கள் இப்பொருளை நுகர்வாளர்களுக்கு எடுத்துச் செல்கின்றனர். பண்ட பரிவர்த்தனையில் இடைத் தரகர்களாக விளங்கி உபரி மதிப்பைப் பெறுவதுதான் வர்த்தக மூலதனத்தின் பணியாகும்.

லாபத்தோடு பண்டங்களை விற்பதற்காக அவற்றை வாங்கு வதுதான் வர்த்தக மூலதன இயக்கத்தின் வடிவமாகும்.

வர்த்தக லாபம் என்பது உபரி மதிப்பின் ஒரு பகுதி யாகும்; பொருட்களை விற்பதற்காக தொழிலதிபர் வியா பாரிக்கு இதை விட்டுக் கொடுக்கிறார். தொழிற்துறை முத லாளிக்குத் தருவதைப் போன்ற அதே சராசரி லாபத்தை வர்த்தக மூலதனம் வர்த்தக முதலாளிக்கும் தருகிறது, ஏனெனில் உற்பத்தித் துறையிலிருந்து புழக்கத் துறைக் கும், புழக்கத் துறையிலிருந்து உற்பத்தித் துறைக்குமாக தன்னிச்சையாக மாறும் மூலதனங்கள் இத்துறைகளில் லாப விகிதத்தை (மூலதனத்தின் அளவிற்கேற்ற லாபம் என்ற கோட்பாட்டின்படி) சமப்படுத்துகின்றன.

வர்த்தக லாப வடிவம் சுரண்டல் உறவுகளை இன் னமும் அதிகம் மூடிமறைக்கிறது. ஏனெனில் வியாபாரிக்கு உற்பத்தியுடன் நேரடியான தொடர்பு எதுவும் இல்லை. ஏதோ வர்த்தக லாபம் வர்த்தகத்தில் தோன்றுவதாக ஒரு பொய்த் தோற்றம் எற்படலாம், ஆனால் உண்மையில் இது கூலித் தொழிலாளிகளால் உற்பத்தியில் தோற்றுவிக்கப் பட்டு முதலாளிகளால் அபகரிக்கப்படும் உபரி மதிப்பின் ஒரு பகுதிதான். தொழிற்துறை முதலாளிகளைப் போன்றே வர்த்தக முதலாளிகளும் உழைப்பாளிகளைச் சுரண்டி பணம் சேர்க்கின்றனர்.

## கடன் மூலதனமும் வட்டியும்

முதலாளித்துவம் வளர்ச்சியடையும் பொழுது தொழிற் துறை மூலதனத்திலிருந்து வர்த்தக மூலதனம் மட்டுமின்றி பண மூலதனமும் பிரிகிறது. **கடன் மூலதனம்** என்பது குறிப்பிட்ட காலக் கெடுவிற்கு கடனாகத் தரப்பட்டு, வட்டி யைப் பெற்றுத் தரும் பண மூலதனமாகும். தொழிற்துறை

முதலாளியோ, வர்த்தக முதலாளியோ தம் லாபத்தின் ஒரு பகுதியை, பண முதலாளி தனக்குக் கடனாக வழங்கிய தொகைக்காகத் தருவதுதான் இந்த வட்டியாகும்.

கடன் மூலதனத்தின் இயக்கத்தை பின்வரும் சூத்திரத்தால் விளக்கலாம்: பணம்—பணமும் அதனுடன் கூட குறிப்பிட்ட அளவு கூடுதல் தொகையும். வெளிப் பார்வைக்கு இதில் உற்பத்தியோ, பண்டச் சுழற்சியோ இல்லாததைப் போலிருக்கும், வெறும் பணத்தின் இயக்கத்தைப் போல் காணப்படும்: பணம் கடனாகத் தரப்படுகிறது, குறிப்பிட்ட காலக் கெடுவிற்குப் பின் இது கூடுதல் தொகையோடு பணத்தைக் கொடுத்தவனிடமே திரும்பி வருகிறது. கடன் மூலதனத்தின் இயக்கத்தில் உழைப்பாளிகளைச் சுரண்டுவது இன்னமும் அதிகமாக மூடிமறைக்கப்படுகிறது, பொருளுற்பத்தித் துறையில் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பிலிருந்துதான் கடன் முதலாளி தன் பங்கைப் பெறுகிறான் என்ற உண்மை மறைக்கப்படுகிறது. கடன் மூலதனம்தான் மிகவும் ஒட்டுண்ணித்தனமான மூலதன வடிவமாகும்.

உபரி மதிப்புதான் கடன் வட்டியின் மூல ஊற்றாகும். தொழிலாளர்களைச் சுரண்டி, லாபம் பெறுவதற்காகத் தொழிற்துறை முதலாளிகள், வர்த்தக முதலாளிகள் ஆகிய இரு சாராரும் கடன் மூலதனத்தைப் பயன்படுத்துகின்றனர். எனவேதான் இவர்கள் தம் லாபத்தில் ஒரு பகுதியைக் கடனுக்கு வட்டியாக அளிக்கின்றனர். தொழிற்துறை முதலாளியின் லாபம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது; கடனுக்கான வட்டி (இது கடன் முதலாளியால் விழுங்கி ஏப்பம் விடப்படுகிறது), முதலாளியின் வருமானம் (இது முதலாளியால் அபகரிக்கப்படுகிறது) என்பவைதான் அந்த இரண்டு பகுதிகளாகும்.

இவ்வாறாக, வட்டி என்பது லாபத்தின் ஒரு பகுதி

யாகும்; ஆனால் இந்த பகிர்வு எப்படி, எந்த விகிதத்தில் கடன் முதலாளிக்கும் தொழிற்துறை முதலாளிக்கும் இடையில் நடைபெறும் என்பது போட்டியாலும், கடன் மூலதனத்தின் தேவை மற்றும் சப்ளையின் விகிதத்தாலும் தான் முழுக்க முழுக்க நிர்ணயிக்கப்படும். வட்டி விகிதம் என்பது மொத்த வட்டிக்கும், கடனாக வழங்கப்படும் மூலதனத்தின் மொத்தத் தொகைக்கும் இடையிலான விகிதமாகும். சராசரி லாப விகிதத்தை வட்டி விகிதத்தின் உச்ச வரம்பாகக் கருதலாம்; ஆனால் இம்மட்டத்தில் தொழிற்துறை முதலாளி கடனை நாட வேண்டிய அவசியமேயில்லை. வட்டியின் குறைந்தபட்ச வரம்பை நிர்ணயிக்க முடியாது, இது கிட்டத்தட்ட பூஜ்ஜியம் வரை குறையக் கூடும். அப்போது கடன் நடவடிக்கையால் கடன் முதலாளிக்கு எவ்விதப் பயனும் கிட்டாது.

கடன் மூலதனத்தின் இயக்கம் பெரும்பாலும் கடன் வடிவில் நடைபெறுகிறது. இதன் முக்கிய வகைகள் **வர்த்தகக் கடனும் வங்கிக் கடனும்** ஆகும்.

தொழிற்துறை முதலாளிகளும் வர்த்தக முதலாளிகளும் ஒருவருக்கொருவர் வர்த்தகக் கடனை வழங்கிக் கொள்கின்றனர். உதாரணமாக, ஆலை முதலாளி மூலப் பொருளையும் இயந்திரங்களையும் கடனாகப் பெறுகிறான், தயாரான பொருளை மொத்த வியாபாரிக்கும், மொத்த வியாபாரி பின்னர் சில்லறை வியாபாரிக்கும் கடனாகத் தருகின்றனர். இக்கடன் பணக் கடன் வடிவில் அல்ல, பண்டக் கடன் வடிவில் உள்ளது. முதலாளிகள் வெறும் வாய் மொழி வாக்குறுதிகளின்படி ஒருவருக்கொருவர் பண்டங்களைக் கடனாகத் தருவதில்லை, கடன் பத்திரங்களின் — உண்டியலின் — அடிப்படையில்தான் இவர்கள் இக்கடன்களை வழங்குகின்றனர். உண்டியல் என்பது ஒரு குறிப்பிட்ட நபர் இன்னொரு குறிப்பிட்ட நபருக்கு,

குறிப்பிட்ட காலக் கெடுவின் இறுதியில் குறிப்பிட்ட தொகையைத் தருவதாக அளிக்கும் வாக்குறுதியாகும்.

வங்கிக் கடன் என்பது தொழிலதிபர்களுக்கும் வியாபாரிகளுக்கும் பண முதலாளிகள் வழங்கும் பெரும் பணக் கடன்களாகும். முதலாளித்துவ நாடுகளின் வங்கிகளும் மற்ற நிதி நிறுவனங்களும் நிலம், கட்டிடம் அல்லது வேறு பொருட்களின் பேரில் கடன் கொடுப்பதும் உண்டு (அடைமானக் கடன்). பல்வேறு நுகர்வுப் பண்டங்களைத் தவணை முறையில் வாங்குவதற்கும் கடன் வழங்கப்படுவதுண்டு (நுகர்வுக் கடன்). நவீன முதலாளித்துவச் சூழ்நிலையில் நுகர்வுக் கடன் விரிவடைந்து வருவதானது பல சமயங்களில் உழைப்பாளிகளின் நிலை மோசமடைய இட்டுச் செல்கிறது. இக்கடனுக்கான வட்டி அதிகம். மேலும், கடனுக்கு வாங்கப்படும் பண்டங்களின் விலைகளும் அதிகமானவையாக இருக்கும், உரிய தவணையில் பணம் செலுத்தாவிடில் கடனாக விற்கப்பட்ட பண்டங்கள் பிடுங்கப்படும்.

பணக் கடன் மற்றும் செலுத்துதல் நடவடிக்கைகளில் வங்கிகள் இடைத் தரகர்களாக விளங்குகின்றன. உலகின் மிகப் பெரும் வங்கியாகிய "பாங்க் ஆஃப் அமெரிக்கா" கட்டிடத்தின் நுழைவாயிலில் ஓர் அசாதாரண சிலை—கல்லால் ஆன இதயம்—நிற்கிறது. இது வங்கியதிபரின் இதயத்தைக் குறிக்கிறது. ஆம், உண்மையில் இது கல்லைப் போன்றது. இதை எதனாலும் உருக்க முடியாது. முதலாளித்துவ நாடுகளில், ஒரு குறிப்பிட்ட சிறு முதலாளி அல்லது பண்ணை உரிமையாளருக்கு வங்கி கடன் வழங்க மறுத்ததாலோ அல்லது கடனைத் திருப்பிச் செலுத்தும் கெடுவை நீடிக்காததாலோ பல நேரங்களில் அவர்கள் நொடித்துப் போனதுண்டு, அவர்களுடைய வாழ்க்கை நம்பிக்கைகள் அனைத்தும் தகர்ந்து விழுந்ததுண்டு. வங்கியதிபரின்

இதயத்திற்குப் பணத்தைத் தவிர வேறு எந்த உணர்ச்சிகளும் கிடையாது.

வங்கிகள் பணம் முழுவதையும் திரட்டி, அதைக் கடனாக வழங்குகின்றன. இதனால் வங்கிகளுக்குக் கணிசமான அளவு லாபம் கிட்டும். தான் வழங்கும் கடனுக்காக வசூலிக்கும் வட்டிக்கும், தன் வங்கியில் பணம் போடுபவர்களுக்குத் தரும் வட்டிக்கும் இடையிலான வேறுபாடுதான் இந்த லாபம் ஆகும். வங்கி லாபம் என்பது, கூலித் தொழிலாளர்களின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பின் மாற்றியமைக்கப்பட்ட வடிவங்களில் ஒன்றாகும்.

நவீன முதலாளித்துவ சமுதாயத்தில் வங்கிகள், மற்ற நிதி நிறுவனங்களோடு கூட சுதந்திரமான பணத்தின் இன்னுமொரு முக்கிய "சுய ஒழுங்கமைப்பு" வடிவம் நிலவுகிறது. இதுதான் கூட்டுப் பங்கு கம்பெனிகளாகும்; அதாவது இவற்றில் ஒரு தனிப்பட்ட நபரின் பணமல்ல, பலரின் பணம் இருக்கும். ஒவ்வொரு பங்குதாரரும் குறிப்பிட்ட பங்குகளை வாங்குவதால் கூட்டுப் பங்கு கம்பெனியின் மொத்த மூலதனம் உருவாகிறது.

**பங்குச் சீட்டு** என்பது ஒரு பத்திரமாகும், இது கூட்டுப் பங்கு கம்பெனியின் மூலதனத்தில் குறிப்பிட்ட நபரின் பங்கிற்குச் சான்று பகர்கிறது. இதன் சொந்தக்காரர்களுக்குத் தத்தம் மூலதனத்திற்கேற்ப **பங்கு ஈவு** வடிவத்தில் லாபத்தில் பங்கு பெறும் உரிமையுண்டு. பங்கை வாங்கிய ஒவ்வொருவரும் சம்பிரதாயப்படி அந்தத் தொழில் நிறுவனத்தின் கூட்டு உடைமையாளர் ஆவார், கூட்டுப் பங்கு கம்பெனியின் உயர் நிர்வாக அமைப்பாகிய பங்குதாரர்களின் பொதுக் குழுக் கூட்டத்தில் இவருக்கு வாக்குரிமை உண்டு.

ஆனால், தம் கரங்களில் முக்கியப் பங்குகளை வைத்துள்ள பெரும் பங்குதாரர்களாகிய முதலாளிகள்தான் நடைமுறையில் எல்லாவற்றையும் தீர்மானிப்பர். இப்பெரும் பங்

குதாரர்கள் **பங்கு மார்க்கெட்டுகளில்** பங்குகளை வாங்கி, விற்று கொண்டிருப்பர். இதனால் பங்குகளின் சந்தை மதிப்பு (சந்தை விலை) கூடும் அல்லது குறையும். பங்கு மார்க்கெட் என்பது பெரும் பண முதலைகள், சிறு மற்றும் நடுத்தர பங்குச் சொந்தக்காரர்களின் மூலதனங்களைத் தேடித் திரியும் வேட்டைக் களமாகும்.

கட்டுப்பாட்டுப் பங்குத் தொகுதி வைத்துள்ளவர்கள்தான் கூட்டுப் பங்கு கம்பெனிகளை நிர்வகிக்கின்றனர். **கட்டுப் பாட்டுப் பங்குத் தொகுதி** என்றால், கூட்டுப் பங்கு கம்பெனி யில் நடைமுறையில் ஆதிக்கம் செலுத்த ஒரு நபருக்கோ அல்லது ஒரு சில நபர்களுக்கோ உரிமை வழங்கும் பங்கு களின் மொத்தமாகும். முறைப்படி 50%க்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருந்தால்தான் இது சாத்தியமென்றா லும், நடைமுறையில் 20—30% பங்குகளை வைத்திருப்ப வர்களே முழு எஜமானர்களாகச் செயல்படுவதுண்டு. இவர் கள்தான் மிக முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பர், நிர்வாக குழுவையும் இயக்குநர்களையும் நிர்வகிப்பர்.

## முதலாளித்துவ நிலவாடகை

முக்கியச் சுரண்டல் வர்க்கத்தைச் சேர்ந்த தொழிற்துறை, வர்த்தக, கடன் முதலாளிகளைத் தவிர பூர்ஷ்வா சமு தாயத்தில் இன்னுமொரு சுரண்டல் வர்க்கமும் உள்ளது. நிலப்பிரபுத்துவக் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் இது பெரும் நிலவுடைமையாளர்களின் (குறிப்பாக விவசாய நிலங்களை வைத்திருப்பவர்களின்) வர்க்கமாகும். கூலித் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்படும் உபரி மதிப்பின் ஒரு பகுதியை இவர்கள் ஏன், எப்படி அபகரிக்கின்றனர்?

முதலாளித்துவ நாடுகளின் விவசாயத் துறையில் உள்ள உற்பத்தி உறவுகள், நிலவுடைமையாளர்கள், முதலாளித்

துவப் பண்ணைக்காரர்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், சிறு தனி உற்பத்தியாளர்களாகிய விவசாயிகள் ஆகிய பல்வேறு வர்க்கங்கள், சமூகக் குழுக்களுக்கு இடையிலான உறவுகளின் சிக்கலான பிணைப்பாகும். முதலாளித்துவ உற்பத்தி முறை உருவாகிய காலகட்டத்தில் பூர்ஷ்வாப் புரட்சிகள் பெரும் நிலவுடைமையை முழுமையாக ஒழித்துக் கட்டாததுதான் இதற்கு முக்கியக் காரணமாகும். இந்த பூர்ஷ்வாப் புரட்சிகள் நிலத்தின் மீதான நிலப்பிரபுத்துவ உடைமையைத் தனி முதலாளித்துவ உடைமையாக மாற்றி, நிலத்தைச் சுதந்திரமாக வாங்கி விற்கக் கூடிய பொருளாக மாற்றின. நிலத்தின் மீதான பெரும் சொத்துடைமை நிலவுவதுதான், நிலவுடைமையாளர்கள் என்ற தனி சுரண்டல் வர்க்கம் இருப்பதற்கான அடிப்படையாகும்.

ஏன் நிலத்தின் மீதான தனியுடைமை, உபரி மதிப்பின் ஒரு பகுதியை விழுங்கி ஏப்பம் விடும் வாய்ப்பை இவர்களுக்கு அளிக்கிறது?

சாதாரணமாக, நிலவுடைமையாளன் அல்ல, முதலாளித்துவப் பண்ணைக்காரன்தான் விவசாயப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடுகிறான், இவன்தான் நிலத்தை வாடகைக்கு எடுக்கிறான், விவசாயக் கருவிகளை வாங்குகிறான், உபரி மதிப்பைப் பெறும் நோக்கத்தோடு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகிறான். விவசாய முதலாளிக்கு நிலத்தை குத்தகைக்கு விடும் நிலவுடைமையாளன், இதற்காக **நிலவாடகை** வடிவில் குறிப்பிட்ட தொகையை வசூலிக்கிறான்; இதன் அளவும் இதை செலுத்த வேண்டிய காலக் கெடுவும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டிருக்கும்.

முதலாளித்துவப் பண்ணைக்காரர்கள் மற்றும் நிலவுடைமையாளர்களின் வருமானங்களுக்கான மூல ஊற்று விவசாயக் கூலித் தொழிலாளர்களின் உழைப்பாகும்; இத்



6—1165

தொழிலாளர்கள் ஈவிரக்கமின்றி சுரண்டப்படுகின்றனர்.முத லாளித்துவப் பண்ணைக்காரன் விவசாயக் கூலித் தொழி லாளர்களிடமிருந்து உபரி மதிப்பை உறிஞ்சும் பொழுது, அதன் ஒரு பகுதியை சராசரி லாப வடிவில் தான் எடுத்துக் கொள்கிறான். சராசரி லாபத்திற்குக் கூடுதலாக உள்ள அனைத்தையும் நிலவாடகை வடிவில் நிலவுடைமையாளன் எடுத்துக் கொள்கிறான்.

முதலாளித்துவத்தில் நிலவாடகை **வேறுபாட்டு நில வாடகை, தனிமநிலை நிலவாடகை** என்ற இரண்டு முக்கிய வடிவங்களில் உள்ளது.

நிலவாடகை நிலவுடைமையாளனுக்குத் தொடர்ந்தாற் போல் வழங்கப்படுவதால் விவசாயத் துறையில் சராசரி லாபத் திற்கு மேல் நிலையான கூடுதல் மதிப்பு, சராசரி லாபத்தை விட அதிகமான உபரி மதிப்பு தோற்றுவிக்கப்படுகிறது; இது தான் நிலவாடகையின் மூல ஊற்றாகும்.

இந்த நிரந்தர அமித லாபம் எப்படித் தோன்றுகிறது? விவசாயத் துறையில் இதன் மூல ஊற்று எது?

சராசரி லாபத்தை விட அதிகமான இந்த லாபம் முத லாளித்துவப் பண்ணைக்காரனிடம், நிலம் மட்டாக உள்ள காரணத்தால், தனியுடைமை பொருளாதாரத்தின் பொ ருள் என்ற வகையில் நிலத்தின் மீது ஏகபோகம் நிலவு வதால் தோன்றுகிறது. இந்த ஏகபோகம்தான் விவசாயப் பொருட்களின் மீது விசேஷ வகையில் விலையை நிர்ணயிக் கிறது, வேறுபாட்டு நிலவாடகை தோன்றுவதற்கான காரண மாகத் திகழுகிறது. தொழிற்துறையில் பண்டத்தின் விலை உற்பத்தியின் சராசரி சூழ்நிலைகளால் நிர்ணயிக்கப்படு கிறது என்று பார்த்தோம். விவசாயத் துறையில் இவ்விலை மிக மோசமான நிலங்களில் நடைபெறும் உற்பத்தியால் நிர்ணயிக்கப்படுகிறது. விஷயம் என்னவெனில், விவசாயத் துறையில் இயற்கையில் நல்ல சாகுபடி வளம் மிக்க நிலங்

கள், சராசரி வளமுள்ள நிலங்களின் அளவை பெருக்க முடியாது, இவை மட்டானவை. சமுதாயத்தில் விவசாயப் பொருட்களின் தேவை அதிகமானதாக இருப்பதால், மோசமான நிலங்களும் சாகுபடியில் ஈடுபடுத்தப்படுகின்றன. நல்ல மற்றும் சராசரி நிலங்களில் விளையும் பொருளை வைத்து தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது, எனவே மோசமான நிலங்களின் உற்பத்தி சூழ்நிலைகள்தான் விவசாயப் பொருளின் உற்பத்தி விலையை நிர்ணயிக்கின்றன. சாதாரணமாக இந்த நிலங்களில் சாகுபடியே செய்ய மாட்டார்கள். நல்ல மற்றும் சராசரி நிலங்களில் உற்பத்திச் செலவுகள் மோசமான நிலங்களில் உள்ளதை விடக் குறைவு. எனவே இவற்றில் உற்பத்தியின் தனி விலையும் உற்பத்தியின் சமூக விலையை விடக் குறைவானது. இந்த வேறுபாட்டை வைத்துதான் முதலாளித்துவப் பண்ணைக்காரன், சராசரி மற்றும் நல்ல நிலங்களிலிருந்து வேறுபாட்டு நிலவாடகையை நிலவுடைமையாளனுக்கு வழங்குகிறான்.

ஆனால் நிலவுடைமையாளர்கள் சராசரி மற்றும் நல்ல நிலங்களிலிருந்து மட்டுமின்றி மோசமான நிலங்களிலிருந்தும் நிலவாடகையைக் கோரிப் பெறுகின்றனர். உழைப்பளவு மதிப்புத் தத்துவத்துடன் முரண்படாமல் இந்த நிலவாடகையின் தன்மையை எப்படி விளக்குவது? தனியுடைமை பொருளாதாரத்தின் பொருள் என்ற வகையில் நிலத்தின் மீதான ஏகபோகத்தோடு கூட (இதுதான் வேறுபாட்டு நிலவாடகை தோன்றுவதற்கான அடிப்படையாகும்) முதலாளித்துவ விவசாயத் துறையில் இன்னுமொரு வகையான ஏகபோகமும்—நிலத்தின் மீதான தனியுடைமையில் ஏகபோகம்—நிலவுகிறது. அதாவது, தனியுடைமைப் பொருள் என்ற வகையில் நிலம் நிலவுடைமையாளர்களால் ஏகபோகமயப்படுத்தப்பட்டுள்ளது என்று இதற்கு அர்த்தம். இவர்களில் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட அளவு நிலம் உண்டு,



6*

இதை அவர்கள் தத்தம் விருப்பப்படிப் பயன்படுத்து கின்றனர். குறிப்பிட்ட நிலத்தில் முதலீடு செய்யும் வாய்ப்பை முதலாளித்துவப் பண்ணைக்காரனுக்குத் தருவதா இல்லையா என்பது இந்நிலவுடைமையாளர்களைத்தான் பொறுத்தது.

நிலத்தின் மீதான தனியுடைமையில் ஏகபோகம் நிலவுவதால் நிலத்தைப் பயன்படுத்துவதற்கான தொகை மோசமான நிலம் உட்பட எல்லா நிலங்களிலிருந்தும் வசூலிக்கப் படுகிறது. இதுதான் நிலவாடகையைத் தோற்றுவிக்கிறது; நிலம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் அதைப் பயன்படுத்து வதற்காக வாடகை செலுத்தியாக வேண்டும். நிலத்தின் மீதான தனியுடைமையில் ஏகபோகம் நிலவுவதானது, நில வுடைமையாளரைத் தவிர வேறு யாரும் உற்பத்தி நோக்கங்களோடு இந்நிலத்தை இலவசமாகப் பயன்படுத்த இய லாமல் செய்கிறது.

ஏன் மோசமான நிலங்களில் கூட முதலாளித்துவப் பண்ணைக்காரனால் சராசரி லாபத்தை விடக் கூடுதலான வருமானத்தைப் பெற முடிகிறது?

விவசாயப் பொருட்கள், மோசமான நிலத்தின் உற்பத்தி விலையின்படியின்றி, உற்பத்தியின் சமூக விலையை விடக் கூடுதலாக (மோசமான நிலமும் அதன் சொந்தக்காரனுக்கு வருமானம் தர வேண்டும் என்பதற்காக) விற்கப்படும் பொழுதுதான் இது சாத்தியம். இவ்வாறாக, விவசாயப் பொருட் களின் சந்தை விலையில் மோசமான நிலங்களில் உற்பத் திக்கு ஆகும் செலவுகளோடு கூட சராசரி லாபமும் தனிம நிலை நிலவாடகையும் அடங்கியிருக்க வேண்டும்.

விவசாயப் பொருட்களின் விலைகள் இப்படித்தான் உரு வாகின்றன. நிலத்தின் மீதான தனியுடைமையில் ஏகபோ கம் நிலவுவதானது, மூலதனம் தொழிற்துறையிலிருந்து விவசாயத் துறைக்குச் சுதந்திரமாக மாறுவதையும், எனவே

சமுதாயத்தில் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பு முழுவதும் பல்வேறு முதலாளிகளுக்கு இடையில் மறுபங்கீடு செய்யப்படுவதையும் தடுக்கிறது; இதுதான் மேற்கூறியதற்குக் காரணமாகும். ஒரே அளவு மூலதனம் தொழிற்துறையை விட விவசாயத் துறையில் அதிக அளவு உபரி மதிப்பைத் தோற்றுவிக்கிறது, எனெனில் விவசாயத் துறையில் உழைப்பின் தொழில்நுட்ப மட்டம் குறைவு, 100 அலகு மூலதனத்திற்கு இங்கே தொழிற்துறையை விட அதிக அளவு மாறும் மூலதனம் செலவிடப்படுகிறது. அதாவது மாறும் மூலதனத்திற்கும் மாறா மூலதனத்திற்கும் இடையிலான விகிதம் விவசாயத் துறையில் எப்போதும் குறைவானது. விவசாயப் பொருட்கள் உற்பத்தி விலைகளின்படியின்றி, அவற்றின் மதிப்பிற்கேற்ப விற்கப்படுகின்றன. குத்தகை எடுக்கும் முதலாளி, விவசாயத் துறையில் விவசாயத் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பு முழுவதையும் பயன்படுத்துகிறான். இதன் அளவு சராசரி லாபமும் (இதை எல்லா முதலாளிகளும், தம் மூலதனம் எங்கு செயல்பட்டாலும் பெறுகின்றனர்) இதை விடக் கூடுதலான உபரி மதிப்பும் சேர்ந்ததாகும். இந்த அதி லாபத்தைத்தான், மோசமான நிலத்தை வைத்திருக்கும் நிலவுடைமையாளர்கள் உட்பட எல்லா நிலவுடைமையாளர்களும் தனிமநிலை நிலவாடகை வடிவில் அபகரிக்கின்றனர்.

முதலாளித்துவத்திற்கே உரித்தான தனிமநிலை மற்றும் வேறுபாட்டு நிலவாடகையோடு கூட எகபோக நிலவாடகையும் நிலவக் கூடும். குறிப்பிட்ட வகையான விவசாயப் பொருளுக்கு அதன் மதிப்பை விட அதிகமான எகபோக விலை நிர்ணயிக்கப்படும் பொழுது இது தோன்றும். உதாரணமாக, சில விசேஷ திராட்சை ரகங்கள், வசந்த காலப் பழங்களைக் குறிப்பிடலாம்.

முதலாளித்துவம் வளர வளர நிலவாடகை அதிகரிக்கும் போக்கு காணப்படுகிறது.

ஆக, தொழிற்துறை லாபம், வர்த்தக லாபம், வட்டி, நிலவாடகை ஆகியவை எப்படித் தோன்றுகின்றன என்று பார்த்தோம், முதலாளிகளின் எல்லாப் பிரிவினர் மற்றும் நிலவுடைமையாளர்களின் வருமானத்திற்கான ஒரே மூல ஊற்று உபரி மதிப்பைத் தோற்றுவிக்கும் கூலித் தொழிலாளர்களின் உழைப்பாகும் என்று நிலைநாட்டினோம். சந்திரன் சூரியனிடமிருந்து தன் ஒளியைப் பெறுவதைப் போன்றே முதலாளி வர்க்கத்தினரின் சகலவித வருமானங்களும் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பிலிருந்து பிறக்கின்றன.

இயன்ற வரை அதிக அளவு உபரி மதிப்பைத் தோற்றுவிப்பதுதான் எல்லாச் சுரண்டலாளர்களின் நோக்கமாகும். தமக்குக் கிட்டும் மொத்த லாபத்தை இவர்கள் பின்னர் பகிர்ந்து கொள்கின்றனர். எனவேதான் கா. மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''பரஸ்பரம் ஒருவருடன் ஒருவர் போட்டியிடும் பொழுது அவ்வளவு குறைவான சோதர உணர்வுகளை வெளிப்படுத்தும் முதலாளிகள், தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராகப் போராடும் பொழுது மசோன் சகோதரத்துவத்தை * வெளிப்படுத்துகின்றனர்.'' **

கூலியுழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பைப் பிரித்துக் கொள்வதில் எல்லாச் சுரண்டலாளர்களும் ஒன்றுபட்டு நிற்கின்றனர். உழைப்பாளிகளைச் சுரண்டுவதை அதி

* **மசோன்கள்** — 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டனில் தோன்றிய மத இயக்கத்தில் பங்கேற்றவர்கள். இந்த இயக்கம் பின்னர் மற்ற பல நாடுகளுக்குப் பரவியது. மத சகோதர அடிப்படையில் மனிதர்களை இணைக்கும் கற்பனாவாத நோக்கத்தோடு ஒரு இரகசிய சர்வதேச ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்க இவர்கள் முயன்றனர். — **ப-ர்.**

** K. Marx, *Capital,* vol. 3, p. 198.

கபட்சம் வலுப்படுத்துவது, இவர்களிடமிருந்து இயன்ற வரை அதிகமாகக் கூலி வழங்கப்படா உழைப்பைப் பிழிந்தெடுப்பது என்பதுதான் இவர்களின் பொது நோக்கமாகும். எனவேதான் எல்லாச் சுரண்டலாளர்களும் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராய், பூர்ஷ்வா சமுதாயத்தில் உள்ள சுரண்டப்படும் பிரிவினர் அனைவருக்கும் எதிராய் அணி திரண்டு நிற்கின்றனர்.

அத்தியாயம் நான்கு

## பொருளாதார மற்றும் சமூக பகை முரண்பாடுகள்

ஏற்கெனவே மேலே குறிப்பிட்டபடி, நிலப்பிரபுத்துவத்திற்கு மாற்றாக முதலாளித்துவம் வந்தது. நிலப்பிரபுத்துவ தனியுடைமை வடிவத்திற்குப் பதில் முதலாளித்துவ தனியுடைமை வந்தது. ஒரு சுரண்டல் அமைப்பு இன்னொரு சுரண்டல் அமைப்புக்கு இடம் விட்டு ஒதுங்கியது. நீராவியும் இயந்திரங்களும் தொழிற்துறையில் புரட்சியைச் செய்த பொழுது பட்டறைகளுக்குப் பதில் பெரும் நவீன தொழிற்துறை தோன்றியது. நவீன முதலாளி வர்க்கம் இதன் தலைமையில் நின்றது.

பெருவீதத் தொழிற்துறை உலகச் சந்தையைத் தோற்றுவித்தது; இது வர்த்தகம், கடல் பயணம், தரைப்பயணம் (இருப்புப் பாதைகள், சாலைகள்) ஆகியவற்றைப் பெருமளவில் வளர்ச்சியடையச் செய்தது, இது தன் பங்கிற்கு, தொழிற்துறை உற்பத்தி விரிவடைவதன் மீது (தொழிற்சாலைகளின் அளவு, எண்ணிக்கை அதிகரிப்பு, இதில் வேலை செய்யும் கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, தொழில்நுட்ப, தொழில் முறை வளர்ச்சி, இன்ன பிற) தாக்கம் செலுத்தியது. முதலாளி வர்க்கம்

தன் மூலதனத்தைப் பெருக்கியது, மத்தியகாலத்திலிருந்து வந்த எல்லா வர்க்கங்களையும் பின்னுக்குத் தள்ளியது.

மேன்மேலும் லாபத்தைப் பெறுவதற்காக முதலாளிகள் உற்பத்தியையும் பண்ட விற்பனையையும் விரிவுபடுத்தினர். புதிய தொழிற்துறைகள் தோற்றுவிக்கப்பட்டன, இவை ஸ்தல மூலப்பொருளை மட்டுமின்றி, மிகத் தொலைவான பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட மூலப் பொருளையும் பதப்படுத்தின, உள்நாட்டு உபயோகத்திற்காக மட்டுமின்றி, உலகெங்கும் அனுப்புவதற்காகவும் பண்டங்களை உற்பத்தி செய்தன. பழைய ஸ்தல, தேசிய குறுகிய வட்டத்திற்குப் பதில்—இது தன் சொந்த உற்பத்திப் பொருட்களைக் கொண்டு மட்டும் நிலவியது—தேசிய இனங்கள், அரசுகளுக்கு இடையிலான பன்முகத் தொடர்பும், சார்புநிலையும் வந்தன.

உற்பத்திக் கருவிகளை விரைவாக நவீனமயப்படுத்தியது, தொழில்நுட்ப வளர்ச்சி, தகவல் தொடர்பு, போக்குவரத்து சாதனங்களைப் பெரிதும் இலகுவாக்கி வளர்த்தது ஆகியவற்றின் மூலம் முதலாளி வர்க்கம், உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பல தேசிய இனங்களைத் தன் உற்பத்தி முறையினுள் கொண்டுவந்தது, தன் விருப்பு வெறுப்புகளுக்கேற்ற உலகைப் படைத்தது.

முதலாளித்துவம் வளர வளர உற்பத்தி மேன்மேலும் சமூகத் தன்மையைப் பெற்றது: இது மேன்மேலும் பெரிய தொழில் நிறுவனங்களில் குவிக்கப்பட்டது, சமூக உழைப்புப் பிரிவினை ஆழமடைந்தது, உற்பத்தியின் தனித்துறைப்பாட்டு நிகழ்ச்சிப் போக்குகள் அது குவிக்கப்பட்டு, மையப்படுத்தப்படும் நிகழ்ச்சிப் போக்குகளுடன் பின்னிப் பிணைந்தன. ஆனால் உற்பத்தியின் விளைபயன்கள் உற்பத்திச் சாதனங்களைத் தம் கரங்களில் வைத்திருந்த முதலாளிகளால் அபகரிக்கப்பட்டன. உற்பத்தியின்

சமூகத் தன்மைக்கும் இதன் விளைபயன்கள் சுவீகரிக்கப் படும் முதலாளித்துவ தனியுடைமை வடிவத்திற்கும் இடையிலான இம்முரண்பாடுதான் முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடாகத் திகழுகிறது, இச்சமூக அமைப் பின் சகலவித பொருளாதார, சமூக பகை முரண்பாடு களையும் நிர்ணயிக்கிறது.

முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடு **மிகை யுற்பத்திப் பொருளாதார நெருக்கடிகளில்** மிகக் கடுமையாக வெளிப்படுகிறது; இந்நெருக்கடிகள் மேன்மேலும் ஆபத் தான வகையில் முதலாளித்துவத்தை அவ்வப்போது ஆட் டங்காண வைக்கின்றன. சமூக அமைப்பு என்ற வகையில் முதலாளித்துவம் நிலவுவதையே இவை கேள்விக்குறி யாக்குகின்றன. **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** கா. மார்க் சும் பி. எங்கெல்சும் எழுதியபடி, நெருக்கடிகளின் பொழுது, ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட பொருட்களில் கணிச மான பகுதி மட்டுமின்றி, ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்ட உற்பத்திச் சக்திகளில் கணிசமான பகுதியும் அழிக்கப்படு கின்றன. நெருக்கடிகளின் பொழுது மிகையுற்பத்தி தொற்று நோய் (முந்தைய சகாப்தங்களுக்கு அது அபத் தமாகப் பட்டிருக்கும்) பிறக்கிறது.

முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடு இன்னும் பல பகை முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது. உதா ரணமாக, தனிப்பட்ட முதலாளித்துவத் தொழில் நிறு வனங்களில் உற்பத்தி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதற்கும் சமு தாயம் முழுவதிலும் நிலவும் அராஜகத் தன்மைக்கும் இடையில் கடும் முரண்பாடு காணப்படுகிறது. ஒரு தனிப்பட்ட தொழில் நிறுவனத்தில் அதன் சொந்தக்காரனாகிய முத லாளி தனியாட்சி புரிகிறான். லாப வேட்டையும் ஈவிரக் கமற்ற போட்டியும் தன் தொழிற்சாலையில் கறாரான ஒழுங்குமுறைகளைப் புகுத்துமாறும் ஒவ்வொரு அங்கத்

தின் பணியையும் கண்டிப்போடு கண்காணிக்குமாறும் முதலாளியை நிர்ப்பந்திக்கின்றன. ஆனால் முதலாளித்துவ சமுதாயம் முழுவதையும் எடுத்துக் கொண்டால், அங்கு தன்னிச்சைப் போக்குதான் கோலோச்சுகிறது, ஏனெனில் முதலாளித்துவ தனியுடைமைதான் இதன் அடிப்படையாகும், சமூக உற்பத்தியைத் திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைக்க முடியாது என்று இதற்குப் பொருள். ஒவ்வொரு முதலாளியும் தன் விருப்பப்படி கண்ணை மூடிக்கொண்டு செயல்படுகிறான். சந்தையின் தேவைகளை அவன் வெற்றிகரமாக மதிப்பிட்டிருந்தால் அவனுக்கு நல்ல லாபம் கிடைக்கும், அவனால் தன் உற்பத்தியைப் பெருக்க முடியும். அவன் இத்தேவைகளைச் சரிவர மதிப்பிடாவிடில் அவனுக்கு இழப்பேற்படும், என் சில நேரங்களில் அவன் நொடித்துப் போகக் கூடும்.

முதலாளித்துவ உற்பத்தி தன்னிச்சையாக, அராஜகப் போக்கில் வளருகிறது, இது பொருளாதாரத்தின் தனிப்பட்ட பிரிவுகள், துறைகளின் வளர்ச்சியில் தவிர்க்க இயலாமல் சீரிசைவின்மையைத் தோற்றுவிக்கிறது, பெரும் இழப்புகளை ஏற்படுத்துகிறது, உற்பத்திப் போக்கைக் கடுமையாகச் சீர்குலைக்கிறது, பொருளாதார நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்கிறது. உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையிலான சீரிசைவு குலைக்கப்படுவதுதான் பொருளாதார நெருக்கடிகளுக்கான நேரடிக் காரணமாகும். முதலாளித்துவத்தில் உற்பத்திச் சூழ்நிலைகள் விற்பனை சூழ்நிலைகளுடன் ஒத்துப் போவதில்லை. லாப வேட்டையில் வரைமுறையற்று மூலதனம் திரள்வதானது உற்பத்தி செய்யப்படும் பண்டங்களின் அளவு பெரிதும் அதிகரிக்க இட்டுச் செல்கிறது, இவையனைத்தையும் விற்பனை செய்ய சந்தையால் முடியாமல் போகிறது. தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் நுகர்வுப் பண்டங்களின் அளவு அவர்களுடைய உண்மை

ஊதியத்தால் மட்டுப்படுத்தப்படுகிறது. மக்கள் திரளினரின் நுகர்வைக் குறைந்தபட்சமாக்க முதலாளிகள் முயலுகின்றனர், இது உழைப்பாளிகளின் உண்மையான வாங்கும் சக்தி உற்பத்தி வளர்ச்சியை விடக் குறைவாக அதிகரிப்பதற்கு இட்டுச் செல்கிறது. "மக்கள் திரளினரின் ஏழ்மையும் மட்டான நுகர்வும்தான் எப்போதும் எல்லா உண்மை நெருக்கடிகளின் இறுதிக் காரணங்களாகும்...." என்றார் கா. மார்க்ஸ். *

உற்பத்தி செய்யப்பட்ட ப்ண்டங்களை விற்க முடியாமல் போவதால் நெருக்கடிகள் தோன்றுகின்றன. இவை மக்களுக்குத் தேவையில்லை என்பதல்ல, உழைப்பாளிகளால் இவற்றை வாங்க முடியாத நிலை ஏற்படுகிறது என்பதுதான் இதற்குக் காரணமாகும். லட்சக்கணக்கான உழைப்பாளிகள் பட்டினி கிடக்கின்றனர், ஏனெனில் "மிக அதிகமான" தானியம் விளைவிக்கப்பட்டது, மக்கள் குளிரில் நடுங்குகின்றனர், ஏனெனில் "மிக அதிகமான" நிலக்கரி எடுக்கப்பட்டுள்ளது. நெருக்கடிகளின் நேரத்தில் லட்சோப லட்சம் மக்களுக்குத் தேவை நிலவினாலும் ஏராளமான பண்டங்கள் அழிக்கப்படுகின்றன.

முதலாளித்துவத்தில் பொருளாதார நெருக்கடிகள் தவிர்க்க இயலாதவை, அகற்றப்பட முடியாதவை. முதலாளித்துவம் பிறந்தது முதல் மறையும் வரை இவை கூடவே வரும்.

முதல் தொழிற்துறை நெருக்கடி 1825இல் பிரிட்டனில் தோன்றியது. 1847—1848இல் ஒரு சில ஐரோப்பிய நாடுகளையும் அமெரிக்க ஐக்கிய நாட்டையும் தழுவிய நெருக்கடிதான் முதல் உலகப் பொருளாதார நெருக்கடியாகும்.

20ஆம் நூற்றாண்டில் 1929—1933இல் நிலவிய உலகப்

* *Ibid.*, p. 484.

பொருளாதார நெருக்கடிதான் மிக ஆழமானதாய், அழிவு கரச் சக்தியைப் படைத்ததாய் விளங்கியது. இது ''மாபெரும் பொருளாதார மந்தம்'' என்றழைக்கப்படுகிறது. இந் நெருக்கடியின் பொழுது அமெரிக்க ஐக்கிய நாட்டில் சுமார் 100 ஊதுலைகள் அழிக்கப்பட்டன, 1933இல் 10 மில்லியன் ஏக்கருக்கும் கூடுதலான பரப்பில் பருத்திச் செடிகள் அழித்து நாசப்படுத்தப்பட்டன. நீராவி என்ஜின்களில் இடப்பட்டு கோதுமை கொளுத்தப்பட்டது. பிரேஸிலில் 20 மில்லிய னுக்கும் அதிகமான காப்பி மூட்டைகள் அழிக்கப்பட்டன, டென்மார்க்கில் 1 லட்சத்திற்கும் கூடுதலான கால்நடைகள் கொல்லப்பட்டன. நெருக்கடி காலகட்டத்தில் முதலாளித் துவ உலகின் தொழில் உற்பத்தி 40%க்கும் மேலாக குறைந் தது, இது 20 ஆண்டுகள் பின் தள்ளப்பட்டது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீது செலுத்திய தாக்கத்தில், 1974—1975ஆம் ஆண்டுகளின் பொருளாதார நெருக்கடியை மேற்கூறிய ''மாபெரும் பொருளாதார மந் தத்துடன்'' பல நேரங்களில் ஒப்பிடுவதுண்டு. கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு, மேற்கு ஐரோப்பா, ஜப்பானில் உற்பத்தி பெரும் வீழ்ச்சியடைந்தது. இச்சமயத் தில் பெரும் விலையேற்றம் காணப்பட்டது (முன்னர் இப்படி நடக்கவில்லை). இப்பொருளாதார நெருக்கடியோடு கூட கடுமையான எரிபொருள், மூலப்பொருள் நெருக்கடிகளும் சேர்ந்து கொண்டன, இதுவரையில்லா அளவிற்கு முத லாளித்துவத்தின் உலகப் பொருளாதார தொடர்புகள் சீர் குலைந்தன. ஒரு சில ஆண்டுகள் கடப்பதற்குள்ளாகவே இன்னுமொரு நெருக்கடி நிழலாடியது. அச்சுறுத்தும் மிகை யுற்பத்தி மீண்டும் எதார்த்தமாகியது. 1980—1982இல் இன்னுமொரு புதிய நெருக்கடி முதலாளித்துவ உலகத் தை ஆட்டியது.

இவ்வாறாக, அவ்வப்போது திரும்பத் திரும்ப நடை

பெறும் நெருக்கடிகளின்றி முதலாளித்துவத்தால் வளர முடியாது என்று வரலாறு காட்டுகிறது. ஒரு பொருளாதார நெருக்கடியிலிருந்து இன்னொரு பொருளாதார நெருக்கடி வரையிலான காலகட்டம் **தொழிற்துறை சுழற்சி** எனப் படும். தன் மூலச்சிறப்புள்ள வடிவத்தில் இச்சுழற்சி **நெருக்கடி, வீழ்ச்சி, புத்துயிர்ப்பு, எழுச்சி** என்ற நான்கு கட்டங் களை உள்ளடக்கியது.

நெருக்கடிக் கட்டத்தில் முதலாளித்துவப் புனருற்பத்தியின் முரண்பாடுகள் குறிப்பாகக் கடுமையாகவும் அழிவுகரமாகவும் வெளிப்படுகின்றன. நெருக்கடிக் கட்டத்தில் ஏராளமான பண்டங்கள் விற்கப்படாமல் தேங்கிப் போகின்றன. தொழில் நிறுவனங்கள் நொடித்துப் போய் மூடப்படுகின்றன, உற்பத்தி குறைகிறது, வேலையில்லாதோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது, ஊதியம் குறைகிறது. நெருக்கடி அலை, வலுக்குன்றிய சிறு மூலதனங்களை ஒழித்துக் கட்டுகிறது, அதிக வலிமையான, நல்ல வசதியுள்ள, மாறிய சந்தைச் சூழ்நிலைகளுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்குச் சந்தையைத் திறந்து விடுகிறது. உழைக்கும் மக்கள் திரளினரை, குறிப்பாகத் தொழிலாளி வர்க்கத்தைத்தான் நெருக்கடி பெரிதும் பாதிக்கிறது. லட்சோபலட்சம் தொழிலாளிகள் வீதிகளுக்குத் தள்ளப்படுகின்றனர், ஏழ்மையில் வாடுகின்றனர். வேலை செய்பவர்களோ கடும் சுரண்டலுக்கு ஆளாகின்றனர்.

படிப்படியாக, நெருக்கடிக் கட்டத்தையடுத்து வீழ்ச்சி வருகிறது; இக்கட்டத்தில் உற்பத்தி மேற்கொண்டு குறைவதில்லை, ஆனால் பொருளாதாரம் தொடர்ந்து தேக்க நிலையிலிருக்கிறது; வேலையில்லாமையும் ஊதியமும் நெருக்கடிக் கட்டத்திலிருந்த அதே மட்டத்திலிருக்கின்றன. நாட்கள் செல்லச் செல்ல பண்ட இருப்புகள்

தீர்ந்து போய்வியாபாரிகள் தொழிற்துறைக்கு ஆர்டர் களைத் தரத் துவங்குகின்றனர், புத்துயிர்ப்புக் கட்டத்திற்கு மாறிச் செல்வதற்கான முன்தேவைகள் தோற்றுவிக்கப் படுகின்றன.

புத்துயிர்ப்புக் கட்டத்தில், நெருக்கடியிலிருந்து மீண்ட தொழில் நிறுவனங்கள் கடைசல் இயந்திரங்களையும் மற்ற உபகரணங்களையும் புதுப்பித்து, உற்பத்தியைப் படிப்படி யாக விரிவுபடுத்தத் துவங்குகின்றன. பண்ட உற்பத்தியில் நெருக்கடிக்கு முன்னிருந்த மட்டத்தை நெருங்கி, பின் இம்மட்டம் விஞ்சப்படுகிறது.

முதலாளித்துவத் தொழிற்துறை, நெருக்கடிக்கு முன் னிருந்த அதிகபட்ச உற்பத்தி மட்டத்தை விஞ்சுவதானது அடுத்த கட்டமாகிய எழுச்சிக் கட்டத்திற்கு மாறிச் செல்வதை குறிக்கிறது. முதலாளிகள் மீண்டும் உற்பத்தியை விரிவு படுத்தி, புதுப் புது பண்டங்களைச் சந்தையில் குவிக் கின்றனர். விலைகளின் அதிகரிப்பு உற்பத்தி வளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது. இது பணம் செலுத்தும் திறமையின் வளர்ச்சியை மேன்மேலும் விஞ்சுகிறது. இதன் விளைவாய், இதுவரை அவ்வப்போது மூடிமறைக்கப்பட்ட மிகையுற்பத்தி முதிர்ச்சியடைகிறது. பண்டங்கள் மேன்மேலும் சேர்ந்து, வாங்குவோர் இல்லாமல் முடங்கிக் கிடக்கத் துவங்குகின்றன. பொருளாதார உறுப்பின் உள்ளே மறைவான நோய் வளரு கிறது. முதலாளித்துவ பொருளாதாரம் மீண்டும் நெருக் கடியை நோக்கிச் செல்கிறது. பின் மேற்கூறிய சுழற்சி திரும்பவும் நடைபெறுகிறது.

முதலாளித்துவ உற்பத்தி, மேன்மேலும் அதிக உயரம் செல்லும் சுருள்வில்லையைப் போல் இயங்குகிறது, அதே சமயம் வீழ்ச்சிகள் இடையறாமல் நடைபெறுகின்றன. சுழற் சிக் கட்டங்களில் இந்த இயக்கத்தை பி. எங்கெல்ஸ் அடை யாளச் சிறப்போடு பின்வருமாறு குறிப்பிட்டார்: வீழ்ச்சிக்

கட்டத்தில் ''உற்பத்திச் சக்திகளும் பொருட்களும் பெருமளவில் விரயமாக்கப்பட்டு, அழிக்கப்படுகின்றன; பிறகு, திரண்டு அம்மாரமாய்க் குவிந்து விட்ட பண்டங்கள் அதிகமாகவோ குறைவாகவோ மதிப்புத் தேய்ந்து கரைந்து இறுதியாய் மறையும் வரை, பொருளுற்பத்தியும் பரிவர்த்தனையும் மெதுவாக மீண்டும் இயங்கத் தொடங்கும் வரை இதே நிலைமை நீடிக்கும். சிறிது சிறிதாக வேகம் அதிகரிக்கிறது. இது பெருநடையாகிறது. தொழிற்துறையின் பெருநடை ஓட்டமாய் மாறுகிறது; ஓட்டம் பெருகி, தொழிற்துறை, வாணிபம், கடன் மற்றும் ஊக வாணிபம் ஆகிய எல்லாமாய்ச் சேர்ந்து தாவிக்குதித்துத் தலை தெறிக்க ஓடி முடிவில் குப்புற விழும்படி துள்ளிப் பாய்ந்தோடிய பின் தொடங்கிய நிலைக்கே—நெருக்கடியின் சாய்க் குழியில்—வந்து முடிவுறுகின்றன. தொடர்ந்து திரும்பத் திரும்ப இதே கதைதான்.'' *

1950ஆம் ஆண்டுகளில், குறிப்பாக 1960ஆம் ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் அரசியல் தலைவர்கள், முதலாளித்துவ பொருளாதாரத்தை நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றுவதாக வாக்களித்தனர். ''பொற்காலத்தின் நுழைவாயிலில் நாம் நிற்கின்றோம். மின்னணு உபகரணங்களால் நிர்வகிக்கப்பட்டு, அணுச் சக்தியால் இயங்கி, தானியங்கி இயந்திரங்களால் இயக்குவிக்கப்படும் நமது பொருளாதார மந்திரக் கம்பளம், நாம் கற்பனை கூடச் செய்து பார்க்காத எல்லைகளை நோக்கிப் பறக்கிறது'' என்பதைப் போன்ற அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஆம், இந்த ''மந்திரக் கம்பளம்'' உண்மையில் முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் ''கற்பனை கூடச்

* பி. எங்கெல்ஸ், **டூரிங்குக்கு மறுப்பு**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1979, பக்கம் 482.

செய்து பார்க்காத இடங்களுக்கு''—வலிய நெருக்கடிகளுக் கும் அதிர்ச்சிகளுக்கும்—இட்டுச் சென்றது.

இவ்வாறாக, முதலாளித்துவ உற்பத்தியின் வளர்ச்சி பாய்ச்சல்கள் மூலம், பெரும் ஊசலாட்டங்கள், எழுச்சிகள், வீழ்ச்சிகளுடன் நடைபெறுகிறது. முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்ட உற்பத்திச் சக்திகள் பூர்ஷ்வா உற்பத்தி உறவுகளின் வரம்புகளை விஞ்சி விட்டன, இதனால் இந்த பழைய உற்பத்தி உறவுகள் சமூக வளர்ச்சிக்குத் தடைகளாக மாறியுள்ளன என்று பொருளாதார நெருக்கடிகள் ஆணித் தரமாக மெய்ப்பிக்கின்றன. நிலவும் உற்பத்திச் சக்திகளை வைத்து ஒப்பிட முடியா அளவிற்கு அதிக பொருட்களை உற்பத்தி செய்யலாம், மக்களின் வாழ்க்கையை மேம்படுத் தலாம். ஆனால் இதற்கு நிலமும் ஆலைகளும் தொழிற் சாலைகளும் வங்கிகளும் போக்குவரத்துச் சாதனங் களும் உழைப்பாளிகளின் கரங்களுக்கு மாற வேண்டும். முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடு வலுப்படு வதும், உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான மோதல் கூர்மையடைவதும், முதலாளித்துவ மேலுறையைப் பிளந்து, உற்பத்திச் சக்திகளின் வளர்ச் சிக்கு வாய்ப்பளித்து, அவற்றை மனித நலன்களுக்காகப் பயன்படுத்தும் கடமையை மனிதகுலத்திற்கு முன் வைக் கின்றன.

## மூலதனத் திரட்சியும் வேலையில்லாதோரின் படை உருவாதலும்

முதலாளித்துவத்தின் பல முரண்பாடுகள் சமூக மூலதனத் தின் புனருற்பத்தி முறையில் அடங்கியுள்ளன.

முதலாளித்துவத்தில் நடைபெறுவது எளிய புனருற் பத்தியல்ல, மாறாக விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தியா

கும். இது எப்படி நடைபெறுகிறது? கூலித் தொழிலாளர் களால் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பில் ஒரு பகுதியை முதலாளிகள் தம் சொந்த நுகர்விற்காகப் பயன்படுத்து கின்றனர். இன்னொரு பகுதி கூடுதல் இயந்திரங்கள், மூலப்பொருளை வாங்கவும் புதிய ஆட்களை வேலைக் கமர்த்தவும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறாக, இயங்கும் மூலதனத்தின் அளவு அதிகரிக்கிறது, இதன் திரட்சி நடை பெறுகிறது.

மூலதனத் திரட்சியின் அளவின் மீது எக்காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன?

முதலில், உழைப்பாளிகளின் சுரண்டல் மட்டத்தைக் குறிப்பிட வேண்டும். சுரண்டல் மட்டம் எவ்வளவுக்கெவ் வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு அதிக அளவு உபரி மதிப்பு தோற்றுவிக்கப்படும், மூலதனத் திரட்சிக்கான வாய்ப்புகள் அவ்வளவுக்கவ்வளவு விரிவானவை. ஊதியத் தை உழைப்புச் சக்தியின் மதிப்பிற்குக் கீழாகக் குறைத் தும் முதலாளிகள் உபரி மதிப்பு விகிதத்தை அதிகரிக் கின்றனர்.

திரட்சி அளவின் மீது தாக்கம் செலுத்தும் ஒரு முக்கியக் காரணி உழைப்பின் உற்பத்தித் திறனின் அதிகரிப்பாகும். தொழிலாளர்களின் வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் துறைகளில் உழைப்பின் உற்பத்தித் திறனின் அதிகரிப்பு உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைவதற்கு இட்டுச் செல்வதால், அதே அளவு மாறும் மூலதனத்தால் அதிக அளவு ஜீவனுள்ள உழைப்பை இயக்குவிக்க முடி யும், எனவே அதிக உபரி மதிப்பைப் பெற முடியும். மே லும், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதையடுத்து இயந்திரங்கள், உபகரணங்களின் விலைகள் மலிவா கின்றன, இதனால் அதே அளவு பணத்திற்கு நிறைய

இயந்திரங்களை இயக்குவித்து, இவற்றை அதிக செயல் வன்மையோடு பயன்படுத்த முடியும்.

முன்னிடப்பட்ட மூலதனத்தின் அளவும் திரட்சி அளவின் மீது கணிசமான தாக்கம் செலுத்துகிறது. ஏனெனில், ஒரே சுரண்டல் மட்டத்தில், உபரி மதிப்பின் மொத்தமானது ஒரே நேரத்தில் சுரண்டப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது, தொழிலாளர்களின் எண்ணிக்கையோ முதலில், இயங்கும் மூலதனத்தின் அளவையும், அது மாறும் மூலதனம், மாறா மூலதனம் என்று பிரிக்கப் பட்டுள்ளதையும் பொறுத்தது.

மூலதனம் திரளத் திரள, இயந்திரங்கள், பல்வேறு பொருட்கள் ஆகியவற்றிற்கான செலவுகள் கூடும்—அதாவது மாறா மூலதனம் அதிகரிக்கும்; உற்பத்தியில் கூடுதலாக ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்திக்கான செலவுகளும் கூடும்—அதாவது மாறும் மூலதனமும் அதிகரிக்கும். ஆனால் மூலதனத்தின் பொது அளவு அதிகரிக்கும் பொழுது, மாறும் மூலதனத்தை விட மாறா மூலதனத்தின் பங்கு விரைவாகக் கூடும். இது முதலாளிகள் தத்தம் தொழிற்சாலைகளில் புதிய, அதிக உற்பத்தித் திறனுள்ள இயந்திரங்களைப் புகுத்துவதுடன் தொடர்புடையது; கூடுதல் லாபம் பெறும் வேட்கையும் மற்ற முதலாளிகளுடனான போட்டியும் இந்நடவடிக்கைக்கு இவர்களை உந்தித் தள்ளுகின்றன. அதிக நவீனமான தொழில்நுட்பம், உற்பத்தியின் தனிப்பட்ட செலவுகளை சராசரி மட்டத்திற்குக் கீழாகக் குறைத்து, இதன் மூலம் கூடுதல் வருமானம் பெற உதவுகிறது. மேலும், இது போட்டியில் தன் நிலைகளை வலுப்படுத்த முதலாளிக்கு உதவுகிறது. அதிக உற்பத்தித் திறனுள்ள இயந்திரங்களைப் பயன் படுத்துவதானது குறைந்த அளவு தொழிலாளர்களை வைத்து அதே அளவு அல்லது அதிகமான பொருளை உற்

பத்தி செய்ய உதவுகிறது. முதலாளி புதிய இயந்திரங் களைப் புகுத்துகிறான் என்றால் வேலை நீக்கம் கண்டிப் பாக இருக்கும் என்று பல தொழிலாளர்கள் சொந்த அனுபவத்தில் அறிவர்.

இவ்வாறாக, மூலதனத் திரட்சியில் மாறும் மூலதனத் தை விட மாறா மூலதனம் துரிதமான வேகத்தில் அதிகரிக் கிறது. வேலையில் அமர்த்தப்படுபவர்களின் எண்ணிக்கை மாறும் மூலதனத்தின் அளவைப் பொறுத்தது, எனவே இதன் அளவு குறையும் பொழுது பல தொழிலாளர்கள் உற்பத்திக்குத் தேவையற்றவர்களாகின்றனர். குறிப்பாக இது இன்று நன்கு தெரிகிறது. வளர்ச்சியடைந்த முத லாளித்துவ நாடுகளில் முதலாளிகளின் புதிய முதலீடுகளில் பெரும் பகுதி உழைப்பைச் சிக்கனப்படுத்தும் ராபட்டுகள், கம்ப்யூட்டர்கள் போன்றவற்றைப் புகுத்தச் செல்கிறது; இது உழைப்புச் சக்தியிலும் ஊதியத்திலும் சிக்கனத்தைப் புகுத்த இட்டுச் செல்கிறது. இங்கே முதலாளிகள், சாதாரணமாக, பழைய தொழில் நிறுவனங்களைச் சீரமைத்து, இவற்றில் விஞ்ஞானத்தை அதிகம் பயன் படுத்தும் உற்பத்திகளைப் புகுத்துவதுடன் நின்று விடுகின் றனரே தவிர புதிய தொழிற்சலைகளைக் கட்டுவதுமில்லை, புதிய வேலையிடங்களைத் தோற்றுவிப்பதுமில்லை.

மாறும் மூலதனத்துடன் ஒப்பிடும் பொழுது மாறா மூல தனத்தின் விரைவான அதிகரிப்பானது, உழைப்புச் சக்தி யின் தேவை ஒப்பீட்டளவில் குறைவதற்கு இட்டுச் செல் கிறது; அதாவது ''மிகை'' உழைப்புச் சக்தி, வேலையில்லா தோர், ''தொழிற்துறை சேமப் படை'' என்றழைக்கப்படுவது தோன்றுகிறது. இந்த ''மிகை'' உழைப்புச் சக்தியின் தோற்றம் மூலதனத் திரட்சியின் நேரடி விளைவாகும்.

போட்டியின் போக்கில் நொடித்துப் போன சிறு

தொழில் புரிவோர், விவசாயிகள் ஆகியோரும் வேலையில்லாதவர்களாகின்றனர்.

இவ்வாறாகப் பிறந்த **தொழிற்துறை உழைப்பு சேமப் படை** முதலாளித்துவ உற்பத்தியின் விளைவு மட்டுமின்றி அதன் வளர்ச்சிக்கான நிபந்தனையுமாகும். வி. இ. லெனினின் வார்த்தைகளில் சொன்னால் இது "முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கே உரித்தான சொத்தாகும், **இது இல்லாமல் இதனால் நிலவவோ, வளரவோ முடியாது**"*. பொருளாதாரம் புத்துயிர்ப்பு பெற்று சூடு பிடிக்கும் பொழுது முதலாளி இதிலிருந்து புதிய உழைப்புச் சக்தியைப் பெறுகிறான், நெருக்கடிகளின் பொழுது தொழிலாளிகளை வீதிக்குத் தள்ளுகிறான்.

தொழிற்துறை சேமப் படை இருப்பதானது வேலை செய்யும் தொழிலாளர்களை மேன்மேலும் அதிகமாகச் சுரண்ட முதலாளிக்கு வாய்ப்பளிக்கிறது: அவன் வேலை நாளை நீட்டிக்கிறான், உழைப்பின் தீவிரத் தன்மையை அதிகப்படுத்துகிறான், ஊதியத்தைக் குறைக்கிறான். "மிகை" உழைப்புச் சக்தி எப்போதும் அருகிலிருப்பது முதலாளிக்கு ஆதாயமானது. தான் விதிக்கும் நிபந்தனைகளின் படி வேலை செய்யக் கூடியவர்கள் அவனுக்குத் தேவை. தொழிலாளர்கள் கீழ்ப்படிந்தவர்களாக நடக்கவும், அதிக கோரிக்கைகளை முன்வைக்காதிருக்கவும் அவர்கள் வேலையில்லாதோரின் அவலங்களை காண வேண்டுமென்று முதலாளி விரும்புகிறான்.

தொழிற்துறை உழைப்பு சேமப் படை தோன்றி, வளருவதானது முதலாளித்துவத்தில் காணப்படும் ஒரு விசேஷ மக்கள்தொகை விதியாகும். மூலதனத் திரட்சிக்கு வகை செய்யும் தொழிலாளர்கள் அதன் மூலம், ஒப்பீட்டளவில்

* V. I. Lenin, *Collected Works*, vol. 2, Moscow, Progress Publishers, 1973, p. 181.

தம்மை மிகை மக்களாக்கும் சாதனங்களையும் மேன்மேலும் அதிகமாக தோற்றுவிக்கின்றனர் என்கிறது இவ்விதி.

முதலாளித்துவ நாடுகளில் ஒப்பீட்டு உபரி மக்கள் தொகை **மிதக்கும் வகை, மறைந்துள்ள வகை, தேங்கி நிற்கும் வகை** ஆகிய மூன்று வகைகளில் இருக்கலாம்.

உபரி மக்கள்தொகையின் மிதக்கும் வகை—தற்காலிகமாக வேலையிழந்த தொழிலாளர்கள்; இவர்கள் அவ்வப்போது உற்பத்தியில் பங்கேற்பர், அவ்வப்போது வேலையிலிருந்து வெளியே அனுப்பப்படுவர். உற்பத்தி விரிவுபடுத்தப்படும் பொழுதோ, புதிய தொழிற்சாலைகள் திறக்கப்படும் பொழுதோ இவர்கள் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். உற்பத்தி குறைக்கப்படும் பொழுது, புதிய இயந்திரங்கள் புகுத்தப்படும் பொழுது, தொழில் நிறுவனங்கள் மூடப்படும் பொழுது தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர். இந்த வகையில் வயதானவர்களும் அயல்நாட்டு தொழிலாளர்களும் முதலில் பாதிக்கப்படுவர். முதலாளிகள் உழைப்பு சேமப் படையிலிருந்து இளைஞர்களை, உடல்பலம் மிக்கவர்களைத் தேர்ந்தெடுப்பர். 1975—1985இல் சமீபத்தில் பள்ளியை முடித்த இளைஞர்கள் மத்தியிலும் வேலையில்லாத் திண்டாட்டம் உயர்வான மட்டத்தை எட்டியது என்பதை குறிப்பிட வேண்டும்.

உபரி மக்கள்தொகையின் மறைந்துள்ள வகை கிராமப் புறங்களில் விவசாயத் துறையில் அதிகம் காணப்படும். எனவே இதை பல நேரங்களில் விவசாய உபரி மக்கள்தொகை என்கின்றனர். வாழ்க்கை நடத்த வசதியில்லாதவர்கள் கிராமங்களில் பெருமளவில் இருப்பதுதான் இதற்குக் காரணமாகும். இந்த வகையான உபரி மக்கள்தொகையின் சிறப்பு அம்சம் என்னவெனில் விவசாயியால் நடைமுறையில் தன் நிலத்தில் நாள்தோறும் 12 மணி நேரமோ அதற்கும் கூடுதலாகவோ உழைக்க முடியும், ஆனால் தன்

உழைப்பிற்காக அவன் பெறும் கூலி சொற்பமானது. கிராமத்தில் வசிக்கும் அவனுடைய வாழ்க்கை வசதிகள் மேன் மேலும் குறைகின்றன. ஆனால் இந்நிலையில் விவசாயியால் நீண்ட நாள் வாழ முடியாது. அவனால் எந்நேரத்திலும் கூலித் தொழிலாளியாக முடியும். கிராம வாழ்க்கையைத் தாக்குப் பிடிக்க இயலா நிலை வரும் பொழுது அவன் நகரத்திற்குச் செல்கிறான். வளர்முக நாடுகளில், உதாரணமாக ஆப்பிரிக்க நாடுகளில் கிராமப் பகுதிகளில் மிகை உழைப்பு வளங்களின் பங்கு மொத்த உடலுரம் வாய்ந்த மக்களில் 50%—ஏன் சில நாடுகளில் 70%—எட்டுகிறது. பல ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இந்த விவசாய உபரி மக்கள்தொகை மிகப் பெரும் அளவுகளை எட்டியுள்ளது.

உபரி மக்கள்தொகையின் தேங்கி நிற்கும் வகை—பெரிதும் நிலையற்று வேலை செய்பவர்களும், கணிசமான அளவு நேரம் வேலையற்று இருப்பவர்களும் ஆகும். உழைக்கும் வயதையடைந்து, நீண்ட காலமாக வேலையில்லாதவர்கள், ஏழை உதவி நிதிகளின் உதவியைப் பெற்று வாழுபவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், நோய்வாய் பட்டவர்கள், வயது முதிர்ந்தவர்கள் ஆகியோர் இவ் வகையிலடங்குவர்.

வேலையில்லாதோர் படை என்பது முதலாளித்துவத்தின் தவிர்க்க இயலா விளைவாகும். முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் செல்லும் வளர்முக நாடுகளில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை பல கோடிகளை விஞ்சுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் உள்ள ஒரு சமூகக் கொடுமையாகும். 1960இல் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் அதிகாரப்பூர்வமான தகவல்களின்படி சுமார் 8 மில்லியன் பேர் வேலையற்று இருந்

தனர்; இந்த எண்ணிக்கை 1970ஆம் ஆண்டுகளின் நடுப் பகுதியில் 15 மில்லியனாயும், 1980இல் 25 மில்லியனாயும், 1985இல் 30 மில்லியனுக்கும் கூடுதலாயுமிருந்தது.

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஒரு பெரும் சமூகக் கொடுமையாகும். வேலையில்லாமல் தவிக்கும் கோடானு கோடி மக்களின் இன்னல்களை எந்த ஒரு புள்ளி விவரத்தாலும் விளக்க முடியாது. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஏழ்மை, பணமின்மையுடன் முடிந்து விடுவதில்லை; வேலையில்லை என்றால் பயங்கரமான, இழிவுகரமான வேதனைகளை அனுபவிக்க வேண்டும், சமுதாயத்தின் பொருளாதார, அரசியல் வாழ்க்கையிலிருந்து வெளி தள்ளப்படுவார்கள் என்று இதற்குப் பொருள். வேலையில்லை என்றால் சாதாரண மானுட மேன்மைக்கே பங்கமேற்படும், ஒன்றும் செய்ய இயலா நிலையில் இருக்க வேண்டும் என்று பொருள்படும். வேலையில்லாதோர் படும் வேதனைகள் பயங்கரமானவை. எப்போதுமே வேலை கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் நீண்ட நேரம் காத்துக்கிடப்பது, வீடுகளிலிருந்து வெளியேற்றப்படுவது, சொத்துகள் ஏலம் விடப்படுவது, தவணை முறையில் வாங்கிய பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவது, மிக அத்தியாவசியமான பொருட்கள் கூட மறுக்கப்படுவது, பட்டினி, வீடின்மை, தற்கொலை ஆகிய எல்லாமே இப்பயங்கரங்களில் அடங்கும். வேலையில்லாமை மனிதர்களின் மனநிலையைப் பாதிக்கும், குடிப் பழக்கத்தை அதிகரிக்கும், நரம்புத் தளர்ச்சிகளை ஏற்படுத்தும், குடும்பங்களை முறிக்கும், தார்மீகச் சீர்கேடுகளுக்கு வழிவகுக்கும்.

## முதலாளித்துவத் திரட்சியின் சர்வபொது விதி

பூர்ஷ்வா சமுதாயத்தின் ஒரு துருவத்தில்—முதலாளி களின் பக்கத்தில்—செல்வமும் ஆடம்பரமும் கேளிக்கை கூத்துகளும் பெருகுவதானது தவிர்க்க இயலாதவாறு மறு துருவத்தில் கட்டாய உழைப்பின் கொடுமைகளை அதிகரிக் கிறது, பாட்டாளிகளின் எண்ணிக்கையைப் பெருக்குகிறது, வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கிறது, உழைப் பாளிகளின் நிலைமையை மோசமடையச் செய்கிறது. கா. மார்க்ஸ் இந்த விதியை—முதலாளித்துவத் திரட்சியின் சர்வ பொது விதியை—கண்டுபிடித்துக் கூறினார்: ''சமூகச் செல் வம், இயங்கும் மூலதனம், இதன் அதிகரிப்பு அளவுகள் மற்றும் ஆற்றல் ஆகியவை எவ்வளவுக்கெவ்வளவு அதிக மோ, எனவே பாட்டாளி வர்க்கத்தின் முழுமுதல் எண் ணிக்கையும் அதனுடைய உழைப்பின் உற்பத்திச் சக்தியின் அளவும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, அவ் வளவுக்கவ்வளவு தொழிற்துறை சேமப் படையும் அதி கம்.... ஆனால் வேலை செய்யும் தொழிலாளர்களுடன் ஒப் பிடும் பொழுது இந்த சேமப் படை எவ்வளவுக்கெவ்வளவு பெரியதோ நிரந்தர மிகை மக்கள்தொகை அவ்வளவுக்கவ் வளவு பரவலானதாக இருக்கும், இந்த மிகை மக்கள்தொ கையின் வறுமை வேலை செய்யும் தொழிலாளர் திரளி னரின் உழைப்பு வேதனைகளுடன் நேர் விகிதத்திலிருக் கும். இறுதியாக, தொழிலாளி வர்க்கத்தில் வறுமையில் வாடும் பிரிவினரும் தொழிற்துறை சேமப் படையும் எவ் வளவுக்கெவ்வளவு அதிகமோ அதிகாரப் பூர்வமான நொடிப்பு அவ்வளவுக்கவ்வளவு அதிகமானதாயிருக் கும். **இது தான் முதலாளித்துவத் திரட்சியின் முழு முதல், சர்வபொது விதியாகும்.**''*

* K. Marx, *Capital,* vol. 1, p. 603.

முதலாளித்துவத் திரட்சியின் சர்வபொது விதி முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியாகிய உபரி மதிப்பு விதியுடன் நெருக்கமாகத் தொடர்புடையது. முதல் விதி இரண்டாவதால்தான் நிர்ணயிக்கப்படுகிறது. உபரி மதிப்பை, லாபத்தைப் பெருக்க வேண்டுமென்ற நாட்டம்தான் மூலதனத் திரட்சியை அதிகப்படுத்தவும் முதலாளி வர்க்கத்தின் செல்வத்தைப் பெருக்கவும் இட்டுச் செல்கிறது. முதலாளிகளிடம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகச் செல்வம் திரண்டுள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு வேலையில்லாதோர் படை பெரியதாயிருக்கும், உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிகம் சுரண்டப்படுவர், பாட்டாளிகளின் நிலை மோசமானதாயிருக்கும்.

முதலாளி வர்க்கம் பெரும் செல்வத்தைத் தன் கரங்களில் குவித்து வைத்துள்ளது. உதாரணமாக, பிரிட்டனில் 1% மக்கள் நாட்டின் தனிநபர் சொத்தில் 25%யும், 5% மக்கள் 50%யும் வைத்திருக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1% பணக்காரர்கள் தேசிய சொத்தில் $^1/_3$ பங்கை வைத்திருக்கின்றனர். அமெரிக்க கோடீஸ்வரர் வான்டெர் பில்ட்சிடம் உள்ள மாளிகையில் 250 அறைகள் உள்ளன, இம்மாளிகையின் மதிப்பு 60 மில்லியன் டாலர்களாகும். பல முதலாளிகளிடம் சொந்த விமானங்கள், கப்பல்கள், எண்ணற்ற ஆடம்பர கார்கள், அழகிய ஓய்விடங்களில் ஏராளமான மாளிகைகள் உள்ளன.

முதலாளித்துவ சமுதாயத்தின் மறு துருவத்தில் பாட்டாளி வர்க்கம் இருக்கிறது. முதலாளித்துவம் வளர வளர இதனுடைய நிலை ஒப்பீட்டளவிலும், நடைமுறையிலும் கீழடைகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் நிலை, முதலாளி வர்க்கத்தின் நிலையுடன் ஒப்பிடும் பொழுது மோசமடைகிறது. "...சமூகச் செல்வம் எந்த அளவிற்கு அதிகரிக்கிறதோ, அதாவது

மூலதனத் திரட்சி நடைபெறுகிறதோ அந்த அளவிற்கு தொழிலாளியின் நிலை ஒட்பீட்டளவில் **கீழடைகிறது**'' என்றார் கா. மார்க்ஸ்.* மொத்த சமூக உற்பத்திப் பொருளிலும் தேசிய வருமானத்திலும் தேசிய செல்வத்திலும் தொழிலாளர்களின் பங்கு குறைவது பாட்டாளி வர்க்கத்தின் நிலை ஒப்பீட்டளவில் கீழடைதலுக்கான அறிகுறியாகும். ஊதியத்திற்கும் லாபத்திற்கும் இடையிலான விகிதம் தொழிலாளி வர்க்கத்திற்குப் பாதகமாக, முதலாளிகளுக்குச் சாதகமாக மாறுவதிலும் இது வெளிப்படுகிறது. உதாரணமாக, 1970ஆம் ஆண்டுகளின் இரண்டாவது பாதியுடன் ஒப்பிடும் பொழுது, 1980ஆம் ஆண்டுகளின் இரண்டாவது பாதியில் தொழிலாளர்களின் உண்மை ஊதியம் கிட்டத்தட்ட 20% குறைந்தது, அமெரிக்க கார்ப்பரேஷன்களின் உண்மை லாபமோ (வரி செலுத்திய பின்) இதே காலகட்டத்தில் 50% அதிகரித்தது.

முதலாளித்துவத் திரட்சியின் சர்வபொது விதி உழைப்பாளிகளின் நிலை நடைமுறையில் கீழடையவும் இட்டுச் செல்கிறது. இது ''பொருளாதார எழ்மையின்'' அதிகரிப்பிலும் ''சமூகப் பொருளிலான எழ்மையின்'' அதிகரிப்பிலும் வெளிப்படுகிறது.

''பொருளாதார எழ்மை'' என்பது மக்கள் திரளினருக்குப் போதுமான உணவின்மை, சில நேரங்களில் பட்டினி, மோசமான வீட்டு வசதிகள், ஆடைகள், மற்ற அன்றாட வீட்டுப் பொருட்களின் குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மட்டான வாய்ப்புகள், அதிகமான மரண விகிதம் ஆகியவற்றைக் குறிக்கும். மூலதனம் கோலோச்சும் நாடுகளில் ஏராளமானோர் ஒரு கவளச் சோற்றிற்காக அலைகின்றனர். வளர்முக நாடுகளில் 800 மில்லியனுக்கும் மேலா

* K. Marx, *Theories of Surplus Value,* Part III, Moscow, Progress Publishers, 1975, p. 335.

னோர் முழு ஏழ்மையில் வாடுகின்றனர், மிக அத்தியாவ சிய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூட இவர் களுக்கு வாய்ப்பில்லை. இத்தகைய ஏழைகளின் எண்ணிக் கை 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1.2 பில்லியன் வரை உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. பட்டினியால் வளர்முக நாடுகளில் ஆண்டுதோறும் 15 மில்லியன் குழந் தைகள் உட்பட சுமார் 50 மில்லியன் பேர் இறக்கின்றனர். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் வயது வந்த மக்கள் தொகையில் 700—800 மில்லியன் பேர் கல்வியறிவற்றவர்கள், 1.5 பில்லியன் பேருக்கு சாதா ரண மருத்துவ வசதி கூட கிட்டுவதில்லை.

முதலாளித்துவத்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை நடைமுறையில் கீழடைதலானது தொழிற்துறை உழைப்பு சேமப் படை, வேலையில்லாதோர் படை அதிகரிப்பதுடனும் உண்மை ஊதியம் குறைவதுடனும் தொடர்புடையது. வீட்டு வாடகை அதிகரிப்பு, மருத்துவ கட்டண உயர்வு போன்ற வற்றிலும் இது வெளிப்படுகிறது. தொழிலாளர்கள் மிகக் கடுமையாக உழைக்கின்றனர், காயங்கள் படுவது அதிகரிக் கிறது, பல்வேறு தொழில் நோய்கள் பெருகுகின்றன, இவற்றால் தொழிலாளிகளுக்கு ஈடுசெய்ய முடியா இழப்பு ஏற்படுகிறது. எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் உற் பத்தியில் தொழிலாளர்களின் அயர்ச்சியோடு தொடர்புடைய விபத்துகளின் எண்ணிக்கை கூடி வருகிறது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 5 மில் லியன் இத்தகைய விபத்துகளும் ஜெர்மன் சமஷ்டிக் குடிய ரசில் 2 மில்லியன் விபத்துகளும் பிரான்சிலும் இத்தாலி யிலும் 1 மில்லியனுக்கும் கூடுதலான விபத்துகளும் ஏற் படுகின்றன. முதலாளிகளுக்கு லாபம் சம்பாதித்துத் தரு வதற்காகத் தொழிலாளி வர்க்கம் தரும் விலை இப்படிப் பட்டதுதான்.

வீட்டு வாடகை அளவிற்கதிகமாக இருப்பதால் பல தொழிலாளர் குடும்பங்கள் வசிப்பதற்கே இயலாத சிறு பொந்துகள், பாதாள அறைகள், சேரிகளில் வசிக்கின்றன. பெரும் அமெரிக்க நகரங்களில் சேரிகளின் பரப்பு மொத்த வசிப்பிடத்தில் $^1/_5$ பங்காகும். இச்சேரிகள் புற்றுநோயைப் போல் பெருகி வருகின்றன. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் வாழுவதற்கே லாயக்கற்ற இத்தகைய இடங்களில் வசிப்பவர்களின் எண்ணிக்கை நகர மக்கள் தொகையில் 25—30% ஆகும். பிரிட்டனில் உள்ள வீடுகளில் பெரும்பாலானவை குளிர்காலத்தில் வசிப்பதற்குக் கடினமானவை, இவற்றில் கணப்பு வசதிகள் கிடையாது. ***Morning Star*** பத்திரிகை தரும் தகவல்களின்படி, பிரிட்டனில் ஆண்டுதோறும் கடுங்குளிரால் சுமார் 40,000 பேர் இறக்கின்றனர், இவர்களில் 85% 65 வயது, அதற்கு மேலான வயதையடைந்தவர்கள். இது முதலாளித்துவ உலகின் செல்வம் மிக்க நாடுகளில் ஒன்றாகிய பிரிட்டனுக்கு வெட்கக் கேடான விஷயமாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் வீட்டு வசதி உட்பட சமூக நல நோக்கங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை இடையறாமல் குறைத்து வருகிறது. "சமூகப் பொருளிலான ஏழ்மை" என்பது உயர்ந்து வரும் தேவை மட்டத்திற்கும் உழைப்பாளிகள் வாழ்க்கை நலன்களை உண்மையில் நுகரும் அளவிற்கும் இடையில் அதிகரித்து வரும் பொருத்தமின்மையைக் குறிக்கிறது.

ஏராளமான தொழிலாளர்களின் வாழ்க்கை மட்டம்—செல்வம் கொழிக்கும் முதலாளித்துவ நாடுகளில் கூட—வாழ்க்கைப் பிழைப்புக்கே போதுமான குறைந்தபட்ச அளவிற்கு (அதிகார பூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு) கீழ் உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் 15% மக்கள் அதிகார பூர்வமான வறுமைக் கோட்டிற்குக் கீழ்

உள்ளனர். ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளில் இந்த எண்ணிக்கை 30 மில்லியனுக்கும் அதிகமாகும்.

முதலாளித்துவத் திரட்சியின் சர்வபொது விதியின் செயற்பாடு வர்க்கச் சக்திகள் துருவமயப்படுவதற்குத் தவிர்க்க இயலாதவாறு இட்டுச் செல்கிறது, கடுமையான வர்க்க மற்றும் சமூக பகை முரண்பாடுகளுக்கு வழியமைக்கிறது. ஒரு துருவத்தில் சுரண்டலாளர்கள் இருக்கின்றனர், உபரி மதிப்பை விழுங்கி ஏப்பம் விட்டு வாழும் இவர்கள் லாபத்திற்காக எதையும் செய்யத் தயார். மறு துருவத்தில் சுரண்டப்படுபவர்கள் இருக்கின்றனர்; கூலி வழங்கப்படா இவர்களுடைய உழைப்பும் வியர்வையும் கண்ணீரும் இரத்தமும்தான் சுரண்டலாளர்களுக்குப் பணத்தைக் கொண்டுவந்து தருகின்றன. சுரண்டுபவர்கள் எண்ணிக்கை ரீதியில் சிறுபான்மையினர், சுரண்டப்படுபவர்களோ மிக பெரும்பான்மையினர். இவர்களின் அக்கறைகள், நலன்கள் சமரசப்படுத்த இயலாதவை, இவர்களுக்கு இடையிலான போராட்டம் தவிர்க்க இயலாதது.

### வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும்

முதலாளித்துவ நாடுகளில் சமூகக் கட்டமைவு பெரிதும் பன்முகமயமானது.

ஒன்றுடன் ஒன்று பகை முரண்பாட்டு உறவுகளைக் கொண்டுள்ள முக்கிய வர்க்கங்களாகிய முதலாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் என்ற இரண்டு வர்க்கங்களோடு கூட இங்கே நிலவுடைமையாளர்கள், சுயமாக விவசாயம் புரியும் விவசாயிகள், இன்னும் பல்வேறு பிரிவினர் ஆகியோர் உள்ளனர். வர்க்கங்களுக்கு உள்ளேயும் தனித்தனி குழுக்கள் நிலவுகின்றன. உதாரணமாக, முதலாளி வர்க்கத்தின் உள்ளே பெரும் முதலாளிகளும் (பெரும் தொழிற்

சாலைகள், பல்பொருள் அங்காடிகள், வங்கிகளை வைத் திருப்பவர்கள்), சிறு முதலாளிகளும் (சிறு வியாபாரிகள், ஒரு சிலரை வேலைக்கு அமர்த்தியிருக்கும் பண்ணைக் காரர்கள் போன்றோர்) இருக்கின்றனர். எண்ணிக்கையில் கணிசமான அறிவுத்துறையினரும் தம் உள்ளடக்கத்தில் வெவ்வேறானவர்களாவர். மூளையுழைப்பில் ஈடுபட்டுள்ள வர்களைத்தான் அறிவுத்துறையினர் என்கிறோம். வழக் குரைஞர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலர் கள், தொழில்நுட்ப பணியாளர்கள் போன்றோர் இவர்களில் அடங்குவர். அறிவுத்துறையினரில் பெரும் பகுதியினர் முதலாளிகளிடம் ஊதியத்திற்கு வேலை செய்கின்றனர்.

முதலாளித்துவம் வளர வளர தொழிலாளி வர்க்கத் தின் எண்ணிக்கை கூடுகிறது. அதே நேரத்தில் இதன் பண்பு ரீதியான உள்ளடக்கம் மாறுகிறது, தேர்ச்சித் திற னும் கல்வி மட்டமும் உயருகின்றன, வாழ்க்கை முறை யிலும் ஆன்மீகத் துறையிலும் மாற்றங்கள் நடைபெறுகின் றன. நவீன கூலித் தொழிலாளி, சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்த பாட்டாளியிடமிருந்து கணிசமாக வேறுபடு கிறான்.

இன்று ஏதோ தொழிலாளி வர்க்கம் ''மறைந்து வரு கிறது'', சமுதாயத்தின் பிற பிரிவுகளில் ''கரைந்து வரு கிறது'' என்ற தத்துவங்கள் ஒரு சில வளர்ச்சியடைந்த முத லாளித்துவ நாடுகளில் பரவி வருகின்றன. கூலி பெறும் வேலையாட்களின் மத்தியில் பொறியியலர்கள், விஞ்ஞானி கள், சேவைத் துறையினர், நிர்வாகப் பிரிவினரின் எண் ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளதானது இத் தகைய தத்துவங்களுக்கான முக்கிய வாதமாகக் கூறப்படு கிறது. ஆனால் உண்மையில் இது கூலித் தொழிலாளி களின் வர்க்கம் மறைந்து விட்டதைக் குறிக்கவில்லை, மாறாக முதலாளிகளுக்குத் தம் உழைப்புச் சக்தியை விற்ப

வர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைத்தான் இது காட்டுகிறது. இன்று ''பாட்டாளி'' என்ற கருத்தமைப்பே விரிவடைந்துள்ளது.

ஆலைகள், தொழிற்சாலைகள், விவசாயப் பண்ணைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மட்டுமின்றி முதலாளிகளிடம் வேலைக்கமரும் சாதாரண பொறியியல் தொழில்நுட்பப் பணியாளர்களும் நவீன பாட்டாளி வர்க்கத்தின் கீழ் வருவர். இவர்களும் தம் உழைப்புச் சக்தியை முதலாளிக்கு விற்று உபரி மதிப்பைத் தோற்றுவிக்கின்றனர். அலுவலக மற்றும் வியாபாரத் துறை பணியாளர்களில் கீழ்மட்டத்தினரும் நடுமட்டத்தினரும் கூலித் தொழிலாளர் பட்டியலில் அடங்குவர். இவ்வாறாக, நவீன தொழிலாளி வர்க்கம் என்பது பல அடுக்குகளை உடைய ஒரு சமூக உறுப்பாகும், இதன் உள்ளடக்கம் சிக்கலாகி, சமூக அடித்தளம் விரிவடைந்து வருவதானது இவ்வர்க்கம் ''மறைந்து வருவதைக்'' குறிக்கவில்லை, மாறாக இது இடையறாது வளர்ந்து வருவதைத்தான் காட்டுகிறது.

முதலாளித்துவ சமுதாயத்தில் கடும் சமூக முரண்பாடுகள் நிலவுகின்றன, ஏனெனில் பல்வேறு சமூகக் குழுக்கள், வர்க்கங்களின் நலன்களும் நாட்டங்களும் கடுமையாக வேறுபடுகின்றன, பல நேரங்களில் நேரெதிரானவையாக இருக்கின்றன. உதாரணமாக, முதலாளிகள் கூலித் தொழிலாளர்களைச் சுரண்டி லாபம் சேர்க்கும் முறைகள் அப்படியே பேணிக் காக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். பாட்டாளிகளோ இம்முறைகளை அகற்றி கூலியடிமை முறைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று விரும்புகின்றனர். தனிப்பட்ட உற்பத்தியாளர்களும் குட்டி முதலாளி வர்க்கத்தினரும் பெரும் மூலதனத்தின் நிர்ப்பந்தத்தால் அவதியுறுகின்றனர்; இது அவர்களை மேன்மேலும் திவாலடையச் செய்வதால், இதற்கெதிராகக் குரல்

எழுப்புகின்றனர். இன்று முதலாளித்துவ சமுதாயத்தில் மிகப் பெரும்பான்மையினரின் நலன்கள் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த நிதி மற்றும் தொழிற்துறை மேல்மட்டத்தினரின் நலன்களுடன் கடுமையாக முரண்படுகின்றன; இம் மேல்மட்டத்தின் ஒடுக்குமுறையை எல்லா வர்க்கங்கள், சமூகக் குழுக்களும் தாமே உணருகின்றன.

பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடுதான் முதலாளித்துவ சமுதாயத்தின் முக்கிய வர்க்க பகை முரண்பாடாகும். இவற்றின் நலன்கள் ஒன்றிற்கொன்று நேரெதிரானவை. எனவேதான் இவற்றின் பரஸ்பர உறவுகள் கடும் போராட்ட வடிவத்தை மேற்கொள்கின்றன. பூர்ஷ்வா சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கத்தின் உரிமையற்ற நிலையும், தொழிலாளர்கள் அனுபவிக்கும் ஒடுக்குமுறையும் இழிகேடுகளும் இவர்களை வர்க்கப் போராட்டத்திற்குத் தள்ளுகின்றன. நவீன பாட்டாளி வர்க்கம் ஒரு போராடும் வர்க்கமாகும், மூலதனத்திற்கு எதிரான போராட்டத்தில் இதற்குக் கணிசமான அனுபவம் இருக்கிறது. முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள் மேன்மேலும் உறுதியானவையாக, ஒழுங்கமைக்கப்பட்டவையாக மாறி வருகின்றன. தொழிலாளி வர்க்கம்தான் புரட்சிப் போராட்டத்தின், ஜனநாயக இயக்கம் முழுவதன் முக்கிய உந்து சக்தி, அணிதிரட்டும் காரணியாகும்.

தொழிலாளர்களின் எந்த ஒரு அதிருப்தியையும் அடக்கியொடுக்க முதலாளி வர்க்கம் போலீஸ், இராணுவம், நீதிமன்றம், சிறைகள் உள்ளிட்ட சகலவிதச் சாதனங்களையும் பயன்படுத்துகிறது. முன்னர் தொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தாலோ, உதவி கோரினாலோ அவர்களைத் தூக்கிலிட்டனர், சுட்டுக் கொன்றனர். இம்முறைகள் இன்றும்



8—1165

முதலாளித்துவ நாடுகளில் பயன்படுத்தப்பட்டாலும் இன்று இங்கே அதிக ''மனிதாபிமானம்'' உள்ள முறைகள் அடிக் கடிப் பயன்படுத்தப்படுகின்றன. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வன்முறையைக் கையாண்டு கலைப்பது, பெருமளவிலான போலீஸ் அடக்குமுறைகள், பெரும் அபராதங்கள், சிறை தண்டனை, ''வேண்டாதோர் பட்டியலில்'' சேர்ப்பது, தனிப் பட்ட முறையில் தொண்டர்களை மிரட்டி, அச்சுறுத்துவது ஆகியவை இப்புது முறைகளாகும்; என்றாலும் இதனால் சாராம்சம் மாறவில்லை. ஒடுக்குபவர்களுக்கும் ஒடுக்கப்படுப வர்களுக்கும் இடையில் வர்க்க சமரசத்திற்கே இடமில்லை. எந்த ஒரு முதலாளித்துவ நாடும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து நிற்கிறது: ஒரு புறம் உழைப்பவர்களும், மறு புறம் பயனை அனுபவிப்பவர்களும் இருக்கின்றனர்.

முதலாளிகளுக்கு எதிராகப் பாட்டாளிகள் நடத்தும் வர்க்கப் போராட்டம் பூர்ஷ்வா சமுதாய வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் ஆட்கொள்கிறது.

தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் முக்கிய வடிவங் களில் ஒன்று **பொருளாதாரப் போராட்டமாகும்.** வேலை தரக் கோரியும், வேலை நீக்கங்களுக்கு எதிர்ப்பு தெரி வித்தும், வேலைச் சூழலை மேம்படுத்தக் கோரியும், ஊதிய உயர்வைக் கோரியும் இப்போராட்டம் நடைபெறுகிறது. பொருளாதார வேலைநிறுத்தங்கள்தான், தொழிலாளர் களைத் தீவிர வர்க்கப் போராட்டத்தினுள் கொண்டுவரும் முதல் படியாகும். இவ்வேலைநிறுத்தங்கள், தனிப்பட்ட தொழிற்சாலைகளிலோ, ஒரு துறை முழுவதிலுமோ அல் லது நாடு தழுவிய அளவிலோ நடைபெறலாம்.

இவ்வேலைநிறுத்தங்கள் ஒரு மணி நேரமோ, ஒரு நாள் பூராவுமோ, ஒரு சில நாட்கள் தொடர்ந்தாற்போலோ நடை பெறலாம். ஒரு சில நாடுகளில்—உதாரணமாக, ஜப் பானில்—தொழிலாளி வர்க்கம் ஒவ்வொரு வசந்தத்திலும்

“வசந்தகால” வெகுஜன போராட்டங்களையும், ஒவ்வொரு இலையுதிர்காலத்திலும் “இலையுதிர்க்கால” வெகுஜன போராட்டங்களையும் நடத்துகிறது. இத்தருணத்தில் பல்வேறு தொழிற்துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் பொது வேலைநிறுத்தமும் நடைபெறுகிறது. பெரிய கம்பெனிகிளில் சில சமயம் எல்லாத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்வதில்லை, “முக்கிய” அங்கத்தைச் சேர்ந்த—மற்ற தொழிற்சாலைகளிலிருந்து வரும் பகுதிகள் இங்குதான் இறுதியாக ஒன்றுசேர்க்கப்படும்—தொழிலாளர்கள் மட்டும் வேலைநிறுத்தம் செய்வதுண்டு. இப்படிப்பட்ட வேலைநிறுத்தம் கம்பெனி முழுவதன் நடவடிக்கையையும் பாதிக்கும், மற்ற பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் பொருளாயத உதவி கிட்டினால் இப்படிப்பட்ட வேலைநிறுத்தங்கள் நீண்ட நாட்கள் தொடரும். வேலைநிறுத்தங்கள் “படிப்படியானவையாக” இருக்கக் கூடும், இங்கே நிர்ப்பந்தம் படிப்படியாக அதிகரிக்கப்படும், அதாவது முதலில் குறிப்பிட்ட ஒரு சில பிரிவுகளோ தொழிற்சாலைகளோ வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கும், மற்றவை பின்னர் சேர்ந்து கொள்ளும். சில நேரங்களில் தொழிலாளர்கள் எச்சரிக்கை, அடையாள வேலைநிறுத்தங்களைச் செய்வதுண்டு. வேலைநிறுத்தங்களின் போது கருங்காலிகள் வேலைக்குச் செல்லாமல் தடுப்பதற்காக வேலைநிறுத்தம் செய்வோர் தத்தம் தொழிற்சாலைகளை கேரோ செய்வதுண்டு.

1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில், 1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தொழிற்துறை ரீதியில் வளர்ச்சியடைந்த எல்லா முதலாளித்துவ நாடுகளையும் ஆட்கொண்ட பொருளாதார நெருக்கடிகள், பெருமளவிலான வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், விலையேற்றங்கள், தொழிலாளர்களைச் சுரண்டுவது அதிகரிக்கப்பட்

டது ஆகியவை பல புது வர்க்கப் போராட்டங்கள் வெடிக்க வழியமைத்தன. தொழிற்சாலைகள் மூடப்படுவது, பெரு மளவிலான ஆட்குறைப்பு ஆகியவற்றிற்கு இப்போராட்டங் கள் எதிர்ப்பு தெரிவித்தன.

வேலைநீக்க அபாயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தோ, வேலைநீக்கத்திற்குப் பதிலளிக்கும் முகமாகவோ வெகு ஜனப் போராட்டங்கள் சமீப ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் கிட்டத்தட்ட அனைத்திலும் நடந் துள்ளன. வேலை வாய்ப்பளிக்கக் கோரும் போராட்டங்கள் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெருமளவில் நடக்கின்றன.

தொழிற்சங்கங்களில் அணிதிரண்டுள்ள தொழிலாளர்கள் தான் பொருளாதாரப் போராட்டத்தை மிகத் தீவிரமாக நடத்துகின்றனர். பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தை வளர்ப்பதிலும், அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதி லும் தொழிற்சங்கங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

தொழிற்சங்கங்களில் அணிதிரண்டுள்ள தொழிலாளர் களின் ஒற்றுமைதான் பாட்டாளி வர்க்கம் நடத்தும் பொரு ளாதாரப் போராட்டத்தின் வெற்றிக்கான அடிப்படையாகும். ஆனால் சந்தர்ப்பவாத மனநிலையை உடைய ஒரு சில தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிற்சங்க இயக்கத்தில் ஒற்றுமை ஏற்பட பெரும் தடையாக உள்ளனர். இது பெரும் மூலதனத்திற்குத்தான் உதவும்; முதலாளிகள் தொழிற் சங்கங்கள் தமக்கு ஏற்றபடி இயங்குமாறு செய்ய முயலு கின்றனர், தொழிற்சங்க உரிமைகளை மட்டுப்படுத்தும் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றனர், தொழிற்சங்கம் வளர விடாமல் செய்கின்றனர்.

முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் பொரு ளாதாரப் போராட்டத்தோடு கூட தீவிர **அரசியல் போராட் டத்தையும்** நடத்துகிறது. பல நேரங்களில் இந்த இரண்டு

போராட்டங்களும் பின்னிப் பிணைந்திருக்கும். உழைப்பாளி களின் பெரும் பொருளாதாரப் போராட்டங்கள் பல நேரங் களில் அரசியல் தன்மையைப் பெற்று, முதலாளித்துவ அமைப்பிற்குத்தான் எதிராக நிற்பதுண்டு.

தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபனங்கள், முதலாவ தாக தொழிலாளர் அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங் களும் நாடு தழுவிய அரசியல் போராட்டங்களை நடத்துகின் றன, பொதுக் கூட்டங்களை நடத்துகின்றன, ஸ்தல ஆட்சி உறுப்புகள், மற்ற ஆட்சி உறுப்புகளுக்கான தேர்தல்களில் பங்கேற்கின்றன, ஆயுதப் போட்டி, இராணுவமயப்படுத்த லுக்கு எதிராயும், சமாதானத்தைப் பலப்படுத்துவதற்காக வும், உழைப்பாளிகள் வென்று பெற்ற ஜனநாயக உரிமை கள், சுதந்திரங்களைப் பேணிக் காப்பதற்காகவும் மேன்மே லும் தீவிரமாகப் போராடுகின்றன.

தொழிலாளி வர்க்கத்தின் **சித்தாந்தப் போராட்டம்** என் பது முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தச் செல்வாக்கை முழுமையாக அகற்றவும், தொழிலாளர்களைப் பழைய உலகின் மூடநம்பிக்கைகள், தவறான பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்களிலிருந்து விடுவிக்கவும் பாட்டாளிகளின் வர்க்க நலன்களைப் பிரதிபலிக்கும் கருத்துகள், கண் ணோட்டங்களின் போராட்டமாகும்.

கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தொழிலாளர் கட்சிகளும்தான் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ச்சியாகப் போராடும் சக்திகளாகும். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி யில் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் ''கம்யூனிஸ்டுகள் சங் கம்'' என்ற முதல் சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஸ்தாபனத் தைத் தோற்றுவித்ததிலிருந்து இன்று வரை கம்யூனிஸ்டு இயக்கம் பெரும் பாதையைக் கடந்து வந்துள்ளது.

1864இல் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் தோற்றுவித்த முதலாவது அகிலமும்—சர்வதேசத் தொழிலாளர் சங்

கம்—பின்னால் வி. இ. லெனின் தோற்றுவித்த கம்யூனிஸ்டு அகிலமும் (1919) கம்யூனிஸ்டு இயக்கம் தோன்றி, வளர்ந்ததில் பெரும் பங்காற்றின.

தொழிலாளி வர்க்கத்தின் லட்சியத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் சுரண்டலமைப்பிற்கு எதிராயும், சமாதானம், ஜனநாயகம், தேசிய சுதந்திரம், சோஷலிசத்திற்காகவும் நடைபெறும் போராட்டத்தில் முன்னணியில் நிற்கின்றன. ஒரு சில நாடுகளில் இவை பலம் மிக்க அரசியல் சக்தியாகத் திகழுகின்றன, இது அந்தந்த நாடுகளின் உள்நாட்டு அரசியல் மீது பெரும் தாக்கம் செலுத்துகிறது. உதாரணமாக, பிரான்சிலும் இத்தாலியிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தேர்தல்களில் கோடானுகோடி வாக்குகளைப் பெறுகின்றன, நாடாளுமன்ற இடங்களைப் பிடிக்கின்றன. சோஷலிசம் நிலவாத நாடுகளில் இன்று கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு ஆதரவாக 40 மில்லியனுக்கும் மேற்பட்டோர் வாக்களிக்கின்றனர். 25 முதலாளித்துவ நாடுகளின் உயர் சட்டமியற்றும் உறுப்புகளில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கான கம்யூனிஸ்டுகள் எல்லா மட்டங்களிலும் உள்ள நகராட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தொழிற்சங்கங்கள், இளைஞர் ஸ்தாபனங்கள், மற்ற சமூக அமைப்புகளில் கம்யூனிஸ்டுகள் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

முற்போக்கு, ஜனநாயக இயக்கங்களில் பிளவை ஏற்படுத்தவும், இராணுவவெறியைத் தூண்டவும், முதலாளி வர்க்கத்திற்கு எதிரான பல்லாண்டுப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் வென்று பெற்ற உரிமைகளையும் சுதந்திரங்களையும் பறிக்கவும் பிற்போக்கு செய்யும் முயற்சிகளுக்கு எதிரான போராட்ட அணியை விரிவுபடுத்துவது தான் இன்று தம்முடைய முக்கியக் கடமைகளில் ஒன்றாகும்

என்று கம்யூனிஸ்டுக் கட்சிகள் கருதுகின்றன. உழைப்பாளி களின் ஜீவாதார நலன்களைப் பாதுகாக்கவும், பெரும் மூலதனத்தின் நிர்ப்பந்தத்தை முறியடிக்கவும் நடக்கும் போராட்டத்தில் சமாதானம், ஜனநாயகம், சமூக முன் னேற்றம் ஆகியவற்றின் ஆதரவாளர்களை அணிதிரட்ட கம்யூனிஸ்டுக் கட்சிகள் பாடுபடுகின்றன; சமுதாயத்தை சோஷலிச அடிப்படையில் மாற்றியமைப்பதுதான் தொழி லாளி வர்க்கப் போராட்டத்தின் இறுதி லட்சியம் என்று முன்மொழிகின்றன.

பரவலான ஜனநாயகச் சங்கங்களைத் தோற்றுவிக்கும் பொழுது ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும் அந்தந்த நாட்டின் திட்டவட்டமான சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு செயல்படுகிறது. தொழிலாளி வர்க்க ஒற்றுமையை ஏற்படுத்துவது, பல்வேறு காரணங்களால் இதுவரை தீவிர வர்க்கப் போராட்டத்தில் கலந்து கொள்ளாமலிருந்த உழைப் பாளிகளை அரசியல் போராட்டத்தில் ஈடுபடுத்துவது என் பதுதான் முக்கியக் கடமையாக முன்வைக்கப்படுகிறது. ஒரு சில நாடுகளில் அரசு நிர்வாகத்தில் கம்யூனிஸ்டுகள் பங் கேற்பதற்கான உண்மையான வாய்ப்பு தோன்றியுள்ளது, இதுதான் அரசியல் சங்கங்களை ஏற்படுத்தும் போராட்டத் தில் இவர்களின் செயல்தந்திரத்தை முன்நிர்ணயிக்கிறது.

எல்லா ஜனநாயகச் சக்திகளின் நடவடிக்கைகளுக்கான பரவலான செயல்திட்டத்தை கம்யூனிஸ்டுக் கட்சிகள் முன் மொழிகின்றன. அரசியல் துறையில் இவை தொழிலாளி வர்க்கம், இதன் ஸ்தாபனங்களின் அரசியல் நிலைகளை வலுப்படுத்தவும், பிற்போக்கிற்கு எதிரான போராட்டத்தில் எல்லா முற்போக்கு, இடதுசாரிச் சக்திகளையும் அணி திரட்டவும் பாடுபடுகின்றன. சமூக பொருளாதாரத் துறை யில், உழைப்பாளிகளின் சமூக உரிமைகள், வெற்றிகளைப் பேணிக் காக்கும் போராட்டங்களைச் சீரிசைக்கவும், சர்வ

தேசத் துறையில் ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்தி, சர்வதேசப் பதட்ட நிலையைக் குறைக்கக் கூட்டாகப் போராடவும் மேற்கூறிய செயல்திட்டம் முன்மொழிகிறது.

இடையறா வர்க்கப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் வென்றெடுத்தவற்றைப் பேணிக் காத்து, விரிவுபடுத்தப் பாடு படும் முதலாளித்துவ நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சிகள் உலக சமாதானம், முன்னேற்றம், சோஷலிசத்திற்காகப் போராடி, தொழிலாளி வர்க்கம், எல்லா உழைப்பாளிகளின் அடிப்படை நலன்களைக் காத்து நிற்கின்றன.

பூர்ஷ்வா சமுதாயத்தில் உள்ள் மற்ற சுரண்டப்படும் வர்க்கங்களுடன் சேர்ந்து தொழிலாளி வர்க்கம் நடத்தும் தீவிரமான போராட்டம்தான் ஒளிமயமான எதிர்காலத்தை, சுரண்டலும் ஒடுக்குமுறையும் இல்லாத புதிய சமுதாயத்தை விரைவாக அருகில் கொண்டுவரும்.

அத்தியாயம் ஐந்து

# ஏகாதிபத்தியம்: பொருளாதாரமும் அரசியலும்

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலாளித்துவ உலகில் வலிமை மிக்க தொழிற்துறை மற்றும் வங்கி கூட்டமைப்புகளாகிய **ஏகபோகங்கள்** தோன்றின. இவை பூர்ஷ்வா சமுதாயத்தின் பொருளாதார கட்டமைவில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தின. பொருளாதாரத்தில் ஏற்பட்ட கணிசமான மாற்றங்களோடு கூட முதலாளித்துவ நாடுகளின் ஆளும் மேல் மட்டத்தினரின் அரசியலிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாளித்துவம் தன் வளர்ச்சியில் **ஏகாதிபத்தியம்** என்ற புதிய கட்டத்தில் நுழைந்தது. ஸ்பெயின்-அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ்-போயர் யுத்தங்கள் இந்தப் புதிய கட்டத்தின் இரத்தம் சொட்டும் மைல் கற்களாயிருந்தன; இவை ஏகாதிபத்தியத்தின் மிருகத்தனமான ஆக்கிரமிப்புத் தன்மையைத் தெட்டத் தெளிவாகக் காட்டின.

## ஏகாதிபத்தியம் என்றால் என்ன?

இக்கேள்விக்கான பதிலை, மார்க்ஸ், எங்கெல்சின் லட்சியங்களைத் தொடர்ந்த வி. இ. லெனின் (1870—1924)

தந்தார். ஏராளமான நடைமுறைத் தகவல்களை ஆழ்ந்து பயின்ற லெனின், **ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்** என்ற நூலில் (1916), **மூலதனம்** நூலின் முதல் தொகுதி வெளிவந்த பின் கடந்த அரை நூற்றாண்டில் முதலாளித்துவ வளர்ச்சியில் ஏற்பட்ட பண்புரீதியான மாற்றங்களைச் சுட்டிக்காட்டினார். மார்க்சும் எங்கெல்சும் கண்டுபிடித்த சமுதாய வளர்ச்சி விதிகளை ஆதாரமாகக் கொண்டு லெனின், முதன்முதலாக முதலாளித்துவ சமூக பொருளாதார அமைப்பின் விசேஷ, உச்ச, இறுதிக் கட்டம் என்ற வகையில் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் சாரம் பற்றிய ஆழ்ந்த, விஞ்ஞான ரீதியான பகுப்பாய் வைத் தந்தார். உற்பத்திச் சாதனங்களின் மீது முதலாளிகளுக்கு உள்ள தனியுடைமை, கூலித் தொழிலாளர்களை முதலாளி வர்க்கத்தினர் சுரண்டும் உறவுகள், பொருளாயத நலன்களின் வினியோக வடிவம்—இங்கே முதலாளிகளின் செல்வமும் ஆடம்பரமும் அதிகரிக்க அதிகரிக்க உழைப்பாளிகளின் நிலை மோசமடையும்—ஆகிய முதலாளித்துவத்தின் எல்லா அம்சங்களும் ஏகாதிபத்தியத்தில் அப்படியே இருக்கின்றன என்று அவர் மெய்ப்பித்தார். முதலாளித்துவத்தின் பொருளாதார விதிகள் (முக்கியப் பொருளாதார விதியாகிய உபரி மதிப்பு விதி, முதலாளித்துவத் திரட்சியின் சர்வபொது விதி, உற்பத்தி அராஜகம், போட்டி விதி, இதரவை) ஏகாதிபத்தியத்தில் தொடர்ந்து செயல்படுகின்றன. முதலாளித்துவத்தின் முக்கியப் பொருளாதார முரண்பாடுகளும் அப்படியே இருக்கின்றன. அதே பொழுது, முதலாளித்துவத்தின் முந்திய கட்டத்திலிருந்து இதை வேறுபடுத்திக் காட்டும் ஒரு சில விசேஷ அம்சங்களும் ஏகாதிபத்தியத்தில் உள்ளன.

ஏகாதிபத்தியத்தின் இந்த விசேஷ அம்சங்கள் எதில் வெளிப்படுகின்றன? பொருளாதாரத் துறையில் ஏகாதிபத்

தியம் என்பது, ''சுதந்திரப் போட்டி'' ஏகபோக ஆதிக்கத்தால் மாற்றப்படுவதைக் குறிக்கிறது. அரசியல் துறையில் பூர்ஷவா ஜனநாயகத்திலிருந்து சமுதாய வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் வன்முறை, பிற்போக்கை நோக்கிய திருப்பம் நடைபெறுகிறது. ஏகபோகத்திற்கு முந்தைய முதலாளித்துவத்துடன் ஒப்பிடும் பொழுது ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்ச கட்டமாகும், அதே சமயம், இது இறுதிக் கட்டம், சோஷலிசப் புரட்சியின் முன்னணைப் பொழுதாகும்.

**உற்பத்திக் குவிப்பும் ஏகபோகங்களும்**

சென்ற நூற்றாண்டின் இறுதியில் பல்வேறு தொழிற்துறைகளின் விரைவான வளர்ச்சி நடைபெற்றது. தொழிற்சாலைகளின் அளவுகள் விரிந்து பரந்தன. அளவில் பெரிய ஆலைகளும் தொழிற்சாலைகளும் தம் எஜமானர்களுக்கு மற்ற முதலாளிகளை விடக் கூடுதல் ஆதாயங்களைத் தந்தன, போட்டியில் தம் எஜமானர்களின் நிலையை வலுப்படுத்தின. இயங்கு மூலதனங்களின் அளவுப் பெருக்கம் புதிய, வலிமையான தொழில் நிறுவனங்கள் கட்டப்பட்டதாலோ, பல தனிப்பட்ட மூலதனங்கள் வலுக்கட்டாயமாகவோ, தன்னிச்சையாகவோ ஒன்றிணைந்ததாலோ நடைபெற்றது. இதனால் உற்பத்திச் சாதனங்களும் உழைப்புச் சக்தியும் உற்பத்தியும் பெரும் தொழில் நிறுவனங்களில் மேன்மேலும் குவியலாயின, அதாவது **உற்பத்திக் குவிப்பு** நிகழ்ச்சிப் போக்குகள் துரிதமடைந்தன. விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம் மற்றும் பெரும் உற்பத்தியின் அனுகூலங்களைப் பயன்படுத்திய பெரிய தொழிற்சாலைகள் சிறியவற்றை நிர்ப்பந்தித்தன, முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தம் நிலைகளை விரிவுபடுத்தின. உற்பத்தியில்

கணிசமான பங்கைத் தம் கரங்களில் எடுத்துக் கொண்ட இவை—இதனால் ஒரு துறையிலோ ஒரு சில துறைகளிலோ இவற்றுக்கு ஆதிக்க நிலை ஏற்பட்டது—சராசரி லாபத்தை விடக் கூடுதலான லாபத்தைப் பெறலாயின. பெருமளவிலான இணைப்புகள், விழுங்கல்கள், துரிதமான மூலதனக் குவிப்பு ஆகியவை முதலாளித்துவ ஏகபோகங்கள் தோன்ற இட்டுச் சென்றன.

உற்பத்திக் குவிப்பே ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஏகபோகங்கள் தோன்ற இட்டுச் செல்கிறது. ஏனெனில் பெருந்தொழில் நிறுவனங்கள் ஒன்றிணைவது எளிது, அனுகூலமானது, இவற்றிற்கு இடையிலான போட்டியால் ஏற்படும் இழப்பு பெரிதாக இருக்கும், போட்டியும் ஆபத்தானதாகும். பரஸ்பரம் சமரசம் செய்து கொள்வதும், பண்டங்களின் மீது உயர்வான விலைகளை நிர்ணயித்து அதிகபட்ச லாபத்தைப் பெற உதவும் ஒப்பந்தம் செய்து கொள்வதும் பெரும் முதலாளிகளுக்குப் பெரிதும் வசதியானதாகும்.

உற்பத்திக் குவிப்பின் பெரும் அதிகரிப்புதான் ஏகபோகங்கள் தோன்றுவதற்கான பொருளாதார அடிப்படையாகும். எனவேதான் உற்பத்தி மற்றும் மூலதனத்தின் குவிப்பு ஏகாதிபத்தியத்தின் மிக முக்கிய பொருளாதார அறிகுறிகளில் ஒன்றாகத் திகழுகிறது; இக்குவிப்பு மிக உயர்வான மட்டத்தை அடைந்துள்ளதால் அது பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏகபோகங்களைத் தோற்றுவித்துள்ளது.

1980ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் மொத்த அமெரிக்க செய்தொழில் துறையின் விற்பனையில் 40%க்கும் மேற்பட்ட பகுதி நூறு பெரும் அமெரிக்க கம்பெனிகளின் வசம் இருந்தது. கிட்டத்தட்ட $^2/_3$ பங்கு பொருட்களை உற்பத்தி செய்யும் 4 முக்கிய கம்பெனிகளிடம் அந்தந்த துறைகளின் மொத்த உற்பத்தியில் 25—100% இருந்தது.

ஜப்பானில் கிட்டத்தட்ட 100 துணைத் துறைகளில் 4 பெரும் கம்பெனிகளின் பங்கு 60%யும், கிட்டத்தட்ட 50 துணைத் துறைகளில் 80%யும் விஞ்சி இருந்தது. வளர்ச்சியடைந்த மற்ற பல முதலாளித்துவ நாடுகளிலும் இதே நிலையைக் காணலாம். இந்த உயர்வான குவிப்பு மட்டத்தின் அடிப் படையில்தான் ஏகபோகங்கள் பிறந்து, உயிர் வாழ்கின்றன.

ஏகபோகம் என்றால் என்ன?

ஏகபோகம் என்பது ஒரு பெரும் முதலாளித்துவ கம் பெனி அல்லது இத்தகைய கம்பெனிகளின் இணைப்பாகும்; ஒரு குறிப்பிட்ட துறையில் பெரும் பகுதி உற்பத்தியை இது தன் கரங்களில் வைத்திருப்பதால் இதனால் சந்தையில் ஆதிக்கம் செலுத்த முடியும், உயர்வான ஏகபோக லாபங் களை அபகரிக்கும் நோக்கதோடு விலைகளை தன் விருப்பப் படி நிர்ணயிக்க முடியும்.

கார்ட்டெல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகள், கன் சேர்ன்கள், பல்திரட்டுகள் ஆகிய மிகப் பல்வேறான வடி வங்களில் ஏகபோகங்கள் நிலவுகின்றன. கார்ட்டெல்களில் விலை மட்டம், பொறுப்புப் பங்கு, விற்பனை நிபந்தனை கள், மற்ற சந்தை நிபந்தனைகள் கறாராக ஒழுங்குபடுத்தப் படும், அதே பொழுது கார்ட்டெல்களில் உள்ள கம்பெனி களின் உற்பத்திச் சுதந்திரம் அப்படியே இருக்கும். டிரஸ் டில் உள்ள முதலாளித்துவ தொழில் நிறுவனங்கள் விற்ப னைச் சுதந்திரத்தை மட்டுமின்றி உற்பத்திச் சுதந்திரத்தை யும் இழக்கின்றன. கன்சேர்னில் தலைமை கம்பெனி நிதி உறவுகளால் ஏராளமான, பல நேரங்களில் சட்ட ரீதியில் சுதந்திரமான கம்பெனிகளை ஒன்றாக இணைக்கிறது. இன்று மிகவும் பரவலாகக் காணப்படும் ஏகபோக வடிவம் இந்த கன்சேர்ன்களாகும்.

ஏகபோகங்கள் தோன்றி முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்தில் அவற்றின் ஆதிக்கம் நிலைநாட்டப்

பட்டதானது போட்டி ஒழிக்கப்பட்டு விட்டதைக் குறிக்க வில்லை. சுதந்திரமான போட்டியிலிருந்து பிறந்து வரும் ஏகபோகங்கள் அப்போட்டியை அகற்றுவதில்லை, மாறாக அதற்கு மேல், அதனருகிலேயே நிலவுகின்றன, இது இப் போட்டிக்குக் கடுமையான அழிவுகரத் தன்மையை அளிக் கிறது. பொருளாதார முறைகளோடு கூட ஏகபோகங்கள் பல நேரங்களில் நேரடியான வன்முறையையும்—தொழில் நிறுவனங்களுக்குத் தீவைத்தல், வெடிவைத்தல், கூலிப் படையினரை வைத்து கடும் போட்டியாளர்களைக் கொல்லு தல், மிரட்டல், இன்னும் பல மோசமான வழிகள்—பயன் படுத்துகின்றன.

ஏகபோக லாபத்தைப் பெறுவதற்காக ஏகபோகங்கள் தம்மிடையே போட்டியிடுகின்றன. இந்த ஏகபோக லாபத்தில் எல்லா முதலாளிகளும் பெறும் சராசரி லாபம், தொழில் நுட்ப நவீனங்களைப் பயன்படுத்துவதால் கிட்டும் கூடுதல் லாபம், இவை தவிர விசேஷமான ஏகபோகக் கொள்ளை லாபம் ஆகியவை அடங்கும். ஏகபோகங்கள் தாம் உற்பத்தி செய்யும் பண்டங்களின் மீது நிலைநாட்டும் ஏகபோக உயர் வான விலைகளின் விளைவாகவும் ஏகபோகங்களில் இணைக்கப்படாத தொழில் நிறுவனங்களிடமிருந்து இவை எந்த விலைகளைத் தந்து தமக்குத் தேவையான பண் டங்களை வாங்குகின்றனவோ அந்த ஏகபோகக் குறைவு விலைகளின் விளைவாகவும் மேற்கூறிய ஏகபோக கொள் ளை லாபம் தோன்றும். ஏகபோகங்கள் தேவையையும் சப் ளையையும் திறமையாக மாற்றியமைத்து, தமக்கு எப்போ தும் உயர்வான லாபம் கிடைக்குமாறு பார்த்து கொள்வதில் வல்லவை.

ஏகபோகங்களின் தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்படும் உபரி மதிப்பு, ஏக போகமயப்படுத்தப்படாத முதலாளித்துவ தொழில் நிறுவ

னங்களில் தோற்றுவிக்கப்படும் உபரி மதிப்பின் ஒரு பகுதி, சிறு பண்ட உற்பத்தியாளர்களும் “பரவலான பொதுமக்களும்” சுரண்டப்படுவது, வளர்முக நாட்டு மக்களைக் கொள்ளையடிப்பது ஆகியவைதான் ஏகபோக லாபத்திற்கான மூல ஊற்றுகளாகும். எனவே மக்கள் பிரிவினர் அனைவருமே இதற்கு ஏதாவது ஒரு விதத்தில் தம் பங்கையளிக்கின்றனர், ஏகபோக மூலதனத்தின் கொடுமையால் அல்லலுறுகின்றனர். “ஏகபோகக்காரர்களில் ஒரு சிலர் ஏனைய மக்கள் தொகையோரின் மீது செலுத்தும் ஒடுக்குமுறை ஆதிக்கம் நூறு மடங்கு மேலும் கடுமையானதாய், அழுத்துவதாய், சகிக்க முடியாததாய் ஆகிறது” என்றார் வி. இ. லெனின்.*

## நிதி மூலதனமும்
## நிதி மூலதன ஏகபோகக் குழுவும்

தொழிற்துறையில் உற்பத்திக் குவிப்பும் ஏகபோகங்கள் தோன்றியதும் வங்கி நடவடிக்கையிலும் இதே போன்ற நிகழ்ச்சிப் போக்குகளைத் தோற்றுவித்தன. பெரும் தொழிற்துறை, வர்த்தக, போக்குவரத்து, மற்ற நிறுவனங்கள் தம் சேமிப்புப் பணத்தைச் சிறிய வங்கிகளில் இட விரும்பவில்லை, ஏனெனில் இவற்றின் அளவு பெரும் பண முதலீடுகளுக்குப் பாதுகாப்பானதாக இருக்கவில்லை. இது தவிர, பெரும் நிறுவனங்களுக்குக் கடன் தர வல்ல நிதி இச்சிறு வங்கிகளிடம் இருக்கவில்லை. இந்த ஏகபோக நிறுவனங்களுக்குப் பெரும் கடன் தேவைப்பட்டதானது வங்கிகள் பெரியவையாகி, வங்கி ஏகபோகங்கள் தோன்றுவதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்றாக விளங்கியது.

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** தொகுதி 4, பக்கம் 67.

இன்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் மூன்று பெரும் வங்கிகள் தேசிய வங்கிச் சொத்தில் கிட்டத்தட்ட $^1/_4$ பகுதியைத் தம் கரங்களில் வைத்துள்ளன. இதே போன்ற மூன்று பெரும் வங்கிகள் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலும் இத்தாலியிலும் வங்கிச் சொத்தில் $^1/_3$ பகுதியையும், பிரிட்டன், கானடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் 50—60%யும் தம் கரங்களில் வைத்திருக்கின்றன.

பெரும் பணத்தைச் சேர்த்துக் கொண்ட பின் வங்கி ஏகபோகங்கள் சாதாரண கடன் நடவடிக்கைகளிலிருந்து தொழில் நிறுவனங்களின் பங்குகளை வாங்குதல், புதிய கம்பெனிகளைத் தோற்றுவிப்பதில் பங்கேற்றல் ஆகிய வற்றில் இறங்கின. தொழிற்துறை உற்பத்தி மீதான தன் கண்காணிப்பை விரிவுபடுத்திய வங்கிகள் செலுத்துதலில் சாதாரண இடைத்தரகர்கள் என்ற நிலையிலிருந்து சர்வ வல்லமை படைத்த ஏகபோகங்களாயின.

அதே நேரத்தில் பெரும் தொழிற்துறை முதலாளிகள் வங்கி ஏகபோகங்களின் பங்குகளை வாங்கத் துவங்கினர், சொந்த வங்கிகளைத் தோற்றுவிக்கலாயினர். தொழிற் துறைப் பங்குகளை வங்கிகளும் வங்கிப் பங்குகளைத் தொழிற்துறை ஏகபோகங்களும் பரஸ்பரம் வாங்கியதை யடுத்து இவற்றின் சொத்துகளும் இவற்றுடன் தொடர் புடைய சொத்துரிமைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தன. இவ்வாறு ஏகபோக வங்கி மூலதனமும் தொழிற்துறை மூலதனமும் பரஸ்பரம் ஒன்றினுள் ஒன்று புகுந்ததானது **நிதி மூலதனம்** தோன்ற இட்டுச் சென்றது. இந்த நிதி மூலதனம் முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதும் ஊடுருவி முதலாளித்துவ நாடுகளின் பொரு ளாதார வாழ்க்கை முழுவதையும் தன் நலன்களுக்குக் கட்டுப்படுத்தியது.

நிதி மூலதனம், **நிதி மூலதன ஏகபோகக் குழுவின்**

கரங்களில் குவிகிறது; பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி, பொருளாதாரத்தில் மட்டுமின்றி அரசியலிலும் முக்கிய பங்காற்றும் முதலாளி வர்க்க மேல்மட்டத்தின் ஒரு சிலர்தான் இக்குழுவை உருவாக்குகின்றனர். நிதி மூலதன ஏகபோகக் குழுவின் ஆதிக்கம் "பங்கேற்பு முறை", "தனிப்பட்ட இணைப்பு" ஆகியவற்றின் மூலம் நடைபெறுகிறது. இவை மிகப் பெருமளவு மூலதனங்களைக் கட்டுப்படுத்தி, கையாள உதவுகின்றன. "பங்கேற்பு முறையை" ஒரு பிரமீடாகச் சித்தரிக்கலாம், இதன் உச்சியில் பெரும் பணமுதலைகள் இருப்பர். இவர்கள் தலைமை கூட்டுப் பங்கு கம்பெனியின் கட்டுப்பாட்டுப் பங்குகளை மட்டுமின்றி இக்கம்பெனியைச் சார்ந்துள்ள மற்ற கிளை கம்பெனிகளின் பங்குகளையும் வாங்குவர். "தனிப்பட்ட இணைப்பின்" சாரம் என்னவெனில் ஒரே நபர்கள், முழு குடும்பங்கள் வங்கி, தொழிற்துறை, வர்த்தக, பிற ஏகபோகங்களைத் தலைமையேற்று நடத்துவதாகும். பெரும் வங்கியதிபர்கள் தொழில் நிறுவனங்களின் இயக்குநர்களாகின்றனர், நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களாகின்றனர், தொழில் நிறுவன நிர்வாகிகள் வங்கி நிர்வாகக் கமிட்டித் தலைவர்களாகவோ, உறுப்பினர்களாகவோ மாறுகின்றனர். தம் லாபமும் செல்வமும்தான் இவர்களுடைய ஒரே குறிக்கோளாகும்.

## மூலதன ஏற்றுமதி

ஏகபோகங்களும் நிதி மூலதனமும் தோன்றுவதோடு கூட ஏகாதிபத்தியத்தின் இன்னுமொரு அறிகுறி மூலதன ஏற்றுமதி பெருமளவில் அதிகரிப்பதாகும். **மூலதன ஏற்றுமதி** என்பது ஒரு முதலாளித்துவ நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு மூலதனம் மாற்றப்படுவதைக் குறிக்கிறது; அந்

நாட்டில் கொள்ளை லாபம் பெறுவது, வெளிச் சந்தையில் ஏகபோகங்களின் நிலைகளை வலுப்படுத்துவது, ஏகாதிபத்தியக் கொள்ளை மண்டலத்தை விரிவுபடுத்துவது, இதைப் போன்ற வேறு சில தீய எண்ணங்கள் ஆகியவைதான் மூலதன ஏற்றுமதியின் லட்சியமாகும். மூலதன ஏற்றுமதியானது ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோகங்களுக்குப் பிற நாடுகளின் உழைப்புச் சக்தியைச் சுரண்டி கொள்ளை லாபமடிக்கும் வாய்ப்பைத் தருவதோடு கூட பெரும் மூலப் பொருட்களின் மீதான கட்டுப்பாட்டையும் வழங்குகிறது.

ஏகபோக முதலாளித்துவத்தின் பொருளாதார உறவுகளில் மூலதன ஏற்றுமதிக்கு மிக முக்கிய இடமுண்டு. இதன் உதவியால் பெரும் ஏகபோகங்கள், முதலாளித்துவ உலகம் பூராவும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் பரவும் நிகழ்ச்சிப் போக்குகளைத் தீவிரப்படுத்துகின்றன.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மூலதன ஏற்றுமதியில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் முதலிடத்தை வகித்தன. இரண்டு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு முக்கிய மூலதன ஏற்றுமதி நாடாகியது, நிதி மூலதனச் சுரண்டலில் முன்னிடத்தில் நின்றது. இரண்டாவது உலக யுத்தத்தின் விளைவாய் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் தம் அயல்நாட்டு முதலீடுகளில் கணிசமான பகுதியை இழந்தன. பிரிட்டன், பிரான்சின் நிலைகள் கணிசமாகப் பலவீனமடைந்தன. பிரிட்டன், யுத்தத்திற்கு முன் தன்னிடமிருந்த அயல்நாட்டு சொத்துகளில் $^1/_4$ பங்கை விற்றது, பிரெஞ்சு, ஹாலந்து முதலீடுகள் கிட்டத்தட்ட பாதி குறைந்தன. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு, ஆண்டுதோறும் நடைபெறும் மூலதன ஏற்றுமதியிலும் அயல்நாடுகளில் உள்ள முதலீடுகளின் மொத்தத்திலும் முதலிடத்தை

விட்டுக்கொடுக்காமல் வகித்து வருகிறது. 1970ஆம் ஆண்டுகளிலும் 1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் ஜப்பான், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இன்னும் சில நாடுகளிலிருந்து நடைபெறும் மூலதன ஏற்றுமதி வேகங்கள் அமெரிக்க வேகங்களை விஞ்சத் துவங்கின. அயல்நாட்டு முதலீடுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பங்கு சிறிது குறைந்தது.

மூலதன ஏற்றுமதி அளவுகள் இடையறாது அதிகரித்து வந்ததன் பின்னணியில் இதன் சமமின்மை வலுப்பட்டது, திசையமைவுகள் மாற்றமடைந்தன. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட மூலதனத்தில் பெரும் பகுதி பொருளாதார ரீதியில் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்குச் சென்றது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் அயல் நாடுகளில் செய்யப்படும் தனியார் முதலீடுகளில் மிகப் பெரும் பகுதி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் செய்யப்படுகிறது.

முதலாளித்துவத்தின் செல்வாக்கு மண்டலம் சுருங்கியதானது—உலக சோஷலிச அமைப்பு தோன்றியது, விடுதலையடைந்த நாடுகள் உண்மையான பொருளாதார சுதந்திரத்திற்கான போராட்டத்தை வலுப்படுத்தியது ஆகியவைதான் இதற்குக் காரணமாகும்—அயல்நாட்டு முதலீடுகளுக்கான சூழ்நிலையை அனுகூலமற்றதாக்கியது. எனவேதான் அயல்நாட்டு தனியார் மூலதனத்தின் பெரும் பகுதி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்குச் சென்றது. ஆனால் 1970ஆம் ஆண்டுகளில் தனியார் முதலீட்டு மண்டலத்தில் வளர்முக நாடுகளின் பங்கு ஒப்பீட்டளவில் குறைந்து வந்த போக்கு நின்றது; மூலப்பொருள், எரிபொருள் பிரச்சினைகள் கூர்மையடைந்தது, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் ஒரு சில துறைகளில் மூலதனம் ''மிதமிஞ்சி நிரம்பி வழிந்தது'', இன்

னும் சில காரணங்களினால் வளர்முக நாடுகளில் அன்னிய முதலீடுகள் படிப்படியாக அதிகரிக்கலாயின.

### உலகைப் பொருளாதார ரீதியிலும் பிரதேச ரீதியிலும் பங்கு போடுதல்

சர்வதேச ஏகபோகங்கள் உலகைப் பொருளாதார ரீதியில் பங்கு போடுதல், பெரும் முதலாளித்துவ வல்லரசுகள் பூமியை பிரதேச ரீதியில் பங்கு போடுவதை முடித்தல் ஆகியவையும் மூலதன ஏற்றுமதியுடன் நெருக்கமாகத் தொடர்புடையவை.

சர்வதேச ஏகபோகங்கள் என்றால் என்ன? இவை முழு பிராந்தியங்களிலோ முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதிலுமோ செயல்படும் மிகப் பெரும் ஏகபோகங்களாகும். முதலாளித்துவ உலகை செல்வாக்கு மண்டலங்களாகப் பங்கு போடுவதிலும் மறுபங்கிடுவதிலும் பங்கேற்றும், மூலதனத்தை ஏற்றுமதி செய்தும், பன்னாட்டு கார்ட்டெல் உடன்படிக்கைகளைச் செய்தும் பிற வெளி விஸ்தரிப்பு வடிவங்களைப் பயன்படுத்தியும் ஏகபோகம் சர்வதேச ஏகபோகமாகிறது.

எந்த ஒரு தேசிய ஏகபோகத்தின் உள்ளும் அது சர்வதேச ஏகபோகமாக மாறுவதற்கான உள்ளாற்றல் அடங்கியுள்ளது. எந்த ஒரு தேசிய ஏகபோகத்தின் விஸ்தரிப்பு நாட்டங்களும் உள்நாட்டு சந்தையுடன் நின்றுவிடுவதில்லை. தன் வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் இது தனிப்பட்ட நாட்டின் வரம்புகளை விட்டு வெளியேறி, சர்வதேசத் தன்மையைப் பெறுகிறது.

முதலில் ஏகபோகம் தேசிய வரம்புகளில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டுகிறது. பின் இது பிற நாடுகளுக்கும் தன் செல்வாக்கைப் பரப்ப முயலுகிறது. உற்பத்தி மற்றும் மூல

தனக் குவிப்பின் மட்டம் பெருகுவதால் பெரும்பாலான ஏகபோகங்கள் உலக முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதிலும் செயல்படுகின்றன. இது உலகை பொருளா தார ரீதியில் பங்கு போடும் போராட்டத்திற்குத் தவிர்க்க இயலாதவாறு இட்டுச் செல்கிறது. "ஒன்றுகுவிப்பு ஏற் கெனவே வந்தடைந்துவிட்ட வளர்ச்சி நிலையானது லாபங் கள் பெறுவதற்காக இந்த முறையை மேற்கொள்ளுமாறு அவர்களை நிர்ப்பந்தப்படுத்துவதாலேயே" முதலாளிகள் உலகைப் பங்கு போடுகிறார்கள். "உலகை அவர்கள் 'மூல தனத்தின் விகிதத்தில்', 'வலிமையின் விகிதத்தில்' பங் கிட்டுக் கொள்கிறார்கள், ஏனெனில் பண்ட உற்பத்தியிலும் முதலாளித்துவத்திலும் வேறு எந்தப் பங்கீட்டு முறையும் இருக்க முடியாது" * என்று லெனின் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச ஏகபோகங்கள் முதலாளித்துவ உலகைப் பல் வேறு முறைகளில் பொருளாதார ரீதியில் பங்கு போடுகின் றன. செல்வாக்கு மண்டலங்களைப் பங்கு போடுதல் பற்றிய உடன்படிக்கைகள் மற்றும் மூலதன ஏற்றுமதி இவற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஏகாதிபத்திய வளர்ச்சிப் போக்கில் மேற்கூறிய முறைகளுக்கு இடையிலான விகி தங்கள் கணிசமாக மாறக் கூடும். ஆனால் விற்பனை சந் தைகள், மூலப்பொருள் கிடைக்குமிடங்கள், மிக அனுகூல மாக முதலீடு செய்யுமிடங்கள் ஆகியவற்றிற்காக ஏகபோகங் களுக்கு இடையில் நடக்கும் போராட்டத்தில் இவ்வழி கள் இன்றும் பின்பற்றப்படுகின்றன.

20ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் முதலாளித்துவ உலகில் செல்வாக்கு மண்டலங்களைப் பிரித்துக் கொள்வது பற்றிய உடன்படிக்கைகள் சாதாரணமாக சர்வதேச கார்ட் டெல்களின் வடிவத்தில் இருந்தன. வரலாற்றில் இத்

* **அதே நூல்,** பக்கங்கள் 148—149.

தகைய கார்ட்டெல்கள் ஏராளமாக இருந்துள்ளன. எண்ணெய் துறை, இரசாயனத் துறை, மின்சாரத் தொழில் நுட்பம், இன்னும் மற்ற பல தொழிற்துறைகளில் மிகப் பெரிய சர்வதேச கார்ட்டெல்கள் நிலவின. தாம் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலைகளை உயர்வான மட்டத்தில் வைத்து, அதன் மூலம் ஏகபோக லாபங்களுக்கு வழி செய்வதுதான் இவற்றின் முக்கியக் கடமையாக விளங்கியது. சர்வதேச கார்ட்டெல்களின் ஒடுக்குமுறையால் உலகெங்கும் உள்ள நுகர்வாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

சர்வதேச கார்ட்டெல்கள் தம் மூலச்சிறப்பான வடிவத்தில் இன்று அப்படியொன்றும் நிறைய இல்லை. உதாரணமாக, இன்றுள்ளவற்றில் சர்வதேச மின்சாரத் தொழில் நுட்ப சம்மேளனத்தைக் குறிப்பிடலாம். கிட்டத்தட்ட அரை நூற்றாண்டிற்கும் மேலாக இது தன் ஆரம்ப வடிவத்திலேயே இருக்கிறது. முதலாளித்துவ உலகின் மின்சாரத் தொழில் நுட்பத் துறையைச் சேர்ந்த கிட்டத்தட்ட எல்லா ஏகபோகங்களும் இதிலடங்கும். இச்சம்மேளனம் ஒரு பச்சோந்தியைப் போல் தன் நடவடிக்கைகளை மாற்ற முற்பட்டாலும், இது தன் வாடிக்கையாளர்களை ஏமாற்றி, அவர்களிடமிருந்து அதிக விலைகளைப் பிடுங்கும் நோக்கத்தோடு உலக முதலாளித்துவச் சந்தையை "ஒழுங்கமைக்க" முற்படுகிறது என்பதைக் காட்டும் புதுப் புது சான்றுகள் கிடைத்த வண்ணமிருக்கின்றன.

மூலச்சிறப்புள்ள சர்வதேச கார்ட்டெல்கள் பல கலைந்த போதிலும், இதனால், வெவ்வேறு நாடுகளின் ஏகபோகங்கள் தம்மிடையே கார்ட்டெல் உடன்படிக்கைகளைச் செய்வதை கைவிட்டு விட்டன என்று பொருளாகாது. இந்த உடன்படிக்கைகள் நன்கு மூடிமறைக்கப்படுகின்றன, தம் உள்ளடக்கத்தில் மேன்மேலும் குறுகியவையாகி வருகின்றன, மூலதன ஏற்றுமதி போன்ற வடிவத்துடன் அடிக்

கடி பின்னிப் பிணைகின்றன. ஆனால் இன்றும் சந்தைகளைப் பிடிப்பதற்கான வலுவான சாதனமாக ஏகபோகங்கள் சர்வதேச கார்ட்டெல் உடன்படிக்கைகளைப் பயன்படுத்துகின்றன.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சர்வதேச ஏகபோகங்கள் உலகைப் பொருளாதார ரீதியாகப் பங்கு போட்ட அதே நேரத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகள் உலகை பிரதேச ரீதியில் கூறு போடுவதிலும் தீவிரமாக ஈடுபட்டன, காலனிகளைப் பிடிப்பது அதிகமாகியது.

1876 முதல் 1914 வரை ஏகாதிபத்திய நாடுகள் சுமார் 25 மில்லியன் சதுர கி. மீ. அன்னியப் பரப்பைப் பிடித்தன. 1881இல் பிரான்ஸ் துனீசியாவைப் பிடித்தது, 1882இல் பிரிட்டன் எகிப்தை கைப்பற்றியது, 1884இல் ஜெர்மனி தென்மேற்கு ஆப்பிரிக்காவை ஆக்கிரமித்தது. ஆக்கிரமிப்புகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்தன. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இன்னும் பிற பகுதிகளிலும் சுதந்திரமாக வாழ்ந்த மக்களைப் பிடித்து அடிமைப்படுத்துவதில் முதலாளித்துவ நாடுகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டன. பிரிட்டனும் பிரான்சும்தான் மற்றெல்லா நாடுகளை விட அதிகமான அளவில் அன்னியப் பரப்புகளைப் பிடித்தன. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏகாதிபத்திய நாடுகள் உலகை பிரதேச ரீதியில் கூறு போட்டு முடித்தன, பங்கிடப்படாத நிலப்பரப்பு எதுவும் எஞ்சியிருக்கவில்லை. யாரிடமிருந்தாவது வலுக்கட்டாயமாக பிடுங்குவதன் மூலம்தான் புதிய பிரதேசத்தைப் பெற முடியும் என்ற நிலை வந்தது. "இளம் முதலாளித்துவ" நாடுகளாகிய அமெரிக்க ஐக்கிய நாடு, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிடம் (இந்நாடுகளில் முதலாளித்துவம் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் விரைவாக வளரத் துவங்கியது) காலனிப் பரப்புகள் குறை

வாகவே இருந்தன. இந்நாடுகளின் வளர்ச்சி வேகங்கள் உயர்வானவையாக இருந்தன, முதலாளித்துவ உலகின் பொருளாதாரத்தில் இவற்றின் பங்கு பெரிதும் கூடியது. சக்திகளின் சமன்நிலை மாறியதானது, காலனி நிலப் பரப்புகளை வலுக்கட்டாயமாக மறுபங்கீடு செய்வதற்கு இந் நாடுகளின் முதலாளிகளை உந்தித் தள்ளியது.

**பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியின் சமமின்மை**

ஏகாதிபத்தியத்தின் கீழ் உலக முதலாளித்துவப் பொருளா தாரம் உருவாகியது. இது சர்வதேச பொருளாதார உறவு களின் அமைப்பாலும் (வெளிநாட்டு வர்த்தகம், மூலதன ஏற்றுமதி, கடன் மற்றும் நிதி உறவுகள், இதரவை) சர்வ தேச முதலாளித்துவ உழைப்புப் பிரிவினையாலும் ஒன்றி ணைக்கப்பட்ட முதலாளித்துவ அரசுகளின் பொருளா தாரங்களின் ஒட்டுமொத்தமாகும். அராஜகத் தன்மை, சீரிசைவின்மை, கடுமையான பொருளாதார முரண்பாடு கள், அவ்வப்போது திரும்பத் திரும்ப நடைபெறும் கடும் ஏற்றத் தாழ்வுகள் ஆகியவை உலக முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிக்கு உரித்தானவை. அதாவது, தனிப்பட்ட முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத் திற்கு உரித்தான அதே குறைபாடுகள் உலக முதலாளித் துவப் பொருளாதாரத்திற்கும் உண்டு.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியில் உள்ள சமமின்மை பெரிதும் வலுப்பட்டது. சமமற்ற வளர்ச்சி என் பது முதலாளித்துவத்தின் தன்மைக்கே உரித்தானது. இது உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையின் அடிப்படையிலான முதலாளித்துவ உற்பத்தியின் போட்டி

மற்றும் அராஜகத் தன்மையால் நிர்ணயிக்கப்படுகிறது. ஏக போகத்திற்கு முந்தைய சகாப்தத்தில் முதலாளித்துவம் ஓரளவிற்குச் சீராக வளர்ச்சியடைந்தது என்றால், ஏகாதி பத்தியத்தில் நிலவரம் பெரிதும் மாறுகிறது.

சமமற்ற வளர்ச்சி பாய்ச்சல் தன்மையைப் பெறுகிறது. ஒரு சில நாடுகள் விரைவாக முன்னோக்கிப் பாய்கின்றன, வேறு சில பெரிதும் பின்தங்கிப் போகின்றன. உதாரண மாக, 1870ஆம் ஆண்டுகள் வரை தொழிற்துறை உற்பத்தி யில் உலகில் பிரிட்டன் முதலிடத்தையும் பிரான்ஸ் இரண்டா வது இடத்தையும் வகித்தன. 10 ஆண்டுகளில், 1880ஆம் ஆண்டுகள் வாக்கில் அமெரிக்க ஐக்கிய நாடு பிரான்சை எட்டிப் பிடித்தது, 1890களிலோ பிரிட்டனையும் விஞ்சி முதலிடத்திற்கு வந்தது. இதே காலகட்டத்தில் ஜெர்மனி பிரான்சை எட்டிப் பிடித்து, அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட் டனுக்குப் பின் மூன்றாவது இடத்திற்கு வந்தது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜெர்மனி பிரிட்டனையும் விஞ்சி, இரண்டாவது இடத்திற்கு வந்தது.

இப்படிப்பட்ட வளர்ச்சியின் காரணமாய், ஏற்கெனவே கூறு போடப்பட்ட உலகை மறுபங்கீடு செய்வதற்கான போராட் டம் கடுமையாகியது. சக்திகளின் சமன்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பின் முதலாளித்துவ உலகம் பகைமை கோஷ்டிகளாகப் பிரிந்தது, இது ஏகாதிபத்திய வல்லரசு களிடையே பெரும் இராணுவ மோதல்களுக்கும் ஏகாதிபத் திய யுத்தங்கள் தோன்றவும் தவிர்க்க இயலாதவாறு இட்டுச் சென்றது. சக்திகளின் சமன்நிலையில் தமக்குச் சாதகமாக ஏற்பட்ட மாற்றங்களை வலுக்கட்டாயமாகத் தக்கவைக்க அந்தந்த ஏகாதிபத்திய நாடுகளுக்கு இருந்த நாட்டம்தான் ஏகபோக மூலதனம் முதலாவது உலக யுத்தத்தையும் இரண்டாவது உலக யுத்தத்தையும் கட்டவிழ்த்து விட முக் கியக் காரணம் ஆகும்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்திலும் பொருளாதார வளர்ச்சியில் சமமின்மை தொடருகிறது; ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையில் கடும் முரண்பாடுகள் தோன்றவும், செல்வாக்கு மண்டலங்களை மாற்றியமைப்பது, விற்பனைச் சந்தைகள், மூலப்பொருட்கள் கிடைக்குமிடங்கள் ஆகியவற்றிற்கான கடும் போராட்டம் மூளவும் இச்சமமின்மைதான் அடிப்படையாகும். இப்போராட்டத்தில் ஒரு சில நாடுகள் தோல்வியடைந்து, பின்னுக்குத் தள்ளப்படுகின்றன, வேறு சில வெற்றி பெற்று தம் வளர்ச்சியில் முன் செல்கின்றன. உதாரணமாக, இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் ஜப்பான், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இன்னும் சில நாடுகள் மொத்தத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டை விட அதிக வேகத்தில் வளர்ச்சியடைந்தன; இதனால் உலக முதலாளித்துவ உற்பத்தி, ஏற்றுமதி, தங்க இருப்பில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பங்கு குறைந்தது, இதுதான் இந்நாடுகளுக்கு இடையில் முரண்பாடுகள் தோன்றுவதற்கான அடிப்படையாகும்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் சமமின்மை வலுப்படும் அதே நேரத்தில் அவற்றின் அரசியல் வளர்ச்சியிலும் சமமின்மை வலுப்படுகிறது. உதாரணமாக, இதனால் ஒரு சில முதலாளித்துவ நாடுகளில் வெவ்வேறு தருணங்களில் கடுமையான உள்நாட்டு அரசியல் நெருக்கடிகள் தோன்றக் கூடும், இவை ஒரு சில சந்தர்ப்பங்களில் சமூகப் புரட்சிகளுக்கு இட்டுச் செல்லும். ஏகாதிபத்திய சகாப்தத்தில் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியின் சமமின்மை பற்றிய விதியை கண்டுபிடித்த வி. இ. லெனின், சோஷலிசப் புரட்சி ஒரே தருணத்தில் பெரும்பாலான அல்லது எல்லா நாடுகளிலும் நடக்க வாய்ப்பில்லை என்று கூறி, ஏகாதிபத்திய சங்கிலி அதன் பலவீனமான அங்கங்களில் ஒன்றில் முறியும் என்

றும் முதலில் ஒரு சில நாடுகளிலோ அல்லது ஒரு தனிப்பட்ட நாட்டிலோ கூட சோஷலிசப் புரட்சி வெற்றி பெறும் என்றும் சுட்டிக்காட்டினார். 1917இல் ருஷ்யாவில் நிலவிய கடும் சமூக அரசியல் நெருக்கடியின் விளைவாக புரட்சிகர நிலவரம் தோன்றியது; லெனினின் தலைமையிலான போல்ஷிவிக் கட்சியால் வழிநடத்தப்பட்ட ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் இதைப் பயன்படுத்தி உலகின் முதல் வெற்றிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சியாகிய மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியை நடத்தியது.

### ஏகாதிபத்தியம்— ஒட்டுண்ணித்தனமான அழுகி வரும் முதலாளித்துவம்

ஏகாதிபத்தியத்தின் மிக முக்கியத் தன்மைகளில் ஒன்று அதன் ஒட்டுண்ணித்தனமும் அழுகும் தன்மையுமாகும். ஒரு சில ஏகபோகங்களும் நிதிக் குழுக்களும் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துவதானது இதை நிர்ணயிக்கிறது. ''ஏகபோகங்கள், ஆதிக்கக் கும்பல், சுதந்திரத்திற்காக அல்லாமல் ஆதிக்கத்துக்கான முயற்சிகள், ஒரு சில பெரும் செல்வம் மிக்க அல்லது மிகுந்த வலிமையான தேசங்கள் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையிலான சிறிய அல்லது பலவீன தேசங்களைச் சுரண்டுதல்—இவை எல்லாம், ஏகாதிபத்தியத்தின் தனிப்பட்ட தன்மைக் குறிப்பான இயல்புகளை—ஒட்டுண்ணித்தனமான அல்லது அழுகி வரும் முதலாளித்துவமாக ஏகாதிபத்தியத்துக்கு இலக்கணம் கூறும்படி நம்மை நிர்ப்பந்திக்கும் அந்த இயல்புகளை—தோற்றுவித்திருக்கின்றன'' என்று வி. இ. லெனின் எழுதினார்.*

* அதே நூல், பக்கம் 229.

விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளை நிதி மூல தனம் தன் லாபத்தைப் பெருக்கவும் சுரண்டலை அதிகரிக்கவும் பயன்படுத்துகிறது. வி. இ. லெனின் எழுதினார்: "எங்கு நோக்கினும், ஒவ்வொரு இடத்திலும், மனிதகுலம் **உடனடியாகத்** தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. முதலாளித்துவம் இதற்குத் தடையாக நிற்கிறது. இது செல்வத்தை மலை போல் குவித்து, மனிதர்களை இச்செல்வத்திற்கு **அடிமைகளாக்கியுள்ளது.** இது மிகச் சிக்கலான தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளது, அதே பொழுது கோடானுகோடி மக்களின் வறுமை, கல்வியறிவின்மையின் காரணமாய், ஒரு சில கோடீஸ்வரர்களின் பேராசையின் காரணமாய் இவற்றை வாழ்க்கையில் பயன்படுத்த விடாமல் அணைபோட்டு தடுக்கிறது." *

தம் மூலதனத்திற்குக் கிடைக்கும் வட்டியைக் கொண்டு கொழுக்கும் வட்டி முதலாளிகளின் எண்ணிக்கை பெருகி வருவதானது முதலாளித்துவம் அழுகி வருவதற்குச் சான்று பகர்கிறது. இம்முதலாளிகளுக்கும் உற்பத்திக்கும் எவ்வித நேரடித் தொடர்பும் கிடையாது. தொழிற்சாலை நிர்வாகம் கூலிக்கு அமர்த்தப்பட்ட நிர்வாகிகளின் கரங்களில் இருக்கும். பெரும் பங்குகள், பத்திரங்கள், வங்கி இருப்புகளை வைத்துள்ள இந்த வட்டி முதலாளிகள் தம் பணத்திற்குக் கிடைக்கும் வட்டியால் கொழுக்கின்றனர். இது மட்டுமல்ல. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு, இன்னும் பல வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் தம் மூலதன ஏற்றுமதியால் கணிசமான அளவு வருமானத்தைப் பெற்று ஒட்டுண்ணித்தனமான அரசுகளாக மாறுகின்றன.

* V. I. Lenin, *Collected Works*, vol. 19, p. 389.

மூலதன ஏற்றுமதியை லெனின் இரட்டிக்கப்பட்ட ஒட்டுண்ணித்தனம் என்றார். ஏனெனில் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் மூலதனமானது, அபகரிக்கப்பட்ட உபரி மதிப்பாக, கூலி வழங்கப்படாத தொழிலாளர்களுடைய உழைப்பின் விளைபயனாக மாறுகிறது. வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டதும் இது தன் சொந்தக்காரனுக்குப் புதிய லாபத்தை ஈட்டித் தருகிறது. இது மற்ற நாடுகளைக் கொள்ளையடிக்கும் சாதனமாகத் திகழுவதோடு கூட ஓரளவிற்கு (சில நேரங்களில் பெரிதும் கணிசமான அளவிற்கு) மூலதனம் அனுப்பப்படும் நாடுகளின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் தடையாக உள்ளது.

பொருளாதாரம் இராணுவமயப்படுத்தப்படுவதில், தேசிய வருமானத்திலிருந்து மேன்மேலும் அதிகமான பங்கு இராணுவ உற்பத்திக்கு ஒதுக்கப்படுவதில் ஏகாதிபத்தியத்தின் ஒட்டுண்ணித்தனம் நன்கு வெளிப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் மற்ற **நேட்டோ** நாடுகளிலும் பொருளாதாரம் இராணுவமயப்படுத்தப்படுவதை அடுத்து ஏராளமான பொருளாயத வளம் பயன்மிகு நுகர்விலிருந்து திசை திருப்பப்படுகிறது. ஏகாதிபத்திய யுத்தங்களில் ஏராளமான பொருட்சேதமும் ஆட்சேதமும் ஏற்படுகின்றன. உதாரணமாக, இரண்டாவது உலக யுத்த ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட பொருட்சேதத்தின் மதிப்பு அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் தேசியச் செல்வத்தின் மொத்த மதிப்பை விட மும்மடங்கு அதிகம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஏகபோக மூலதனத்தால் உற்பத்திச் சக்திகளை முழுமையாகப் பயன்படுத்த முடியாமலிருப்பது, வேலையற்ற கோடானுகோடி மக்களுக்கு வேலை தர இயலாமை, உற்பத்தி வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தாமை ஆகியவற்றிலும் முதலாளித்துவத்தின் அழுகும் தன்மை வெளிப்

படுகிறது. உதாரணமாக, இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உற்பத்தி வசதிகளைப் பயன்படுத்துவது எப்போதுமே ''சாலச்சிறந்த'' மட்டத்தை அடைந்ததில்லை, சில ஆண்டுகளில் இது உற்பத்தி வசதிகளின் மொத்த அளவில் 70—80% வரை வீழ்ச்சியடைந்தது கூட உண்டு. தீராத வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதானது, முதலாளித்துவ நாடுகளில் சமுதாயத்தின் முக்கிய உற்பத்திச் சக்தியாகிய உழைப்பாளிகள் உரிய அளவில் பயன்படுத்தப்படாததைக் குறிக்கிறது.

தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கு தோன்றுவதானது ஏகாதிபத்தியத்தின் ஒட்டுண்ணித்தனம் மற்றும் அழுகும் தன்மையின் ஒருவித விசேஷ வெளிப்பாடாகும். ஏகபோகக் கொள்ளை லாபத்தை வைத்து தொழிலாளி வர்க்கத்தின் சில பிரிவினர் விலைக்கு வாங்கப்படுகின்றனர், ''தொழிலாளர் மேற்பிரிவு'' என்றழைக்கப்படுவது தோற்றுவிக்கப்படுகிறது, சலுகை படைத்த இந்தத் தொழிலாளர்கள் பல நேரங்களில் முதலாளி வர்க்கத்தினரின் ஆதரவோடு தொழிற்சங்கங்களிலும் தொழிலாளி வர்க்கத்தின் பிற ஸ்தாபனங்களிலும் தலைமையிடங்களைப் பிடிக்கின்றனர். குட்டி பூர்ஷ்வாச் சக்திகளோடு சேர்ந்து இவர்கள் தொழிலாளர் இயக்கத்திற்குப் பெரும் ஆபத்தேற்படுத்துகின்றனர், பிற்போக்குச் சக்திகளின் சமூக அடிப்படையாகத் திகழுகின்றனர். தொழிலாளி வர்க்க அணிகளில் பிளவை ஏற்படுத்தும் இவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்ட ஒற்றுமைக்குப் பங்கமேற்படுத்துகின்றனர்.

ஏகாதிபத்தியம், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்தில் ஒட்டுண்ணித்தனத்தை வலுப்படுத்துவதோடு கூட அவற்றின் அரசியல் வாழ்க்கையில் பிற்போக்கு தலைவிரித்தாடவும் வழிகோலியது.

## ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கை

அரசியல் என்பது வர்க்கங்களுக்கும் பல்வேறு சமூகக் குழுக் களுக்கும் இடையிலான உறவுகளுடன் தொடர்புடைய நட வடிக்கைத் துறையாகும், அரசாட்சியைக் கைப்பற்றி, தக்க வைத்து, பயன்படுத்துவதுதான் இதன் மைய அம்ச மாகும். ''அரசாட்சியின் அமைப்புதான்''* அரசியலில் மிக முக்கியமானது என்றார் வி. இ. லெனின். இறுதியாகப் பார்க்குமிடத்து, சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு தான் அரசியலை நிர்ணயிக்கிறது. முதலாளித்துவ நாடு களில் இது முக்கியமாக, ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாகிய முதலாளி வர்க்கத்தின் நலன்களை வெளிப்படுத்துகிறது, முதலாளி வர்க்கத்தினரின் உரிமைகள், சலுகைகளைக் காப்பாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மிகப் பெரும் அரசு இயந்திரத்தின் உதவியோடு முதலாளி வர்க்கம், தொழிலாளர் இயக்கத்தை ஒடுக்கி, தனியுடை மையைப் பேணிக் காத்து, முதலாளித்துவ முறைகளைத் தக்கவைப்பதை நோக்கமாகக் கொண்ட கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

முதலாளித்துவமானது ஏகாதிபத்தியக் கட்டத்தில் நுழைந்ததையடுத்து, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடு களின் ஆளும் வட்டங்கள் கடைப்பிடிக்கும் கொள்கையும் கணிசமாக மாறியது. இந்நாடுகளின் பொருளாதாரத்தில் ஏகபோகங்களின் ஆதிக்கம் ''எல்லாத் துறைகளிலும் அரசி யல் பிற்போக்கு'' வலுப்பட இட்டுச் சென்றது. ஒடுக்குமுறை உறுப்புகளின் (போலீஸ், ''சட்ட ஒழுங்கைப் பராமரிக்கும்'' துருப்புகள், சிறைகள், அரசியல் கண்காணிப்பு முறை,

* *Ibid.*, p. 122.

இதரவை) பெரும் வளர்ச்சி, பூர்ஷ்வா சட்டத்திட்டங்கள் மீறப் படுதல், புரட்சி இயக்கங்களை ஒடுக்குவதில் கடும் அடக்கு முறைகள் பின்பற்றப்படுதல் ஆகியவற்றில் மேற்கூறியது வெளிப்படுகிறது. ஏகாதிபத்திய சகாப்தத்தில்தான் ஒரு சில பூர்ஷ்வா நாடுகளில் பாசிசம்—எந்த விதத்திலும் மூடி மறைக்கப்படாத, மிகப் பிற்போக்கான ஏகாதிபத்திய வட்டங்களின் கொடுமையான சர்வாதிகாரம்—தோன்றியது தற்செயல் அல்ல.

அரசியலில் பிற்போக்கை நோக்கிய திருப்பம் ஏற்பட்டதானது, ஏற்கெனவே முதலாளி வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட பூர்ஷ்வா ஆட்சி முறைகளும் வடிவங்களும் கைவிடப்பட்டதைக் குறிக்கவில்லை. மொத்தத்தில் இது ஏகாதிபத்தியக் கட்டத்திலும் நாடாளுமன்றம், தன் சர்வாதிகாரத்தை மூடிமறைக்கும் மற்ற ஜனநாயக உறுப்புகள் ஆகியவற்றின் போர்வையின் கீழ் ஆட்சி செய்வதைத்தான் விரும்புகிறது.

‘‘ஜனநாயகக் குடியரசுதான் முதலாளித்துவத்துக்கு மிகச் சிறந்த அரசியல் கவசமாகும். ஆகவே மூலதனம் இந்த மிகச் சிறந்த கவசத்தை... பெற்றுக் கொண்டதும், அது பூர்ஷ்வா ஜனநாயகக் குடியரசின் ஆட்களிலோ, நிறுவன ஏற்பாடுகளிலோ, கட்சிகளிலோ ஏற்படும் **எந்த** மாற்றத்தாலும் அசைக்க முடியாதபடி திடமாகவும் உறுதியாகவும் தனது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்கிறது’’ என்று வி. இ. லெனின் எழுதினார். *

எந்த ஒரு ஏகாதிபத்திய நாட்டிலும், அதன் ஆட்சி முறையைப் பொறுத்திராமல் (உதாரணமாக பிரிட்டன், பெல்ஜியம், ஸ்வீடன் ஆகிய நாடுகளில் சட்டபூர்வமான முடியாட்சி முறையும், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் பூர்ஷ்வா ஜனநாயகக் குடியரசு

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 6, பக்கம் 25.

முறையும் உள்ளன) பெரும் முதலாளிகளும் அரசு இயந்திரத்தில் உள்ள அவர்களின் கைப்பாவைகளும்தான் அரசியலை நிர்ணயிக்கின்றனர். 1914ஆம் ஆண்டிலேயே அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் எழுதினார்: "அமெரிக்க ஐக்கிய நாட்டின் தொழிலதிபர்களும் முதலாளிகளும்தான் அமெரிக்க அரசாங்கத்தின் எஜமானர்கள் ஆவார்கள். இந் நாட்டின் பொருளாதாரத் திட்டங்கள் அனைத்தும் ஒரு பிறப்பிடத்திலிருந்துதான் வருகின்றனவே தவிர பல்வேறு மூல ஊற்றுகளிலிருந்து அல்ல என்பது காங்கிரஸ் ஆவணங்களின் ஒவ்வொரு புனித எட்டிலிருந்தும், வெள்ளை மாளிகையில் நடந்த கூட்டங்களின் வரலாற்றிலிருந்தும் தெரிய வருகிறது." வெள்ளை மாளிகைக்கு மிக நெருக்கமான கோடீஸ்வரர்களில் ஒருவராகிய எல்ஃபிரிட் பிலுயுமென்டெய்லின் சொற்படி, "'ஜெனரல் மோட்டார்ஸ்' கம்பெனியை நிர்வகிப்பதும் அமெரிக்க ஐக்கிய நாட்டை ஆட்சி செய்வதும் ஒன்றே. அமெரிக்க ஐக்கிய நாடு 'ஜெனரல் மோட்டார்ஸ்' கம்பெனியை விட 2—3 மடங்கு பெரியதாக இருக்கலாம், ஆனால் இது அதே 'ஜெனரல் மோட்டார்ஸ்' கம்பெனிதான். அங்குதான் நம் வேர்கள் உள்ளன... ரீகனைச் சுற்றி அனுபவமுள்ள ஆட்களை நாங்கள் வைத்திருக்கின்றோம், எங்களுடைய சொந்த நோக்கங்களுக்காக எங்களாலேயே அமர்த்தப்பட்டவர்கள்தான் இவர்கள்." இவர்கள் யாருடைய நலன்களைப் பிரதிபலிக்கின்றனர் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

ஜனநாயக உறுப்புகளின் போர்வையின் கீழ் ஏகபோக முதலாளி வர்க்கம் எப்படி ஆட்சி செய்கிறது? தேர்தல் முறையின் உதாரணத்தில் இதைப் பார்ப்போம்.

ஏகாதிபத்திய வல்லரசுகளில் தேர்தல் ஏதோ "சுதந்திரமானது" என்ற மாயை ஏற்படும்படி அமைக்கப்பட்டுள்ளது. இங்கே முகஸ்துதி, பொய், ஏகபோகங்களின் வசம்

உள்ள வெகுஜன தகவல் தொடர்புச் சாதனங்களின் உதவியால் பொதுமக்களின் கருத்துகள் மீது தாக்கம் செலுத்துதல் ஆகிய முறைகள் பரவலாயும் திறமையோடும் பயன்படுத்தப்படுகின்றன, தேர்தல் பிரசாரத்தை வேண்டுமென்றே கூத்தாடி வித்தையாக்குகின்றனர். அதே நேரத்தில், தேர்தலில் பங்கேற்க விரும்பும் ஜனநாயகக் கட்சிகள், முற்போக்கு ஸ்தாபனங்களுக்கு சகலவித இடையூறுகளும் ஏற்படுத்தப்படுகின்றன, இவற்றிற்கெதிராகக் கடும் அவதூறு பிரசாரங்கள் நடத்தப்படுகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் ''ஜனநாயகத்தின் மாதிரி'', ''எடுத்துக்காட்டு'' என்று மேற்கே கருதப்படுகிறது. இந்தச் ''சுதந்திரத் தேர்தலின்'' சாரம் என்ன? இது இரண்டு முக்கிய பூர்ஷ்வாக் கட்சிகளில் (குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சி) ஒன்றின் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரமாகும். ஒரே விதமான நலன்களை—ஏகபோக மூலதனம் மற்றும் நிதி மூலதன ஏகபோகக் குழுவின் நலன்களை—பிரதிபலிக்கும் இக்கட்சிகள், உள்நாட்டுக் கொள்கையிலும் சரி, வெளிநாட்டுக் கொள்கையிலும் சரி இரண்டிலும் ஒன்றிற்கொன்று அதிகம் வேறுபடுவதில்லை. சரி, வாக்காளர்கள் யாருக்கு வாக்களிக்கின்றனர்? தாமே முன்மொழிந்தவர்களுக்கா வாக்களிக்கின்றனர்? இல்லை. உண்மையான ஆட்சியதிகாரத்தைக் கொண்ட சிறு கோஷ்டியால் திரை மறைவில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களில் ஒருவருக்கு வாக்களிக்கும் சம்பிரதாய உரிமைதான் இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

மேற்கூறிய இரண்டு கட்சிகளையும் சாராத ஒருவரை என் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்க முடியாது? ஏனெனில் தேர்தல் பிரசாரத்திற்குத் தேவைப்படும் கோடிக் கணக்கான பணத்தை இக்கட்சிகளால்தான் திரட்ட முடியும், இவற்றிற்குத்தான் பெரும் பண முதலைகளின் ஆத

ரவு உண்டு. வெள்ளை மாளிகையின் அதிபராக சுமார் 300 மில்லியன் டாலர்களையும், செனட்டராக 5 மில்லியன் டாலர்களையும், காங்கிரஸ் உறுப்பினராக 5 லட்சம் டாலர்களையும் செலவிட வேண்டும். எனவேதான் அமெரிக்க செனட்டில் ஒரு தொழிலாளி கூட இல்லை. ஏகபோகங்களின் கைப்பாவைகள் மட்டுமே—இவர்களின் தேர்தல் பிரசாரத்திற்குத்தான் பெரும் மூலதனம் பணத்தை வாரியிறைக்கிறது—இங்கே அமர்ந்திருக்கின்றனர். அமெரிக்காவில் அரசியல்வாதிகள் நேரடியாகவும், தேர்தல் பிரசாரத்திற்கு நிதி வழங்குவதன் மூலமாயும் விலைக்கு வாங்கப்படுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். அமெரிக்க முதலாளிகள் எப்போதுமே தம் பணத்தை வீணாகச் செலவழிப்பதில்லை. இவர்கள் தாம் விரும்பும் அரசியல்வாதிகளுக்காக ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவழிக்கின்றனர் என்றால், அதற்குப் பதிலாக இந்த அரசியல்வாதிகளிடமிருந்து சலுகைகளை எதிர்பார்க்கின்றனர் என்று பொருள், இந்த அரசியல்வாதிகளும் இச்சலுகைகளைத் தருகின்றனர்.

நாட்டு மக்கள்தொகையில் மிகச் சிறு பிரிவினரின் நலன்களைப் பிரதிபலிக்கும் ஏகபோக மூலதனத்தின் பிரதிநிதிகள் சட்டமியற்றும் மற்றும் நிர்வாக உயர் உறுப்புகளில் மேலோங்கி நிற்கையில் அமெரிக்க தேர்தல் முறையின் ஜனநாயகத் தன்மையைப் பற்றிய பேச்சிற்கே இடமில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் சரி, மிகப் பெரும்பாலான பிற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் சரி தேர்தல்களை ஏகபோகங்கள் தாம் செய்யும் அரசியல் தகிடுதத்தங்களை மூடிமறைக்கும் திரையாகப் பயன்படுத்துகின்றன. இத்தேர்தல்கள், பெரும் மூலதனத்தின் சர்வ வல்லமையை மூடிமறைக்கும் ஒரு போலி ஜனநாயக நாடகமாகும். "அமெரிக்காவில் இருப்பது போல... அவ்வளவு பண்பற்ற

வகையில், அவ்வளவு பட்டவர்த்தனமாக ஊழல் மிகுந்த வகையில் சமுதாயம் முழுவதன் மீதும் மூலதனத்தின் அதிகாரமும், விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில கோடீஸ்வரர்களின் ஆதிக்கமும் இருப்பது வேறு எங்கும் கிடையாது''* என்று வி.இ. லெனின் பல்லாண்டுகளுக்கு முன் கூறியது இன்றும் பொருந்தி வரும்.

மக்கள் திரளினரிடம் கணிசமான மதிப்பைப் பெற்றுள்ள ஜனநாயகக் கோஷங்களைப் பயன்படுத்தி ஏகபோக முதலாளி வர்க்கம் உழைப்பாளர்களை ஏமாற்றுகிறது, தம் உரிமைகள், அரசியல் சுதந்திரங்களுக்கான போராட்டத்திலிருந்து அவர்களின் கவனத்தைத் திசை திருப்புகிறது.

ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள உழைப்பாளிகளுக்குப் பல உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன, இவையின்றி உண்மையான ஜனநாயகம் நிலவவே முடியாது. உழைக்கும் உரிமை, சமூகப் பாதுகாப்பு, ஓய்வு, கல்வி உரிமைகள், கலாசார சாதனைகளை தங்கு தடையின்றி பயன்படுத்தும் உரிமை ஆகியவை இத்தகைய உரிமைகளில் அடங்கும். முதலாளித்துவத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் கோரத் தாண்டவமாடும் சூழ்நிலையில், பணவீக்கமும் விலையேற்றமும் மக்களை வாட்டும் பொழுது, சமூக நலத் தேவைகளுக்கான செலவுகள் குறைந்து வரும் பொழுது கோடானு கோடி மக்களுக்கு இவ்வுரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

ஏகாதிபத்திய நாடுகளில் உழைப்பாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் சுதந்திரமும் பெரிதும் மட்டானது.

''ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமையா? ஓ, கண்டிப்பாக நீங்கள் ஆர்ப்பாட்டம் செய்யலாம். ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை உங்களுக்கு உண்டென்றால், அதை கலைக்கும்

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** தொகுதி 10, பக்கம் 35.

உரிமை எங்களுக்கு உண்டு'' என்கின்றனர் போலீசார். ஆண்டுதோறும் முதலாளித்துவ நாடுகளில் போலீசார் ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்களை கலைக்கும் பொழுது ஆயிரக்கணக்கானோர் காயமடைகின்றனர், கைது செய்யப்படுகின்றனர், பல்லாயிரக்கணக்கானோர் போலீஸ் கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர், இவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் உளவு பார்க்கப்பட்டு கணிப்பொறிகளில் பதிவாகிறது. சமா தான போராட்ட வீரர்கள், சிவில் உரிமைகள், சமூக நீதி ஆகியவற்றிற்காகப் போராடுபவர்களை அடக்கி ஒடுக்க அமெரிக்க ஐக்கிய நாட்டில் விசேஷ போலீஸ் பிரிவு உள்ளது. இதனிடம் சாதாரண குண்டாந்தடிகள், பிஸ்டல் கள், கண்ணீர் புகை குண்டுகள், சோப்பு நுரையைக் கக் கும் ஜெனரேட்டர்கள், ஹெலிகாப்டரிலிருந்து மக்களைச் சுற்றி வளைக்க வீசப்படும் வலைகள், தானியங்கி துப்பாக்கி கள், என் டாங்கிகள் கூட உள்ளன. இது தவிர ''உள்நாட்டில் அமைதிக்குப் பங்கமேற்படுத்துபவர்கள்'' என்றழைக்கப் படுபவர்களைக் கலைக்க இராணுவமும், தேசியப் பாது காப்பு படையும் கூட பயன்படுத்தப்படுகின்றன.

ஒருவேளை, ''தனிநபர் சுதந்திரம்'' மேலான நிலை யில் உள்ளதோ? சொந்த கருத்துகளை வைத்திருக்க தங்கு தடை எதுவுமில்லையோ? கிடையவே கிடையாது. தனி வாழ்க்கையில் முரட்டுத்தனமான தலையீடு, உரிமைகளும் சுதந்திரங்களும் அப்பட்டமாக மீறப்படுவது—இவையெல் லாம் இன்றைய ஏகாதிபத்திய நாடுகளின் எதார்த்தமாகும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிகாரிகளிடம் அமெரிக்க மக்களைப் பற்றிய 3.5 பில்லியன் கோப்புகள் உள்ளன; இவற்றில் குடும்ப வருமானம், வேலை விவரங்கள், அர சியல் கருத்துகள், பழக்கவழக்கங்கள், அரசியல் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கேற்பு, குடும்ப விவரங்

கள் ஆகிய சகலவிதத் தகவல்களும் உள்ளன. இந்த வேலைகளுக்கு இன்று நவீன கணிப்பொறிகள், ஒட்டு கேட்கும் அமைப்புகள், மறைவான காமிராக்கள், டேப்ரிக்கார்டர்கள் போன்ற சாதனங்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள், பிற ஜனநாயகக் கட்சிகள், ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள், ஆயுதப் போட்டி, இனப் பாகுபாட்டிற்கு எதிராயும் பெண்களுக்கு சம உரிமை கோரியும் போராடுபவர்கள், தொழிற்சங்க தொண்டர்கள் ஆகியோருக்கு எதிராய் தீவிரமாக உளவு பார்க்கப்படுகிறது.

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் அந்நாட்டு மக்களில் 50 மில்லியனுக்கும் மேற்பட்டோரைப் பற்றிய விவரங்கள் கணிப்பொறிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக, ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பவர்களைப் பற்றிய விவரம் குற்றத் தகவல்கள் சம்பந்தமான இலாக்காவில் உள்ளன. அதாவது, ஆர்ப்பாட்டத்தில் சாதாரணமாகப் பங்கேற்பது கூட போலீசால் பதிவு செய்யப்படும் என்று இதற்குப் பொருள். இவ்வாறு ''பதிவு செய்யப்படுவது'' எத்தகைய தீய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பது வெள்ளிடை மலை. மக்களின் நடவடிக்கைகளையும் சிந்தனையையும் உளவு பார்ப்பது, லட்சக்கணக்கான மக்களைப் பற்றிய இரகசிய தகவல்களைச் சேகரிப்பது என்பது மற்ற பெரும்பாலான வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் சர்வசகஜமான விஷயமாகும்.

தன் மக்களைப் பற்றிய தகவல்களை ஏகாதிபத்திய அரசு எப்படி பயன்படுத்துகிறது?

பல முதலாளித்துவ நாடுகளில் வெளிப்படையாகவோ இலைமறைவு காய்மறைவாகவோ ''வேலைத் தடை'' முறை உள்ளது; அதாவது முற்போக்கு கருத்துகளைக் கொண்டவர்கள் அரசு வேலைக்கு (உதாரணமாக, என்ஜின்

டிரைவராக, ஆசிரியராக) தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. பல நேரங்களில் தனியார் கம்பெனிகளும் இடதுசாரி கருத்துள்ளவர்களை வேலைக்கெடுப்பதில்லை, அல்லது வேலையிலிருந்து வெளியே அனுப்புவதும் உண்டு. உழைப்பாளிகளின் உரிமைகள், சமாதானம், சோஷலிச நாடுகளுடன் ஒத்துழைப்பு ஆகியவற்றிற்காகத் தொடர்ச்சியாகப் போராடுபவர்கள் இத்தகைய பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர்.

உதாரணமாக, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் மக்களை விசேஷ கமிஷன்களுக்கு அழைத்து, குறிப்பிட்ட அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாக அவர்களுடைய கருத்து என்ன என்று நீண்ட விசாரணைகளை நடத்துகின்றனர். கமிஷனுக்கு சந்தேகம் வந்து விட்டாலோ, அதை அகற்றுவது மிகக் கடினம், ஏன் சில நேரங்களில் இயலவே இயலாது. இதன் விளைவு வேலை மறுக்கப்படுவதாகும். சில சமயங்களில் இப்படிப்பட்ட விசாரணைகளில் இரகசிய போலீஸ் சேகரித்த தகவல்கள் வெளியிடப்படும். ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் முற்போக்கு கருத்துகளை உடையவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதைத் தடை செய்யும் ஒருசில காரணங்கள் இதோ: ஜனநாயக ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளில் பங்கேற்பு, ஆயுதப் போட்டியை எதிர்க்கும் பிரசுரங்களை வினியோகித்தல், சிலி நாட்டு மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பு, சர்வதேச ஒருமைப்பாட்டு நடவடிக்கைகளில் பங்கேற்பு.

பல நேரங்களில், முற்போக்கு கருத்துடையவர்களுக்கு எதிராகப் "படிப்படியாக அச்சுறுத்தும்" நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், குறிப்பிட்ட நபரை முறிக்கும் வரை இவை தொடரும். முதலில் தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்படும், அவருடைய அலுவலகத்தில் அல்லது தொழிலில் முன்னேற்றம் தடை செய்யப்படும், கருங்காலியாகச் சித்தரிக்கப்பட்டு அவர் வேலைநீக்கம் செய்யப்படுவார், பின்னர்

அவர் மிரட்டப்படுவார், பொய்க் காரணங்களைக் காட்டி கைது செய்யப்படுவார்.

அந்த ''நல்வாழ்வு சமுதாயத்தில்'' முற்போக்கு கருத்துகளைக் கொண்ட மக்களுக்குச் சாதாரண வாழ்க்கைச் சாதனங்கள் கூட மறுக்கப்படுகின்றன, ஏன் சுதந்திரமாக வாழும் வாய்ப்பைக் கூட அவர்கள் இழக்கக் கூடும்.

அடக்குமுறை நடவடிக்கைகள் ஒரு புறமிருக்க, தொலைக் காட்சி, வானொலி, பத்திரிகைகள் போன்ற வெகுஜன தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தியும் மக்களின் மனதை, மூளையைப் பாழ்படுத்த ஏகபோக முதலாளி வர்க்கம் முயலுகிறது. மக்களின் மனநிலையைப் பாழ்படுத்த போதைப் பொருள், குடிப்பழக்கம் போன்றவற்றையும் அது பயன்படுத்துகிறது, பல்வேறு மத கோஷ்டிகளை ஆதரிக்கிறது, பால் சுதந்திரத்தையும் விவாதத்திற்கு இடமான பல்வேறு பழக்கங்களையும் பிரசாரம் செய்கிறது. மென்மையான நடவடிக்கைகளையும் கொடிய நடவடிக்கைகளையும் சரிவர கலந்து பயன்படுத்துவது சமுதாயத்தைத் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவுமென்று நிதி முதலைகள் கருதுகின்றனர்.

பொருளாதார மற்றும் சமூக பகை முரண்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க அரசியல் துறையில் மேன்மேலும் கடுமையான முறைகளைப் பயன்படுத்த ஏகபோகங்கள் முயலுகின்றன. 1919இல் கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரசில் வி. இ. லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''ஆக ஜனநாயகக் குடியரசுகளில் உள்ளபடியே பயங்கர ஆட்சியும் முதலாளி வர்க்க சர்வாதிகாரமும் நிலவுகின்றன... மூலதனத்தின் ஆதிக்கம் உலைவுறுகிறது என்று சுரண்டலாளர்கள் கருதும் ஒவ்வொரு தருணத்திலும் இவை பகிரங்கமாக வெளிக்காட்டப்படும்...'' *

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** தொகுதி 9, பக்கம் 174.

இன்று அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இன்னும் பல ஏகாதிபத்திய நாடுகளிலும் தொழிலாளர் இயக்கமும் மக்களின் உரிமைகள், சுதந்திரங்களும் பெரும் தாக்குதலுக்கு ஆளாகின்றன. இப்பின்னணியில் கடைக்கோடி வலதுசாரி கும்பல்களின் நடவடிக்கை, சில நேரங்களில் பாசிசப் போக்குடைய ஸ்தாபனங்களின் நடவடிக்கை தீவிரமடைகிறது, இது இந்த அரசாங்கங்களின் மீது மேன்மேலும் அதிகத் தாக்கம் செலுத்துகிறது.

இன்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் அதி தீவிர வலதுசாரிகள் சுறுசுறுப்படைந்திருப்பதை "நவீன மக்கார்டிசம்" என்கின்றனர். 1940க்களின் இறுதியில், 1950க்களின் துவக்கத்தில் அமெரிக்காவில் சோஷலிசத்திற்கு எதிரான "கெடுபிடி யுத்தத்தை" நோக்கி பெரும் திருப்பம் ஏற்பட்ட பொழுது அந்நாட்டில் அரசியல் பிற்போக்கு வலுப்பட்டது. விஸ்கோன்சின் மாநிலத்தைச் சேர்ந்த செனட்டர் ஜோசப் மக்கார்டி—இவருடைய பெயரால்தான் இக்காலகட்டம் மக்கார்டிசம் எனப்படுகிறது—அமெரிக்கா ஒரு பெரும் "கம்யூனிச சதி" வலையால் சூழப்பட்டுள்ளதாக நிரூபிக்க முயன்றார். "பேய் வேட்டை", வெளிப்படையான பாசிசக் கும்பல்களின் கூச்சல் கூட்டங்கள், மிதவாத காங்கிரஸ் பிரதிநிதிகள், விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்களை வேட்டையாடுதல், முற்போக்கு சமூக ஸ்தாபனங்களைச் சட்ட விரோதமாகத் தண்டித்தல் ஆகிய எல்லாமே மக்கார்டி முறையில் இருந்தன. இன்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள அதி தீவிர வலதுசாரி இயக்கத்தின் நோக்கங்களும் இதே மாதிரியானவை. உதாரணமாக, "பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்" பற்றிய செனட் துணை கமிட்டி ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது; இது ஜனநாயக ஸ்தாபனங்கள் மற்றும் "நம்பத்தகாதவர்களுக்கு" எதிராக சில அரசு ஸ்தாபனங்கள் மேற்கொண்டிருந்த பணியை மீண்டும் தொடரு

கிறது, இப்பணி முன்னர் ''உள்நாட்டுப் பாதுகாப்பு கமிட்டியிடமும்'' ''சீர்குலைவு நடவடிக்கை கண்காணிப்பு போர்டிடமும்'' இருந்தது. அனுமதி பெற்று ஒட்டுக் கேட்பதும் உளவு பார்ப்பதும் அதிகரித்துள்ளன.

வெளிப்படையான நிறவெறி, வன்முறையைத் தூண்டும் தேசியவெறி, அப்பட்டமான கம்யூனிச எதிர்ப்பு, இராணுவவெறி ஆகியவை ஊடுருவி நிற்கும் கோஷங்களுக்குப் பின் பெரும் மூலதனத்தின் வர்க்க நலன்கள் தென்படுகின்றன. இன்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் கடைக்கோடி வலதுசாரிகளின் இயக்கம் ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாகும். ''குக்லுஸ்கிளான்,'' நாஜி கோஷ்டிகள், நிறவெறி பிடித்த மத கோஷ்டிகள், ''அமெரிக்க பழமைவாத அமைப்பு'', ''ஜான் பெர்ச் சங்கம்'' போன்ற ஸ்தாபனங்கள், பல்வேறு ''ஆராய்ச்சி'' மையங்கள், வார மாத சஞ்சிகைகள், பதிப்பகங்கள் ஆகியவை இதிலடங்கும்.

ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டுக் கொள்கையில் மட்டுமின்றி வெளிநாட்டுக் கொள்கையிலும் பிற்போக்குத் தன்மை ஊடுருவியுள்ளது. ஆயுதப் போட்டி, அணு ஆயுத மிரட்டல், தேசிய விடுதலை இயக்கங்களை ஒடுக்குதல், உலக மேலாதிக்க நாட்டம் ஆகியவை இதிலடங்கும்.

பிற நாடுகளின் ஜனநாயகம், சுதந்திரம் மீது தமக்கு ஏதோ பெரும் அக்கறை உள்ளதாகக் காட்டி, அது சம்பந்தமான பொய்க் கோஷங்களை முன்வைத்து ஏகாதிபத்திய வட்டங்கள் ஆக்கிரமிப்பு வெளிநாட்டுக் கொள்கையை பின்பற்றுகின்றன. கிரினாடா நாட்டின் மீதான வெட்கக் கேடான ஆக்கிரமிப்பை வாஷிங்டனில் உள்ள ''சுதந்திர நண்பர்கள்'' ஏதோ ''ஜனநாயகப் புனரமைப்பாகச்'' சித்தரிக்கின்றனர். லெபனான், ஆப்கனிஸ்தான் ஆகிய நாடுகளின் உள் விவகாரங்களில் தாம் தலையிட்டதை அவர்கள் ''சுதந்திரம், சுயநிர்வாகத்திற்கான போராட்டம்'' என்கின்றனர். இவர்

களுடைய ஆதரவையும் ஆயுதங்களையும் பெற்று வரும் தென் கொரிய, பாக்கிஸ்தான், சிலி, சல்வடோர் நாடுகளின் சர்வாதிகார ஆட்சிக் கும்பல்கள் தத்தம் நாடுகளின் மக்களுக்கு எதிராக வெகுஜன பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன, கடும் அடக்குமுறைகளைப் பின்பற்றுகின்றன. அமைதியாக நடைபெறும் ஆர்ப்பாட்டங்களைச் சுட்டுக் கலைப்பது, கொடுஞ் சிறை முகாம்கள், எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதில் சாதாரண சட்ட வரையளவுகள் கூட பின்பற்றப்படாமை, இவையெல்லாம் ஏகாதிபத்திய அரசுகளின் ஆட்சியாளர்களைப் பொறுத்தமட்டில் சர்வசகஜம். உதாரணமாக, மக்கள் விரோத சர்வாதிகாரத்தைப் பாதுகாப்பது என்பது அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் ஓர் அம்சமாகியுள்ளது.

இவ்வாறாக, 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றிய ஏகபோகங்கள் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார, அரசியல் வளர்ச்சி மீது கணிசமான தாக்கம் செலுத்தின. உழைப்பாளிகளைச் சுரண்டுவது வலுப்படவும் முதலாளி வர்க்கம் மேன் மேலும் செல்வம் சேர்க்கவும் அதே பொழுது முதலாளி வர்க்கத்தின் ஒட்டுண்ணித்தனம் அதிகரிக்கவும் இந்த ஏகபோகங்கள் உதவின. ஏகபோகங்களின் ஆதிக்கமானது அரசியலில் “எல்லாத் துறைகளிலும்” பிற்போக்கு வலுப்பட்டதையும், பொருளாதாரத்தில் அழுகலும் ஒட்டுண்ணித்தனமும் பெருகியதையும் குறித்தது.

அத்தியாயம் ஆறு

# பன்னாட்டு ஏகபோக வலைப் பின்னல்

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் ஏகாதிபத்தியம் தனது பிற்போக்கு, ஆக்கிரமிப்புத் தன்மையை வலுப்படுத்தியது. இது **பன்னாட்டு இணையங்கள்** என்ற புதிய வகையான ஏகபோகங்கள் தோன்றி, வலுப்பட்டதுடன் தொடர்புடையது.

பன்னாட்டு இணையங்கள் என்றால் என்ன? இவற்றால் முதலாளித்துவ நாடுகளில் உள்ள மக்களுக்கு எத்தகைய பாதிப்புகள் ஏற்படுகின்றன?

## உலகப் பொருளாதாரப் பேரரசுகள்

சர்வதேச ஏகபோகங்களுக்கு மேலைய பூர்ஷ்வாப் பொருளாதார நிபுணர்கள் பல்வேறு பெயர்களைத் தருகின்றனர். பல்தேசிய, பன்னாட்டு, சூப்பர் நேஷனல், உலகம் தழுவிய, சர்வதேச தொழில் நிறுவனங்கள், கம்பெனிகள், இணையங்கள், கார்ப்பரேஷன்கள், குழுமங்கள் என்பவை அவற்றில் சிலவாகும். இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளில் கிளைகளை வைத்துள்ள கம்பெனிகளைப் பன்னாட்டு இணையங்களாக ஒரு சிலர் கருதுகின்றனர். வேறு சிலரோ,

ஸ்தாபன கட்டமைப்பு, சர்வதேச நடவடிக்கைகளில் ஈடுபடும் கம்பெனி மேலாளர்களின் நடத்தை, சிந்தனை, மூல தனத்தின் அளவு (100, 300 மில்லியன் டாலர்கள் அல் லது அதற்கும் மேற்பட்ட புரள்வை உடையவை), அயல் நாட்டுக் கிளைகளின் எண்ணிக்கை, வேறு சில அளவு நிலைக் குறியீடுகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்து கின்றனர்.

ஆனால், பன்னாட்டு இணையங்களைப் பற்றிய கிட்டத் தட்ட எல்லா பூர்ஷ்வா விளக்கங்களிலும் இவற்றின் ஏக போகத் தன்மை பெரும் கவனத்துடன் மூடிமறைக்கப் படுகிறது, "ஏகபோகம்" என்ற வார்த்தைக் கூடத் தவிர்க் கப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும். பெரும் முத லாளித்துவ இணையங்களை, அயல்நாட்டுக் கிளைகளையும் சார்பு கம்பெனிகளையும் கொண்ட ஆயிரக்கணக்கான கம் பெனிகளில் (சிறிய கம்பெனிகள் உட்பட) "கரைக்க" செய் யப்படும் சகலவித முயற்சிகளும் தற்செயலானவை அல்ல, இவற்றிற்கு குறிப்பிட்ட நோக்கம் உண்டு. முதலாளித்துவ உலகம் முழுவதும் பரவியுள்ள ஏகபோக வலைப் பின்ன லின் நடவடிக்கையை அழகுபடச் சித்தரித்து, அவற்றின் சுரண்டல் தன்மையை மூடிமறைப்பதுதான் இந்நோக்க மாகும்.

இன்று சர்வதேச அளவில் முதலீடு செய்யும் கம்பெனி களில் ஒரு சில பெரும் இணையங்கள் தனித்து தெரிகின் றன. இவற்றின் பொருளாதார வல்லமை மகத்தானது, இதுதான் குறிப்பிட்ட பண்டங்களின் உலகச் சந்தையில் இவற்றிற்கு ஆதிக்க நிலையை அளிக்கிறது. இந்த இணை யங்களில் ஒவ்வொன்றும் சாராம்சத்தில் சர்வதேச பொரு ளாதாரப் பேரரசாகும்.

ஐ. நா. நிபுணர்களின் மதிப்பீட்டின்படி, 1980ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் 350 முக்கிய பன்னாட்டு இணையங்களின் மொத்த ஆண்டுப் புரள்வு 2.5 டிரில்லியன்* டாலர்களை விஞ்சியது. இந்த இணையங்களின் தொழிற் சாலைகளில் சுமார் 25 மில்லியன் பேர் வேலை செய்தனர். இது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் செய் தொழில் துறையில் வேலை செய்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் 1/4 பகுதியாகும். இந்த இணையங் களுக்கு 23,000க்கும் கூடுதலா்ன அயல்நாட்டுக் கிளைகள் இருந்தன. முதலாளித்துவ நாடுகளின் மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் கிட்டத்தட்ட 1/3 பகுதி பன்னாட்டு ஏகபோகங்களின் தொழிற்சாலைகளில் உற்பத்தியாயிற்று. ஒரு சில மதிப்பீடுகளின்படி, இந்நூற்றாண்டின் இறுதியில், பன்னாட்டு இணையங்களால் உற்பத்தி செய்யப்படும் பொரு ளின் அளவு, முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் தோற்றுவிக்கப்படும் மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் சுமார் 40—50%ஆக இருக்கும். 2000ஆம் ஆண்டு வாக்கில் கிட்டத்தட்ட 300 பெரும் இணையங்கள், நடைமுறையில் உலக முதலாளித்துவ பொருளாதாரம் முழுவதையும் நிர் ணயிக்கும். பன்னாட்டு ஏகபோகங்கள் உற்பத்தி மற்றும் மூலதனத் திரட்சியில் புதிய கட்டமாகும். இவை ஏக போக பொருளாதார இணையங்களாகும், இவை பல்வேறு முதலாளித்துவ நாடுகளில் உள்ள கிளை கம்பெனிகளின் பரவலான, சிக்கலான உற்பத்தி, நிதி மற்றும் நிர்வாகத் தொடர்புகளை இணைத்து நிற்கின்றன. பன்னாட்டு இணை யங்களின் குறிப்பிடத்தக்கதொரு அம்சம் உற்பத்தியை சர்வ தேசமயப்படுத்துவதிலும் உழைப்புச் சக்தியைச் சுரண்டுவதி லும் இவற்றின் தீவிரப் பங்கேற்பாகும். பன்னாட்டு ஏகபோ

* டிரில்லியன் — ஒரு லட்சம் கோடி. — ப-ர்.

கங்கள் தம் உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கையில் சர்வதேச இணையங்களாகும், மூலதனத்தைப் பொறுத்த மட்டில் இவை பெரும்பாலும் தேசியத் தன்மையை உடையவை. உதாரணமாக, "ஜெனரல் மோட்டர்ஸ்"—அமெரிக்கப் பன்னாட்டு ஏகபோகம், "பிரிட்டிஷ்பெட்ரோலியம்"—பிரிட்டிஷ் ஏகபோகம், "பாஸ்ப்"—மேற்கு ஜெர்மனி பன்னாட்டு ஏகபோகம்.

சர்வதேச தொழிற்துறை இணையங்கள் தம் நாட்டிலும் அயல்நாடுகளிலும் பன்னாட்டு வங்கி ஏகபோகங்களுடன்—1970—1980ஆம் ஆண்டுகளில் இவை தம் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தின—சேர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன. பன்னாட்டு வங்கிகள் தம் சர்வதேச நடவடிக்கைகளுக்கு பஹாம்ஸ் மற்றும் கைமான்ஸ் தீவுகளைப் பெரிதும் வசதியானவையாகத் தேர்ந்தெடுத்துள்ளன. உதாரணமாக, இந்த இடங்களில் அமெரிக்க வங்கிகளின் கிளைகளுக்கு உள்ள இருப்புகள், மேற்கு ஐரோப்பா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் உள்ள அமெரிக்க வங்கிகளின் கிளைகளின் மொத்த இருப்பை விட அதிகமாகும். இப்படிப்பட்ட "சொர்க்கங்கள்", முதலாளித்துவ உலகம் முழுவதிலும் எந்த வித கட்டுப்பாடும் இல்லாமல், குறைந்தபட்ச செலவுகளுடன் சகலவித நிதி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பன்னாட்டு வங்கிகளுக்கு உதவுகின்றன.

இன்று பன்னாட்டுத் தொழிற்துறை மற்றும் வங்கி ஏகபோகங்கள் பெரும்பாலான நிதி குழுக்களின் உட்கருவாகத் திகழுகின்றன. இவற்றின் மூலம் தான் நிதி குழுக்கள் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்தின் மீது, பல நேரங்களில் அரசியலின் மீது தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயலுகின்றன.

எது பன்னாட்டு ஏகபோகங்களை உலகம் முழுவதும் செல்லு மாறு உந்தித் தள்ளுகிறது? அயல் நாடுகளில் முதலீடு செய்யும்படி எது இவற்றைத் தூண்டுகிறது? பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையிலிருந்து வெளிவர விடுதலை யடைந்த அரசுகளுக்கு உதவ வேண்டும் என்ற நாட்டம், அயல் நாடுகளில் உள்ள நுகர்வாளர்களின் வசதிகளைப் பற்றிய அக்கறை, அல்லது வேறு ஏதாவது ஒரு நல்ல நோக் கம் ஒருவேளை இதற்குக் காரணமோ? கிடையவே கிடை யாது.

மேன்மேலும் அதிகமான பணம் வேண்டும், தம் செல் வத்தை இன்னமும் பெருக்க வேண்டும் என்பதுதான் பன் னாட்டு ஏகபோகங்களின் உடைமையாளர்கள், மேலாளர் களின் ஒரே நோக்கமாகும். இதை அவர்கள் மூடிமறைப் பதும் இல்லை. அதிக லாபம் பெற வேண்டுமென்ற நாட்டம்தான் அயல் நாடுகளில் முதலீடு செய்ய தாம் விரும்புவதற்கு முக்கியக் காரணம் என்பதை இவர்கள் ஒளிவுமறைவற்று குறிப்பிடுகின்றனர்.

மூலதன ஏற்றுமதி மிக லாபகரமானதாக விளங்கு கிறது. ஏனெனில் அயல் நாட்டில், குறிப்பாக 'வளர்முக நாடுகளில் உழைப்புச் சக்தி பன்மடங்கு மலிவானது, தொ ழிற்சங்கங்கள் பலவீனமானவை அல்லது அறவே கிடை யாது; இங்கே மூலப்பொருள் மலிவானது, தனிப்பட்ட பொருட்களின் விற்பனைச் சந்தைகள் ஆதாயமானவை. உதாரணமாக, தென் கொரியாவில் தொழிலாளர்களின் ஊதியம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ளதை விடக் குறைவு, தென் கொரியாவில் சகலவித வேலைநிறுத்தங் களும் தடை செய்யப்பட்டுள்ளன, உலகிலேயே மிக நீண்ட வேலை நேரம் நிலவும் நாடுகளில் தென் கொரியாவும்

ஒன்று. எனவே இத்தகைய இடங்கள் அயல்நாட்டு ஏகபோ கங்களுக்கு சொர்க்கமாக இருப்பதில் வியப்பேதுமில்லை.

ஏகபோகங்கள் தம் மூலதனத்தைப் பிற நாடுகளுக்கு அனுப்புவதற்கு வேறு காரணங்களும் உண்டு. வெளிநாட்டுச் சந்தைகளில் நுழையும் வாய்ப்பைப் பெறுதல், சொந்தச் செலவை சிறு அளவில் வைத்து ஸ்தல கடன்களைப் பெற்று அயல் நாடுகளில் கணிசமான அளவில் முதலீடு செய்தல், சர்வதேச அளவில் நவீன தொழில்நுட்பச் செலவு களில் தகிடுதத்தங்களைச் செய்தல், அயல்நாட்டு நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெறுதல், பரவலான விற்பனைச் சந்தையை தோற்றுவித்து சொந்த வெளிநாட்டு வர்த்தக வளர்ச்சியை இலகுவாக் குதல் ஆகியவை இக்காரணங்களாகும். பன்னாட்டு ஏகபோ கங்களின் அயல்நாட்டுக் கிளைகள் தம் பண்டங்கள் சுங்கத் தடைகளைக் கடக்க உதவுகின்றன.

முதலாளித்துவ உலகைச் சேர்ந்த நாடுகளில் பன்னாட்டு ஏகபோகங்கள் அடிக்கும் கொள்ளை மிகப் பல்வேறானதாக இருப்பதால் இவ்வாறு அடிக்கப்படும் கொள்ளை எவ்வளவு என்று குத்துமதிப்பாகக் கூடச் சொல்ல முடியாது. என்றா லும் ஒரு சில மதிப்பீடுகளைச் சுட்டிக்காட்டலாம். 1980ஆம் ஆண்டுகளின் நடுவில் 300 முக்கியப் பன்னாட்டு ஏகபோ கங்களின் ஆண்டு நிகர லாபம் 100 பில்லியன் டாலர்களை விஞ்சியது. தம் லாபத்தில் கிட்டத்தட்ட $^1/_3$ பகுதியை இவை அயல் நாடுகளிலிருந்து பெற்றன. இவற்றின் அயல் நாட்டு லாபம் மட்டும் 1970—1980இல் மும்மடங்கு கூடின. முன்போன்றே இதில் பெரும் பகுதி அமெரிக்க பன்னாட்டு இணையங்களுக்கு உரியது. இவை அயல் நாடுகளிலிருந்து பெறும் லாபம், ஆண்டுதோறும் தாம் இடும் மொத்த நேரடி முதலீட்டை விட அதிகமானது. பன்னாட்டு ஏகபோ கங்கள் வளர்முக நாடுகளில் ஆண்டுதோறும் தாம் இடும்

முதலீட்டை விட 1.5 மடங்கு அதிகமாக அங்கிருந்து எடுத்துச் செல்கின்றன.

இந்த புள்ளிவிவரங்கள் அயல் நாடுகளில் பன்னாட்டு ஏகபோகங்கள் கடைப்பிடிக்கும் கொள்கையின் சுரண்டல் தன்மையை, அவை அடிக்கும் கொள்ளையைப் படம் பிடித்து காட்டுகின்றன.

## ஏகபோகங்களின் வெளிநாட்டு விஸ்தரிப்பின் பொருளாதாரப் பின்விளைவுகள்

உலக முதலாளித்துவ உற்பத்தி, முதலாளித்துவ வர்த்தகம், விஞ்ஞான தொழில்நுட்பச் சாதனைகள் ஆகியவற்றில் மேன்மேலும் அதிகமான பங்கை பன்னாட்டு ஏகபோகங்கள் தம் கரங்களில் எடுத்து வருகின்றன. எனவே இவை அளவிலும் தீவிரத் தன்மையிலும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மீது மேன்மேலும் அதிகமான தாக்கத்தைச் செலுத்துகின்றன, நவீன முதலாளித்துவத்தின் பொருளாதார வளர்ச்சியில் பொது ஸ்திரமின்மை வலுப்பட்டு வருவதற்கான முக்கியக் காரணிகளில் ஒன்றாகத் திகழுகின்றன. சர்வதேச உழைப்புப் பிரிவினையை ஆழப்படுத்தி, முதலாளித்துவப் பொருளாதாரம் ஏகபோகமயப் படுத்தப்படுவதைப் பெரிதும் அதிகப்படுத்தும் இவை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டத்திற்கும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் தன்மைக்கும் இடையிலான முரண்பாட்டைக் கூர்மையாக்குகின்றன. பன்னாட்டு சிலந்தி வலை என்பது ஒரு சில தனிநபர்களின் கரங்களில் குவிந்துள்ள பொருளாதார வல்லமையாகும். உற்பத்தியை மேன்மேலும் பொதுமைப்படுத்தும் பன்னாட்டு ஏகபோகங்கள் பொருளாயதச் செல்வங்கள் முதலாளித்துவ தனியுடைமை வடிவத்தில் சுவீகரிக்கப்படும் அதே அடித்தளத்தைப் பேணிக்

காக்கின்றன. ஏகபோகங்கள் வளர வளர, உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் முதலாளித்துவ சுவீகரிப்பு வடிவத் திற்கும் இடையிலான முரண்பாடு வலுப்படுகிறது, நவீன முதலாளித்துவத்தின் பொருளாதார, சமூக, அரசியல் பகை முரண்பாடுகள் கூர்மையடைகின்றன.

நவீன முதலாளித்துவத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் காணப்படும் முரண்பாடுகளிலிருந்து வளரும் பன்னாட்டு இணையங்கள் இவற்றைத் தற்காலிகமாக, பகுதி யளவிற்குத் தீர்க்கும் வழிகளைத் தோற்றுவிக்கின்றன, ஆனால் இம்முரண்பாடுகளை முழுமையாகத் தீர்க்க இந்தப் பன்னாட்டு இணையங்களால் முடியாது. தொழில்நுட்ப வளர்ச்சிப் பிரச்சினையை எடுததுக் கொள்வோம்.

உபரி மதிப்பைப் பெறுவது, லாபத்தை அதிகபட்ச மாக்குவது என்பதுதான் முதலாளித்துவ உற்பத்தியின் முக்கிய நோக்கமாகும். எனவே விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகள் சமுதாயம் முழுவதன் நலன் கருதி பயன்படுத்தப்படுவதில்லை, மாறாக சர்வதேச ஏக போக மூலதனம், நிதி மூலதன ஏகபோகக் குழுவின் குறுகிய சுயநல லட்சியங்களுக்காகப் பயன்படுத்தப்படு கின்றன. பல நேரங்களில் பன்னாட்டு ஏகபோகங்கள் தம் லாபங்களைப் பேணிக் காத்து, பெருக்க வேண்டும் என்பதற் காகவே தம் நாட்டிலும் அயல் நாடுகளிலும் அடிப்படை ஆராய்ச்சிகள், வடிவமைப்பு பணிகளுக்குச் செயற்கைத் தடை களை இடுகின்றன. இதோ ஒரு சில உதாரணங்கள். பன் னாட்டு எண்ணெய் கம்பெனிகள் பிற எரிசக்தி வளங்களை ஆராய்ந்து, நடைமுறையில் பயன்படுத்தும் முயற்சிகளுக்கு நீண்ட காலமாக தடைகளை ஏற்படுத்தி வந்தன; எண் ணெயின் அடிப்படையில் இல்லாமல் பிற எரிபொருட்களின் (எரிவாயு) அடிப்படையில் இயங்கும் கார்களைத் தோற்று

விக்கும் முயற்சிகளுக்குப் பெரும் கார் கம்பெனிகள் முட்டுக் கட்டைகளை ஏற்படுத்தி வந்தன.

இன்று பன்னாட்டு ஏகபோகங்கள் வளர்முக நாடுகளுக்கு மூலதனத்தைப் பெருமளவில் ஏற்றுமதி செய்கின்றன. இவை "சர்வதேச பொருளாதார வளர்ச்சி மற்றும் வளத்தின் செயல்வன்மை மிக்க உந்துச் சக்திகளாக" செயல்படுவதாக மேலைய நூல்கள் குறிப்பிடுவதை அடிக்கடி காணலாம். இதே நேரத்தில், மூலதனத்தை இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு எத்தகைய தீய பின்விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை மூடிமறைக்க, இவற்றை குறைத்துக் காட்ட மேலைய பொருளாதார நிபுணர்கள் முயலுகின்றனர். ஒரு வீட்டில் குடியிருப்பவன் வாடகை செலுத்துவதைப் போன்றே, அயல்நாட்டு கம்பெனிகளின் ஆதாயங்களைப் பெறும் பொழுது அதற்கான கட்டணத்தை—விலையை—செலுத்தியாக வேண்டும் என்று கூறி இவர்கள் ஏகபோகங்களை நியாயப்படுத்துகின்றனர்.

அயல்நாட்டு மூலதனம் வருவதால் பல நாடுகளில் தேசியத் தொழிற்துறை உற்பத்தியின் வளர்ச்சி வேகங்கள் குறைகின்றன. ஒரு நாட்டினுள் புகும் பன்னாட்டு ஏகபோகம், எண்ணெய் கசிவைப் போல் பரவுகிறது. இது தன் கண்ணில் படும் அனைத்தையும் வாங்குகிறது, தேசியப் பொருளாதாரத்தை ஆட்டங்காணச் செய்கிறது. வலிமையானவர்கள் பலங்குன்றியவர்களை வெல்லுவர் என்ற காட்டு விதியின்படி இவை செயல்படுகின்றன. தொழிற்துறையின் முக்கியப் பிரிவுகளில் உறுதியான இடங்களைப் பிடித்து, தம் வசமுள்ள சகலவித சாதனங்களாலும் வலையை விரித்த பின் இவை இப்பிரிவுகளில் தேசிய மூலதனம் பரவலான அளவில் நுழையாமல் செய்கின்றன. தேசிய மூலதனம் தன் சந்தையினுள் சுருங்கும் கட்டாயத்திற்குள்ளாகிறது. இவையெல்லாம் தேசிய

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக விளங்கு கின்றன.

ஏகபோகங்கள் மூலதனத்தை கொண்டுவருவதோடு கூட நவீன தொழில்நுட்பம், கட்டமைப்பையும் கொண்டுவந்து, ஏதோ தேசியத் தொழிற்துறைக்கு உதவுவதாக பன்னாட்டு இணையங்களின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். ஆனால் நடைமுறையில் பன்னாட்டு இணையங்கள் தம் வலிமை யைப் பயன்படுத்தி ஸ்தல உற்பத்தியாளர்களை லாபகர மான துறைகள், பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த பிரதேசங்களிலிருந்து வெளியேற்றுகின்றன.

குறுகிய சுயநல நோக்கங்களைக் கொண்ட பன்னாட்டு இணையங்கள் ஏதாவது காரணங்களுக்காக எந்த நேரத் தில் வேண்டுமானாலும் திடீரென்று உற்பத்தியை நிறுத்தி ஸ்தல கம்பெனிகளுடனான உறவை முறிக்கக் கூடும். இத னால் புதிய இடர்ப்பாடுகள், தேசியப் பொருளாதாரத்தில் சீரிசைவின்மை ஏற்படும். பன்னாட்டு ஏகபோகங்கள் தேர்ச்சி மிகு உழைப்பாளிகள், பொறியியல் தொழில்நுட்பப் பணி யாளர்களை ஏமாற்றி கவருகின்றன, இதனால் உள் நாட்டில் உழைப்புச் சக்தி பற்றாமல் போகிறது. நெருக்கடி கள் ஏற்பட்டாலோ, தொழில் வளர்ச்சி குன்றினாலோ அயல்நாட்டு கம்பெனிகள் பல்லாயிரக்கணக்கானோரை வேலையிலிருந்து வெளியேற்றும், வேலையில்லாத் திண் டாட்டம் அதிகரிக்கும்.

பல்வேறு நாடுகளில் உள்ள கிளைகளுக்கு இடையில் ஏராளமான பணம் புரள்வதையடுத்து பன்னாட்டு இணை யங்களின் நடவடிக்கை அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலைகளைப் பாதிக்கிறது. இப்பணம் பெருமளவில் தேசிய எல்லைகளை கடந்து செல்வதால் உள்நாட்டு பணப் புழக் கத்தில் குழப்பங்கள் ஏற்படுகின்றன, செலாவணி விகிதங் களில் கடுமையான ஊசலாட்டங்கள் தோன்றுகின்றன.

குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடு, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரிட்டன், பிற ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு கம்பெனிகள் வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதைப் பற்றி விரிவாக நவீன காலனியாதிக்கம் பற்றிய அத்தியாயத்தில் பார்ப்போம்.

**பன்னாட்டு ஏகபோகங்களால் என்ன பயன்?**

சர்வதேச இணையங்களின் நடவடிக்கை பரவலான உழைப்பாளி மக்களின் நலன்களுக்கு முரணானது, இது முதலாளித்துவ நாடுகளில் உள்ள பெரும்பாலான மக்களுக்குத் தீங்கிழைக்கிறது. பன்னாட்டு ஏகபோகங்கள் தொழிலாளி, விவசாயி, பண்ணை விவசாயி, சிறு கடைச் சொந்தக்காரன், மருத்துவர், பொறியியலர், விஞ்ஞானி, எழுத்தாளன் ஆகிய அனைவரையும் ஈவிரக்கமின்றி சுரண்டுகின்றன. தம் சுயநலத்திற்காக, கொள்ளை லாபம் அடிக்க வேண்டும் என்பதற்காக இவை தேவையில்லாத பொருளை மட்டு மல்ல, உடல் நலத்திற்கு ஆபத்தான, கேடிழைக்க வல்ல, ஆனால் தமக்கு லாபகரமான பொருளையும் நுகர்வாளர்கள் மீது திணிக்கின்றன.

பன்னாட்டு ஏகபோகங்கள் முன்பின் காணா அளவிற்கு ஆயுதப் போட்டியை முடுக்கி விட்டுள்ளன, பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடித்து, சோதிக்கும் தீய செயலில் ஈடுபட்டுள்ளன.

லாப வேட்டையில் மக்களின் வாழ்க்கையையும் உடல் நலத்தையும் பலியிட ஏகபோகங்கள் முயலும் பொழுது பன்னாட்டு இணையங்களுக்கும் முதலாளித்துவ நாடுகளில் உள்ள பெரும்பாலான மக்களின் நலன்களுக்கும் இடையிலான மோதல் கடுமையான வடிவங்களில் வெளிப்படுகிறது.

"ஃபயர்ஸ்டோன்" என்ற அமெரிக்க கம்பெனியின் விளம்பரப் படங்களில் ஒரே காட்சி திரும்பத் திரும்ப இடம் பெற்றது: கம்பெனி எவ்வளவு அற்புதமான, நம்பகரமான கார் டயர்களைத் தயாரிக்கிறது என்று காட்டப்பட்டது. 500 வரிசையைச் சேர்ந்த கார் டயர்கள்தான் உலகிலேயே தலை சிறந்தவை, அதி நவீனமானவை என்று இவ்வர்த்தக விளம்பரப் படங்கள் முதலாளித்துவ உலகம் முழுவதும் தம் பட்டம் அடித்தன.

இதை எளிதாக நம்பியவர்கள் ஒரு சில ஆண்டுகளில் லட்சோபலட்சம் "ஃபயர்ஸ்டோன்" டயர்களை வாங்கினர். இப்படிப்பட்ட பொய்யான விளம்பரம் வர்த்தக உலகில் ஒன்றும் அபூர்வமல்ல என்றாலும் இந்த டயர்கள் விஷயம் உலகம் தழுவிய ஊழலாகியது. மிகப் பெரும் குறைகள் வெளிப்பட்டன. பல்லாயிரக்கணக்கான சாலை விபத்துகளுக்கு இந்த டயர்தான் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த விஷயம் பரவாமலிருக்க ஏகபோகம் இயன்ற அனைத்தையும் செய்தது. என்றாலும் இதை மூடிமறைக்க இயலவில்லை. விபத்துகளைப் பற்றிய விவரங்கள் பல நாட்டுப் பத்திரிகைகளில் வெளியாயின. அமெரிக்க நீதிமன்றங்களில் மட்டும் இந்த டயர்கள் சம்பந்தப்பட்ட பெரும் வழக்குகள் 250க்கும் மேல் விசாரிக்கப்பட்டன. அமெரிக்க சாலைப் பாதுகாப்பு மையத்தின் தலைமை, டயர் விளம்பரத்திற்காக ஒதுக்கப்படும் நிதியில் ஒரு பகுதியை டயர்களின் தரக் கண்காணிப்பை வலுப்படுத்த பயன்படுத்துமாறு முன்மொழிந்த பொழுது ஏகபோகம் பாதி விலையில் டயர்களைப் பெருமளவில் விற்கத் துவங்கியது. இந்த டயர்களின் விற்பனை அமெரிக்க ஐக்கிய நாட்டில் தடை செய்யப்பட்ட பின் இவற்றை மேற்கு ஐரோப்பாவிலும் வளர்முக நாடுகளிலும் மிக குறைந்த விலைக்கு விற்கலாயினர்.

சமீப ஆண்டுகளில் தரக் குறைவான மருந்துகள்,

குழந்தை உணவு, தொலைக் காட்சி திரைக் குழாய்கள், இன்னும் சில பண்டங்களை பன்னாட்டு ஏகபோகங்கள் இதே மாதிரி விற்றன; மக்களின் உடல் நலத்திற்குக் கேடேற்படுத்தக் கூடிய இவற்றின் மீது அந்த நாடுகளில் தடை விதிக்கப்பட்டிருந்தது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் தடை செய்யப்பட்ட நூறு வகைகளுக்கும் மேற்பட்ட மருந்துகளை ஏகபோகங்கள் லத்தீன் அமெரிக்க நாடுகளில் விற்றன. உடல் நலத்திற்குக் கேடேற்படுத்தும் மருந்துகளைத் தெரிந்தே அயல் நாடுகளில் விற்பதன் மூலம் பன்னாட்டு இணையங்கள் வளர்முக நாடுகளின் மக்களை ''பரிசோதனை மிருகங்களாக'' நடத்துகின்றன. கிட்டத்தட்ட குற்றத்திற்குச் சமமான சமூக விரோத கொள்கை பன்னாட்டு இணையங்களுக்கு சர்வசகஜமாகும்.

கொள்ளை லாப வேட்கையில் பன்னாட்டு ஏகபோகங்கள் வெளிப்படையான குற்றங்களிலும் இறங்குகின்றன.

1984ஆம் ஆண்டின் இறுதியில் பன்னாட்டு ஏகபோகமாகிய ''யூனியன் கார்பைடு'' இந்திய மாநிலம் மத்தியப் பிரதேசத்தின் தலைநகரம் போபாலைச் சுடுகாடாக்கியது. இது சோகம், ஈனச் செயலின் அடையாளமாக மனிதகுலத்தின் நினைவில் என்றென்றும் நிலைத்து நிற்கும். இக்கம்பெனி தொழிற்சாலையிலிருந்து வெளியேறிய நச்சு வாயுக்களால்—மெத்தில்லிசோசையனேட், ஃபோசோகென் வாயுக்களால்—2,500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர், பல்லாயிரக்கணக்கானோர் கண்பார்வையை இழந்து வருகின்றனர், ஏராளமானோரின் சிறுநீரகங்களும் நுரையீரலும் பாதிக்கப்பட்டன. மொத்தத்தில் 50,000க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர்.

இந்தியாவில் நடந்த ''யூனியன் கார்பைடு'' சோக சம்பவம் தற்செயல் அல்ல. வளர்முக நாடுகளில் உள்ள மக்களின் உடல் நலத்தை இப்படிப்பட்ட பன்னாட்டு ஏக

போகங்கள் அலட்சியப்படுத்தி வருவதுதான் இதற்குக் காரணமாகும். இந்தியாவில் உள்ள தொழிற்சாலையைப் போன்ற அதே தொழிற்சாலை அமெரிக்காவிலும் இருக்கிறது. ஆனால் அங்கே உள்ள பாதுகாப்பு அமைப்பைப் போன்ற எதுவும் போபால் தொழிற்சாலையில் வைக்கப்படவில்லை; தன் லாபத்தில் இதற்காக ஒரு சிறு பகுதியை ஒதுக்க ஏகபோகம் தயாராயில்லை. இப்பாதுகாப்பு அமைப்பு மட்டும் இருந்திருந்தால் நச்சு வாயு வெளியேறுவதைத் தடுத்திருக்கலாம். அத்தொழிற்சாலையில் இதற்கு முன்னரே மனித உயிர்களைப் பறித்த விபத்துகள் நடந்திருக்கின்றன; நச்சு வாயு வெளியேறும் அபாயம் உள்ளது பற்றி ஸ்தல இந்திய அதிகாரிகள் தொழிற்சாலை நிர்வாகிகளைப் பன்முறை எச்சரித்திருந்தனர்.

''இது நாகரிகத்தைப் பெறுவதற்காக இந்தியா தந்த விலை'' என்று ஒரு சில மேலைய முதலாளிகள் கூறினர். இதை விட கேவலமான ஓர் அணுகுமுறையைக் கற்பனைக் கூடச் செய்ய முடியாது. நாகரிகத்திற்கு விலையா? மனிதர்களை வைத்து விஷ மருந்துகளைச் சோதித்தார்களே நாஜிகள், அந்த நாஜிகள் கொண்டுவர விரும்பிய ''நாகரிகத்தைப்'' போல் இது இருக்கின்றதே. இப்படிப்பட்ட ஒரு கொடிய குற்றத்தை இழைத்த பின்னும், பெரும் நச்சு வாயுக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் முறைகளை ''யூனியன் கார்பைடு'' இந்திய மருத்துவர்களுக்கு விளக்காமல் மறைத்தது. ஏகபோகங்களின் உயர் மட்ட மேலாளர்கள் இவ்விபத்தை எப்படி அணுகினர் என்று இதிலிருந்து நன்கு தெரிகிறது.

ஏகபோகங்களின் கொடூரப் போக்கிற்கு இதோ இன்னுமொரு உதாரணம். 1980க்களின் முதல் பாதியில் ''டோவ் கெமிக்கல்'' என்ற அமெரிக்க பன்னாட்டு இரசாயன இணையமும் பெண்டகனும் கூட்டாகச் சேர்ந்து நடத்திய காட்டு

மிராண்டித்தனமான பரிசோதனைகளால் அமேஜான் ஆற்றுப் படுகையில் தக்கூன்தா, துப்பிகுவாரினி பழங்குடிகளைச் சேர்ந்த ஒரு சில ஆயிரம் செவ்விந்தியர்கள் கொல்லப்பட்டனர்.

இரண்டு இன செவ்விந்தியப் பழங்குடிகள் முழுவதுமாக அழிக்கப்பட்டனர், தாவர உலகிற்கும் விலங்குலகிற்கும் நிவர்த்தி செய்யப்பட முடியாத இழப்பேற்பட்டது, ஈடு இணையற்ற 25,000 வகையான தாவரங்களும் பிராணிகளும் (இவற்றில் பல உலகில் அமேஜான் ஆற்றுப் படுகையில் மட்டுமே உள்ளன) அழியும் அபாயம் தோன்றியது.

இந்த பாதகமான பரிசோதனைகளைக் கேள்விப்பட்டு முற்போக்கு மனிதகுலம் முழுவதுமே கொதித்து எழுந்தது. பல சர்வதேச ஸ்தாபனங்கள், பிரபல சட்ட நிபுணர்கள், மருத்துவர்கள், உயிரியல் வல்லுனர்கள், புறச் சூழல் நிபுணர்கள் ஆகியோர் இப்பயங்கரப் பரிசோதனைகளை வன்மையாகக் கண்டித்தனர்.

பன்னாட்டு ஏகபோகங்களின் குற்றப் பட்டியலில் மிகப் பரவலான ஒன்று தம் நாட்டிலும் பிற நாடுகளிலும் உயர் அதிகாரிகளையும் அரசியல் தலைவர்களையும் லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்குவதாகும். ஏராளமான ஏகபோகங்கள் இப்படிப்பட்ட ஊழல் விவகாரங்களில் ஈடுபட்டுள்ளன என்பது அம்பலமாகியுள்ளது. உதாரணமாக, ‘‘போயிங்’’ கம்பெனி, அயல் நாடுகளில் தான் 40 மில்லியன் டாலர்களை லஞ்சமாகத் தந்ததை ஒப்புக் கொள்ள வேண்டி வந்தது. என்றாலும் இது முழு விவரமாக இருக்கவில்லை. அமெரிக்க பங்கு மார்கெட் கமிஷனின் மதிப்பீட்டின்படி, இக்கம்பெனி அயல் நாடுகளில் அளித்த லஞ்சம் 80 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாகும். மத்தியக் கிழக்கில் இக்கம்பெனி தன் இடைத்தரகர்களின் மூலம், எகிப்து, சவுதி அரேபியா, இன்னும் சில நாடுகளின் விமான கம்

பெனிகள் ''போயிங்'' விமானங்களை வாங்குவதற்காக இவற்றிற்கு அரேபிய ஷேக்குகளிடமும் மற்ற பெரும் பண முதலைகளிடமும் கடன்களுக்கு ''ஏற்பாடு'' செய்தது. இதே இடைத்தரகர்களின் மூலம் ''போயிங்'' கம்பெனி செல்வாக்கு மிக்க கட்சிகள், ஸ்தாபனங்களின் தலைமையை விலைக்கு வாங்கியது. இதே வழியில்தான் இது மற்ற நாடுகளுக்கும் தன் விமானங்களை விற்றது.

''வர்த்தக நடைமுறையால்'' கட்டளையிடப்பட்ட ''இச்சாதாரண'' முறைகளைப் பயன்படுத்தி அயல் நாடுகளில் தம் பொருட்களை விற்பதென்பது பன்னாட்டு ஏகபோகங்களுக்கு சர்வசகஜமாகி விட்டது. இம்முறைகளை இவை திறமையாக மூடிமறைக்கின்றன. ஆனால் சமீப ஆண்டுகளில் பல ஊழல்கள் அம்பலமாகியுள்ளதையடுத்து அயல் நாடுகளில் தம் நடவடிக்கைகளை மூடிமறைத்து அவற்றை மறைமுகமாகத் தமக்குக் கட்டுப்பட்ட கம்பெனிகள் மூலம் நடத்த ஏகபோகங்கள் முயலுகின்றன.

பன்னாட்டு ஏகபோகங்களின் பொருளாதார வல்லமை பெருகியுள்ளதன் மிக முக்கிய பின்விளைவுகளில் ஒன்று இந்த ஏகபோகங்கள் தோன்றிய நாடுகளிலும், இவற்றின் மூலதனம் எந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகிறதோ அங்கும் அரசியல் பிற்போக்கு வளர்ந்து வருவதாகும். இங்கே, வெகுஜன தகவல் தொடர்புச் சாதனங்களை ஏகபோகங்கள் கைப்பற்றியுள்ளதைக் குறிப்பாகச் சுட்டிக்காட்ட வேண்டும். அதுவும் ஸ்தல பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சி நிலையங்கள் மீது மட்டுமின்றி, மிகப் பெரும் வார, மாத சஞ்சிகைகள், பதிப்பகங்கள், முதலாளித்துவ உலகம் பூராவும் செல்லும் பத்திரிகைகள், இதழ்கள், வானொலி, தொலைக் காட்சி நிலையங்கள் மீது ஏகபோகம் அக்கறை செலுத்துகிறது. இவை பன்னாட்டு ஏகபோகங்களின் பொருட்கள் உண்மையிலேயே போட்டி கம்பெனிகளின் பொருட்

களை விட மேலானவையா என்பதைப் பார்க்காமல் கண் களை மூடிக் கொண்டு விளம்பரம் செய்கின்றன. பல நேரங்களில் இவை வாடிக்கையாளர்கள் தேவையில்லாப் பொருட்களை வாங்கும்படி செய்கின்றன, முதலாளித்துவப் பொருளாதாரம் ஏகபோகமயப்படுத்தப்படுவது அதிகரிக்கச் செய்கின்றன, ஏகபோகங்களுக்கு அனுகூலமான பொது மக்கள் கருத்தை ஏற்படுத்துகின்றன. விளம்பரங்கள் ஒரு புறமிருக்க, பன்னாட்டு ஏகபோகங்களின் நேரடிக் கட்டுப் பாட்டின் கீழ் உள்ள வெகுஜன தகவல் தொடர்புச் சாத னங்கள் ஏகபோகங்களின் சித்தாந்தம், கண்ணோட்டங் கள், வாழ்க்கை வரையளவுகளை முதலாளித்துவ உலகம் முழுவதன் மீது திணிக்க முயலுகின்றன. உதாரணமாக, சர்வதேச இராணுவ-தொழிற்துறை இணையங்கள் வெகு ஜன தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி இரா ணுவவெறியையும் கம்யூனிச எதிர்ப்பு வெறியையும் பரப்புகின்றன.

பன்னாட்டு ஏகபோகங்கள் பல்வேறு நாடுகளில் உள்ள பிற்போக்குக் கட்சிகள், அரசியல் தலைவர்களுடனான தம் தொடர்புகளை விரிவுபடுத்துகின்றன. இவர்களின் தேர்தல் பிரசாரங்களுக்கு இந்த ஏகபோகங்கள் நிதியளிக்கின்றன, அல்லது அவர்களை அப்படியே விலைக்கு வாங்குகின்றன. இராணுவ, இராணுவ-தொழிற்துறை வட்டங்களுடன் உள்ள தொடர்புகளை வலுப்படுத்துவதற்குப் பல பன்னாட்டு ஏக போகங்கள் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றன.

சமீப ஆண்டுகளில் பெரும்பாலான பன்னாட்டு ஏகபோ கங்கள் இராணுவத் துறையின் மீது கவனம் செலுத்த முக் கியக் காரணம் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நெருக்கடிகள் தோன்றியுள்ளதும், சிவில் துறைகளில் கொள் ளை லாபம் பெறும் வாய்ப்பு குறைந்துள்ளதும், வளர் முக நாடுகளில் “முதலீட்டுச் சூழல்” மோசமடைந்துள்ள

தும் ஆகும். மேன்மேலும் அதிகமான அளவு பன்னாட்டு ஏகபோகங்கள் இராணுவ உற்பத்தியில் நுழைகின்றன. ஏற்கெனவே இவற்றில் பல பெரும் இராணுவ காண்டிராக்ட் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. உதாரணமாக, பெண்டகனின் மிகப் பெரும் இராணுவ ஆர்டர்கள் ''ஜெனரல் எலெக்ட்ரிக்'', ''வெஸ்டிங்ஹவுஸ்'' போன்ற பிரபல பன்னாட்டு ஏகபோகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1970—1980க்களில் பன்னாட்டு ஏகபோகங்களால் ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்படுவது பெருமளவில் அதிகரித்துள்ளது. இராணுவ முக்கியத்துவமுடைய லைசென்ஸ்கள் விற்பனை, இராணுவ-தொழிற்துறைக் கிளைகளையும் கூட்டு அமைப்புகளையும் அயல் நாடுகளில் தோற்றுவிப்பது, இராணுவ முக்கியத்துவமுடைய மூலப்பொருளை எடுத்து விற்பது போன்றவற்றால் பல ஏகபோகங்கள் பெரும் லாபமீட்டுகின்றன. சர்வதேச இராணுவ வியாபாரம் வெளி விஸ்தரிப்பு சம்பந்தமாக அதிக நெளிவு சுழிவான கொள்கையை பின்பற்றவும் ஏகபோக லாபங்களைப் பெருக்கவும் உதவுகிறது. பன்னாட்டு ஏகபோக மூலதனம் தன் குறுகிய சுயநல நோக்கங்களுக்காக ஆயுதப் போட்டியை முடுக்கிவிட்டு வருகிறது. பன்னாட்டு ஏகபோகங்களின் நிர்ப்பந்தத்தால் **நேட்டோ** உறுப்பு நாடுகளும் மற்ற ஏகாதிபத்திய இராணுவ அரசியல் கூட்டுகளின் உறுப்பு நாடுகளும் இராணுவ செலவுகளை அதிகரிக்கின்றன, புதிய வகையான ஆயுதங்களைத் தோற்றுவிப்பதில் ஈடுபடுகின்றன.

இவ்வாறாக, முதலாளித்துவ உலகம் முழுவதும் நிதி மூலதன ஏகபோகக் குழு தன் ஆக்கிரமிப்பு, மக்கள் விரோத கொள்கையை கடைப்பிடிக்க பன்னாட்டு ஏகபோகங்கள் முக்கியச் சாதனமாகத் திகழுகின்றன. பல நாடுகளின் பொருளாதார வாழ்வில் புகும் பன்னாட்டு ஏகபோகங்கள் முதலாளித்துவ உலகம் முழுவதிலுமிருந்து பணத்தை உறிஞ்சி

ஒரு சில பண முதலைகளின் பெட்டிகளை நிரப்பும் பம்பு களாகத் திகழுகின்றன. பன்னாட்டு ஏகபோகங்கள் என்பது இதுவரை முதலாளித்துவ வரலாறு அறியாத அளவிற்குப் பேராசை பிடித்த ஊனுண்ணிகளாகும். வளர்முக நாடு களைக் கொள்ளையடித்து, வளர்ச்சியடைந்த முதலாளித் துவ நாடுகளின் உழைப்பாளிகளை மேன்மேலும் அதி கமாகச் சுரண்டும் இப்பன்னாட்டு ஏகபோகங்கள் அதே நேரத்தில் ஆயுதப் போட்டியைக் கடுமையாக முடுக்கி விடு கின்றன, உலகை அணு ஆயுத யுத்தத்தை நோக்கித் தள்ளுகின்றன.

அத்தியாயம் ஏழு

# ஏகபோகங்களுக்கும் பூர்ஷ்வா அரசிற்கும் இடையிலான கூட்டு

எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் முதலாளி வர்க்கம் அரசை ஆதாரமாகக் கொண்டு செயல்படுகிறது. இந்த ஆதரவு இல்லாமல் ஒரு நாள் கூட அதனால் நிலைத்திருக்க முடியாது. பொருளாதார ரீதியில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசியல் ஸ்தாபனமாகத் திகழும் அரசு, முதலாளித்துவ நாடுகளில் முதலாளி வர்க்கத்தின் நலன் களையும் அக்கறைகளையும் பிரதிபலிக்கிறது, அதன் சொத் தைப் பேணிக் காத்து, சகலவிதங்களிலும் பெருக்குகிறது, முதலாளித்துவ நாடுகளில் உள்ள பெரும்பாலான மக் களை முதலாளி வர்க்கம் சுரண்டுவதற்குச் சட்ட பூர்வமான வடிவத்தைத் தருகிறது. நவீன முதலாளித்துவ அரசு என்பது பெரும் ஏகபோக முதலாளிகள், நிதி மூலதன ஆதிக்கக் குழுவின் சர்வாதிகாரமாகும். முதலாளி வர்க்கத் திற்கு அடங்கி நடக்கும் கருவியாகத் திகழும் இது ஏகாதி பத்திய நாடுகளின் அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளின் மீது மட்டுமின்றி பல பொருளாதார நிகழ்ச்சிப் போக்கு களின் மீதும் தாக்கம் செலுத்துகிறது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் முதலாளித்

துவப் புனருற்பத்தியின் முரண்பாடுகள் கூர்மையடைந்தன, உற்பத்தி மற்றும் மூலதனக் குவிப்பு அதிகரித்தது, பன்னாட்டு ஏகபோகங்கள் தோன்றின, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் வலுப்பட்டது; இப்பின்னணியில் பொருளாதாரத்தில் அரசின் தலையீடு பெரிதும் அதிகரித்தது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் அரசு உறுப்புகள் எந்த நோக்கத்தோடு பொருளாதாரத்தில் தலையிடுகின்றன? இத்தலையீட்டின் முக்கிய வடிவங்கள் யாவை? இக்கேள்விகளுக்கான பதில்களை இந்த அத்தியாயத்தில் காணலாம்.

## அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் தோற்றமும் அதன் சாரமும்

முதலாவது உலக யுத்தத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்ற காலகட்டத்தில், குறிப்பாக யுத்தம் நடந்த ஆண்டுகளில், ஒரு சில முக்கிய ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோகங்களும் பூர்ஷ்வா அரசாங்கமும் தம் நடவடிக்கைகளை நெருக்கமாக ஒத்திசைவித்தது நன்கு வெளிப்பட்டது: சாராம்சத்தில், இவற்றின் நலன்கள், கொள்கையை ஒத்திசைவிக்கும் சிக்கலான, கிளை பரப்பி நிற்கும் ஒரு முறை தோன்றி, செயல்படத் துவங்கியது. அப்பொழுது வி. இ. லெனின் எழுதினார்: "தொழிலாளர்களுக்கு (ஓரளவு விவசாயிகளுக்கும்) **போர்க்காலத்திய கடுஞ்சிறை** நிலைமைகளையும், வங்கி அதிபர்கள், முதலாளிகளுக்கு ஒரு **சுவர்க்கத்தையும்** படைத்துருவாக்கும் அத்தகைய வழியில் அமெரிக்காவும் ஜெர்மனியும் 'பொருளாதார வாழ்வை ஒழுங்கியக்குகின்றன'. அவர்களது விதி

முறை தொழிலாளர்களைப் பட்டினியிலாழ்த்தும் அளவுக்கு 'கசக்கிப்பிழிய' இடமளிக்கிறது. அதே போதில், முதலாளிகளுக்கு (கள்ளத்தனமாக, பிற்போக்கு அதிகார வர்க்கப் பாணியில்) போருக்கு முன் இருந்ததை விட **உயர்ந்த** லாபங்களை உத்தரவாதம் செய்கிறது.''*

பூர்ஷ்வா அரசு எப்போதுமே முதலாளி வர்க்கத்தின் சொத்துடைமையைக் காத்து, அதன் நலன்களைப் பாதுகாத்தது. இது வேறுவிதமாக இருக்க முடியாது, ஏனெனில் எந்த ஒரு அரசும், பொருளாதாரத்தில் ஆதிக்க நிலையை வகிக்கும் வர்க்கத்தின் அல்லது வர்க்கங்களின் நலன்களைப் பிரதிபலிக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளி வர்க்கம் இத்தகைய நிலைகளை வகித்தால், அரசாட்சி இதன் கையில்தான் இருக்கும், இதுதான் அரசாங்க உறுப்புகளின் செயற்பாட்டை நேரடியாகவோ மறைமுகமாகவோ கண்காணித்து, வழிநடத்தும்.

ஆனால் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில், ஏகபோகம் ஆதிக்கம் செலுத்தும் போது, பூர்ஷ்வா அரசின் பங்கு குணாம்ச ரீதியான மாற்றத்தை அடைந்தது: இது பொருளாதார, சமூக வாழ்வில் மேன்மேலும் அதிகமாக, தீவிரமாக தலையிடலாயிற்று, இத்தோடு அது அரசியலிலும் தன் நடவடிக்கையைக் கணிசமான அளவிற்குத் தீவிரப்படுத்தியது. இதன் பயனாய் **அரசு ஏகபோக முதலாளித்துவம்** தோன்றி வளரலாயிற்று.

அரசு ஏகபோக முதலாளித்துவம் என்பது முதலாளித்துவ வளர்ச்சியில் ஏகாதிபத்தியத்திலிருந்து வேறுபட்ட ஏதோ ஒரு புது கட்டமோ ''சூப்பர் ஏகாதிபத்தியமோ'' அல்ல. ஏகாதிபத்தியத்திற்கு உள்ள எல்லா அறிகுறிகள், தன்மைகள், பண்புகள், நியதிகளும் அரசு ஏகபோக முத

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்,** தொகுதி 5, பக்கம் 337.

லாளித்துவத்திற்கும் உண்டு. அரசு ஏகபோக முதலாளித் துவம் என்பது ஏகபோக முதலாளித்துவம் ஆகும், இங்கே ஏகபோகங்களின் பொருளாதார வல்லமை பூர்ஷ்வா அரசின் அரசியல் சக்தியோடு இணைந்துள்ளது. பெரும் முதலாளிகள், நிதி மூலதன ஏகபோகக் குழு செல்வம் சேர்ப்பதற்கும், தொழிலாளர் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தைக் கூட்டாகச் சேர்ந்து ஒடுக்கவும், ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கு ஏற்பாடு செய்து அவற்றை நடத்தவும் ஏற்ற சாலச்சிறந்த சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதுதான் மேற்கூறிய இணைப்பின் நோக்கமாகும்.

ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்திய சூழ்நிலையில் உற்பத்திக் குவிப்பு மேலும் வளர்ச்சியடைந்ததுதான் அரசு ஏகபோக முதலாளித்துவம் தோன்றி, வளர்ந்ததற்கான பொருளாதார அடிப்படையாகும். உற்பத்தி மற்றும் மூலதனக் குவிப்பின் உயர்வான மட்டம் முதலாளித்துவ உற்பத்தி ஏகபோகமயப்படுத்தப்படுவதை அதிகரிக்கிறது, நிதி மூலதனக் குழுக்களின் ஆதிக்கத்தை வலுப்படுத்துகிறது. இதன் விளைவாக, உற்பத்தி பன்முக ரீதியில் சமூகமயப் படுத்தப்படும் நிகழ்ச்சிப் போக்கு துரிதமடைகிறது. உற்பத்தி மேன்மேலும் சமூகமயப்படுகிறது, ஆனால் சுவீகரிப்பு அதே தனியுடைமைத் தன்மையைக் கொண்டிருக்கிறது. இது முதலாளித்துவத்திற்கே உரித்தான எல்லா முரண்பாடுகளை, குறிப்பாக அடிப்படை முரண்பாட்டை—அதாவது உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் தனியார் முதலாளித்துவ சுவீகரிப்பு வடிவத்திற்கும் இடையிலான முரண்பாட்டை—கூர்மையாக்குகிறது. ஏகபோகங்கள், ஏன் முதலாளித்துவம் நிலவுவதற்கே ஆபத்தேற்படும் அளவிற்கு முரண்பாடுகள் கூர்மையடைகின்றன. ஏகபோக முதலாளித்துவம் அரசு ஏகபோக முதலாளித்துவமாக மாறுவதற்கான நேரடிக் காரணம் இதில்தான் அடங்கியுள்ளது. இது முதலாளித்து

வத்தை இறுதியில் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும், இதற்காகத்தான் பூர்ஷ்வா அரசும் ஏகபோகங்களும் ஒன்றிணைவது நடைபெறுகிறது.

பொருளாதாரத்தில் பூர்ஷ்வா அரசின் தலையீடு வலுப் படுவதானது முதலாளித்துவ உற்பத்தியின் முரண்பாடுகள் கூர்மையடைவதுடனும், சமூக வர்க்க மோதல்கள் அதி கரிப்பதுடனும் நேரடியாகத் தொடர்புடையது. போட்டி மற்றும் பண்டச் சந்தை முறையால்—இது இடையறாமல் ஏகபோகங்களால் சீர்குலைக்கப்படுகிறது—தன் வழக்க மான கடமைகளை சமாளிக்க முடியாமல் போகிறது. இத னால் சமூக வளர்ச்சியின் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிவதில்லை, ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு மூலதனம் விரைவாக மாற முடியாமல் (விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியில் இது நேரிடுகிறது) போகிறது.

பூர்ஷ்வா அரசு "தானாகவே முன்வந்து" தேசியப் பொருளாதாரத்தில் கட்டமைப்பு மாற்றங்களை ஊக்குவிக் கும் பணியை ஏற்கிறது, தன் செலவில் பரவலான விஞ் ஞான ஆராய்ச்சிகளை நடத்துகிறது, நெருக்கடி எதிர்ப்பு ஒழுங்கமைப்பை நடத்துகிறது, பொருளாதார முறையின் தனிப்பட்ட அம்சங்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருகிறது. இது முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சி மீது தாக்கம் செலுத்தும் பல்வேறு வடிவங்களைப் பயன் படுத்துகிறது, வரி விதிப்பையும் பண-கடன் கொள்கையை யும் பரவலாகப் பயன்படுத்துகிறது, அரசு நிறுவனங்கள் மூலம் சந்தையில் விற்பனையாளனாகவும் வாடிக்கையாள னாயும் செயல்படுகிறது. பொருளாதாரத்தில் அரசின் தலையீடானது முக்கியமாகப் பெரும் இணையங்கள் செல்வம் சேர்க்கவும், தேசிய மற்றும் சர்வதேச மட்டங் களில் தம் நிலையை வலுப்படுத்தவும் ஏற்ற சூழ்நிலை களைத் தோற்றுவிக்கிறது.

ஏகபோகங்களும் அரசும் இணையும் முறையில் மிகப் பொரும் நிதி மூலதனக் குழுக்களும், முதலாளிகளின் விசேஷ வர்க்க அமைப்புகளும்—இவற்றின் நடவடிக்கை தனியே விளம்பரப்படுத்தப்படுவதில்லை—தீர்மானகரமான பங்காற்றுகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் தேசிய உற்பத்தியாளர் சங்கம் இப்படிப்பட்ட அமைப்பாகும். இதில் ஆயிரக்கணக்கான கம்பெனிகள் இடம் பெற்றாலும், ஒரு சில மிகப் பெரும் ஏக போகங்கள்தான் தலைமைப் பதவிகளில் இருந்து எல்லாவற்றையும் முடிவு செய்கின்றன. இச்சங்கத் தலைமை ஏற்கும் முடிவுகள்தான் அமெரிக்கப் பொருளாதார, அரசியல் கொள்கையின் முக்கிய அம்சங்களை நிர்ணயிக்கின்றன. ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய இரண்டு முக்கியக் கட்சிகளின் தலைவர்களும் ஜனாதிபதியும் அவரைச் சுற்றியுள்ளவர்களும் காங்கிரஸ் பிரதிநிதிகளும் செனட்டர்களும் ஆகிய எல்லோரும் தேசிய உற்பத்தியாளர் சங்கத்தின் கருத்தைக் கேட்கின்றனர், பெரும் தொழிற்துறை, வங்கி ஏகபோகங்களின் நலன்களுக்கேற்ற நீண்டகால கொள்கையைத் தீட்டி நிறைவேற்றுகின்றனர்.

மற்ற முதலாளித்துவ நாடுகளிலும் இதே போன்ற ஸ்தாபனங்கள் உள்ளன. உதாரணமாக, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் ஜெர்மன் தொழில் நிறுவன சம்மேளனமும், பிரிட்டனில் பிரிட்டிஷ் தொழிற்துறைக் கூட்டுச் சம்மேளனமும், பிரான்சில் பிரெஞ்சு தொழில் நிறுவன தேசிய கவுன்சிலும், இத்தாலியில் இத்தாலியத் தொழிற்துறைக் கூட்டுச் சம்மேளனமும் உள்ளன. இவையனைத்தும் தத்தம் நாடுகளின் பொருளாதாரத்திலும் அரசியல் வாழ்விலும் மிகப் பெரும் பங்காற்றுகின்றன.

ஏகபோகங்களுக்கும் அரசிற்கும் இடையிலான கூட்டு தோன்றி, வலுப்படுவது மிகப் பல்வேறான வடிவங்களில்

நடைபெறுகிறது. கலப்பு தனியார்-அரசு கம்பெனிகளை ஏற்படுத்துதல், அரசாங்கத்தைச் சாராத ஸ்தாபனங்களின் தோற்றம் (இதில் தனியார் துறை மற்றும் அரசு உறுப்புகளின் பிரதிநிதிகள் அடங்குவர், இவர்கள் அரசிற்கான பல்வேறு சிபாரிசுகளை உருவாக்குவர்), அரசியல்வாதிகள் மீது திரைமறைவில் நிர்ப்பந்தம் செலுத்துதல், தேர்தலில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் நிதியுதவி அளித்தல், அரசாங்க உறுப்புகளுடன் தொடர்புகளைப் பெரிதும் அதிகரித்து, ஆலோசனைகளைத் தருவது ஆகியவை இவற்றிலடங்கும்.

அரசிற்கும் ஏகபோகங்களுக்கும் இடையிலான கூட்டில் தனிப்பட்ட இணைப்பு கணிசமான பங்காற்றுகிறது: பெரும் கம்பெனிகளின் உடைமையாளர்களும் மேலாளர்களும் அரசாங்க உறுப்புகளின் மேல் மட்டங்களில் பல சலுகைகளைப் பெறுகின்றனர்; அரசியல்வாதிகளும் உயர் மட்ட அரசு அதிகாரிகளும் ஏகபோக கம்பெனிகளில் பெருமளவு பங்குகளை வாங்குகின்றனர் அல்லது தனியார் கம்பெனிகளில் உயர் மட்ட நிர்வாகிகளாகின்றனர். "இன்றைய அமைச்சர், நாளைய வங்கியதிபர், இன்றைய வங்கியதிபரோ நாளைய அமைச்சர்.... மூலதனம் கோலோச்சும் எல்லா இடங்களிலும்... விஷயம் அப்படி இருக்கிறது" என்று வி. இ. லெனின் எழுதினார்.* இச்சொற்கள் இன்றைய பூர்ஷ்வா எதார்த்தத்துடன் முழுக்க முழுக்கப் பொருந்தி வருகின்றன.

இக்கூட்டில் முக்கிய அம்சம் என்னவெனில், பொருளாதாரத் துறையில் ஏகபோக மூலதனத்தின் நலன் கருதி ஏகாதிபத்திய அரசாங்கங்கள் பின்பற்றும் கொள்கையின் போக்காகும். இக்கொள்கையின் முக்கிய அங்கங்கள் பின்

* V. I. Lenin, *Collected Works,* vol. 24, p. 122.

வருமாறு: அரசுச் சொத்தைத் தோற்றுவிப்பது, பொருளா தார நிகழ்ச்சிப் போக்குகளை ஒழுங்கமைப்பது, ஏகபோ கங்களுக்கு ஆதரவாக தேசிய வருமானத்தை மறுபங்கீடு செய்வது. இவற்றில் ஒவ்வொன்றையும் விரிவாகப் பார்ப் போம்.

## பூர்ஷ்வா அரசுச் சொத்து

அரசு ஏகபோகச் சொத்து என்பது பூர்ஷ்வா அரசால் பிரதி நிதித்துவப்படுத்தப்படும் முதலாளி வர்க்கம் முழுவதற்கும் உரித்தான சொத்தாகும்; இப்பூர்ஷ்வா அரசு ஒரு "தேசிய முதலாளியாக" தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக நிற் கிறது. "அதன் வடிவம் எப்படி இருப்பினும் நவீன அர சானது சாராம்சத்தில் முதலாளித்துவப் பொறியமைவு ஆகும், முதலாளிகளுடைய அரசு ஆகும், மொத்த தேசிய மூலதனத்தின் இலட்சிய ஆளுருவாக்கம் ஆகும். எவ் வளவுக்கு எவ்வளவு அது உற்பத்திச் சக்திகளை உடை மையாக்கிக் கொண்டு செல்கிறதோ அவ்வளவுக்கு அவ் வளவு அது மெய்நடப்பில் தேசிய முதலாளியாகிறது, அவ் வளவுக்கு அவ்வளவு அதிகமான குடிமக்களைச் சுரண்டு கிறது" என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

உற்பத்திச் சாதனங்களின் மீதான முதலாளித்துவச் சொத்துடைமை என்ற வகையில் அரசு ஏகபோகச் சொத்து இரண்டு முக்கிய வழிகளில் தோன்றியது. அரசு பட்ஜெட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு தொழில் நிறுவனங்கள் கட்டப்பட்ட போது ஒரு முறை, முதலாளித்துவ ரீதியில் நாட்டுடைமையாக்கியது இன்னொரு முறையாகும்; இந்த இரண்டாவது முறையில்

* பி. எங்கெல்ஸ், **டூரிங்குக்கு மறுப்பு,** பக்கம் 488.

தனிப்பட்ட தொழிற்சாலைகளும் தொழிற்துறையின் முழு பிரிவுகளும் போக்குவரத்தும் அரசுடைமையாக்கப்பட்டன, குறிப்பிட்ட கம்பெனிகளில் அரசு பங்குகளை வாங்கியது.

ஒரு சில ஏகாதிபத்திய அரசுகளில் "கலப்பு" அரசு-தனியார் கம்பெனிகள் தோற்றுவிக்கப்படுகின்றன: ஒன்றா தனியார் கம்பெனிகளில் அரசு பெருமளவு பங்குகளை வைத்திருக்கிறது அல்லது அரசு கம்பெனிகளில் தனிநபர்கள் பெருமளவு பங்குகளை வாங்குகின்றனர்.

குறிப்பாக பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இத்தாலி, ஆஸ்திரியா, ஸ்வீடன் ஆகிய மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தொழில் நிறுவனங்களை பூர்ஷ்வா அரசு தன் கையில் எடுத்துக் கொள்ளும் பழக்கம் உள்ளது. உதாரணமாக, பிரான்சில், தொழிற்துறைப் புரள்விலும் முதலீட்டிலும் மூன்றிலொரு பங்கும் வங்கி முதலீடுகள், கடன்களில் பெரும் பங்கும் ஓரளவிற்கோ, முழுமையாகவோ நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களில் உள்ளன. இக்கொள்கைக்கு அதற்கே உரித்தான ஏற்றத் தாழ்வுகள் உண்டு. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் தொழில் நிறுவனங்கள் பெருமளவில் நாட்டுடைமையாக்கப்பட்டன, பின்னர் இவை மீண்டும் தனியார் துறைக்கே தரப்பட்டன.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் ஒரு சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலக்கரித் தொழிற்துறை, இரும்பு உலோகத் துறை, மின்சார உற்பத்தி, வான் போக்குவரத்து, இன்னும் சில துறைகள் முழுமையாகவோ பகுதியளவிற்கோ அரசின் கரங்களுக்கு அல்லது அரசு கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. பின்னால் எண்ணெய் எடுப்பு, எண்ணெய் சுத்திகரிப்பு, விண்வெளி, கார் உற்பத்தி, மின்னணு தொழிற்துறை, போக்குவரத்து மற்றும் பண-கடன் துறைகளில் மேற்கு ஐரோப்பிய உற்பத்தியாளர்களின் போட்டித் திற

மைகள் குறைந்ததையடுத்து மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்கள் அரசு கம்பெனிகளை அல்லது அரசு நிதியுதவி பெறும் கம்பெனிகளை ஏற்படுத்தின; இவை பல நேரங்களில் தேசிய மற்றும் உலக முதலாளித்துவச் சந்தையில் தம் துறையில் முன்னணிக்கு வரும் அளவிலிருந்தன. இவை அமெரிக்க பன்னாட்டு ஏகபோகங்களை உண்மையாக எதிர்த்து நிற்கும் சக்தியாக விளங்கின. பிரிட்டிஷ் கப்பல் கட்டும் கம்பெனி "பிரிட்டிஷ் ஷிப்பில்டெர்ஸ்", பிரெஞ்சு விமான கம்பெனி "அஷ்ரோஸ்பஸியால்", மேற்கு ஜெர்மன் எண்ணெய் இரசாயன கம்பெனி "ஃபேபா" ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

லாபம் குறைவாக வரக் கூடிய அல்லது நஷ்டத்தில் நடக்கும் தனியார் தொழில் நிறுவனங்களைத்தான் சாதாரணமாக அரசு எடுக்கும். இது ஏகபோகங்களுக்கு ஆதாயமானது: தனியார் மூலதனங்கள் லாபம் குறைவான துறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு அதிக லாபகரமான உற்பத்திக்கு மாற்றப்படுகின்றன. இது தவிர நாட்டுடைமையாக்கப் பட்ட தொழில் நிறுவனங்கள் பங்குடைமையாளர்களுக்கு மீட்பு செலுத்தினங்களின் வடிவில் உத்தரவாதமான வருமானத்தைத் தந்தன, இப்போதும் தருகின்றன; இது ஒரு சில உடைமையாளர்களுக்கு நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்பு இருந்ததை விட இன்னமும் அதிக அளவு மூலதனத்தைத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் வாய்ப்பை அளிக்கிறது. பல நேரங்களில் நாட்டுடைமையாக்கப்பட்ட தொழிற்சாலைகள், நிலக்கரி, மின்சாரம், எரிவாயு போன்றவற்றை பெரும் தனியார் கம்பெனிகளுக்குத் தள்ளுபடி விலையில் வழங்குவதால் நஷ்டத்தில் இயங்குகின்றன, இதனால் அந்த பெரிய தனியார் கம்பெனிகளின் உற்பத்திச் செலவுகள் குறைந்து, லாபம் கூடுகிறது.

தொழிற்சாலைகளை நாட்டுடைமையாக்கும் முதலாளித்

துவ அரசு நிதி முதலைகளின் நலன்கள் மீதுதான் முக்கியக் கவனம் செலுத்துகிறது என்று வாழ்க்கை மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்கிறது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் விமானத் துறையில் உள்ள பிரிட்டிஷ் ஏகபோகங்களுக்கு மேன்மேலும் அதிக அரசாங்க ஆதரவு கிட்டிய போதிலும் போட்டிகளை எதிர்த்து சமாளிக்கும் திறமை அவற்றிடம் படிப்படியாகக் குறைந்து வந்தது. விமான ராக்கெட் தொழில்நுட்பத் துறையில் உலக முதலாளித்துவச் சந்தையில் இவை முன்னணியில் நிற்கும் வாய்ப்பு மங்கி வந்தது. அமெரிக்க, பிரெஞ்சு, மேற்கு ஜெர்மன் கம்பெனிகளின் போட்டி அதிகமாகியது. இவற்றில் சில திவாலாகும் நிலை வந்த பொழுது பிரிட்டிஷ் அரசாங்கம் இவற்றைக் காப்பாற்றுவதற்காகத் தான் எடுத்துக் கொண்டது.

பிரிட்டனின் முக்கிய விண்வெளி தொழில் நிறுவனங்கள் அனைத்தும்—"பிரிட்டிஷ் ஏர்கிராஃப்ட்", "ஹாக்கெர்-சிட்டெலி எவியேஷன்", "ஸ்காட்டிஷ் எவியேஷன்", இன்னும் சில—அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இவற்றின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட "பிரிட்டிஷ் ஏரோஸ்பேஸ்" என்ற அரசு கம்பெனிதான் இன்று சிவில் மற்றும் இராணுவ விமானத் துறைக்குத் தேவையான விமான ராக்கெட் தொழில்நுட்பங்களில் பெரும்பாலானவற்றை உற்பத்தி செய்கிறது. ஒரு சில ஆண்டுகளில் இது பண்ட விற்பனையையும் சேவை வசதிகளையும் கணிசமாக அதிகரித்தது, வெளி சந்தையில் தன் நிலைகளை வலுப்படுத்தியது. இன்று இக்கம்பெனி முதலாளித்துவ உலகின் வல்லமை மிக்க விமான ராக்கெட் ஏகபோகங்களில் ஒன்றாகும், வேலையாட்களின் எண்ணிக்கை, புரள்வு, சொத்துகளில் இது மேற்கு ஐரோப்பாவில் முன்னணியில் நிற்கிறது.

"பிரிட்டிஷ் ஏரோஸ்பேஸ்" கம்பெனியின் லாபத்தில் முக்கியப் பகுதி அரசாங்க ஆர்டர்களை நிறைவேற்றுவதி லிருந்து கிட்டுகிறது. அரசு காண்டிராக்டுகள் ஏகபோக உயர் லாபங்களைப் பெற உத்தரவாதமளிக்கின்றன. இக்கம்பெனி பல ஆண்டுகளுக்கு முன்கூட்டியே ஆர்டர்களைப் பெற்றுள் ளது, இங்கு பெரும் லாபம் வருகிறது என்பது தெரிந்ததும், விமானத் துறையில் அரசுத் துறையின் பெரும் பங்கைத் தனக்குத் திருப்பித் தருமாறு நிதி மூலதன ஏகபோகக் குழு கோரத் துவங்கியது. கன்சர்வேட்டிவ் அரசாங்கத்தின் தீவிர ஆதரவோடு நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, விமான ராக்கெட் தொழிற்துறை பகுதியளவிற்கு தனியுடைமையாக்கப்பட்டது, இதனால் "பிரிட்டிஷ் ஏரோஸ் பேசின்" கணிசமான பகுதி தனியார் கரங்களுக்குத் திரும்பி வந்தது. இக்கம்பெனியின் சர்வதேச திட்டங்களுக்கும் இன் னும் சில திட்டங்களுக்கும் நிதியுதவி அளிப்பதாக அர சாங்கம் வாக்களித்தது.

நாட்டுடைமையாக்கிய பொழுது அரசாங்க அதிகாரிகள் பிரிட்டிஷ் மக்களின் வரிப்பணத்திலிருந்து இந்த விமான ராக்கெட் கம்பெனிகளின் உடைமையாளர்களுக்கு மிகப் பெரும் தொகைகளை வழங்கினர். பின் விமானத் துறைக்கு "புத்துயிர் ஊட்டுவதற்காக" கஜானாவிலிருந்து ஒரு சில பில்லியன் பவுன் ஸ்டெர்லிங்குகள் ஒதுக்கப்பட்டன. இந்த "சிகிச்சை" முடிந்ததும், புதிய பெரும் செல்வத்தை மீண் டும் நிதி முதலைகளுக்குப் பரிசாக அளிப்பது, மக்களின் பணத்தால் சீரமைக்கப்பட்ட துறையின் பலன்களை அவர் கள் அனுபவிக்குமாறு விடுவது என்று முடிவெடுக்கப்பட் டது.

அரசு நிர்வாகத்தில் உள்ள தம் ஆதரவாளர்களின் உதவியோடு பிரிட்டிஷ் நிதி மூலதன ஏகபோகக் குழு நடத்திய இந்த "ஏரோஸ்பேஸ்" நடவடிக்கை, பூர்ஷ்வா

அரசுடைமையாக்கல் எந்த நோக்கங்களோடு நடைபெறு கிறது என்று தெட்டத் தெளிவாக விளக்குகிறது.

### அரசு ஏகபோக ஒழுங்கமைப்பு

நாட்டின் பொருளாதார வாழ்க்கையை பூர்ஷ்வா அரசு ஒழுங்கமைக்கிறது; பெரும் ஏகபோக மூலதனத்தின் லாபத்தை அதிகரிப்பதும், அது ஏகபோக உயர் லாபங் களைப் பெறுவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்து வதும்தான் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

அரசு ஏகபோக ஒழுங்கமைப்பு முதலில், தேசியச் சந்தை யில் ஏகபோகங்களின் நிலைகளை வலுப்படுத்துவதையும், இரண்டாவதாக, உலக முதலாளித்துவப் பொருளாதாரத் தில் இவற்றின் செல்வாக்கை விரிவுபடுத்துவதையும் நோக்க மாகக் கொண்டது. அரசு ஏகபோகங்களுக்கு அனுகூலமான நிபந்தனைகளில் விற்பனைச் சந்தையை உத்தரவாதப் படுத்துகிறது, விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு நிதியுதவி அளிக் கிறது, ஏகபோகங்களுக்கு சலுகைகளில் கடன் வழங்குகிறது. வெளிநாட்டு வர்த்தக விஸ்தரிப்பு, மூலதன ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு பெரும் நிதி ஒதுக்குகிறது. அரசு ஏகபோக ஒழுங்கமைப்பில் “நெருக்கடி எதிர்ப்பு ஒழுங்கமைப்பு” ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது; அரசே வாங்குதல், கடன் மற்றும் நிதிக் கொள்கை ஆகியவை இதிலடங்கும்.

அரசு ஒழுங்கமைப்பின் முக்கிய முறைகளில் ஒன்று பண்ட சப்ளை மற்றும் சேவை வசதிக்கான ஒப்பந்தங் களைத் தனியார் கம்பெனிகளுக்கு அளிப்பதாகும். எல்லா ஏகாதிபத்திய வல்லரசுகளிலும் அரசாங்கம் வாங்குவது சாதாரணமாக ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அமெ ரிக்க ஐக்கிய நாட்டிலும் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளிலும் விமான ராக்கெட் தொழிற்துறை மற்றும்

வானொலி மின்னணு தொழிற்துறையில் அரசுதான் முக்கிய வாடிக்கையாளனாகும்; இது தவிர இயந்திர கட்டு மானம், மின்சார தொழில்நுட்பம், இரசாயனத் துறை, உலோகத் துறைகளில் அரசு முக்கிய நுகர்வாளர்களில் ஒன்றாகத் திகழுகிறது. அரசாங்க ஆர்டர்களை நிறை வேற்றும் தனியார் கம்பெனிகளில் மிகப் பெரும் ஏகபோகங் கள் ஆதிக்க நிலையில் உள்ளன.

ஆதாயமான அரசு ஆர்டர்கள் ஒரு புறமிருக்க, ஏகபோ கங்கள் சலுகைகளில் அரசாங்க கடன்களையும்—உதாரண மாக, புதிய பொருட்களைத் தயாரிக்க—பெறுகின்றன. லாசர் துறை, அரைக் கடத்திகள், விண்வெளித் துறை, அணுத் துறை, இன்ன பிற துறைகளில் அடிப்படை ஆராய்ச்சி களுக்கும் இன்னும் பல நடைமுறை ஆராய்ச்சிகளுக்கும் அரசு பட்ஜெட்டிலிருந்து கணிசமான அளவு நிதி ஒதுக்கப் படுகிறது. நிதி நெருக்கடியிலிருந்து ஏகபோகங்களை அரசு உதவி காப்பாற்றுகிறது, மக்களுடைய வரிப் பணத்தைக் கொண்டு நடத்தப்படும் ஆராய்ச்சிகளின் பயன்களை ஏகபோகங்கள் அனுபவிக்கின்றன.

அரசு முதலீட்டின் அளவை அதிகரிப்பதும் பொரு ளாதார நிகழ்ச்சிப் போக்குகளை ஒழுங்கமைப்பதில் ஒரு முக்கிய வழியாகும். இது உபகரணங்கள், இயந்திரங்கள், மற்ற பண்டங்களுக்கான தேவையை அதிகப்படுத்தும், இது பொது பொருளாதார நிலையின் மீது தாக்கம் செலுத்துகிறது. 1980க்களின் ஆரம்பத்தில் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மொத்த முதலீட்டில் அரசின் பங்கு 35—45%ஆக இருந்தது.

நவீன பூர்ஷ்வா அரசு உற்பத்தி உள்கட்டமைப்பு (இதில் போக்குவரத்து, போக்குவரத்துக் கட்டுமானம், எரிசக்தி, தகவல் தொடர்பு, தண்ணீர் சப்ளை ஆகியவை அடங்கும்) மற்றும் சமூக உள்கட்டமைப்பின் (இதில் வீடுகள், கல்விக்

கூடங்கள், மருத்துவ வசதி, கலாசார பொழுதுபோக்கு நிறுவனங்கள், இன்ன பிற அடங்கும்) வளர்ச்சி மீது பெரும் தாக்கம் செலுத்துகிறது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இந்த உள்கட்டமைப்பு குறிப்பாக அரசின் பெரும் ஒழுங்கமைப்பிற்கு உட்படுகிறது. இதன் நிலை நாட்டுப் பொருளாதார வளர்ச்சி, தேசியச் சந்தையில் ஏகபோகங்கள் பெரும் லாபம் ஆகியவற்றின் மீது நேரடியாகத் தாக்கம் செலுத்துகிறது.

உற்பத்தி உள்கட்டமைப்பின் ஒரு பகுதி அரசிற்குச் சொந்தமானது, இன்னொரு பகுதி இடையறா அரசு உதவித் தொகைகளைப் பெறுகிறது. உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கான பெரிய, பல நேரங்களில் அதிக லாபம் தராத செலவுகளிலிருந்து ஏகபோகங்களை விடுவிக்கும் அரசு அதன் மூலம் இந்த ஏகபோகங்கள் உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் அதிக லாபகரமான துறைகளில் முதலீடு செய்யும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

அரசு ஏகபோக ஒழுங்கமைப்புக் கொள்கையில் சமீப ஆண்டுகளில் ஒரு சில முக்கிய வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் (அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன்) பண மற்றும் கடன் துறைகளின் முக்கியத்துவம் பெரிதும் அதிகரித்துள்ளது. இது பணவீக்கத்தை கட்டுப்படுத்தி, பணப் புழக்கத்தைப் பொதுவில் சீர்படுத்தும் கடமைகளுடன் தொடர்புபடுத்தப்படுகிறது.

**தேசிய வருமானத்தின் மறுபங்கீடு**

அரசு ஏகபோக ஒழுங்கமைப்பு முறைகளில் பெரும்பாலானவை தேசிய வருமானத்தைப் பெரும் மூலதனத்திற்கு ஆதரவாக மறுபங்கீடு செய்வதுடன் தொடர்புடையவை. அதாவது, மக்களுடைய வருமானத்தில் கணிசமான

பகுதியை வரிகள் மூலம் வசூலிக்கும் அரசு பின்னர் இதை தன் விருப்பப்படிப் பயன்படுத்துகிறது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேசிய வருமானத்தில் அரசு 5—10% எடுத்தது என்றால், இன்று 30—50% பிடிக்கப்படுகிறது. பின்னர் இத்தொகை தனியார் துறையிடமிருந்து பண்டங்களை வாங்க, சேவைகளைப் பெறச் செலவிடப்படுகிறது, அரசு வாங்கும் கடன்களுக்கு வட்டியாக அளிக்கப்படுகிறது.

பல ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள வரிமுறை மிகப் பெரும் ஏகபோகங்களுக்குக் கணிசமான வரிச் சலுகைகளை அளிக்கிறது. ஒரு சில நாடுகளில் தேய்வுவீத வரிமுறை என்றழைக்கப்படுவது அமுலில் உள்ளது. இதன்படி, கம்பெனியின் லாபம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அது செலுத்தும் வரிகளின் அளவு ஒப்பீட்டளவில் அவ்வளவுக்கவ்வளவு குறைவாயிருக்கும். கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் பெரும் ஏகபோகங்களுக்கு அதிகாரப் பூர்வமான தள்ளுபடிகள் தரப்படுகின்றன, இது தவிர வரிவிதிப்பிற்கு உட்படும் தொகையின் அளவை குறைப்பதற்கான சகலவித ஓட்டைகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

அமெரிக்காவிலும் இன்னும் சில நாடுகளிலும் முதலீடு மற்றும் உற்பத்தி உபகரணத்திற்கான தள்ளுபடியை ஏகபோகங்கள் பரவலாகப் பயன்படுத்துகின்றன. இத்தள்ளுபடியின் விளைவாக மட்டும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள ஏகபோகங்கள் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான டாலர்களை பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றன.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள செல்வந்தர்கள் பல்வேறு ஓட்டைகளைப் பயன்படுத்தி ஆண்டுதோறும் கோடிக்கணக்கான டாலர் வரிப்பணத்தைச் செலுத்தாமல் ஏமாற்றுகின்றனர். அரசு பட்ஜெட்டில்

பெரும் பகுதி குறைவான மற்றும் நடுத்தர வருமானங்களைப் பெறுபவர்களிடமிருந்து வருகிறது.

இந்தப் பணம் முழுவதும் எதற்குச் செலவாகிறது? இதில் ஒரு பகுதி சமூக நலத் தேவைகளுக்குச் செல்கிறது. இப்போது அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இன்னும் சில நாடுகளிலும் இது மேன்மேலும் குறைக்கப்பட்டு வருகிறது. நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏகபோகங்களின் கஜானாவிற்குச் செல்லும் இன்னொரு பகுதி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அரசு பட்ஜெட்டிலிருந்து ஒதுக்கப்படும் பணம் எப்படி ஏகபோகங்களுக்கு ஆதாயமாக மறுபங்கீடு செய்யப்படுகிறது என்பதற்கு இதோ ஓர் உதாரணம். 1970ஆம் ஆண்டுகளின் இறுதியில் ''கிரைஸ்லர்'' என்ற மிகப் பெரும் கார் கம்பெனி திவாலடையும் நிலையில் இருந்தது. பல ஆண்டுகளாக இக்கம்பெனி சந்தைக்குத் தேவையான மாடெல்களை உரிய தருணத்தில் தராமல் தாமதித்து வந்தது; தன் போட்டி கம்பெனிகளாகிய ''ஜெனரல் மோட்டர்ஸ்'', ''ஃபோர்டு'' ஆகியவற்றின் வெற்றிகரமான மாடெல்களை கணிசமான அளவு தாமதத்துடன் தானும் உற்பத்தி செய்தது.

எரிபொருளின் விலை கூடியதாலும் அயல்நாட்டு கார்கள் மேன்மேலும் வந்து குவிந்ததாலும் 1970ஆம் ஆண்டுகளின் இறுதியில் போட்டி அதிகரித்த பொழுது ''கிரைஸ்லர்'' கம்பெனி என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நின்றது. கார் வியாபாரிகளின் உண்மை ஆர்டர்களைப் புறக்கணித்து விட்டு இது கிட்டத்தட்ட யாருமே வாங்காத மாடெல்களை பெருமளவில் தொடர்ந்து உற்பத்தி செய்தது. கம்பெனியின் கடன்கள் அபாயகரமாக அதிகரித்தன.

இக்கட்டான நிலைக்கு வந்த கம்பெனி உடைமையாளர்களும் மேலாளர்களும் கூக்குரலிட்டனர். சிறிது யோசனைக்குப் பின் அரசு உறுப்புகள் இக்கம்பெனிக்கு உதவ

விரைந்தன. ''கிரைஸ்லர்'' கம்பெனிக்கு அரசு நிதியுதவி அளிப்பதா வேண்டாமா என்று அவை யோசிக்கவில்லை, எவ்வளவு தருவது என்றுதான் யோசித்தன. ஏகபோகம் முதலில் 1.2 பில்லியன் டாலர்களைக் கோரியது, அரசோ பல்வேறு வடிவங்களில் 1.5 பில்லியன் டாலர் உதவியை வழங்கியது. பின் பல்வேறு பண ''பரிசுகளை'' வழங்கி கம் பெனியைத் திவாலிலிருந்து காப்பாற்றினர்.

அமெரிக்காவில் மட்டுமல்ல, இன்னும் பல ஏகாதிபத்திய நாடுகளிலும் அரசாங்கங்கள் பல பெரும் ஏகபோகங்களுக்கு மக்களின் வரிப்பணத்திலிருந்து கோடிக்கணக்கில் வாரி வழங்கி, அவற்றைத் திவாலிலிருந்து காப்பாற்றியுள்ளன.

இவ்வாறாக, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடு களில் பொருளாதாரத்தில் அரசுத் தலையீட்டின் முக்கிய நோக்கம், ஏகபோக மூலதனம் லாபங்களைப் பெறுவதற்கு மிகவும் ஏற்ற சூழலைத் தோற்றுவிப்பதும் இயன்றவரை பொருளாதார வளர்ச்சியை ஸ்திரப்படுத்துவதுமாகும் என் பது தெளிவாகிறது.

அரசு ஏகபோக முதலாளித்துவம் உழைப்பாளி மக்கள் திரளினரின் நலன்களுக்கு நேரெதிரானது. இன்று பல ஏகாதிபத்திய அரசுகள் சமூக நலத் தேவைகளுக்கான செலவுகளைக் குறைத்து, பொருளாதாரத்தை விரை வாக இராணுவமயப்படுத்தும் கொள்கையைப் பின்பற்றும் பொழுது இது நன்கு தெரிகிறது.

முதலாளித்துவ சமுதாயத்தை அழிவிலிருந்து காப் பாற்றி தடுத்து நிறுத்துவதை தன் கடமையாக அரசு ஏக போக முதலாளித்துவம் முன்வைத்துள்ளது. ஆனால் இக் கடமையை அதனால் நிறைவேற்ற இயலாது. நவீன முத லாளித்துவத்தின் புறவய வளர்ச்சியானது அதன் எல்லா முரண்பாடுகளும் கூர்மையடைய இட்டுச் செல்கிறது. உற்பத்தி சமூகமயப்படுத்தப்படுவதைத் துரிதப்படுத்தும்

அரசு ஏகபோக முதலாளித்துவம் தனியார் முதலாளித்துவ சுவீகரிப்பு வடிவத்தை மாற்றுவதில்லை. இதனால் முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடு—உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் அதன் விளைபயன்கள் தனியார் முதலாளித்துவ வடிவில் சுவீகரிக்கப்படுவதற்கும் இடையிலான முரண்பாடு—கூர்மையடைகிறது.

அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்தி சமூகமயமாக்கப்படுவது உச்சக் கட்டத்தை—இதுதான் முதலாளித்துவத்தில் அதிகபட்சம் சாத்தியமானதாகும்—அடைந்துள்ளது. இதன் மூலம் புதிய சோஷலிச சமுதாயத்திற்கான முழு பொருளாயத அடிப்படை தயார்படுத்தப்படுகிறது.

அத்தியாயம் எட்டு

# இராணுவ தொழிற்துறை இணையம்

இராணுவ தொழிற்துறை இணையத்தின் வளர்ச்சியில் அரசு ஏகபோக முதலாளித்துவம் தெட்டத் தெளிவாயும் மிகப் பிற்போக்கான, ஒட்டுண்ணித்தனமான வடிவத்தி லும் வெளிப்படுகிறது. இது தூண்டிவிட்ட இராணுவவெறி இன்று தலைவிரித்தாடுகிறது.

இன்று அணு ஆயுத யுத்த அபாயம் உலகை எதிர் நோக்கியுள்ளதாகக் கூறி முதலைக் கண்ணீர் விடும் மேலைய இராணுவச் சக்திகள் அதே நேரத்தில் சோஷலிச நாடுகளை விட அதிகமான போர்த்தந்திர மேல்நிலையைப் பெற வேண்டும் என்பதற்காக சகலவிதங்களிலும் இரா ணுவ உள்ளாற்றலை முன்பின் இல்லாத அளவில் பெருக்கி வருகின்றன. 1970க்களின் இறுதியில், 1980க்களின் ஆரம் பத்தில் மிகவும் ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த ஏகாதி பத்திய சக்திகளின் நடவடிக்கை பெரிதும் அதிகரித்தது; இவை ஒளிவு மறைவற்ற இராணுவவெறி, உலக ஆதிக்கம், முற்போக்குச் சக்திகளுக்கு எதிர்ப்பு என்ற கொள்கை களைக் கடைப்பிடித்தன. இவையெல்லாம் ஏதோ ''சோவி யத் இராணுவ அபாயத்திற்கும்'' ''ருஷ்ய இராணுவ மேம்பாட்டிற்கும்'' பதில் நடவடிக்கை என்று கூறி இக்

கொள்கையை நியாயப்படுத்த மேலைய நாடுகளில் முயலு கின்றனர். முதலாளித்துவ நாடுகளில் உள்ள மக்களை அச்சுறுத்துவதற்காக இப்பொய் பரப்பப்படுகிறது. இது ஒன் றும் புதிதல்ல. 1919ஆம் ஆண்டிலேயே வி. இ. லெனின் எழுதினார்: "ஒரு சில அறிவலிகள் சிவப்பு இராணுவ வெறி பற்றி கூச்சலிடுகின்றனர். இவர்கள் அரசியல் ஏமாற் றுக்காரர்கள். இந்த அபத்தத்தை ஏதோ நம்புவதாகப் பாசாங்கு செய்யும் இவர்கள் இதைப் போன்ற குற்றச் சாட்டு களை வாரி வீசுகின்றனர், இதற்காகப் பொய்யான வாதங் களை ஜோடித்து மக்களின் கண்களில் மண்ணைத் தூவும் தம் வக்கீல் திறமைகளைப் பயன்படுத்துகின்றனர்."* சோவியத் ஒன்றியம் ஒருபோதும் ஒருவரையும் அச்சுறுத் தியதில்லை, இராணுவ மேம்பாட்டை அடைய ஒருபோதும் முயன்றதில்லை, மற்ற நாடுகள், மக்களின் மீது தன் சித்தத் தை ஒருபோதும் திணித்ததில்லை. இதுதான் சர்வதேச அரங் கில் சோவியத் நாட்டின் கோட்பாட்டு வழிப்பட்ட நிலை யாகும்.

"சோவியத் அபாயம்" அல்ல, மாறாக வரலாற்று ரீதி யில் தான் தவிர்க்க இயலாது தோல்வியைத் தழுவ நேரி டும் என்ற அச்சம் ஏகபோக மூலதனத்திடம் மேன்மேலும் அதிகரித்து வருவதும், இராணுவ வியாபாரத்தால் கொள் ளை லாபம் பெறும் நாட்டமும்தான் ஆயுதப் போட்டியை மூட்டி விடவும் சர்வதேச பதட்ட நிலையை அதிகரிக்கவும் ஏகாதிபத்திய நாடுகளின் மிகப் பிற்போக்கான வட்டங் களைத் தூண்டி விடுகின்றன.

* V. I. Lenin, *Collected Works*, vol. 29, p. 66.

ஏகாதிபத்திய நாடுகளில் ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஏகபோகங்கள் செல்வாக்கு மிக்கவையாக விளங்குகின்றன. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அரசாங்க உறுப்புகளுடனான இவற்றின் தொடர்புகள் பெரிதும் வளர்ந்து, வலுப்பட்டுள்ளதால் சூப்பர் ஏகபோக அமைப்பாகிய **இராணுவ தொழிற்துறை இணையம்** தோன்ற இது வழிவகுத்தது. இதில் இராணுவ தொழிற்துறை ஏகபோகங்களைத் தவிர இராணுவ இலாக்காக்களின் பெரும் அதிகாரிகளும் பிற்போக்கு அரசியல் சக்திகளின் பிரதிநிதிகளும்—அரசு அலுவலக அதிகாரிகள்—அடங்குவர். இராணுவ தொழிற்துறை இணையத்தை ஒரு பயங்கர போர் வெறி பிடித்த மிருகத்துடன் ஒப்பிடலாம், இது மனித உயிர்களை இடையறாது பலி கோருகிறது. இதுதான் பைத்தியக்காரத்தனமான ஆயுதப் போட்டியை மூட்டி விடுவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

இன்று இந்த இராணுவ தொழிற்துறை இணையம் நவீன அரசு ஏகபோக முதலாளித்துவ முறை முழுவதிலும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.

ஏகபோகங்களை அரசுடன் இணைக்கும் போக்கு, அரசு உறுப்புகளின் மேல்மட்டத்திற்கும் நிதி மூலதன ஏகபோகக் குழுவிற்கும் இடையில் தனிப்பட்ட இணைப்பை ஏற்படுத்தும் போக்கு ஏகாதிபத்திய சகாப்தத்திற்கு உரித்தானது; இப்போக்கு இராணுவத் தொழிற்துறையில் நன்கு வெளிப்படுகிறது. இராணுவ தொழிற்துறை இணைய உடைமையாளர்களும் நிர்வாகிகளும் பல நேரங்களில் முக்கிய அரசாங்க, நிர்வாக, இராணுவப் பதவிகளை வகிக்கின்றனர், அரசியல் ஸ்தாபனங்களின் தலைமைப் பதவிகளில் இருக்கின்றனர். பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த இராணுவ

இலாக்கா பணியாளர்களும் உயர் இராணுவ அதிகாரிகளும் நிதி மூலதன ஏகபோகக் குழுவுடன் இடையறா தொடர்பு கொண்டுள்ளனர், அரசு வேலையிலிருந்து வெளிவந்ததும் இவர்கள் இராணுவ தொழிற்துறை இணையங்களின் தலைமையில் இடம் பெறுகின்றனர். உயர் அரசாங்க அதிகாரிகள் ஆயுத உற்பத்தி கம்பெனிகளில் பெரும் பங்குதாரர்களாகவோ இயக்குநர்களாகவோ இருப்பதும் உண்டு.

இராணுவத் தொழிற்துறையோடு தொடர்புடைய பெரும் கம்பெனிகள் பல நேரங்களில் தம் பிரதிநிதிகளை இராணுவ இலாக்காக்களில் பொறுப்பான பதவிகளுக்கு முன்மொழிகின்றன. **1947**இல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பாதுகாப்புத் துறை அமைச்சர் பதவி ஏற்படுத்தப்பட்ட பின் இப்பதவியைப் பின்வருபவர்கள் வகித்தனர்: ஜா. ஃபாரஸ்டால் (''கிரைஸ்லர்'' கம்பெனியுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு பெரும் வங்கியின் உடைமையாளர்களில் ஒருவர்), லி. ஜான்சன் (விமானக் கட்டுமான கம்பெனி இயக்குநர், இக்கம்பெனி பின்னால் ''ஜெனரல் டைனெமிக்சுடன்'' இணைந்தது), ரா. லோவெட் (''நார்த் அமெரிக்கன் ஏவியேஷன்'' கம்பெனி இயக்குநர்), சா. வில்சன் (''ஜெனரல் மோட்டர்ஸ்'' கம்பெனி தலைவர்), நில் மைக்கல்ராய் (''ஜெனரல் எலெக்ட்ரிக்'' கம்பெனி இயக்குநர்), இன்னும் பிறர். பெண்டகன் தலைவராயிருந்த க. வைன்பெர்கர் மிகப் பெரும் இராணுவக் கட்டுமான கம்பெனி ''பேக்டெலின்'' நிர்வாகிகளில் ஒருவராயிருந்தார், ரீகன் அரசாங்கத்தில் அரசுத் துறை செயலாளராயிருந்த அ. ஹெய்க் அதற்கு முன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மிகப் பெரும் இராணுவ தொழிற்துறை ஏகபோகங்களில் ஒன்றாகிய ''யுனைட்டட் டெக்னாலஜிசின்'' தலைவராயிருந்தார். அ. ஹெய்க் நீண்ட காலம் பெண்டகனிலிருந்தார், மேற்கு ஐரோப்பாவில் **நேட்டோ** துருப்புகளின் ஐக்கிய உயர்மட்ட படைத்தளபதி

பதவியையும் வகித்தவர். ஆண்டுதோறும் பல பெரும் முதலாளிகள், ஆலோசகர்கள், உயர்மட்ட அதிகாரிகள் அரசாங்க பதவிகளிலிருந்து இராணுவ தொழிற்துறை இணையங்களுக்கும், இராணுவ தொழிற்துறை இணையங்களிலிருந்து அரசாங்க பதவிகளுக்குமாக மாறி மாறி செல்கின்றனர். பொதுவான அக்கறைகளையுடைய இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆயுதப் போட்டியை முடுக்கி விடுகின்றனர்.

இராணுவ தொழிற்துறை இணையம் முதலாளித்துவப் பொருளாதாரம் முழுவதையும் இராணுவ, யுத்த திசையில் மேன்மேலும் திருப்பி விடுகிறது. ஏகாதிபத்திய அரசுகளின் தேசிய வருமானத்தில் மேன்மேலும் அதிகமான அளவு இராணுவ பராமரிப்பிற்கும் ஆயுதங்களை வாங்கவும் செலவிடப்படுகிறது. விவசாயத் துறையிலிருந்து கனரக இயந்திரக் கட்டுமானம், மின்சார தொழில்நுட்பம், அணுத் தொழிற்துறை வரை தேசியப் பொருளாதாரத்தின் எல்லா முக்கியக் துறைகளும் இராணுவத் தயாரிப்புகளினுள் இழுக்கப்படுகின்றன. இவை உள்நாட்டில் மட்டுமின்றி அயல் நாடுகளிலும் நடைபெறுகின்றன—அயல் நாடுகளில் இராணுவத் தளங்கள் பராமரிக்கப்படுகின்றன, கூட்டு நாடுகளுக்கு இராணுவ "உதவி" வழங்கப்படுகிறது. இராணுவ தொழிற்துறை இணையத்தின் தாக்கத்தின் கீழ்தான் ஏகாதிபத்திய அரசுகளின் கொள்கை உருவாகிறது. "எதிரிகளை" சமாளிக்க வேண்டிய "அவசியத்தைக்" காரணங் காட்டி ஆயுதப் போட்டி நியாயப்படுத்தப்படுகிறது.

## ஆயுத வர்த்தகம்

உலகில் யுத்த அபாயம் நீடித்திருப்பதற்கான குற்றம் யாரைச் சாரும்? சோஷலிச நாடுகள்தான் இந்தக் குற்றவாளிகள் என்று ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள பல்வேறு அர

சியல்வாதிகளும் கூறுகின்றனர். ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனங்களோ, ஆயுதப் போட்டியை முடுக்கி விட்டு, யுத்தத்தைத் தொடங்குவதிலும் யுத்தத் திற்குத் தயாராவதிலும் அக்கறையுள்ள வர்க்கங்களோ, சமூக குழுக்களோ எதுவும் சோஷலிச நாடுகளில் கிடை யாது. சோஷலிச நாடுகள்தான் முன்னரும் முக்கிய சமா தான முன்மொழிவுகளை வெளியிட்டன, இன்றும் வெளி யிட்டு வருகின்றனவே தவிர ஏகாதிபத்திய அரசுகள் அல்ல. ஏகாதிபத்திய அரசுகளின் இராணுவச் சித்தாந்தங்கள் ஆக் கிரமிப்புத் தன்மையை உடையவை என்றால் சோஷலிச நாடுகளின் இராணுவச் சித்தாந்தங்கள் முழுக்க முழுக்க பாதுகாப்புத் தன்மையைக் கொண்டவை. உலகில் யுத்த அபாயமும் பதட்ட நிலையும் நிலவக் காரணம் ஏகாதிபத் திய நாடுகள்தானே தவிர சோஷலிச நாடுகள் அல்ல.

வரலாறே இதற்குச் சான்று பகர்கிறது. 20ஆம் நூற் றாண்டில் ஏகாதிபத்தியம் இரண்டு உலக யுத்தங்களையும் எண்ணற்ற ஸ்தல மற்றும் பிராந்திய இராணுவ மோதல் களையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. விஷயம் இங்கே தனி நபர்கள், அரசியல்வாதிகள் அல்லது படைத்தளபதிகளிடம் இல்லை, மாறாக ஏகாதிபத்தியத்தின் பெரிதும் அதிகரித் துள்ள ஆக்கிரமிப்புத் தன்மையில் அடங்கியுள்ளது.

இரண்டாவது உலக யுத்தத்தின் கடைசி பீரங்கி முழக் கங்கள் ஓயும் முன்னரே ஒரு சில பெரும் முதலாளித்துவ அரசாங்கங்கள் புதிய யுத்தத்திற்குத் தயாராகத் துவங்கின. அமெரிக்க ஐக்கிய நாட்டில் இதற்கான இராணுவ பொரு ளாதாரத் தயாரிப்பில் புதிய வகையான ஆயுதங்களைத் தோற்றுவிக்கவல்ல விஞ்ஞான ஆராய்ச்சிகள் துரிதமாக வளர்க்கப்படுகின்றன, நவீன அணு ஆயுத யுத்தத்தில் “உயிர்பிழைக்க” உதவும் போக்குவரத்து, தகவல் தொடர்பு முறை வளர்க்கப்படுகிறது, போர்த்தந்திர முக்கியத்துவம்

வாய்ந்த மூலப்பொருள், எரிபொருட்கள் சேமித்து வைக்கப்படுகின்றன, இராணுவ உற்பத்தித் தளம் மிகத் துரிதமாகப் பெருக்கப்படுகிறது.

அரசு சகலவிதங்களிலும் இராணுவ தொழிற்துறை ஏகபோகங்களுக்கு ஆதரவளிக்கிறது. இந்த ஏகபோகங்களிடமிருந்து அரசு பல்வேறு பண்டங்களை வாங்குகிறது, சேவை வசதிகளைப் பெறுகிறது, இராணுவத் துறையில் விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்கு நிதியுதவி அளிக்கிறது, சலுகைகளுடன் உதவித் தொகைகளை வழங்குகிறது, இறுதியில் வெளிப்பொருளாதார விஸ்தரிப்பை ஊக்குவிக்கிறது.

ஆயுத உற்பத்திக்கு அரசு அளிக்கும் ஆதரவின் முக்கிய வடிவங்களில் ஒன்று அரசாங்க ஆர்டர்களாகும். இன்று ஏகாதிபத்திய நாடுகளின் அரசு பட்ஜெட்டுகளில் இராணுவ செலவுகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆயுத உற்பத்திக்காக ஒதுக்கப்படும் நிதி அதிகரித்துக் கொண்டே போகிறது. அரசாங்க ஆர்டர்கள் உத்தரவாதமான விற்பனைச் சந்தையாகும். இது சராசரியாகத் தொழிற்துறையில் கிடைப்பதை விட இரு மடங்கு, ஏன் மும்மடங்கு லாபத்தை ஆயுத உற்பத்தியாளர்களுக்குத் தருகிறது.

கடந்த பத்தாண்டுகளில் பெண்டகனின் ஆர்டர்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதி (மதிப்பின்படி) இராணுவ தொழிற்துறை இணையத்தின் மேல்மட்டமாகத் திகழும் நூறு கம்பெனிகளுக்குக் கிட்டியுள்ளது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் மொத்த இராணுவ ஒப்பந்தங்களில் மூன்றிலொரு பங்கு 10 மிகப் பெரும் கம்பெனிகளுக்குத் தரப்பட்டுள்ளது. இராணுவத் தொழிற்துறையின் முக்கியமான குழு போதுமான அளவு ஸ்திரமானது: இதில் ஒவ்வொரு ஏகபோகமும் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள அரசாங்க ஆர்டர்

களைப் பெறுகிறது. ''ஜெனரல் டைனெமிக்ஸ்'', ''மக்டொனல்-துக்லஸ்'' கம்பெனிகள் ஆண்டுதோறும் 5—6 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஒப்பந்தங்களைப் பெறுகின்றன. புதிய இராணுவச் செயல்திட்டங்கள் தீட்டப்பட்டு, மேன்மேலும் அதிக அரசாங்க ஒப்பந்தங்கள் வரும் பொழுது ஆயுத உற்பத்தியாளர்களின் லாபங்கள் இன்னமும் பெருகும்.

1980க்களின் ஆரம்பத்தில் அமெரிக்க அரசாங்கம் போர்த்தந்திர அணு ஆயுதங்களைப் பெருக்குவது சம்பந்தமாக இதுவரையில்லா அளவிற்குப் பெரிய, பன்முக திட்டத்தை அறிவித்தது. புதிய தலைமுறையை சார்ந்த, கண்டம் விட்டு கண்டம் செல்லும் பாலிஸ்டிக் ராக்கெட்டுகளை நிறுவுவது, கனரக குண்டு வீச்சு விமானங்களைத் தயாரிப்பது, நெடுந்தொலைவு உலாவு ராக்கெட்டுகளைத் தயாரிப்பது ஆகியவை இதிலடங்கும். இத்தோடு சேர்ந்து இரசாயன ஆயுதங்களைப் புதுப்பிக்கும் பல பில்லியன் டாலர் செயல்திட்டமும் அறிவிக்கப்பட்டது, ''நட்சத்திர யுத்தத்திற்கான'' தீவிர தயாரிப்பு ஆரம்பமாகியது. 1985—1989இல் பெண்டகனின் இராணுவச் செலவுகள் பிரம்மாண்டமானவை—2 டிரில்லியன் டாலர்களை விஞ்சக் கூடும். மேற்கு ஐரோப்பாவில் உள்ள அமெரிக்காவின் **நேட்டோ** கூட்டாளிகளும் பெரும் இராணுவச் செயல்திட்டங்களை நிறைவேற்றுவதில் இறங்கியுள்ளனர்.

புதிய இராணுவ செயல்திட்டங்கள்—இவை நிறைவேற்றப்பட்டாலும் இல்லாவிட்டாலும்—இராணுவ தொழிற்துறை ஏகபோகங்களுக்கு மிக ஆதாயமானவை. ''ஆயிரக்கணக்கான வழிகளில், ஆயிரக்கணக்கான பத்திரிகைகளில், ஆயிரக்கணக்கான மேடைகளில் இருந்து நாட்டுப்பற்று, கலாசாரம், தாயகம், சமாதானம், முன்னேற்றம் பற்றியெல்லாம் கத்துகின்றனர், கூச்சலிடுகின்றனர். இவை அனைத்

தும் சகலவிதமான அழிவு ஆயுதங்கள், பீரங்கிகள், சக்தி மிக்க போர்க் கப்பல்களுக்காக மேன்மேலும் செலவிடப்படும் பெருந்தொகையான நிதிகளை நியாயப்படுத்துவதற்காகத் தான் செய்யப்படுகின்றன'' என்று வி. இ. லெனின் எழுதி னார்.*

இராணுவ தொழிற்துறை இணையங்களின் லாபங்களை அதிகரிக்க இராணுவ இலாக்காக்கள் இராணுவ பொருட் களுக்காக ஆர்டர் தரும் முறைகளைப் பயன்படுத்து கின்றன. இதோ புள்ளி விவரங்கள், நீங்களே முடிவு செய்யுங்கள்: ஒரு சாதாரண கடையில் 13 செண்ட்களுக்கு விற்கப்படும் ஒரு போல்ட்டிற்கு இராணுவ இலாக்கா ''மக் டொனல்-துக்லஸ்'' கம்பெனிக்கு 2,043 டாலர்களைச் செலுத்துகிறது; ''ஹியுஸ் எர்கிராஃப்ட்'' கம்பெனிக்கு ஒரு ஸ்விட்சிற்கு 2,543 டாலர்கள் அளிக்கப்படுகின்றன (கடையில் இதன் விலை 3.6 டாலர்கள்); ஒரு சாதாரண பிளாஷ் விளக்கை அமெரிக்க விமானப்படை 180 டாலர் கொடுத்தும், விமானிகளுக்கான இருக்கையை 670 டாலர்கள் கொடுத்தும் (இதன் விலை 5 டாலர்கள்) வாங்குகிறது. அமெரிக்க கப்பற் படையுடன் ''கோவுல்ட் இன்கார்ப்பரேட்டட்'' கையெழுத் திட்ட 8,40,000 டாலர் ஒப்பந்தத்தில் 7,29,000 டாலர்கள் கூடுதல் தொகையாக இருந்தன.

இவையெல்லாம் எப்படி நடைபெறுகின்றன? ஏமாற்றும் முறை சிக்கலானதேயல்ல என்று தெரிகிறது: செலவுகள் பொய் செலவுகளாக காட்டப்படுகின்றன அல்லது உற்பத்திச் செலவுகள் செயற்கையாகக் கூட்டி காண்பிக்கப்படுகின்றன. இத்தகைய ஏமாற்றுதலை பல ஆயுத உற்பத்தியாளர் கள் பின்பற்றுகின்றனர், ஆனால் அரசாங்க அதிகாரிகள்

* V. I. Lenin, *Collected Works,* vol. 19, p. 53.

சாதாரணமாக இதைக் கண்டும் காணாதது போலிருக் கின்றனர்.

இராணுவச் சந்தையில் ஒரேயொரு வாடிக்கையாளனும் (ஏகாதிபத்திய அரசு) ஒரு சில விற்பனையாளர்களும் (பெரும் இராணுவ தொழிற்துறை ஏகபோகங்கள்) மட்டுமே உள்ள னர். இதில் முக்கிய ஆர்டர்களைத் தரும் பொழுது பேச்சு வார்த்தைகள் திரைமறைவில் நடக்கின்றன, இதனால் ஒப் பந்த விலைகளைப் பெருமளவு உயர்த்த முடிகிறது.

''முதலாளிகள் பாதுகாப்பிற்காக, அதாவது அரசிற்காக வேலை செய்கின்றனர் என்றால் அது 'தூய' முதலாளித் துவம் அல்ல, அது தேசியப் பொருளாதாரத்தின் ஒரு விசேஷ வகையாகும் என்பது தெளிவு. தூய முதலாளித் துவம் என்பது பண்ட உற்பத்தியாகும். பண்ட உற்பத்தி என்பது **முன்பின் தெரியாத** சுதந்திரமான சந்தைக்கான வேலையாகும். ஆனால் பாதுகாப்பிற்காக 'வேலை செய் யும்' முதலாளி சந்தைக்காக 'வேலை செய்யவில்லை', அவன் அரசு **ஆர்டர்களுக்கேற்ப,** பல நேரங்களில் அரசு கடனாகத் தந்த பணத்தைக் கொண்டு 'வேலை செய் கிறான்' '' என்று வி. இ. லெனின் எழுதினார்.*

தன் இராணுவ தொழிற்துறை ஏகபோகங்களின் பின் னணிகளுக்கு நம்பகரமான பாதுகாப்பை அளிக்கும் பூர்ஷ் வா அரசு அவற்றின் வெளி விஸ்தரிப்பிற்கான உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்துகிறது. அரசாங்க ஸ்தாபனங்கள் இதற்குத் தீவிரமாக ஊக்கமளிக்கின்றன. அயல் நாடுகளில் ஆயுத விற்பனைக்கு ஊக்கமளிக்கும் விசேஷப் பிரிவுகள் பல ஏகாதிபத்திய நாடுகளின் இராணுவ இலாக்காக்களி லும் இன்ன பிற இலாக்காக்களிலும் உள்ளன. இவை மற்ற நாடுகளுக்கு இராணுவ, போலீஸ் ''உதவி'' அளிக்

* V. I. Lenin, *Collected Works*, vol. 25, p. 68.

கும் பிரச்சினைகள் சம்பந்தமாக முடிவெடுக்கின்றன, அயல் நாடுகளில் வாடிக்கையாளர்களைத் தேடுகின்றன, ஒப்பந்தங்களுக்கு நிதி உதவியளிக்கின்றன, ஆயுதங்களையும் இராணுவ லைசன்ஸ்களையும் அயல் நாடுகளுக்கு அனுப்ப அனுமதியளிக்கின்றன, சர்வதேச ஆயுத வியாபாரத்துடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடைய புதிய சட்டங்களை நிறைவேற்ற உதவுகின்றன.

**நேட்டோ** உறுப்பு நாடுகளின் பூர்ஷ்வா அரசாங்கங்கள் தத்தம் நாடுகளின் ஆயுத உற்பத்தியாளர்களுக்கு மற்ற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள ஆயுத உற்பத்தியாளர்களுடன் வலுவான தொடர்புகள் ஏற்பட சகலவிதங்களிலும் உதவுகின்றன. பல்வேறு நாடுகளின் ஆயுத உற்பத்தியாளர்களிடையில் நிலவும் தொடர்புகளை விரிவுபடுத்த பெண்டகனின் முன்முயற்சியில் **நேட்டோ** வரம்புகளுக்குள் ஒரு விசேஷத் தொழிற்துறைக் குழு ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆயுத உற்பத்தியாளர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்துவதுதான் இதன் பணியாகும். இது ஒரு சர்வதேச கார்ட்டெல் ஸ்தாபனமாகத் திகழும். ஆயுத உற்பத்தியாளர்களிடையே நிலவும் பல்வேறு விதமான தொடர்புகளை—ஆயுத உற்பத்தியில் பரஸ்பர லைசென்ஸ்களை அளிப்பது முதல் பல்தேசிய இணையங்களை ஏற்படுத்துவது வரை—**நேட்டோ** உறுப்பு நாடுகளின் அரசாங்கங்கள் பெரிதும் ஆதரிக்கின்றன.

இராணுவ தொழிற்துறை ஏகபோகங்களின் லாபம் அதிகரிக்க சகலவிதங்களிலும் ஊக்கமளிக்கும் ஏகாதிபத்திய அரசாங்கங்கள் அதே நேரத்தில் இவற்றை தம் உலகத் திட்டங்கள், சித்தாந்தங்களை நிறைவேற்றவும் பயன்படுத்துகின்றன.

## இராணுவ தொழிற்துறை இணையத்தின் பிற்போக்கு சித்தாந்தங்கள்

போர்த்தந்திர சித்தாந்தங்களும் திட்டங்களும் ஏகாதிபத்தியத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் முக்கியப் பங்காற்றுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் மற்ற **நேட்டோ** கூட்டாளிகளும் கொண்டுள்ள உலக ஆதிக்க நாட்டம், சர்வதேச விவகாரங்களில் தம் கரம் ஓங்கியிருக்க வேண்டுமென்ற விருப்பம், பிற நாடுகளின் மீதான பலத்தின் அடிப்படையிலான நிர்ப்பந்தம் ஆகியவை இவற்றில் நன்கு வெளிப்படுகின்றன. இவற்றை விரிவாகப் பார்க்கும் பொழுது ஏகாதிபத்திய அரசுகளின் வெளிநாட்டுக் கொள்கையின் சாரம், லட்சியங்களைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள முடியும்.

பெண்டகனில் தீட்டப்படும் போர்த்தந்திர சித்தாந்தங்களின் சாரம் என்ன? இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் இவை "பெருமளவு பழிவாங்கல்", "போர்த்தந்திர முன்தடுப்பு", "நெளிவு சுழிவான பதிலடி", "மட்டான அணு ஆயுத யுத்தம்" போன்ற பல பெயர்களைப் பெற்று அவ்வப்போது தம் வடிவத்தை மாற்றி வந்தன. ஆனால் இவற்றின் அடிப்படை மாறவில்லை. எவ்வித தண்டனையையும் பெறாமல் சோவியத் ஒன்றியம், அதன் கூட்டு நாடுகள் மீது அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுக்கவும், தனக்குக் குறைந்தபட்ச இழப்போடு தேசிய விடுதலை இயக்கங்களை ஒடுக்கவும் உதவும் அளவிற்கு இராணுவ மேம்பாட்டை அடைவதுதான் இச்சித்தாந்தங்களின் நோக்கமாக இருந்தது, இருக்கிறது.

ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள இராணுவ தொழிற்துறை வட்டங்கள், நிதி மூலதன ஏகபோகக் குழுவின் நலன்களைப் பிரதிபலிக்கும் ஏகாதிபத்திய இராணுவ போர்த்தந்திர சித்

தாந்தங்கள் இந்த வட்டங்கள் தோற்றுவித்த உற்பத்தி மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அடித்தளத்தை ஆதார மாகக் கொள்கின்றன. ஆயுத உற்பத்தியாளர்கள் இரா ணுவ தொழிற்துறை இணையத்தின் வரம்புகளுக்குள் ராக் கெட் அணு ஆயுதத்தை மேம்படுத்துகின்றனர், இதன் வாய்ப்புகளை அதிகப்படுத்துகின்றனர், புதிய வகையான சாதாரண ஆயுதங்களையும், தானியங்கி நிர்வாக முறை களையும், விண்வெளி வேவு சாதனங்களையும், முன் கூட்டியே எச்சரிக்கும் முறைகளையும் உருவாக்கி வரு கின்றனர். இவையெல்லாம் எவ்வித தண்டனையுமின்றி பெருமளவு ஆக்கிரமிப்பை—குறிப்பாக சோஷலிச நாடு களுக்கு எதிராக—நடத்தும் நோக்கத்தோடு செய்யப் படுகின்றன.

ஆனால் ஏகாதிபத்தியமும் இது தீனி போட்டு வளர்த் துள்ள இராணுவ தொழிற்துறை இணையமும் சோஷலிச நாடுகளை மட்டும் அச்சுறுத்தவில்லை. இவை வளர்முக நாடுகளுக்கும் மேன்மேலும் அதிக இராணுவ ஆபத்தாக விளங்குகின்றன. ஏகாதிபத்தியவாதிகள் கடலிலிருந்து எப் படி லெபனான் மீது குண்டு மழை பொழிந்தனர், வியட் நாமிலும் கிரினாடாவிலும் எப்படி நேரடி ஆக்கிரமிப்பில் ஈடுபட்டனர், ஃபால்க்லாண்ட் தீவுகளைக் காலனியாக்கும் இராணுவ நடவடிக்கைகளில் எப்படி இறங்கினர் என்பதை உலகம் மறக்கவில்லை.

சமீப ஆண்டுகளாக **நேட்டோ** இராணுவ அரசியல் தலை மை தன் செல்வாக்கு மண்டலத்தை விரிவுபடுத்தும் கருத் தை பெரிதும் பிரசாரம் செய்கிறது, வளர்முக நாடுகளின் விவகாரங்களில் தன் தலையீட்டை அதிகரித்து வருகிறது. உலகின் பல பிரதேசங்களை—இவை தம் எல்லைகளி லிருந்து பல்லாயிரக்கணக்கான கி.மீ.களுக்கு அப் பாலிருந்தாலும்—தம் "ஜீவாதார நலன் மண்டலங்

களாக'' ஏகாதிபத்திய அரசுகள் அறிவித்துள்ளன. ஜன நாயக மாற்றங்கள் நடைபெறும் நாடுகளில் இராணுவ பலத்தைப் பயன்படுத்தப் போவதாக ஏகாதிபத்தியவாதி கள் வெளிப்படையாக மிரட்டுகின்றனர். **நேட்டோவில்** அமெரிக்காவின் ''துரிதத் தாக்குதல் படை'' போன்ற விசேஷ இராணுவ படைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

**இராணுவமயப்படுத்தலின் பின்விளைவுகள்**

ஏகாதிபத்தியம் இராணுவ தொழிற்துறை இணையத்தை ஊட்டி வளர்த்து ஆளாக்கியது, இன்று இந்த இணையம் இல்லாமல் ஏகாதிபத்தியத்தால் நிலவ முடியாது. பொரு ளாதாரம் மேன்மேலும் இராணுவமயப்படுத்தப்பட்டு வருவ தானது சமூக மூலதனத்தின் புனருற்பத்தியில் விசேஷப் பணியாற்றுகிறது. பொருளாயத வளம், நிதி, ஆள்பலம் ஆகியவற்றை உற்பத்தி நோக்கின்றி இந்த இணையங்கள் பயன்படுத்துவதால் (வேறு வார்த்தைகளில் சொன்னால், இவை அழிக்கப்படுகின்றன), பொருளாதாரத்தை இராணுவ மயப்படுத்துவதானது மிகையுற்பத்தி நெருக்கடி அபாயம் ஏற்படாமல் செய்யும் ஒருவித முறையாக ஏகாதிபத் திய நாடுகளின் பொருளாதாரத்திற்குத் திகழுகிறது. ஆனால் இந்த முறை தற்காலிகமானது, நம்பத் தகாதது என்று வாழ்க்கை மீண்டும் மீண்டும் காட்டுகிறது. பொரு ளாதாரத்தை இராணுவமயப்படுத்துவதானது புதிய, இன்ன மும் கடுமையான வெடிப்புகள், அதிர்ச்சிகளுக்கு வழி யமைக்கிறது, முதலாளித்துவத்திற்கே உரித்தான முரண் பாடுகளை இன்னமும் கடுமையாக்குகிறது. இவற்றைத் தீர்க்கவும், உள் இடர்ப்பாடுகளிலிருந்து மீளவும் முயலும் ஏகாதிபத்தியம் மீண்டும் மீண்டும் ஆயுதப் போட்டியை நாடு கிறது. நச்சுச் சுழல் முற்று பெறுகிறது.

நவீன குருதி உறிஞ்சிகளாகிய இராணுவ தொழிற்துறை இணையங்கள் சமுதாயத்தின் மீது மேன்மேலும் கடும் சுமையாக விழுகின்றன. இவை தம் நடவடிக்கையால் எத் தகைய தீய விளைவுகள் ஏற்படும் என்பதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் ஆண்டுதோறும் பெருமளவில் செல்வம் சேர்க்கின்றன.

இராணுவ தொழிற்துறை ஏகபோகங்கள் கொழுத்து வருவதானது இராணுவ பொருட்களின் உற்பத்தி விரை வாக வளர்ச்சியடைவதைக் குறிக்கிறது. அதாவது உற்பத்தி நோக்குடனோ, நுகர்வாளர்களுக்கோ இரு சாராருக்குமே பயன்படாத பண்டங்களின் பங்கு முதலாளித்துவ உலகின் மொத்த உற்பத்திப் பொருளில் அதிகரிக்கும். இராணுவ நோக்கங்களுக்கான செலவுகள் உற்பத்தி நோக்கில் பயனற் றவை. ''நேரடியாகப் பொருளாதார நோக்கில் பார்த்தால், ஒரு நாடு தன் மூலதனத்தில் ஒரு பகுதியைத் தண்ணீரில் வாரியிறைப்பதும் இதுவும் ஒன்றே'' என்று கா. மார்க்ஸ் எழுதினார்.* அழிவுச் சாதனங்களைப் பயன்படுத்துவது என்பது சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளை நேரடியாக அழிப்பதற்கு ஒப்பாகும்.

இராணுவத் தயாரிப்புகள் ஆண்டுதோறும் ஏராளமான பொருளாயத, நிதி வளங்களை விரயமாக்குகின்றன. இவ் வளங்கள் அனைத்தும் சமாதான பொருளாதாரத் துறை களிலிருந்து அல்லவா எடுக்கப்படுகின்றன, இத்துறைகளுக் கோ இவ்வளங்கள் எப்போதும் போதாமலிருக்கின்றன.

முதலாளித்துவ நாடுகளில் ஆயுத உற்பத்தியாளர்கள் ஏராளமான கட்டிடங்கள், நிலங்களை ஆக்கிரமித்திருக் கின்றனர். இராணுவ உற்பத்தி முழு மூச்சோடு செயல்படுவ தில்லை, அதாவது யுத்தம் மூண்டால் இது விரைவாக முழு

* K. Marx, F. Engels, *Collected Works,* vol. 28, p. 66.

வேகத்தில் முடுக்கி விடப்படும். முதலாளித்துவ சமுதாயத்தின் பொதுப் பொருளாதார நோக்கில் பார்த்தால், மாறா மூலதனத்தில் ஒரு பகுதி புரள்விலிருந்து தனித்து பிரிக்கப்படுகிறது என்று இதற்குப் பொருள்.

முதலாளித்துவப் பொருளாதாரம் மேன்மேலும் இராணுவமயப்படுத்தப்பட்டு வருவதால் சமாதான உற்பத்தித் துறைகளிலிருந்து விலைமதிப்புள்ள பற்றாகுறையான மூலப்பொருட்களும் எரிசக்தி வளமும் பிற பொருளாயத வளங்களும் திசை திருப்பப்படுகின்றன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் முக்கிய மூலப்பொருட்களில் 10% வரை இராணுவ நோக்கங்களுக்காகச் செல்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் இராணுவ உற்பத்தி 40% டைட்டேனியம், 30% ஜெர்மானியம், தோரியம், 20% கோபால்ட்டைப் பயன்படுத்துகிறது.

இராணுவ தொழிற்துறை இணையங்களில் உற்பத்தி விரிவுபடுத்தப்படுவதையடுத்து முதலாளித்துவ உலகில் வேலையில்லாத் திண்டாட்டம் பொதுவில் அதிகரிக்கிறது. பொருளாதாரம் இராணுவமயப்படுத்தப்படுவதானது ஏதோ வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதாகக் கூறப்படுவது பொய் என்று வாழ்க்கை மெய்ப்பிக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் இராணுவ உற்பத்திக்காகப் பெரும் பணம் செலவிடப்பட்ட நிலையிலும் 1980க்களின் ஆரம்பத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் உயர் மட்டத்தை அடைந்துள்ளது, இந்நிலவரம் இன்றும் தொடர்ந்து நீடிக்கிறது. ஒரு பில்லியன் டாலர்களை சிவில் உற்பத்தியில் முதலீடு செய்தால் அது இராணுவ உற்பத்தித் துறையை விட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிக வேலையிடங்களைத் தோற்றுவிக்கிறது என்று நடைமுறை காட்டுகிறது. ஏனெனில் இராணுவ உற்பத்தித் துறையில் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்குப்

பெரும் செலவாகிறது, இத்துறைக்குப் பெரும் முதலீடுகள் தேவைப்படுகின்றன.

இராணுவ தொழிற்துறை இணையத்தின் வளர்ச்சி விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் ஒருதலைப்பட்சமாக, அழிவுகர திசையில் வளர இட்டுச் செல்கிறது. அரசாங்க உதவித் தொகைகளால் ஊக்குவிக்கப்படும் இராணுவ தொழிற்துறை ஏகபோகங்கள் சிவில் துறைகளுக்கு இழப்பேற்படுத்தி, புதுப் புது நவீன, அழிவுகர ஆயுதங்களின் ஆராய்ச்சியில் இடையறாமல் ஈடுபட்டுள்ளன. இராணுவ ஆராய்ச்சிகளின் முடிவுகளை சிவில் துறைகளில் வெற்றிகரமாகப் பயன்படுத்தலாம் என்று நிரூபிக்க இராணுவ தொழிற்துறை ஏகபோகங்களின் ஆதரவாளர்கள் முயலுகின்றனர். ஆனால் இச்சாதனைகளையும் ஆராய்ச்சிகளையும் சிவில் துறைகளில் பயன்படுத்துவது சம்பந்தமாக எட்டளவில் உள்ள வாய்ப்பிற்கும் நடைமுறைக்கும் இடையில் பெரும் இடைவெளி நிலவுகிறது, ஆயுதங்கள் சிக்கலாகச் சிக்கலாக இந்த இடைவெளியும் அதிகரித்து வருகிறது. இராணுவத் துறையின் கண்டுபிடிப்புகள் சிவில் துறைகளில் பயன்படுத்தப்படுவதை விட சிவில் துறையின் கண்டுபிடிப்புகள் இராணுவத் துறையில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. மேலும, இன்று இராணுவத் துறையில் பயன்படுத்தப்படும் பல்வேறு மூலப்பொருட்கள், கலப்பு உலோகங்கள், மின்னணுப் பகுதிகள் ஆகியவை பற்றாக்குறையாக உள்ளதாலும், விலை அதிகமானவையாக உள்ளதாலும் இவற்றை சிவில் தொழிற்துறையில் பயன்படுத்துவது இயலாது.

இராணுவ தொழிற்துறை இணையம் ஏராளமான சாதனங்களைத் திசை திருப்புவதோடு கூட தேர்ச்சியும் திறமையும் மிக்க விஞ்ஞானிகள், ஊழியர்களையும் இழுத்துக் கொள்வதால் சிவில் துறைகளில் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் மெதுவாக நடக்கிறது. இராணுவத் தயாரிப்பு

களுக்காகச் செல்லும் சாதனங்கள் சமாதான நோக்கங்களோடு பயன்படுத்தப்பட்டால் அவை அதிகப் பயனைத் தரும், சிவில் துறைகளில் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியை துரிதப்படுத்தியிருக்கும்.

இவ்வாறாக, இராணுவமயப்படுத்தலானது மொத்தத்தில் முதலாளித்துவ சமுதாய வாழ்க்கையின் எல்லா அம்சங்கள் மீதும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவேதான் ஆயுதப் போட்டியை உந்தித் தள்ளி, மனிதகுலத்தை வேண்டுமென்றே அணு ஆயுதப் பேரழிவிற்கு இட்டுச் செல்லும் ஏகாதிபத்தியத்தின் பைத்தியக்காரத்தன கொள்கைக்கு எதிராக உலகம் முழுவதும் மக்கள் போராட்டம் வலுத்து வருகிறது. அதுவும் சமாதானத்திற்கான போராட்டம், ஏகபோகங்களுக்கு எதிரான, ஆக்கிரமிப்புத் தன்மை மிக்க இவற்றின் பகுதியாகிய இராணுவ தொழிற்துறை இணையத்திற்கு எதிரான போராட்டத்திலிருந்து விலக இயலாதது என்பதை மேன்மேலும் அதிகமான மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

உலகெங்கும் உள்ள கோடானு கோடி மக்கள் அணு ஆயுத யுத்த அபாயம் குறித்து கவலை கொண்டுள்ளனர். அணு ஆயுதப் போர் மூண்டால் அது மனித நாகரிகத்தையே வேரோடு அழித்துவிடும். கடலுக்கு அடியில் ஆழத்தில் இருந்தாலும் சரி, தனிப்பட்ட அணு எதிர்ப்பு இருப்பிடங்களில் தண்ணீரையும் உணவையும் சேர்த்து வைத்து பதுங்கி ஒளிந்து கொண்டாலும் சரி, எங்கிருந்தாலும் அழிவிலிருந்து தப்ப முடியாது. ஏகாதிபத்தியம் அணு ஆயுத யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடாமலிருக்கும்படி செய்வதுதான் சமாதானத்திற்காகப் போராடும் சக்திகளின் பொதுக் கடமையாகும்.

சமாதானத்திற்கான போராட்டத்தில் சோவியத் ஒன்றியமும் மற்ற சோஷலிச நாடுகளும் முன்னணியில் நிற்கின்

றன. ஆயுதப் போட்டியை மட்டுப்படுத்துவது, சர்வதேச பதட்ட நிலையைக் குறைப்பது சம்பந்தமான பல சமாதான முன்மொழிவுகளை இவை இடையறாமல் முன்வைக்கின் றன. மனிதகுலத்தின் சமாதான வளர்ச்சிக்கு வேறு மாற்று வழி கிடையாது, இருக்கவும் முடியாது என்ற அசைக்க இயலா நம்பிக்கையின் அடிப்படையில் சோவியத் ஒன்றிய மும் மற்ற சோஷலிச நாடுகளும் செயல்படுகின்றன.

அத்தியாயம் ஒன்பது

## நவீன காலனியாதிக்கம்

ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறைதான் மனிதகுல வரலாற்றிலேயே மிகப் பெரும் காலனியாதிக்க அடிமை முறையாக விளங்கியது. இதில் நேரடியான நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலான கடும் சுரண்டலும் பொருளாதார அடிமைத்தனத்தின் வடிவங்களும் இணைந்திருந்தன. தேசிய விடுதலைப் புரட்சிகள் இந்த முறையைத் தகர்த்தன. இந்தக் காலனியாதிக்கத்தின் வீழ்ச்சி, உலக மக்களில் கிட்டத்தட்ட பாதிப் பகுதியாகிய மக்களின் வாழ்வில் ஏற்பட்ட ஆழ்ந்த புரட்சிகர மாற்றமாகும், இது மிகப் பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி. இன்று உலகில் நூறுக்கும் மேற்பட்ட அரசியல் ரீதியில் சுதந்திரமான வளர்முக நாடுகள் உள்ளன.

ஆனால் ஏகாதிபத்தியம் இந்த இழப்பைச் சகித்துக் கொள்ளத் தயாராயில்லை, இது இளம் விடுதலையடைந்த அரசுகளைத் தன் ஆதிக்கத்தில் தக்க வைப்பதற்காகத் தந்திர வழிகளைக் கையாளுகிறது.

## காலனியாதிக்க முறையின் நெருக்கடியும் அதில் ஏற்பட்ட சிதைவும் அதன் வீழ்ச்சியும்

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காலனியாட்சியாளர்கள் உலக மக்களில் $^2/_3$ பகுதியினர் வாழ்ந்த பகுதியைத் தம் கரங்களில் வைத்திருந்தனர். பிரிட்டிஷ் காலனிகளின் அளவு பிரிட்டனை விட 140 மடங்கும், ஹாலந்து நாட்டு காலனிகளின் பரப்பு ஹாலந்தை விட கிட்டத்தட்ட 60 மடங்கும், பிரெஞ்சு காலனிகளின் பரப்பு பிரான்சை விட 20 மடங்கும் அதிகமாக இருந்தன. ஏகாதிபத்திய நாடுகள் காலனிகளையும் அரைக் காலனிகளையும் ஈவிரக்கமற்று, காட்டுமிராண்டித்தனமாகக் கொள்ளையடித்ததானது சார்பு நாடுகளின் மக்களுக்கும் காலனியாட்சியாளர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைக் கூர்மையாக்கியது. இது தேசிய விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கும் காலனியாதிக்க முறையின் வீழ்ச்சிக்கும் தவிர்க்க இயலாது இட்டுச் சென்றது. இந்த வீழ்ச்சி ஒரு நீண்ட காலகட்டத்தில் நடந்தது.

ருஷ்யாவில் நடந்த மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி **ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறையின் நெருக்கடி** ஆரம்பமாகியதைக் குறித்தது. இது காலனி நாடுகளின் மக்கள் சுதந்திரம், விடுதலைக்காக நடத்திய போராட்டச் சுவாலையை ஏற்றியது, ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு வலுவான உந்து சக்தியாக அமைந்தது. காலனியாதிக்க முறையின் நெருக்கடி, பல்வேறு காலனிகள், அரைக் காலனிகளில் காலனியாட்சியாளர்களுக்கு எதிரான போராட்டம் கடுமையாகத் தீவிரமடைந்ததில் வெளிப்பட்டது. இந்தியா, கொரியா, துருக்கி, சீனாவில் பெரும் புரட்சிப் போராட்டங்கள் வெடித்தன. மொரோக்கோ, சிரியா, இந்தோனீஷியா, பிலிப்

பைன்ஸ், லத்தீன் அமெரிக்க நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டம் கணிசமாக வளர்ச்சியடைந்தது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் காலனியாதிக்க முறையின் நெருக்கடி அதன் சிதைவிற்கு இட்டுச் சென்றது. ஜெர்மன் பாசிசமும் ஜப்பானிய இராணுவவெறியும் தோல் வியடைந்ததையடுத்து ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் காலனி கள் தகர்ந்தன. முக்கிய காலனியாட்சிப் பேரரசுகளாகிய பிரிட்டன், பிரான்சாலும் மற்றும் ஹாலந்து, பெல்ஜியத்தா லும்—இவையனைத்தும் யுத்தத்தால் பலவீனமடைந் திருந்தன—தத்தம் காலனிகளில் நடந்த தேசிய விடுதலை இயக்கத்தைச் சமாளிக்க முடியவில்லை, எனவே பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அரசு சுதந்திரத்தை அங்கீகரிக் கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டன.

ஏராளமான சுதந்திர அரசுகள் தோன்றியதானது **ஏகா திபத்தியத்தின் காலனியாதிக்க முறை சிதைந்ததற்குச்** சான்று பகர்ந்தது. உதாரணமாக, ஆசியாவில் இந்தியா, பர்மா, இந்தோனீஷியா, இன்னும் சில நாடுகள் காலனி யாதிக்கத்திலிருந்து என்றென்றைக்குமாக விடுதலை பெற் றன. சீனா, வட கொரியா, வடக்கு வியட்நாமில் மக்கள் ஜனநாயகப் புரட்சிகள் வெற்றி பெற்றன. இக்காலகட்டத் தில்தான் பெரும்பாலான ஆசிய நாடுகள் சுதந்திரம் பெற் றன, அதுவும் பெரும்பாலும் ஏகாதிபத்தியம் மற்றும் உள் நாட்டுப் பிற்போக்கிற்கு எதிரான ஆயுதமேந்திய போராட் டத்தில் சுதந்திரம் பெற்றன.

1950க்களின் இரண்டாம் பாதியிலிருந்து காலனியாதிக்க முறையின் சிதைவு அதன் வீழ்ச்சியாகியது. 1946க்கும் 1956க்கும் இடைப்பட்ட காலத்தில் 16 நாடுகள் சுதந்திர மடைந்தன என்றால், 1956—1960இல் 24 நாடுகளும் 1961—1965இல் 16 நாடுகளும் சுதந்திரமடைந்தன. **ஏகாதி பத்தியத்தின் காலனியாதிக்க முறையின் வீழ்ச்சி** என்பது

காலனியாதிக்க ஆட்சிகள் ஒழித்துக் கட்டப்பட்டதில் இறுதிக் கட்டமாகும். தேசிய விடுதலைப் புரட்சிகள் தென்கிழக்கு ஆசியா, மத்தியக் கிழக்கு, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா முழுவதும் பரவின. போர்ச்சுகலின் காலனிகள் தகர்ந்து வீழ்ந்தன: அங்கோலா, மொசாம்பிக் போன்ற பெரும் நாடுகள் சுதந்திரமடைந்தன. இக்கட்டத்தில் ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை அதன் மூலச்சிறப்புள்ள வடிவத்தில் சாராம்சத்தில் அழிக்கப்பட்டது. ஆனால் முன்னாள் காலனிகளும் அரைக் காலனிகளும் காலனியாதிக்கம் விட்டுச் சென்ற கொடுமைகளின் சுமையை—பொருளாதார வளர்ச்சியின் தாழ்வான மட்டம், லட்சோப லட்சம் மக்களின் பட்டினி, மிகப் பெருமளவு கல்வியறிவின்மை, குறைவான சராசரி வாழும் வயது—அனுபவிக்கின்றன.

தேசிய விடுதலை இயக்கம் உலக புரட்சி நிகழ்ச்சிப் போக்கின் பிரிக்க இயலா அங்கமாகும். தேசிய விடுதலைப் புரட்சிகள் சாதாரணமாக ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையை மட்டுமின்றி, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் தன்மையையும் கொண்டிருந்தன. விடுதலையடைந்த நாடுகள் உண்மையான பொருளாதார சுதந்திரத்திற்காக, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதற்காக, கடினமான காலனியாதிக்கச் சுமைக்கு எதிராக மேன்மேலும் தீவிரமாகப் போராடுகின்றன. ஆனால் ஏகாதிபத்தியவாதிகளோ விடுதலையடைந்த நாடுகளின் சுதந்திரம் வலுவடையக் கூடாது என்பதற்காக இயன்ற அனைத்தையும் செய்கின்றனர். இந்நாடுகளை தன் செல்வாக்கின் கீழ் வைத்திருக்கவும், இவற்றின் இயற்கை வளங்களைத் தன் விருப்பப்படி பயன்படுத்தவும், இவற்றின் பரப்பைத் தன் போர்த்தந்திர நோக்கங்களுக்கேற்ப உபயோகப்படுத்தவும் ஏகாதிபத்தியம் பல்வேறு முறைகளையும் வழிகளையும் கை

யாளுகிறது. இதற்காக பிரித்தாளுதல் என்ற பழைய காலனி யாதிக்க முறை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

### நவீன காலனியாதிக்கத்தின் சாரம்

ஏகாதிபத்தியவாதிகள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெ ரிக்க நாடுகளை மூலப்பொருள் கிடங்காக, முதலீட்டிற்குத் தக்க இடமாக, விற்பனைச் சந்தையாக, மலிவான உழைப்புச் சக்தி கிடைக்குமிடமாக, பெரும் கொள்ளை லாபம் கிடைக்குமிடமாகத்தான் பார்க்கின்றனர்.

முதலாளித்துவ உலகில் உற்பத்தி மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப உள்ளாற்றல் ஆண்டாண்டு காலமாக துருவ மயப்பட்டு நிற்பதை அப்படியே தக்க வைக்க ஏகாதிபத்திய அரசுகள் முயலுகின்றன; ஒரு துருவத்தில் தொழிற்துறை ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளும் மறு துருவத்தில் குறைந்த வளர்ச்சியடைந்த உற்பத்திச் சக்திகளை உடைய பெரும்பாலான வளர்முக நாடுகளும் இருக்க வேண்டும் என்பதுதான் இவற்றின் நோக்கமாகும். முன்னாள் தலை நாடுகளில் மிக நவீன தொழிற்துறை உற்பத்தியின் பெரும் பகுதி குவிகிறது, உலக முதலாளித்துவப் பொருளா தாரத்தின் "எல்லையோரங்களிலோ" விவசாயத் துறை மேலோங்கியுள்ளது, தொழிற்துறை பொருட்களின் சொந்த தேசிய உற்பத்தி மிகவும் குறைவாகவே வளர்ச்சியடைந் துள்ளது. இறுதியாகப் பார்க்குமிடத்து வளர்முக நாடு களில் தேசிய வருமானம் குறைந்தபட்சமாக இருப்பதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் கீழ்நிலையில் இருப்பதற்கும் இதுதான் காரணமாகும். உற்பத்திச் சக்திகளின் இட அமைப் பில் இப்படிப்பட்ட துருவப் போக்கு காணப்படுவதானது சர்வதேச முதலாளித்துவ உழைப்புப் பிரிவினைக்கும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கும் வளர்முக

நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவு முறைக் கும் பெரிதும் சமமற்ற, சுரண்டல் தன்மையை அளிக்கிறது.

"முதலாளித்துவ உலகின் எல்லையோரங்களைத்" தம் செல்வாக்கின் கீழ் தொடர்ந்து வைத்திருப்பதற்காக ஏகாதி பத்திய அரசுகள் அரசியல், இராணுவ-அரசியல், சித்தாந்த, பொருளாதார வழிகளைப் பரவலாகப் பின்பற்றுகின்றன. விடுதலையடைந்த நாடுகளின் மீது முரட்டுத்தனமாக இரா ணுவ-அரசியல் ரீதியிலும், போலீஸ் ரீதியிலும் நிர்ப்பந் தம் செலுத்தும் முறைகளைக் கைவிடவும் இவை தயாரா யில்லை.

தம் முன்னாள் காலனிகள் அரசியல் சுதந்திரம் பெறு வதை ஏகாதிபத்தியவாதிகள் விரும்பவில்லை, இச்சுதந்திரத் தை ஒரு திரையாக மாற்றி, அதன் பின் நின்று தாம் உண்மையான எஜமானர்களாக விளங்க வேண்டுமென்று இவர்கள் முயலுகின்றனர். இதற்காக இவர்கள் தம் தலை யாட்டி பொம்மைகளை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவது, சமமற்ற உடன்படிக்கைகளைத் திணிப்பது முதல், ஆயுத ஆக்கிரமிப்பில் இறங்குவது வரை சகலவித வழிகளையும் நாடுகின்றனர். வளர்முக நாடுகள் தம் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேற முயலும் பொழுது ஏகாதிபத்தியவாதிகள் சகல வித வழிகளிலும் அவற்றை அச்சுறுத்துகின்றனர். தம்மால் மட்டும் முடிந்திருந்தால் ஏகாதிபத்தியவாதிகள் தேசிய விடுதலை இயக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஆயு தங்களைப் பயன்படுத்தியிருப்பர். ஆனால் இன்று சர்வதேச நிலவரம் மாறியுள்ளது, இச்சூழ்நிலையில் மக்களின் சுதந் திரத்தை ஒடுக்க நேரடியாக ஆயுதங்களைப் பயன்படுத்த முடியாது. எனவேதான் இன்று வளர்முக நாடுகளின் மீது ஏகாதிபத்தியம் பொருளாதார நிர்ப்பந்த வழிகளைப் பயன் படுத்துகிறது, இதில் முக்கியப் பங்கு பன்னாட்டு தொழில்

நிறுவனங்களுக்கும் வங்கி இணையங்களுக்கும் அளிக்கப் பட்டுள்ளது.

இளம், விடுதலையடைந்த நாடுகளின் பால் ஏகாதிபத் தியம் கடைப்பிடிக்கும் நவீன கொள்கையின் சாரம் என்ன?

இக்கொள்கை **நவீன காலனியாதிக்கம்** என்ற பெயரைப் பெற்றுள்ளது. விடுதலையடைந்த நாடுகளை உலக முத லாளித்துவப் பொருளாதார அமைப்பில் தக்க வைப்பது, புதிய முறைகளின் மூலம் இந்நாடுகளின் நடைமுறை அசமத்துவ நிலையை வலுப்படுத்துவது, புதிய, நுணுக்க மான முறைகளின் மூலம் இந்நாடுகளின் மக்களைச் சுரண்டு வது, இவற்றின் அரசியல் சுதந்திரத்தை வென்று சம்பிர தாயமாக்குவது என்பவைதான் இக்கொள்கையின் நோக் கங்களாகும். சுதந்திரப் பொருளாதாரம் தோன்ற சகல விதங்களிலும் இடையூறு செய்வது, வளர்முக நாடுகள் உண்மையிலேயே சுதந்திரமான வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கையை நிறைவேற்றத் தடையாக இருப்பது, இவை சோஷலிசத்தை நாடாமலிருக்கும்படி செய்வது, இவற்றை மூலப்பொருள் கிடங்குகளாகவும் முதலீட்டுத் துறைகளாக வும் தக்க வைப்பது—இவைதான் நவீன காலனியாதிக்கத் தின் முக்கிய லட்சியமாகும்.

## ''பொருளாதார ஏகாதிபத்தியம்''

''பொருளாதார ஏகாதிபத்தியம்'' என்று அழைக்கப்படுவது தான் நவீன காலனியாதிக்கத்தின் அடிப்படையாகத் திகழு கிறது. தேசப்படத்தில் இதை வரையறுக்க முடியாது. சமீபத் தில் விடுதலையடைந்த ஒரு நாட்டை புவியியல் படத்தின் படி அல்லது தேசப்படத்தின் நோக்கில் பார்த்தால் அது முழுக்க முழுக்க சுதந்திரமானதாய் இருக்கும். ஆனால் சற்று ஆழ்ந்து பார்த்தால் இந்நாடு ஏகாதிபத்திய வலை

யில், மிகப்பெரும் ஏகபோகங்கள், வங்கிகளின் பிடியில் சிக்கியிருப்பது நன்கு தெரிய வரும்; இவை சகலவிதங்களிலும் அந்நாட்டை ஏகாதிபத்திய அடிமை வலையில் சிக்க வைத்திருப்பதை நன்கு காணலாம்.

பெரும்பாலான வளர்முக நாடுகளில் உள்ள முக்கிய தொழிற்துறைகள் இன்று வரை சர்வதேச இணையங்களின் கரங்களில் உள்ளன. வளர்முக நாடுகளிலேயே நன்கு வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட தொழிற்துறை உற்பத்தியின் முக்கியப் பிரிவுகள் அயல்நாட்டு மூலதனத்தைப் பெரிதும் சார்ந்துள்ளன. பிரேஸிலில் 100% கார் உற்பத்தியையும், பெரு நாட்டில் ரப்பர் தொழில்நுட்பப் பகுதிகளின் உற்பத்தியில் கிட்டத்தட்ட 90%யும், ஆர்ஜென்டீனாவில் இயந்திர கட்டுமானத்தில் (மின்சாரத் தொழில்நுட்பத் துறையைச் சேர்க்காமல்) 80%க்கு அதிகமான பகுதியையும், மெக்சிக்கோவில் இரசாயன உற்பத்தியில் சுமார் 70%யும் பன்னாட்டு இணையங்கள் தம் கரங்களில் வைத்துள்ளன. சுரங்கத் தொழிற்துறையின் ஒரு சில பிரிவுகளிலும் இவை ஏகபோக நிலைகளை வகிக்கின்றன. உலகில் 6 பன்னாட்டு இணையங்கள் முதலாளித்துவ உலகின் அலுமினிய உற்பத்தியில் பாதிக்கு அதிகமானதையும் (பாக்சைட் இருப்பில் $^3/_4$ பங்கு வளர்முக நாடுகளில் உள்ளது), 7 பன்னாட்டு இணையங்கள் தாமிர உற்பத்தியில் $^1/_4$ பங்கையும் எடுக்கின்றன.

வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தில் பன்னாட்டு இணையங்களின் ஏகபோக நிலை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது. நேரடியாக எடுத்துக் கொள்வது, திணறடிக்கும் விலைகளைத் தற்காலிகமாக கொண்டு வருவது (அதாவது சாதாரண சந்தை விலைகளை விடக் கணிசமான அளவு குறைந்த விலைகளை நிர்ணயிப்பது), பேதங்காட்டும் விலைகளைப் பயன்படுத்துவது, புதிய தொழில்நுட்பம் கிட்டாமல் செய்வது போன்ற முறைகளின் மூலம் ஸ்தல போட்டி

யாளர்கள் அகற்றப்படுகின்றனர் அல்லது அடக்கப்படு கின்றனர். ஸ்தல சந்தையில் முழு கட்டுப்பாட்டை கொண்டு வரும் நோக்கத்தோடு ஏகபோகங்கள் பல நேரங்களில் தம் மிடையே விசேஷ கார்ட்டெல் உடன்படிக்கைகளைச் செய்து கொள்கின்றன, இவை ஸ்தல சந்தையிலிருந்து தேசிய கம் பெனிகளை அகற்றுவதற்காகக் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழி வகுக்கின்றன.

வளர்முக நாடுகளில் பன்னாட்டு ஏகபோகங்கள் இடும் முதலீடுகள் 3—5 ஆண்டுகளிலேயே ஈடுகட்டப்படுகின்றன. குறைவான தேசிய ஊதிய அளவு, மலிவான நிலம், இயற்கை வளங்கள் மிகுந்திருப்பது போன்றவைதான் இதற்கு முக்கியக் காரணமாகும். வளர்முக நாடுகளில் அயல்நாட்டு ஏகபோகங்கள் பெறும் லாப விகிதம் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் கிடைப்பதை விட 2 மடங்கு அல்லது அதற்கும் அதிகமாக இருப்பது தற்செயல் அல்ல.

வளர்முக நாடுகளில் தம் விஸ்தரிப்பில் அயல்நாட்டு ஏக போகங்கள் மூலப்பொருள் வளங்களின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. சர்வதேச சுரங்கத் தொழில் இணையங்கள் பல நேரங்களில் வளர்முக நாடுகளில் கனிப்பொருளை எடுத்த பின் பூர்வாங்கப் பதப் படுத்தலை மட்டுமே செய்கின்றன. தத்தம் நாடுகளில்தான் இதை இறுதியாகப் பதப்படுத்தி, அதிலிருந்து தயாரான பொருட்களை உற்பத்தி செய்கின்றன. ஏகபோக விலை உரு வாக்கத்தின் வினியோக வழிகளின் மூலம் செல்லும் இந்த "நன்கு பதப்படுத்தப்பட்ட" கனிப்பொருளின் விலை ஒரு சில மடங்கு கூடுகிறது. மூலப்பொருளிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதி சர்வதேச ஏகபோகங்களின் கஜானாவிற்குச் செல்கிறது: மூலப்பொருளின் ஏற்றுமதி விலைகளுக்கும் உற்பத்தி செய்யப்பட்ட பாதி தயாரான அல்

லது முழுதும் தயாரான பொருளின் இறுதி விற்பனை விலைகளுக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து இது கிடைக்கிறது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள நுகர்வாளர்கள் வளர்முக நாடுகளிலிருந்து வரும் மூலப்பொருட்களுக்காக ஆண்டுதோறும் 200 பில்லியன் டாலர்களுக்கும் கூடுதலான தொகையைச் செலுத்து கின்றனர். ஆனால் இத்தொகையில் சுமார் 15% மட்டுமே வளர்முக நாடுகளுக்குக் கிட்டுகின்றன, எஞ்சியது முழுவதும் அயல்நாட்டு ஏகபோகங்களின் பெட்டிகளுக்குச் செல்கிறது.

வளர்முக நாடுகளின் செய்தொழில் துறைகளில், எவை ஏகாதிபத்திய அரசுகளின் சந்தைகளுடன் வளர்முக நாடு களை "கட்டிப்போடுமோ" அவற்றை வளர்ப்பதன் மீது மட்டுமே ஏகபோகங்கள் கவனம் செலுத்துகின்றன. இன்று பன்னாட்டு ஏகபோகங்கள் வளர்முக நாடுகளில் உள்ள தொழிற்துறை உற்பத்தியில் சுமார் 40%த்தைத் தம் கரங் களில் வைத்துள்ளன. இதல் அமெரிக்க ஏகபோகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன; வளர்முக நாடுகளின் செய் தொழில் துறையில் உள்ள நேரடி அயல்நாட்டு முதலீடு களில் பாதிக்கும் மேல் அமெரிக்க ஏகபோகங்களைச் சாரும்.

பன்னாட்டு ஏகபோகங்கள் "தொழில்நுட்பக் காலனி யாதிக்கத்தைப்" பரவலாகப் பயன்படுத்துகின்றன. வளர் முக நாடுகள் நவீன தொழில்நுட்பத்தைப் பெறாமல் செய் வதும், இவை ஏகாதிபத்திய நாடுகளை நீண்ட காலம் விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியில் சார்ந்திருக்குமாறு செய் வதும்தான் இதன் நோக்கமாகும். வளர்முக நாடுகளுக்கு ஒரு சில தொழில்நுட்ப வசதிகள் மட்டுமே அளிக்கப்படு கின்றன, அதுவும் ஏராளமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படு கின்றன, இதற்காகப் பெரும் பணம் பிடுங்கப்படுகிறது. சாதாரணமாக, புதிய தொழில்நுட்பம் முதலில் வளர்முக

நாடுகளில் உள்ள பன்னாட்டு ஏகபோகங்களின் கிளை, சார்பு கம்பெனிகளுக்குச் செல்கிறது, கணிசமான அளவு தாமதத்திற்குப் பின்தான் தேசிய கம்பெனிகளுக்குச் செல்கிறது. அதிலும் பல கட்டுப்பாடுகளும் நிபந்தனை களும் விதிக்கப்படுகின்றன. உதாரணமாக, ஒரு பன்னாட்டு ஏகபோகம் பாதி தயாரான பொருட்கள், உபகரணங்களை அந்நாட்டில் உள்ள தன் கிளையிடமிருந்து வாங்குமாறு தேசிய கம்பெனியை நிர்ப்பந்திக்கும் அல்லது அதற்குத் தேவையில்லாத தொழில்நுட்பத்தைக் கூடுதல் விலைக்கு அதன் மீது திணிக்கும். பல நேரங்களில் அயல்நாட்டு இணையம் லைசென்சை வாங்கிய ஸ்தல உற்பத்தியாளனை தன் பங்குகளில் ஒரு பகுதியை இணையத்திற்கு விற்கு மாறு நிர்ப்பந்திக்கும், தயாரான பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்ய தடை விதிக்கும், இன்னும் பிற வழி களில் தேசிய கம்பெனியின் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும்.

"பொருளாதார ஏகாதிபத்தியத்திற்குப்" பல வளர்முக நாடுகளிலிருந்து மேன்மேலும் அதிக எதிர்ப்பு வந்ததை யடுத்து பன்னாட்டு ஏகபோகங்கள் அதிக நெளிவு சுழிவான கொள்கையைப் பின்பற்றலாயின; இது "மாற்றியமைக்கும் தந்திரம்" என்ற பெயரைப் பெற்றது. இந்தியாவிலும் பல மத்தியக் கிழக்கு நாடுகளிலும் ஸ்தல தனியார் அல்லது அரசு மூலதனத்துடன் சேர்ந்து "கூட்டு கம்பெனிகள்" ஏற்படுத்தப்பட்டன. இது வளர்முக நாடுகளில் பன்னாட்டு ஏகபோகங்களின் மூலதனம் நாட்டுடைமையாக்கப்படுவதி லிருந்தும் கூடுதல் வரிகள், மற்ற கட்டுப்பாடுகளிலிருந்தும் பாதுகாப்பையளிக்கிறது. தேசிய கம்பெனிகள் என்ற போர் வையின் கீழ் பன்னாட்டு இணையங்கள் பெரும்பாலான வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தில் முக்கிய நிலை களை தம் கையில் வைத்துக் கொண்டு அவற்றின் இயற்

கை வளங்களையும் ஆள்பலத்தையும் தொடர்ந்து சுரண்டு கின்றன.

## ''உதவி'' என்ற போர்வையின் கீழ்

ஏகாதிபத்திய அரசுகள் வளர்முக நாடுகளுக்குத் தாம் அளிக்கும் ''உதவி'' பற்றி அடிக்கடி, நிறைய பேசுகின் றன. ஆரவாரமாக பிரசாரம் செய்யப்படும் ''உதவி மானி யங்கள்'', ''தன்னலங் கருதா ஊதவி'' போன்றவற்றைச் சற்று ஆழ்ந்து நோக்கினால் உண்மை அம்பலமாகும். இவ்வாறு அளிக்கப்படும் உதவிகள் பல நேரங்களில் அவற்றை அளிப்பவர்களுக்குப் பெரும் லாபத்தை ஈட்டித் தருகின்றன. மேலும், இத்தகைய ''உதவியை'' அளிக்கும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் தம் ஏக போகங்களுக்காக முக்கிய ஆதாயங்கள், சலுகைகளைக் கோரிப் பெறுகின்றன.

ஏகாதிபத்திய வல்லரசுகள் தனித்தனியாகவும் கூட் டாகவும் சேர்ந்து ''நல்ல உதவியாளர்களாகச்'' செயல் படுகின்றன. இதில் கடன் மற்றும் நிதி பன்னாட்டு நிறு வனங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. மீட்டுருவாக்க வளர்ச்சிக்கான பன்னாட்டு வங்கி (IBRD), பன்னாட்டு நிதி கார்ப்பரேஷன் (IFC), வளர்ச்சிக்கான பன்னாட்டு நிறு வனம் (IDA), பன்னாட்டுப் பணவுதவி நிதி (IMF), பல் வேறு பிராந்திய முதலீட்டு வங்கிகள், அயல்நாட்டுப் பரப்பு களின் வளர்ச்சிக்கான நிதிகள் போன்றவை இவற்றி லடங்கும்.

பன்னாட்டு முதலாளித்துவ கடன் நிறுவனங்களின் நிபுணர்கள் ஒரு வளர்முக நாட்டிற்கு வந்து சென்றதும் அந்நாட்டில் விலைகள் உயரத் துவங்கும்; அந்நாட்டின்

பொருளாதாரத்தை "மேம்படுத்த" உலக வங்கியின் நிபுணர்கள் (**IBRD, IFC, IDA** ஆகியவற்றின் பிரதிநிதிகள்) தம் சிபாரிசுகளைத் திணித்துள்ளனர் என்று இதற்குப் பொருள். சாதாரணமாக, பன்னாட்டு ஏகபோகங்களின் நடவடிக்கைகளுக்கு இயன்ற அளவு அதிக சுதந்திரம் அளிப்பது, விலைகள் மீதான கண்காணிப்பையும் இறக்குமதி கட்டுப்பாடுகளையும் அகற்றுவது, அயல்நாட்டு கம்பெனிகள் தம் கொள்ளை லாபங்களை நாட்டிலிருந்து தங்கு தடையின்றி வெளியில் எடுத்துச் செல்ல விடுவது போன்றவைதான் இச்சிபாரிசுகளாக இருக்கும். பொருளாதாரத்தின் இந்த வலுக்கட்டாய "மேம்படுதலின்" முக்கிய அரசியல் அம்சம் அரசுத் துறையை மட்டுப்படுத்தி தனியுடைமைக்கு சகலவிதங்களிலும் ஊக்குவிப்பு அளிப்பதாகும்.

இப்படிப்பட்ட "சிபாரிசுகளை" நிறைவேற்றுவது உலக வங்கியிடமிருந்து வளர்முக நாடுகள் புதிய கடன்களைப் பெறுவதற்கான நிபந்தனையாக வைக்கப்படுகிறது. இந்த வங்கி தன் நிதியை எப்படி பகிர்ந்தளிப்பது என்பதை நடைமுறையில் ஏகாதிபத்திய அரசுகள்தான் முடிவு செய்கின்றன. இந்த ஏகாதிபத்திய அரசுகள் இதை நவீன காலனியாதிக்கக் கொள்கையை நிறைவேற்றும் ஒரு கூட்டுக் கருவியாகப் பயன்படுத்துகின்றன. இவை ஒரு பன்னாட்டு நிறுவனம் என்ற வசதியான போர்வையின் கீழ் மறைந்து கொண்டு, பணத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் மீது நிர்ப்பந்தம் செலுத்துகின்றன.

ஏகாதிபத்திய அரசு "உதவி" தனியார் மூலதன ஏற்றுமதியுடன் மிகப் பல்வேறான வடிவங்களில் பின்னிப் பிணைந்துள்ளது. நிதி மற்றும் கடன் அரசு நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும், இவற்றின் செயற்பாட்டு முறைகள் சிக்கலடைந்



15—1165

துள்ளதாலும் பூர்ஷ்வா அரசா, தனிநபரா யார் மூல தனத்தை எடுத்துச் செல்கின்றார் என்று துல்லியமாக நிர்ணயிப்பது பல நேரங்களில் கடினம். முதலாளித்துவ நாடுகளின் பல கடன் மற்றும் நிதி பன்னாட்டு நிறு வனங்கள் தனியார் கடன் மூலதனத்தை எடுத்துச் செல் லும் இடைத்தரகர்களாகப் பகுதியளவிற்குப் பணியாற்று கின்றன.

பூர்ஷ்வா அரசு வளர்முக நாடுகளுக்கு "உதவுவதன்" மூலம் வளர்முக நாடுகளில் பன்னாட்டு ஏகபோகங்களின் நடவடிக்கைக்கான ஆபத்தை குறைந்தபட்சமாக்க முயன் றால், இந்த ஏகபோகங்களும் தம் பங்கை ஆற்றத் தயங்கு வதில்லை. ஏகபோக முதலாளி வர்க்கம் ஏகாதிபத்திய "உதவி" பணியைப் பகுதியளவிற்குத் தான் எடுத்துக் கொள்கிறது. "அடிப்படைப் பொருளாதார பன்னாட்டு கார்ப் பரேஷன்" போன்ற "அறக்கொடை" ஸ்தாபனங்களின் நடவடிக்கையில் இது நன்கு வெளிப்படுகிறது. இதன் மூல தனத்தில் சுமார் 70% அமெரிக்காவின் செல்வம் மிக்க குடும்பங்களில் ஒன்றாகிய ராக்ஃபெல்லர் குடும்பத்திடம் உள்ளது. இந்த "அறக்கொடை" ஸ்தாபனங்கள் வளர்முக நாடுகளில் ஏகாதிபத்திய அரசுகளின் கொள்கையைத் தீவி ரமாகக் கடைப்பிடிக்கின்றன, ஸ்தல பழமைவாதப் பிரி வினருக்கும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் முதலாளி வர்க்கத்தினருக்கும் இடையிலான தொடர்பு களை விரிவுபடுத்த உதவுகின்றன, இந்நாடுகளில் மேலைய வாழ்க்கை முறையைப் பரப்புகின்றன.

தனியார் கடன்கள் இன்று வளர்முக நாடுகளை ஏகாதி பத்தியத்தின் செல்வாக்கு மண்டலத்திற்குள் வைத்திருக் கும் முக்கிய வழிகளில் ஒன்றாக விளங்குகின்றன. இன்று தனியார் வங்கி ஏகபோகங்களின் கரங்களில் உள்ள பண மூட்டை நவீன காலனியாதிக்கத்தின் செயல்வன்மை மிக்க

கருவிகளில் ஒன்றாகத் திகழுகிறது. கடன் வலையை வீசிய பின் ஏகாதிபத்தியம் கடன் வாங்கியவர்களைப் பொருளாதார ரீதியில் மட்டுமின்றி அரசியல் ரீதியிலும் நெருக்குகிறது. நிதி அடிமைத்தனம் அரசியல் கட்டுப்பாட்டிற்குச் சற்றும் குறையாத வகையில் நாடுகளைக் கட்டிப்போடக் கூடும்.

வளர்முக நாடுகள் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு அளிக்க வேண்டிய கடன் அசாதாரண வேகத்தில் அதிகரித்து வருகிறது. 1970ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் சுமாராக 90 பில்லியன் டாலர்களாக இருந்த இது 1980க்களின் நடுவில் 1 டிரில்லியன் டாலர்களை விஞ்சியது, தொடர்ந்து இன்னமும் பெருகி வருகிறது. இப்பிரம்மாண்டமான தொகை நம்மை பிரமிக்க வைப்பதோடு கூட, ஒரு சில வளர்முக நாடுகள் எவ்வளவு தூரம் கடன் வலையில் இழுக்கப்பட்டுள்ளன என்பதையும் காட்டுகிறது.

1970ஆம் ஆண்டுகளில் கடன்களை வாங்கிய ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் தாம் 1980ஆம் ஆண்டுகளில் எப்படிப்பட்டதொரு கடினமான நிலையைச் சந்திக்க நேரிடும் என்று கற்பனை கூட செய்து பார்த்திருக்கா. என்ன நடந்தது?

முதலாவதாக, உலக முதலாளித்துவ கடன் சந்தையில் வட்டி விகிதங்கள் பெரிதும் அதிகரித்தன. பல வளர்முக நாடுகளின் நிலைமை மிகவும் இக்கட்டானதாகியது. இவற்றின் ஏற்றுமதி வருமானம் முழுவதும் வட்டி கட்டவும் கடனை அடைக்கவும் மட்டுமே சென்றது. இதனால் இந்நாடுகள் புதிய கடன்களை வாங்க வேண்டியதாயிற்று. இதைப் பயன்படுத்திய மேலைய வங்கியதிபர்கள் புதிய கடன் நிபந்தனைகளை மேன்மேலும் கடுமையாக்கினர், தேசிய உரிமைக்குப் பங்கமேற்படுத்தும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையில் நடைபெறும் வெளிநாட்டு வர்த்தகத்திலும் நவீன காலனியாதிக்கத்தின் அம்சங்கள் வெளிப்படுகின்றன. மேலைய ஏகபோகங்கள் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளைப் பயன்படுத்தி வளர்முக நாடுகளின் நலன்களுக்குப் பங்கமேற்படுத்துகின்றன, தாம் கூடுதல் லாபத்தைப் பெறுகின்றன. உதாரணமாக, 1975இல் வளர்முக நாடுகள் 5.3 டன் பருத்தியை விற்று ஒரு லாரியை வாங்கின என்றால், இன்று இதற்கு 12 டன்னிற்கும் கூடுதலான பருத்தியை விற்க வேண்டியுள்ளது. வெளிநாட்டு வர்த்தகத்தில் தமக்குப் புதிய சலுகைகளைப் பெற முயலும் ஏகாதிபத்திய நாடுகள் அதே நேரத்தில் வளர்முக நாடுகளிலிருந்து தேசிய கம்பெனிகள் தொழிற்துறைப் பொருட்களை ஏற்றுமதி செய்ய கூடுதல் தடைகளை ஏற்படுத்துகின்றன.

### நவீன காலனியாதிக்கமும் ஆயுதப் போட்டியும்

வளர்முக நாடுகளை ஏகாதிபத்தியம் மேன்மேலும் ஆயுதப் போட்டியினுள் இழுக்கிறது; இதுவும் நவீன காலனியாதிக்க முறைகளில் ஒன்றாகும். 1980க்களின் நடுவில் உலக ஆயுத ஏற்றுமதியில் $^3/_4$ பகுதி வளர்முக நாடுகளுக்குச் சென்றது. இவற்றில் சில, ஏகாதிபத்திய அரசுகள் அல்லது அவற்றின் கையாட்களின் ஆக்கிரமிப்புகளை முறியடிப்பதற்காக இதைச் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் மேலைய ஆயுதங்களில் பெரும் பகுதி ஏகாதிபத்தியத்தின் “பிராந்திய போலீசாக” விளங்கும் நாடுகளுக்குச் செல்கிறது, வளர்முக நாடுகளின் உள்ளே நடைபெறும்

ஜனநாயக இயக்கங்களை ஒடுக்கவும் ஸ்தல மோதல்களை மூட்டிவிடவும் பயன்படுத்தப்படுகிறது.

ஆயுத ஏற்றுமதியைப் பற்றி முடிவெடுக்கும் ஏகாதிபத்திய அரசாங்கங்கள் வளர்முக நாடுகளின் (குறிப்பாக போர்த்தந்திர வளங்களை உடைய நாடுகளின்) அரசியல் திசையமைவின் மீது தாக்கம் செலுத்த வேண்டுமென்பதைத் தம் நேரடி நோக்கமாகக் கொண்டுள்ளன. இது தவிர இராணுவத் தளங்களை அமைப்பது, ஆக்கிரமிப்பு இராணுவ-அரசியல் கூட்டுகளை வலுப்படுத்துவது, "இராஜதந்திர முயற்சிகளை" ஆதரிப்பது ஆகியவற்றிற்கான உரிமைகளைப் பெறவும் ஏகாதிபத்தியவாதிகள் முயலுகின்றனர்.

வளர்முக நாடுகளின் உள்ளே ஏகாதிபத்திய அரசுகள் இராணுவ ரீதியில் நுழைவது வலுப்பட்டு வருவதானது வளர்முக நாடுகளின் பொருளாதார, சமூக, அரசியல் வளர்ச்சியைப் பாதிக்கிறது.

மேலைய நாடுகளின் ஆயுத ஏற்றுமதி அதிகரித்து வருவதானது பல வளர்முக நாடுகள் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருப்பதை இன்னமும் வலுப்படுத்துகிறது, சில சந்தர்ப்பங்களில் இந்த வளர்முக நாடுகளில் சிலவற்றை இராணுவ தொழிற்துறை இணையத்துடன் கட்டிப்போடுகிறது. இது ஒரு சில நாடுகளில் சர்வாதிகாரக் கும்பல்கள் ஆட்சியில் அமர இட்டுச் செல்கிறது, ஜனநாயக மாற்றங்களை நிறைவேற்றவும் ஏழை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் இடையூறாக உள்ளது.

மேலைய ஆயுதம் வளர்முக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதானது இந்நாடுகளின் தேசிய வருமானத்தின் ஒரு பகுதி இராணுவ தொழிற்துறை இணையங்களுக்கு ஆதாரவாக மறுபங்கீடு செய்யப்படுவதைக் குறிக்கிறது. இதனால் சமீபத்தில் விடுதலையடைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான பண்டங்களை

இறக்குமதி செய்யும் வாய்ப்பு குறைகிறது, இவற்றின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் இன்னமும் கடுமையாகின்றன, தொழிற்துறை, விவசாயத் துறை வளர்ச்சிக்கு அவசியமான, மட்டான அளவில் உள்ள வளங்கள் விரைவாகத் தீருகின்றன. இராணுவ நோக்கங்களுக்காகச் செல்லும் சாதனங்களை மற்ற சமாதானத் துறைகளில் பயன்படுத்தியிருந்தால் விடுதலையடைந்த நாடுகளின் பல்வேறு சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்குக் குறுகிய காலகட்டத்திலேயே வெற்றிகரமாகத் தீர்வு கண்டிருக்கலாம்.

நவீன காலனியாதிக்கக் கொள்கையைப் பின்பற்றும் ஏகாதிபத்தியம் தனக்கு ஏற்ற தலையாட்டி கும்பல்கள், சர்வாதிகாரிகளை ஆட்சியிலமர்த்துகிறது, இராணுவத் தளபதிகள், அரசியல்வாதிகளை விலைக்கு வாங்குகிறது, சதிகள், ஆட்சிக் கவிழ்ப்புகள், முற்போக்கு அரசியல் தலைவர்களைக் கொலை செய்வது, ஏமாற்றுவது, மிரட்டல் போன்றவற்றை ஏற்பாடு செய்கிறது, தேசிய இனங்கள் மற்றும் குலங்களின் இடையே பகைமையைத் தூண்டி விடுகிறது. தம் நாட்டையே விலைபேசும் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் திரண்டெழும் பொழுது ஏகாதிபத்தியவாதிகள் "சுதந்திரம், ஜனநாயகத்தைப்" பாதுகாக்கப் போவதாகச் சாக்கு கூறி விடுதலை இயக்கங்களை ஒடுக்க முயலுகின்றனர், இதற்காக நேரடி ஆக்கிரமிப்பில் கூட இறங்குகின்றனர். வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய காட்டுமிராண்டித்தனமான யுத்தம், கிரினாடாவில் புகுந்தது, அங்கோலா, நிக்கராகுவா, இன்னும் பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையீடு ஆகியவை இதற்கான உதாரணங்களாகும்.

வளர்முக நாடுகளின் மக்கள் புதிய சர்வதேசப் பொருளாதார முறையை ஏற்படுத்த வேண்டும், உண்மையான பொருளாதார, அரசியல் சுதந்திரத்தை அடைய வேண்டும் என்பதற்காக, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மேன்மேலும் தீவிரப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

## எப்பாதையைத் தேர்ந்தெடுப்பது?

அரசியல் சுதந்திரத்தைப் பெற்ற பின் விடுதலையடைந்த நாடுகளின் முன் ஏகாதிபத்தியத்திடமிருந்து பொருளாதார ரீதியில் சுதந்திரம் அடையும் கடமை நிற்கிறது.

சொந்த தேசியத் தொழிற்துறையைத் தோற்றுவிக்க வேண்டும், விவசாயத் துறையை உயர்த்த வேண்டும், காலனியாட்சியாளர்கள் அதன் மீது திணித்த ஒரு தலைப்பட்சப் போக்கிலிருந்து விடுபட வேண்டும், உணவுப் பொருள் உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்று இதற்குப் பொருள்.

இந்த உடனடி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான எல்லா சூழ்நிலைகளும் வளர்முக நாடுகளில் உள்ளன: இங்கே கனி வளமும் எரிசக்தி வளமும் போதுமான அளவில் இருக்கின்றன; வளம் மிகு நிலம் பரந்து கிடக்கிறது; அனுகூலமான தட்பவெப்பம் ஆண்டிற்கு 2—3 போகம் எடுக்க உதவுகிறது, இது தானியம், பழங்கள், காய் கறிகளின் விளைச்சலுக்கு மிகவும் ஏற்றது; மக்கள்தொகை கணிசமானது, இதில் சில மக்களினங்கள் பல நூற்றாண்டு கால நல் பாரம்பரியங்களையும் உயர்ந்த கலாசாரத்தையும் உடையன.

இச்சூழ்நிலைகளை நன்கு பயன்படுத்தி உடனடி பொருளாதார பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வு காண்பது?

அரசியல் சுதந்திரத்தைப் பெற்ற பின் முன்னாள் காலனி, அரைக் காலனி, சார்பு நாடுகளின் முன் இரண்டு வழிகள்—முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை அல்லது முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை—தோன்றுகின்றன. எந்தப் பாதையில் செல்வது என்பதை அந்தந்த நாட்டு மக்கள்தான் முடிவு செய்கின்றனர்.

முதலாளித்துவப் பாதையில் வளர்ச்சியடையும் நாடுகளுக்கு பொருளாதாரப் பின்தங்கல், ஏகாதிபத்திய வல்லரசுகளைச் சார்ந்திருப்பது ஆகியவற்றிலிருந்து விடுபடுவது பெரிதும் கடினம். முதலாளித்துவ உலகில் பல்வேறு விதமான நெருக்கடிகளும் சமூக பொருளாதார முரண்பாடுகள் கூர்மையடைவதும் வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பாகப் பாதிக்கின்றன. இந்நாடுகள் தம் தேசிய வருமானத்தில் பெரும் பகுதியைத் தொடர்ந்து இழக்கின்றன, தம் நாட்டு வளத்தில் கணிசமான பகுதியைத் தேசியப் பொருளாதார நலன் கருதி பயன்படுத்தும் வாய்ப்புகளும் இவற்றிடம் மட்டாகவே உள்ளன.

பல விடுதலையடைந்த நாடுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளன. இன்று இவற்றில் சுமார் 150 மில்லியன் மக்கள் வாழுகின்றனர், இவற்றின் பரப்பு 12 மில்லியன் ச.கி.மீ.க்கும் அதிகமாகும்.

முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ள நாடுகளில் ஒவ்வொன்றிற்கும் ஒரு சில சிறப்பு அம்சங்கள் இருந்தாலும் இவற்றின் பொது முயற்சிகள் பொதுத் திசையில் அமைந்துள்ளன: ஏகாதிபத்திய ஏகபோகங்கள் மற்றும் ஸ்தல பெரும் முதலாளிகள், நிலப்பிரபுகளின் நிலைகளைப் படிப்படியாக அகற்றுவது, பொரு

ளாதாரத்தில் மக்கள் அரசிற்கு முக்கிய இடமளித்து உற்பத்திச் சக்திகளின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு மாறுதல், கிராமத்தில் கூட்டுறவு இயக்கத்திற்கு ஊக்கமளித்தல், சமுதாய வாழ்க்கையில் உழைப்பாளி மக்கள் திர ளினரின் பங்கை உயர்த்துதல், அரசு உறுப்புகளில் தேசிய ஊழியர்களை வலுப்படுத்தல், ஏகாதிபத்திய எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றல் ஆகியவை இத்திசையமைவுகளாகும்.

சோவியத் ஒன்றியம், மற்ற சோஷலிச நாடுகளின் வளம் மிகு அனுபவத்தைப் பயன்படுத்துவதும், இளம் விடுதலை யடைந்த நாடுகளுக்கும் உலக சோஷலிச முகாமிற்கும் இடையிலான விஞ்ஞான தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதும், சோஷலிச நாடுகளின் தன்னலம் கருதாத பன்முக உதவியும் முதலாளித் துவமற்ற வளர்ச்சிப் பாதையில் நடைபோடும் அரசுகளின் வளர்ச்சி மீது பெரும் புரட்சிகரத் தாக்கத்தைச் செலுத்து கின்றன. வளர்முக நாடுகளுக்கும் சோஷலிச நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு சமத்துவம், பரஸ்பர அனு கூலம், பிறர் உள் விவகாரங்களில் தலையிடாமை ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையிலானது, இது சமாதானம், முன்னேற்ற லட்சியங்களுக்குச் சேவை புரிகிறது.

அத்தியாயம் பத்து

# முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி

முதலாளித்துவத்தைப் பல நேரங்களில் ''நோய்வாய்ப்பட்ட சமுதாயம்'', ''திசைக்காட்டியில்லா சமுதாயம்'', ''எதிர் காலம் இல்லா சமுதாயம்'' என்றெல்லாம் அழைப்பது சரி யானதே. இன்று முதலாளித்துவம் மிக ஆழமான நெருக் கடியில் உள்ளது, இதை ரோமானியப் பேரரசின் நெருக்க டியுடன்தான் ஒப்பிடலாம், இதன் விளைவாகத்தான் பண் டைய அடிமையுடைமை உலகம் தகர்ந்து வீழ்ந்தது. முத லாளித்துவ நெருக்கடி இன்று பொருளாதாரம், அரசியல், கலாசாரம், ஒழுக்கம், சட்டம் ஆகிய எல்லா துறைகளையும் ஆட்கொண்டுள்ளது. எனவேதான் இது **முதலாளித்துவத் தின் பொது நெருக்கடி** எனப்படுகிறது. வி. இ. லெனினின் வார்த்தைகளில் சொன்னால் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஒரு முழு வரலாற்று சகாப்தத்தைத் தழுவி நிற்கிறது. இது ''முதலாளித்துவம் முழு அளவில் தகர்ந்து விழுந்து சோஷலிச சமுதாயம் உதிக்கும்''* சகாப்தமாகும்.

* V. I. Lenin, *Collected Works,* vol. 27, p. 130.

## முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் தோற்றமும் அதன் முக்கிய கட்டங்களும்

1914—1918இல் நடந்த முதலாவது உலக யுத்தமும் 1917இல் வெற்றிபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியும் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியை ஆரம்பித்து வைத்தன. இப்புரட்சியின் பயனாகத்தான் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் வி. இ. லெனினால் வழி காட்டப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் உலகின் பரப்பில் ஆறில் ஒரு பகுதியில் முதலாளிகளின் ஆட்சியைத் தூக்கியெறிந்து சோஷலிச கட்டுமானத்தில் இறங்கியது. புதியதொரு சகாப்தம்—உலகம் பிரிந்து, இரண்டு எதிரெதிரான சமுதாய அமைப்புகளின் போராட்டம் ஆரம்பமாகிய சகாப்தம், சோஷலிச மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகளின் சகாப்தம், ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை தகர்க்கப்பட்ட சகாப்தம், மேன்மேலும் புதிய நாடுகள் சோஷலிச மாற்றப் பாதைக்கு வரும் சகாப்தம்—ஆரம்பமாகியது.

உலகம் தழுவிய அளவில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தை நோக்கிய மாற்றம் நடைபெறுவதுதான் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் முக்கியச் சாரமாகும். முதலாளித்துவத்தின் உலக ஆதிக்கம் காலப்போக்கில் குறைந்து வருகிறது. ருஷ்யாவையடுத்து இன்னும் சில நாடுகள் முதலாளித்துவத்திலிருந்து விலகின. **உலக சோஷலிச அமைப்பு,** சோஷலிச முகாம் உருவாகியது, சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தைக் கட்டுவதுதான் இதன் பொது லட்சியம் ஆகும்.

முதலாளித்துவப் பொது நெருக்கடி வெளிப்பட்டதில் ஒரு முக்கிய அம்சம் ஏகாதிபத்தியக் காலனியாதிக்க முறையின் நெருக்கடியாகும், இது பின்னர் அதன் சிதைவாகவும்

வீழ்ச்சியாகவும் மாறியது. கடும் போராட்டத்தில் தம் அரசியல் சுதந்திரத்தை வென்ற இளம் வளர்முக நாடுகள் இன்று முழு சுதந்திரத்திற்காக, பொருளாதாரச் சார்பின்மைக்காகப் பாடுபடுகின்றன. இவற்றில் பல முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதைக்கு வந்து, சோஷலிசக் கட்டுமானத்தின் மீது கவனம் செலுத்துகின்றன.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தோன்ற முக்கியக் காரணம் ஏகாதிபத்திய வல்லரசுகளின் பொருளாதார உள் முரண்பாடுகள் கூர்மையடைந்ததும், பொருளாதார ஸ்திரமின்மையும், அது அழுகி, ஒட்டுண்ணித் தன்மையுடையதாக மாற ஆரம்பித்ததுமாகும். உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் வளர்ந்து, ஆழமடைகின்றன, இராணுவவெறி வலுப்படுகிறது, ஆயுதப் போட்டி முடுக்கிவிடப்படுகிறது, பொருளாதாரத் தொடர்புகளின் முறை முழுவதும் ஆட்டங் காணுகிறது. முதலாளித்துவ உலகில் பண, எரிசக்தி, மூலப்பொருள், உணவுப் பொருள், புறச் சூழல் சர்வதேசப் பிரச்சினைகள் கடுமையானவையாகின்றன, விற்பனைச் சந்தை, மூலப்பொருள் இருப்பிடங்களுக்கான போராட்டத்தில் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் கூர்மையடைகின்றன. பொருளாதார நெருக்கடியோடு கூட பூர்ஷ்வா சமுதாயத்தின் ஆன்மீக, அரசியல் நெருக்கடிகள் அதிகரிக்கின்றன. உழைப்பாளி மக்கள் திரளினரின் ஏகபோக எதிர்ப்புப் போராட்டம் வலுவடைந்து வருவதற்குப் பதிலளிக்கும் முகமாக ஏகாதிபத்தியம் மேன்மேலும் அடிக்கடி அரசியல் பிற்போக்கு முறைகளை நாடுகிறது.

தன் பொது நெருக்கடியில் முதலாளித்துவம் குறிப்பிட்ட கட்டங்களைக் கடந்து வருகிறது. முதல் கட்டத்தில் (1914—1918 முதல் 1939—1945 வரை) நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றதாகும். உலகம் இரண்டு சமூக பொருளாதார அமைப்புகளாக பிரிந்தது. அக்டோபர் புரட்சி, மனிதகுலத்தைச் சுரண்டலிலிருந்து விடுவிக்கவும், விஞ்ஞான கம்யூனிச லட்சியங்களை நிறைவேற்றவும் வழியமைத்தது, பிந்தைய உலக வரலாற்றுப் போக்கு முழுவதன் மீதும் ஆழ்ந்த தாக்கம் செலுத்தியது. இது சர்வாம்ச உலகப் புதுப்பிப்பு சகாப்தத்தைத் திறந்து விட்டது.

சோஷலிச அமைப்பின் மேம்பாடுகளைப் பயன்படுத்திய சோவியத் ஒன்றியம் குறுகிய வரலாற்றுக் காலகட்டத்தில் நூற்றாண்டு கால பின்தங்கிய நிலையை அகற்றியது, நாடு ஒரு வல்லமை மிக்க தொழிற்துறை வல்லரசாகியது.

1930க்களின் இறுதியில் மொத்த தேசிய உற்பத்தியில் உலகில் இரண்டாவது இடத்திற்கும் ஐரோப்பாவில் முதலிடத்திற்கும் வர சோவியத் மக்கள் எவ்வளவு மகத்தான இடர்ப்பாடுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது, எத்தகையதொரு தியாகத்தைச் செய்ய வேண்டியிருந்தது என்று சிந்தித்துப் பார்ப்பது கூடக் கடினம். உலக உற்பத்தியில் சோவியத் நாட்டின் பங்கு 4%இலிருந்து (1913) கிட்டத்தட்ட 10% (1940) வரை உயர்ந்தது.

முதலாளித்துவப் பொது நெருக்கடியின் முதல் கட்டத்தில் ஏகாதிபத்தியக் காலனியாதிக்க முறையின் நெருக்கடி தோன்றியது: காலனி நாடுகளில் எழுச்சிகளும் தேசிய விடுதலை யுத்தங்களும் வெடித்தன.

முதலாளித்துவச் சுரண்டல் துறை குறுகி, காலனி

யாதிக்க முறையின் நெருக்கடி அதிகரித்ததையடுத்து முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முரண்பாடுகள் கடுமையாயின. முதலாளித்துவ உலகம் மும்முறை மிகையுற்பத்தியின் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டது. 1920க்களின் இறுதியில், 1930க்களின் ஆரம்பத்தில் நடந்த நெருக்கடி குறிப்பாகக் கடுமையானதாயிருந்தது. 1937இல், முந்தைய வீழ்ச்சியிலிருந்து கஷ்டப்பட்டு மீண்ட முதலாளித்துவப் பொருளாதாரம் புதிய பொருளாதார நெருக்கடிக்கு ஆளாயிற்று, இதனிடையே இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாகியது.

மிகப் பிற்போக்கான ஏகாதிபத்திய அரசுகளின் கூட்டணியால் கட்டவிழ்த்து விடப்பட்ட இரண்டாவது உலக யுத்தம் (1939—1945) பாசிச ஆக்கிரமிப்பாளர்கள், ஜப்பான் இராணுவவெறியர்களின் முழுத் தோல்வியில் முடிந்தது. இதில் சோவியத் ஒன்றியம் முக்கியப் பங்காற்றியது. இதனால் உலகில் சக்திகளின் சமன்நிலை சோஷலிசத்திற்கு ஆதரவாக இன்னமும் மாறியது, முதலாளித்துவப் பொது நெருக்கடியில் இரண்டாவது கட்டத்தைத் துவக்கி வைத்தது.

இந்த இரண்டாவது கட்டத்தின் (இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்ததிலிருந்து 1950க்களின் இறுதி வரையிலான கட்டம்) முக்கிய அம்சம் ஒரு சில கிழக்கு ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் வெற்றியடைந்து உலக சோஷலிச அமைப்பு தோன்றியதாகும். இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் உலகப் பரப்பில் 17%இல் சோஷலிசம் நிலவியது (சோவியத் ஒன்றியம், மங்கோலியா), இங்கு உலக மக்களில் 9% வாழ்ந்தனர் என்றால் 1950க்களின் இறுதியில் உலகப் பரப்பில் 26%இல் சோஷலிசம் கொடிகட்டிப் பறந்தது, இங்கே 35% மக்கள் வாழ்ந்தனர்.

சோஷலிச அமைப்பின் மேம்பாடுகளைப் பயன்படுத்திய

உலக சோஷலிச அமைப்பைச் சேர்ந்த நாடுகள் தம் பொருளாதாரங்களை விரைவாக வளர்த்தன. 1937ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1960இல் இவற்றின் தொழிற்துறை உற்பத்தி 6.8 மடங்கு பெருகியது, அதே நேரத்தில் முதலாளித்துவ நாடுகளில் இந்த அதிகரிப்பு 2.5 மடங்கிற்கும் குறைவாக இருந்தது.

முதலாளித்துவப் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தில் காலனியாதிக்க முறையின் சிதைவு ஆரம்பமாகியது. ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் சர்வாம்ச தன்மையைப் பெற்றது. இது ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா பூராவும் பரவியது, காலனியாதிக்க முறை முழுவதையும் ஆட்கொண்டது. ஏகாதிபத்தியம் மொத்தத்தில் பலவீனமடைந்து, உலக சோஷலிச அமைப்பு தோன்றி, தொழிலாளர் இயக்கம் பெரும் எழுச்சி பெற்று வந்த பொழுது தேசிய விடுதலைப் புரட்சிகளின் தாக்கத்தின் கீழ் காலனியாதிக்க முறை முழுவதிலும் பிளவுகள் தோன்றின. 1945இல் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் சுமார் 37 மில்லியன் ச.கி.மீ. பரப்பில் காலனியாதிக்கம் நிலவியது, இப்பரப்பில் 700 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்தனர். 1950க்களின் இறுதியில் இப்பரப்பு சுமார் 20 மில்லியன் ச.கி.மீ.ஆகக் குறைந்தது, இங்கே கிட்டத்தட்ட 150 மில்லியன் மக்கள் வாழ்ந்தனர். காலனியாதிக்க மண்டலம் பெரிதும் குறுகி வந்தது.

இத்தோடு சேர்ந்து மூலதன உலகில் முதலாளித்துவத்தின் ஸ்திரமின்மை வலுப்பட்டது. சோஷலிச நாடுகளுக்கு எதிராக அணு ஆயுத யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடும் கொள்கையை, சோஷலிசத்தை ஒரு சமூக அரசியல் அமைப்பு என்ற முறையில் ஒழித்துக் கட்டும் கொள்கையை ஏகாதிபத்தியம் பின்பற்றியது. இராணுவமயப்படுத்தலானது உற்பத்தி வளர்ச்சியைப் பெருக்கி, முதலாளித்துவப்

பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கான மிக முக்கியச் சாதனங்களில் ஒன்றாகியது; முதலாளித்துவம் மேன் மேலும் அழுகி வருவதை இது வெளிப்படுத்தியது.

முதலாளித்துவப் பொது நெருக்கடியின் மூன்றாவது கட்டம் (1950க்களின் பிற்பகுதியிலிருந்து) இரண்டு உலக அமைப்புகளின் சமாதான சகவாழ்வு, போராட்டப் பின்னணியில் தோன்றியது; இப்போராட்டத்தில் சக்திகளின் சமன்நிலை சோஷலிசத்திற்கு ஆதரவாக மேன்மேலும் மாறி வந்தது.

இந்த மூன்றாவது கட்டத்தில் இன்னும் சில நாடுகள் உலக சோஷலிச முகாமினுள் வந்தன. லத்தீன் அமெரிக்க கண்டத்தில் முதல் சோஷலிசப் புரட்சி கியூபாவில் வெற்றி அடைந்தது; வியட்நாம் ஜனநாயகக் குடியரசும் தெற்கு வியட்நாமும் வியட்நாம் சோஷலிசக் குடியரசாக இணைந் தன.

இக்கட்டத்தில் உலக சோஷலிச அமைப்பு மனித சமு தாய வளர்ச்சியில் மேன்மேலும் முக்கியப் பங்காற்றும் காரணியாகியது. ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை முழுமையாகத் தகர்ந்து வீழ்ந்தது. விஞ்ஞான தொழில் நுட்பப் புரட்சியின் சூழ்நிலையில் ஏகாதிபத்தியத்தின் எல்லா உள் முரண்பாடுகளும்—பொருளாதார, சமூக முரண்பாடுகள்—தொடர்ந்து கூர்மையடைந்து வருகின்றன.

உலக சோஷலிச அமைப்பு இன்று முக்கிய மாற்றியமைக் கும் சக்தியாகியது. சோஷலிச நாடுகள் மிகச் சீரிசைவாக வளர்ந்து வருகின்றன. பொருளாதாரத் துறைதான் இந் நாடுகள் ஏகாதிபத்தியத்துடன் நடத்தும் போட்டியில் முக் கியத் துறையாக விளங்குகிறது. "நாம் நமது பொருளா தாரக் கொள்கையின் மூலம்... முக்கியத் தாக்கத்தைச் செலுத்துகின்றோம்.... இந்தத் துறையில் நடைபெறும் போராட்டம் இன்று உலகப் போராட்டமாகியுள்ளது. இந்தக்

கடமையை மட்டும் நாம் நிறைவேற்றினால் சர்வதேச அளவில் நாம் அனேகமாக இறுதி வெற்றி அடைவோம்'' என்று வி. இ. லெனின் எழுதினார். *

சோஷலிச நாடுகளின் பொருளாதாரம் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரத்தை விட ஒப்பிட முடியா அளவு வேகமாக வளர்ந்து வருகிறது. 1960—1985இல் பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சில் நாடுகளின் தொழிற்துறை உற்பத்தி கிட்டத்தட்ட 5 மடங்கு அதிகரித்தது, இதே கால கட்டத்தில் பொது ஐரோப்பியச் சந்தை நாடுகளின் தொழிற் துறை உற்பத்தி கிட்டத்தட்ட 2 மடங்கிற்கும் மேலாக மட்டுமே அதிகரித்தது. இன்று பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சில் நாடுகள்—இங்கே உலக மக்கள்தொகையில் 10% வசிக்கின்றனர்—உலகத் தொழிற்துறை உற்பத்தியில் $^{1}/_{3}$ பகுதியைத் தருகின்றன.

இராணுவத் துறையில் சோஷலிச நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளுடன் கிட்டத்தட்ட சமன்நிலையை அடைந்துள்ளன. இது ஏகாதிபத்திய நாடுகள் சோஷலிச நாடுகளின் பால் அதிகார கொள்கையைக் கடைப்பிடிக்க இயலாதவாறு செய்கிறது, உலக அரங்கில் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு நாட்டங்களைக் கட்டிப் போடுகிறது.

உலக சோஷலிச அமைப்பு தன் பொருளாதார, தற்காப்பு வல்லமையின் அடிப்படையில் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்குத் தீவிர ஆதரவளிக்கிறது, சமாதானத்திற்காகவும் அணு ஆயுதப் பேரழிவைத் தவிர்ப்பதற்காகவும் நடைபெறும் போராட்டத்தில் எல்லா முற்போக்குச் சக்திகளையும் அணி திரட்டுகிறது.

---

* V. I. Lenin, *Collected Works,* vol. 32, p. 437.

## பொருளாதார முரண்பாடுகள் கூர்மையடையும் போக்கு

சோஷலிசத்துடன் ஒப்பிடும் பொழுது ஏகாதிபத்தியத்தின் நிலைகள் பலவீனமடைந்ததானது நவீன முதலாளித் துவத்தின் கடும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் பின் னணியில் நடைபெறுகிறது. 1950ஆம் ஆண்டுகளின் இறு திக்குப் பின் ஏகாதிபத்தியம் நான்கு உலக மிகையுற்பத்தி நெருக்கடிகளை அனுபவித்துள்ளது. 1960க்களில் முத லாளித்துவத்தின் பண மற்றும் நிதி முறை ஒரு கடும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டது. 1970க்களில் எரிபொருள், மூலப்பொருள் நெருக்கடிகள் தோன்றின. வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகள் கடும் பொருளாதார இக் கட்டில் நுழைந்தன. இக்கட்டத்தில் வளர்ச்சி வேகங்கள் வீழ்ச்சியடைந்தன அல்லது மிகக் குறைவானவையாக இருந் தன, அதே நேரத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் பணவீக்கமும் உயர்வானவையாக இருந்தன. இந்த மூன் றும் நவீன முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பீடித் துள்ள சனியன்களாகும். பொருளாதாரம் பொதுவில் மோசமான நிலையில் உள்ளதானது முதலாளித்துவப் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்த பூர்ஷ்வா அரசாங்கங் கள் செய்த முயற்சி பயனளிக்கவில்லை என்று காட்டுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவை எட்டியுள் ளது, உற்பத்தி வசதிகளில் கணிசமான பகுதி தொடர்ந்தாற் போல் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை, மிக முக் கிய அடிப்படைத் துறைகளில் (உலோகத் துறை, கார் கட்டுமானம்) நெருக்கடிகள் வலுப்பட்டு வருகின்றன. பல நாடுகளில் அரசு பட்ஜெட்டுகள் பெரும் பற்றாக்குறையுடன் சமர்ப்பிக்கப்படுகின்றன. சமூக நலத் தேவைகளுக்கான செலவுகள் பெரிதும் குறைக்கப்படும் அதே பொழுது

ஆயுதப் போட்டிக்கான செலவுகள் இடையறாது அதிகரிக்கப் படுகின்றன.

பொருளாதாரப் பிரச்சினைகள் கூர்மையடைவதை அடுத்து முக்கிய முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டம் வலுக்கிறது, வேலைநிறுத்த இயக்கங்கள் பெருகுகின்றன. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் இவை முதலாளித்துவ வர லாற்றிலேயே இதுவரையில்லா அளவை எட்டியுள்ளன. தொழிலாளி வர்க்கத்தின் சக்தி, செல்வாக்கு, உழைப் பாளர் நலன்களுக்கான போராட்டத்தில் இதன் முன் னணிப் பங்கு ஆகியவை கூடியுள்ளன.

ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான முரண்பாடு களும் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளும் வலுப்பட்டு வருவதானது இன்று முதலாளித்துவப் பொது நெருக்கடி ஆழமடைந்து வருவதற்குச் சான்று பகர்கிறது.

### ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான போராட்டம்

ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான போராட்டம் எல்லா சாதனங்களையும்—பொருளாதார, அரசியல் சாதனங் களையும்—பயன்படுத்தி எல்லா மட்டங்களிலும் நடை பெறுகிறது. இதில் பன்னாட்டு ஏகபோகங்களும் தம் ஏக போகங்களின் நலன்களைப் பாதுகாக்கும் ஏகாதிபத்திய அரசுகளும் இழுக்கப்பட்டுள்ளன. வெளிவர்த்தகம், அன் னியச் செலாவணி மற்றும் கடன் துறைகளில் அமெரிக்க ஐக்கிய நாடு—பொதுச் சந்தை—ஜப்பான் என்ற முக்கோண வரம்பிற்குள் இம்முரண்பாடுகள் நன்கு தெரிகின்றன.

மேற்கு ஐரோப்பாவில் ஒரு சில நாடுகள் மேன்மேலும் நெருங்கி வரும் போக்கு அதிகரிப்பதை அமெரிக்க ஏக

போகங்கள் கவலையுடன் பார்க்கின்றன. இந்நெருக்கத்தின் விளைவாய் அமெரிக்க ஏற்றுமதி விஷயத்தில் ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளின் வர்த்தகக் கொள்கையில் பாகுபாட்டு தன்மை வலுப்பட்டு வருகிறது. சுங்கவரிக் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டதும் ஐரோப்பிய பொதுச் சந்தை வரம்புகளுக்குள் ஒரே கட்டணங்கள் விதிக்கப்பட்டதும் சர்வதேச வர்த்தகத்தின் மீது கணிசமான தாக்கம் செலுத்தின, முதலாளித்துவ நாடுகளின் சமன்நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின.

அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் ஐரோப்பிய பொதுச் சந்தைக்கும் இடையிலான போராட்டம் விவசாயப் பொருட்கள் மற்றும் உலோகத் தொழிற்துறை பொருட்களின் வர்த்தகத்தில் மிகக் கடுமையாக வெளிப்படுகிறது. 1980க்களில் ''எஃகு யுத்தம்'' மீண்டும் வெடித்தது. ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளைச் சேர்ந்த எஃகு கம்பெனிகள் வேண்டுமென்றே மிகக் குறைவான விலைகளுக்கு எஃகை விற்பதாக அமெரிக்க கம்பெனிகள் குற்றஞ் சாட்டின. அமெரிக்கா தன் பங்கிற்கு, மேற்கு ஐரோப்பாவிலிருந்து, குறிப்பாக ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளிலிருந்து எஃகு இறக்குமதி செய்யப்படுவதற்குக் கூடுதல் தடைகளை விதித்தது. எஃகு வர்த்தகப் பிரச்சினை சம்பந்தமான போராட்டத்தில் உடனடியாக ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளின் அரசாங்க வட்டங்கள் குதித்தன, ஆனால் பேச்சுவார்த்தைகளின் மூலம் முட்டுக்கட்டைகளை அகற்றச் செய்யப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. இன்னும் பல்வேறு பண்டங்களின் வெளிவர்த்தக விஷயத்திலும் இதே போன்ற முரண்பாடுகள் தோன்றுகின்றன.

அமெரிக்க-ஜப்பான் பொருளாதார உறவுகளிலும் இடையறா உரசல்கள் காணப்படுகின்றன. ஜப்பான்-அமெரிக்க வர்த்தகத்தில் நிலவும் கணிசமான அளவு சமமின்மை,

ஜப்பான் ஏற்றுமதி இடையறாது அதிகரித்து வருவது— இதன் விளைவாக வர்த்தக சமன்நிலை மேன்மேலும் ஜப்பானுக்கு ஆதரவாகச் சாய்ந்து வருகிறது—ஆகியவைதான் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு முக்கியமாக கவலையளிக்கிறது. இது சம்பந்தமாக இரு நாடுகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் ஏற்படுகின்றன. அமெரிக்க உள்நாட்டுச் சந்தையில் கூட ஜப்பானியப் பண்டங்கள் அமெரிக்க பண்டங்களுடன் போட்டியிடுகின்றன. அமெரிக்க அரசாங்கத்தின் "ஜப்பான் எதிர்ப்பு" எல்லா நடவடிக்கைகளாலும் ஜப்பானிய கம்பெனிகளின் நிலைகளைக் குலைக்க முடியவில்லை. தொழில்நுட்ப ரீதியில் சிக்கலான பண்டங்களின் வர்த்தகத்தில் ஜப்பானிய கம்பெனிகள் மிகவும் வலுவான நிலையில் இருப்பதால், ஜப்பானின் ஆளும் வட்டங்கள் "சுதந்திர வர்த்தகம்" என்ற கோட்பாட்டைத் தீவிரமாக முன்வைக்கத் துவங்கின; ஒரு சில உலகப் பண்டச் சந்தைகளில் தன் ஆதிக்க நிலையை வலுப்படுத்துவதுதான் இதன் நோக்கமாகும். இந்த அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் உள்ள முரண்பாடுகள்—இவை மேன்மேலும் வலுப்பட்டு வருகின்றன—முதலாளித்துவ வர்த்தகத்தின் மையப் பிரச்சினைகளில் ஒன்றாகியுள்ளன.

பண மற்றும் கடன் துறையில் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் உச்ச கட்டத்தை அடைந்துள்ளன. முதலாளித்துவ சர்வதேச கணக்குவழக்கு முறை முழுவதும் தொடர்ந்தாற் போல் சீர்கெட்டு கிடப்பதிலும், வட்டி விகிதங்களும் குறுகிய கால கடன்களும் தாறுமாறாக மாறிக் கொண்டிருப்பதிலும், அன்னியச் செலாவணி விகிதங்கள் பெரிதும் மாறிக் கொண்டிருப்பதிலும், பணவீக்கத்திலும் இது வெளிப்படுகிறது. அமெரிக்க டாலர்களை அதிகாரப் பூர்வமாகத் தங்கத்திற்கு மாற்றும் முறை—இதுதான் இரண்டாவது உலக யுத்தத்தின் முடி

வில் தோற்றுவிக்கப்பட்ட அன்னியச் செலாவணி முறை யின் அடிப்படையாகத் திகழ்ந்தது—1970க்களின் ஆரம் பத்தில் ரத்து செய்யப்பட்டதையடுத்து மேற்கூறிய முரண் பாடுகள் கூர்மையடைந்தன.

நிதி மற்றும் கடன் துறையில் தோன்றிய நெருக்கடி களுக்குக் காரணம் தேசிய அளவிலும் சர்வதேசிய அளவி லும் தனியார் ஏகபோகச் சந்தைகளின் தான்தோன்றித் தனப் போக்கைச் சமாளிக்க வளர்ச்சியடைந்த முதலாளித் துவ நாடுகளுக்குத் திறமையில்லாது போனதாகும்.

மூலப்பொருள் மற்றும் எரிசக்தி நெருக்கடிகளுக்கு முக் கியக் காரணம், ஈடு செய்யப்பட முடியாத இயற்கை வளங் களை, குறிப்பாக எண்ணெய் வளங்களைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் அதிகபட்ச லாபத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏகபோகங்கள் கடைப்பிடித்த கொள் கையாகும். அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் முரண் பாடுகள் கூர்மையடைந்ததும் வளர்முக நாடுகளைச் சுரண் டிய காலனியாதிக்க முறை தகர்ந்து வீழ்ந்ததும் மேற் கூறிய நெருக்கடிகளுக்குக் காரணமாக அமைந்தன. முத லாளித்துவத்தின் முக்கிய மையங்களுக்குத் தொழிற்துறை மூலப்பொருளை வழங்கும் முறை சீர்குலைந்தது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் தொழிற் துறை மட்டம் உயர்வான நிலையிலிருந்தது, தேசிய இயற் கை வளங்கள் கண்மூடித்தனமாகப் பயன்படுத்தப்பட்டன; எனவே இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய கால கட்டத்தில் மேலைய நாடுகள், காலனியாதிக்கச் சுரண்டலி லிருந்து விடுதலை அடைந்த நாடுகளில் கனிவளங்கள் கிடைக்குமிடங்களைத் தம் தொழிற்துறைக்கான முக்கிய கிடங்குகளாக மாற்றின. ஆனால் இன்று விடுதலையடைந்த நாடுகள் தம் இயற்கை வளங்களை எப்படிப் பயன்படுத் துவது என்ற பிரச்சினையைத் தாமே தீர்க்க முயன்று வரு

இன்றன. மூலப்பொருள் மற்றும் எரிசக்தி நெருக்கடிகள் கூர்மையடைந்ததற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று இந்நாடுகளின் இயற்கை வளங்களை மேலைய கம்பெனிகள் முழுமையாக அலட்சியப்படுத்தி இவற்றைக் கண்மூடித்தன மாகப் பயன்படுத்தியதாகும். மூலப்பொருளை விவேகமாகப் பயன்படுத்தவோ, நன்கு பதப்படுத்தவோ மேலைய கம் பெனிகள் கூடுதல் முதலீடு எதையுமே இடவில்லை.

எரிபொருள், மூலப்பொருள் பிரச்சினை மேன்மேலும் சிக்கலடைந்து வரும் பொழுது, அடிப்படை இயற்கை வளங் கள் மிகுந்துள்ள வளர்முக நாடுகளுக்கு எதிராக ஒன்று சேர்ந்து போராட மேலைய ஏகாதிபத்திய அரசுகள் மேன் மேலும் முயன்று வருகின்றன. ஆனால் இதில் ஏகாதிபத் திய நாடுகளுக்கு இடையிலான ஆழ்ந்த முரண்பாடுகள் குறுக்கிடுகின்றன.

மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் தம் முன் னாள் காலனி நாடுகளைப் பொதுச் சந்தை முறையினுள் இழுப்பதன் மூலம் இவற்றின் மூலப்பொருட்களில் கை வைக்க முயலுகின்றன. கானடா, லத்தீன் அமெரிக்க நாடு கள், மத்தியக் கிழக்கு நாடுகள் ஆகியவற்றில் தன் பொருளா தாரச் செல்வாக்கைப் பரப்ப அமெரிக்க ஐக்கிய நாடு முயலு கிறது; இங்கெல்லாம் அமெரிக்க ஏகபோகங்களின் நிலைகள் பெரிதும் வலுவானவை. ஜப்பான் தன் கவனத்தை இந் தியப் பெருங்கடல், பசிபிக் பெருங்கடல் பகுதியில் செலுத்தி வருகிறது. ஆனால் எல்லா ஏகாதிபத்திய வல்லரசு களும்—ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள்—தம் போட்டியாளர்களின் செல்வாக்கு மண்டலத் திற்குள் புகவும், இளம் அரசுகளில் மட்டுமின்றி, சில வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் தோண்டி எடுக்கும் தொழிற் துறைகளில் நுழையவும் தம்மிடையே கடுமையாகப் போட்டியிடுகின்றன. சர்வதேசப் பொருளாதார

உறவுகள் அனைத்திலும் ஆதாயம் மிக்க விற்பனைச் சந்தைகள், முதலீட்டுத் துறைகள், மூலப்பொருள் இருப்பிடங்கள் ஆகியவற்றிற்காக ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையே இடையறா போராட்டம் நடக்கிறது.

1950க்களின் இறுதி, 1960க்களின் ஆரம்பத்திலிருந்து புறச்சூழல் பிரச்சினைகள் கடுமையாகியுள்ளன. இயற்கையின் பாலான ஏகாதிபத்தியத்தின் காட்டுமிராண்டித்தனமான அணுகுமுறை புறச்சூழல் நெருக்கடியில் வெளிப்பட்டது. இதனால் மனிதனுக்கும், இயற்கைக்கும் இடையிலான உயிரியல் சமன்பாடு சீர்குலைகிறது. நீர்நிலைகளும் காற்று மண்டலமும் மேன்மேலும் அசுத்தமடைந்து வருகின்றன, குடி நீர் மோசமடைந்து வருகிறது. நகரங்களில் உள்ள காற்று மண்டலத்தில் பிராணவாயு குறைந்து வருகிறது. "பூமியின் நுரையீரல்களாகத்" திகழும் உலகக் கடல்களில் எண்ணெய், கனரக உலோகங்கள், கதிர்வீச்சுப் பொருட்கள், பிற நச்சுப் பொருட்கள் கலந்து வருகின்றன. "பிராணவாயு தொழிற்சாலைகளாக" விளங்கும் காடுகள் கண்மூடித்தனமாக வெட்டித் தள்ளப்படுகின்றன, விலங்குலகமும் தாவர உலகமும் பேரிழப்பிற்குள்ளாகின்றன. சாலைப் போக்குவரத்து தாறுமாறாகி வருவதையடுத்து ஒலிச் சுமையும் நரம்புத் தளர்ச்சிகளும் பதட்டமும் அதிகரிக்கின்றன. புறச்சூழலின் பால் கண்மூடித்தனமான அணுகுமுறையைப் பின்பற்றும் ஏகபோக மூலதனம் பூமியில் உயிர் வாழ்க்கையையே கேள்விக் குறியாக்கியுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் மட்டும் நூற்றுக்கணக்கான விலங்கின வகைகள் முற்றிலுமாக அழிந்து விட்டன அல்லது அழியும் நிலையில் இருக்கின்றன. நவீன முதலாளித்துவ உற்பத்தி இயற்கை வளங்களை, மனித வாழ்க்கைச் சூழலை அழிக்கிறது என்பதை பல பூர்ஷ்வா விஞ்ஞானிகளே ஒப்புக் கொள்கின்றனர்.

புறச்சூழல் நெருக்கடி என்பது முதலாளித்துவ உலகில் விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி எப்படிப் பெரிதும் முரண் பாடாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கான அறிகுறி, நவீன முதலாளித்துவம் அழுகி வருவதன் வெளிப்பாடு களில் ஒன்று. புறச்சூழல் நெருக்கடியின் கூர்மை முத லாளித்துவ முறையின் பிற நெருக்கடிகள் மீது தன் தாக் கத்தைச் செலுத்துகிறது, இது முதலாளித்துவப் பொது நெருக்கடி மேலும் ஆழமடைவதன் தர்க்க ரீதியான விளை வாகும்.

ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதார நெருக்கடி அரசியல், சித்தாந்த நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்கிறது. பூர்ஷ்வா சமுதாயத்தின் ஆன்மீக, தார்மீக வீழ்ச்சியும் கண்கூடு. அடுத்த அத்தியாயத்தில் இதைப் பற்றிப் பார்ப் போம்.

அத்தியாயம் பதினொன்று

## நவீன முதலாளித்துவத்தின் அரசியல் மற்றும் ஆன்மீக நெருக்கடி

இன்று முதலாளித்துவ உலகம் முழுவதிலும் ஜனநாயக, முற்போக்கு சக்திகளுக்கு எதிரான வெளிப்படையான, பரந்த தாக்குதலில் ஏகாதிபத்தியம் இறங்கியுள்ளது. இதன் மிகப் பிற்போக்கான வட்டங்கள் பெரிதும் தீவிரமாகியுள்ளன. பரவலான உழைக்கும் மக்கள் திரளினரின் ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரத்தையும் மேண்மேலும் மீறுவது என்பது அரசுக் கொள்கையாகியுள்ளது.

அரசியல் பிற்போக்கு வலுப்பட்டு வரும் அதே நேரத்தில் சித்தாந்தத் துறையிலும் பிற்போக்கு வலுப்பட்டு வருகிறது. சுதந்திரம், சமூக நீதியின் பால் சகியாமை மேண்மேலும் வெளிப்படுவதிலிருந்து இது தெரிகிறது.

முதலாளித்துவ நாடுகளின் அரசியல், ஆன்மீகத் துறைகளில் பிற்போக்கு வலுப்பட்டு வருவதானது முதலாளித்துவப் பொது நெருக்கடியின் தெட்டத் தெளிவான வடிவங்களில் ஒன்றாக விளங்குகிறது, இதன் குணப்படுத்த இயலா நோய்களின் ஆணித்தரமான சான்றாகத் திகழுகிறது.

சமுதாயத்தைப் பாமர மக்கள் திரளினராயும் (இவர்கள் முணுமுணுக்காமல் அடங்கி வேலை செய்ய வேண்டும்) ''மேல் மட்டத்தினராயும்'' (இவர்கள் மிகக் கொடுமையான முறை களைக் கையாண்டாலும் சரி, நிர்வகித்து, ஆட்சி செய்ய வேண்டும்) பிரிப்பது ''நியதியானது'' என்ற மாயை இன்று ஏகாதிபத்திய நாடுகளில் மேன்மேலும் வெளிப்படையாகப் பரப்பப்பட்டு வருகிறது. வளர்ச்சியடைந்த முக்கிய முத லாளித்துவ நாடுகளின் கொள்கை இத்தகைய ''தத்துவத் தைத்தான்'' அடிப்படையாகக் கொண்டுள்ளது. இக்கொள் கைக்குப் பரவலான மக்கள் திரளினரின் அதிருப்தியும் எதிர்ப் பும் இருப்பது புரிந்து கொள்ளக் கூடியதே. ஒரு சில நாடு களில் தலைவர்கள் அடிக்கடி மாறுவது, ஸ்திரமற்ற அரசி யல் நிலை அல்லது அரசாங்கக் கொள்கைக்கு எதிர்ப்பு வலுப் பட்டு வருவது, தேர்தலில் பங்கேற்க மறுப்பது ஆகியவை மேற்கே அரசியல் நம்பிக்கையின்மை தோன்றியுள்ளதைக் காட்டுகின்றன. தேர்தல் என்ற திரைக்குப் பின், கூச்சலும் குழப்பமுமான, கோட்பாடற்ற அரசியல் தகிடுதத்தங் களுக்குப் பின் ஒரு சில முக்கியத் தொழிற்துறை இணையங் களும் வங்கிகளும் பணமுதலைகளும்தான் எல்லாவற்றை யும் நிர்ணயிக்கின்றனர், தமக்கு அடங்கிய நபர்களை அரசியல் உச்சாணிக்கு அனுப்ப இவர்கள்தான் முயலுகின்ற னர் என்பதை மக்கள் மேன்மேலும் புரிந்து வருகின்றனர்.

உழைப்பாளிகளின் வாழ்க்கையை மேம்படுத்த நிறைய செய்வதாகத் தேர்தலுக்கு முன் ஏராளமான வாக்குறுதி களை அள்ளி வீசி விட்டு, தேர்தலுக்குப் பின் இவற்றைப் பற்றி அறவே மறக்கும் பூர்ஷ்வா அரசியல்வாதிகளின் முகஸ்துதியை உழைக்கும் மாமக்கள் தம் சொந்த அனுப வத்தில் மேன்மேலும் உணர்ந்து வருகின்றனர். வளர்ச்சி

யடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள ஆளும் அரசியல் மேல்மட்டத்தினரின் பால் நம்பிக்கையின்மை அதிகரித்து வர இன்னொரு காரணம் பல அரசியல் தலைவர்களின் மத்தியில் தலைவிரித்தாடும் லஞ்ச ஊழலும், இவர்கள் தம் அதிகாரத்தைத் தவறான வழிகளில் பயன்படுத்துவது மாகும். ஏகாதிபத்திய நாடுகளில் ஏராளமான மக்கள் அரசியல் தலைவர்களின் மீதான நம்பிக்கையை முற்றிலு மாக இழந்து, ''சுதந்திரமான'' தேர்தல் என்ற நாடகத் தில் பங்கேற்க மறுப்பது தற்செயல் அல்ல.

ஏகாதிபத்திய அரசாங்கங்களின் நடவடிக்கை மேன் மேலும் மக்கள் எதிர்ப்புப் போக்கைக் கடைப்பிடிக்கிறது, உழைக்கும் மக்களின் இன்னல்களையும் அதிருப்தியையும் அதிகப்படுத்துகிறது. தாங்க முடியாதவையாக மாறி வரும் சமூக கொடுமைகளிலிருந்து தப்பிக்க இவர்களுக்கு வழியே இல்லை. மக்கள் தம் எதிர்ப்பைத் தெரிவிக்க கோஷங்களை முழங்கியபடி ஊர்வலங்களை நடத்துகின்றனர், வேலை நிறுத்தங்களில் இறங்குகின்றனர். போலீசாரோ இவற்றிற் கெதிராக அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர்.

பெரும்பாலான ஏகாதிபத்திய நாடுகளில் உள்நாட்டில் பிற்போக்கு வலுப்பட்டு வரும் அதே நேரத்தில் ஏகாதிபத் தியத்தின் வெளிநாட்டுக் கொள்கையும் மேன்மேலும் ஆக் கிரமிப்புத் தன்மையுடையதாய் மாறி வருகிறது. நிக்க ராகுவாவின் எல்லையோரங்களில் ஒலிக்கும் பீரங்கி முழக் கம் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க வீசப்படும் கண்ணீர் புகை குண்டுகளின் புகையுடனும் வேலைநிறுத் தங்களில் ஈடுபடுபவர்களின் கைகளில் அணிவிக்கப்படும் கை விலங்குகளின் ஒலியுடனும் இரண்டறக் கலக்கிறது. ''பெர் ஷிங்'', ''டிரைடென்ட்'' போன்ற பெயர்கள் எல்லா மக் களின் சொல்வழக்கிலும் நுழைந்து, ''மரணம்'', ''அழிவு'', ''உலகப் பேரழிவு'' என்ற அர்த்தத்தைக் குறிக்கும்

சொற்களாகியுள்ளன. இராணுவ அச்சுறுத்தல், அணு ஆயுத மிரட்டல், உலக மேலாதிக்க நாட்டம்—இவைதான் இன்று ஏகாதிபத்திய வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையாகும். நவீன மேலைய அரசியல் தலைவர்கள் "குண்டாந்தடி" கொள்கையின் மீது பெரும் நம்பிக்கை வைத்து, இதை இன்னமும் வலிமையானதாக ஆக்கப் பாடுபடுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். சர்வதேச பதட்ட நிலையை தாமே அதிகரித்து விட்டு இதற்கு சோஷலிச நாடுகளின் மாயை யான "ஆக்கிரமிப்புத் தன்மைதான்" காரணம் என்று நிரூபிக்க முயலுகின்றனர் அவர்கள். இதற்காக அன்றாடம் பூர்ஷ்வா பத்திரிகைகளும் வானொலியும் தொலைக் காட்சியும் டன் கணக்கில் தாளையும் கி.மீ. கணக்கில் ஒலி, ஒளிப் பதிவு நாடாக்களையும் விரயமாக்குகின்றன.

ஏகாதிபத்தியக் கொள்கையின் அதிசாகசவாதம், தம் முடைய குறுகிய சுயநலங்களுக்காக மனிதகுலத்தின் ஜீவாதார நலன்களைப் பலியிட ஏகபோக மூலதனத் தின் மிக ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள வட்டங்கள் தயாராய் இருப்பது ஆகியவை முதலாளித்துவத்தின் பலத்தையல்ல, மாறாக இச்சமுதாய அமைப்பின் பொது நெருக்கடி அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றன. இராணுவவெறி பூர்ஷ்வா உலகை வலுப்படுத்தவில்லை, மாறாக இதன் அரசியல் அமைப்புகளை ஆட்டங் காண வைக்கிறது. இது மூளைக் குழப்பத்தை அதிகரிக்கிறது; இராணுவ ஆர்டர் களினால் கோடிக்கணக்கில் லாபம் சம்பாதிக்கும் இராணுவ தொழிற்துறை இணையத்தைக் கொண்ட ஏகாதிபத்தியம் தான், சுரண்டலமைப்பின் அதிகரித்து வரும் முரண்பாடு களை வெளி விஸ்தரிப்பின் மூலம், மற்ற அரசுகளை அடக்கி ஆளுவதன் மூலம் தீர்க்க விரும்பும் ஏகாதிபத் தியம்தான் இராணுவ அபாயத்திற்கான உண்மையான

மூல ஊற்று என்று மறுக்க இயலா உண்மையை மக்கள் புரிந்து கொள்ள இது இட்டுச் செல்கிறது.

ஏகாதிபத்திய நாடுகளில் சித்தாந்த நெருக்கடியும் வலுப்பட்டு வருகிறது.

## ஏகாதிபத்திய சித்தாந்த நெருக்கடி

ஆதிக்க வர்க்கமாகிய முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தம் தான் முதலாளித்துவ சமுதாயத்தில் மேலோங்கி நிற்கிறது. உண்மையான பொருளாதார, அரசியல் அதிகாரத்தை உடைய முதலாளிகள் சகலவித வழிகளிலும்—குறிப்பாக வெகுஜன தகவல் பிரசாரச் சாதனங்களின் மூலம்—உழைப்பாளிகளை ஆன்மீக ரீதியில் அடிமைப்படுத்த முயலுகின்றனர்.

முதலாளித்துவ சித்தாந்த மதிப்புகளைப் பிரசாரம் செய்வதில் இன்று ஏகபோக முதலாளி வர்க்கம் முன் னணியில் நிற்கிறது. மக்களின் மூளைகளை "சலவை செய்ய" போதுமான அளவு சாதனங்களும் வாய்ப்புகளும் இதனிடம் உள்ளன. ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஆதரவான கருத்துகளும் கண்ணோட்டங்களும் ஏதோ மக்களின் பெய ரால், மக்களின் நலன் கருதி பிரசாரம் செய்யப்படுவதைப் போல் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஏகபோக முதலாளி வர்க் கம் தன் குறுகிய சுயநலத்தை மக்கள் அனைவரின் நலன் களாக சித்தரிக்க, பரவலான மக்கள் திரளினரைக் குழப் பத்தில் ஆழ்த்த, உண்மையை பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் சித்தரிக்க முயலுகிறது. உதாரணமாக, நிதி முதலைகள் தம்மை "சோறுபோடுபவர்களாக", "வள் ளல்களாக" காட்டி, தொழிற்சங்கங்களையும் தொழிலாளி வர்க்கத்தின் பிற ஸ்தாபனங்களையும் "மக்களின் விரோதி களாகச்" சித்தரிக்க முயலுகின்றனர்.

மக்கள் மத்தியில் சித்தாந்த பிரசாரம் செய்ய ஏகாதி பத்தியம் பரவலான, கிளை பரப்பி நிற்கும் முறையைத் தோற்றுவித்துள்ளது. ஆயிரக்கணக்கான பத்திரிகைகள், இதழ்கள், வானொலி, தொலைக் காட்சி நிலையங்களின் மூலம் அன்றாடம் சித்தாந்த பிரசாரம் நடைபெறுகிறது.

பூர்ஷ்வா வெகுஜன தகவல் ஒலிபரப்புச் சாதனங்கள் நிதி மூலதன ஏகபோகக் குழுவின் நலன்களை நோக்கில் கொண்டு பொது மக்களின் கருத்துகள் மீது பெரும் தாக்கம் செலுத்துகின்றன, குறிப்பிட்ட சிந்தனை மாதிரிகளை மக்கள் மீது திணிக்க முயலுகின்றன. பல நேரங்களில் இது மிகவும் திறமையாகச் செய்யப்படுகிறது. ஏகாதிபத்திய நாடுகளில் இத்தகவல் ஒலிபரப்புச் சாதனங்களின் உண்மை எஜமானர்கள் சாதாரணமாக பின்னணியில் இருந்து கொண்டு, நன்கு மூடிமறைக்கப்பட்ட சாதனங்களின் மூலம் செயல்படுவதையே பெரிதும் விரும்புகின்றனர். இதற்காக வதந்திகள், வம்புகள், என் சில நேரங்களில் வெளிப்படையான பொய்கள் பரப்பப்படுகின்றன, ஆத்திரமூட்டும் வகையில் "நம்பத்தகுந்த வட்டத்தின் செய்திகள்" ஏற்பாடு செய்யப்படுகின்றன, ஏகபோக முதலாளி வர்க்கத்தினருக்கு ஒத்துவராத செய்திகள் பற்றி மௌனம் சாதிக்கப்படுகிறது அல்லது இவை வேண்டுமென்றே திரிக்கப்படுகின்றன, உதாரணமாக, சோஷலிச நாடுகளின் ஏராளமான சமாதான முன்மொழிவுகள் திரிக்கப்படுகின்றன.

ஆனால் எவ்வளவுதான் திறமையாகப் பொய்களைக் கூறினாலும் உண்மையைத் திரித்துரைத்தாலும் பூர்ஷ்வா சித்தாந்த நெருக்கடி வலுப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியாது. ஏனெனில் முதலாளி வர்க்கம் தான் முன்னறிவித்த சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உயர் லட்சியங்களை தானே மிதித்து துவம்சம் செய்துள்ளது. மக்கள் திரளினரைக் கவரும் புதிய கோஷங்

களைக் கண்டுபிடிக்க இதன் சித்தாந்திகள் செய்யும் எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்து வருகின்றன. சமூக ரீதியில் எதிர்கால நம்பிக்கையின்மை, முன்னேற்றம் மற்றும் மனிதனின், சமுதாயத்தின் ஆக்கபூர்வமான வாய்ப்புகள் ஆகியவற்றில் நம்பிக்கையின்மை—இவையெல்லாம் இதிலிருந்துதான் வருகின்றன. பூர்ஷ்வா தத்துவஞானம், சமூகவியலிலும் பிற சமூக விஞ்ஞானங்களிலும் பல்வேறு போக்குகள் நிலவுகின்றன. ஆனால் இவற்றில் ஒன்றால் கூட பரவலான மக்கள் திரளினரைத் தன்பால் கவர முடியவில்லை, ஒன்று கூட உலகைப் பற்றிய பாரபட்சமற்ற விளக்கத்தையும் தெட்டத்தெளிவான நடைமுறை செயல்திட்டத்தையும் அளிக்கவில்லை.

முதலாளித்துவ நாடுகளின் முக்கிய சித்தாந்தங்கள் எதார்த்த ஜீவாதார நிகழ்ச்சிப் போக்குகளிலிருந்து தள்ளியுள்ளன, இவை உழைப்பாளிகளின் நலன்களுடன் பொருந்தி வரவில்லை என்பது மேன்மேலும் அதிகமான மக்களுக்குப் புரிந்து வருகிறது; பூர்ஷ்வா சித்தாந்த நெருக்கடி இதிலும் வெளிப்படுகிறது.

உதாரணமாக, தனியுடைமை என்றென்றும் நிரந்தரமானது என்பது மிக முக்கிய பூர்ஷ்வா சித்தாந்தங்களில் ஒன்றாகும். தனியுடைமைக் கோட்பாட்டை மறுக்கும் எந்த ஒரு சமுதாய ஒழுங்கமைப்பையும் பூர்ஷ்வா சித்தாந்திகள் அப்படியே நிராகரித்தனர். தனியுடைமையின்றி சமுதாயத்தால் நீண்ட காலம் நிலவ முடியாது, முதலாளித்துவம்தான் மனித நாகரிகத்தின் சிகரம் என்று மெய்ப்பிக்க இன்றும் இவர்கள் முயலுகின்றனர். இது பொய் என்பதை உலகம் மேன்மேலும் கண்டு வருகிறது. இன்று உலக மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையோ, முதலாளித்துவமோ, மனிதனை மனிதன் சுரண்டுவதோ இல்லாமல் வாழுகின்றனர்,

இந்நாடுகளில் நிலவரம் முதலாளித்துவ முறைகள் ஒழிக்கப்படுவதற்கு முன்பிருந்ததை விட மேலாகக் கூட உள்ளது.

இன்னொரு பரவலான பூர்ஷ்வா சித்தாந்தம், யுத்தங்கள் மனித சமுதாயத்திற்கு இயல்பானவை என்ற கூற்றாகும். இக்கூற்றை மெய்ப்பிக்க எவ்வளவு தத்துவங்கள் முன்வைக்கப்பட்டன தெரியுமா! சுரண்டல் வர்க்கங்களின் சித்தாந்திகள், யுத்தங்கள் தவிர்க்க இயலாத, நிரந்தரமான புலப்பாடு என்று கருதி இவற்றை இன்று வரை நியாயப்படுத்தி வருகின்றனர். இவற்றிற்கு ஆதரவாக டஜன்கணக்கான தத்துவங்கள் கூறப்படுகின்றன: ''ஆக்கிரமிப்பின் பாலான மனிதனின் உயிரியல் நாட்டம்'', ''மரபியல் ரீதியான வன்முறை தன்மை'', ''இனங்களின் உயிரியல் பகை முரண்பாடு'' என்ற தத்துவங்களால் சிலர் யுத்தங்களை நியாயப்படுத்துகின்றனர்; வேறு சிலர் ''பூமியில் அளவிற்கதிகமான மக்கள்'' வாழுவதாகக் கூறி யுத்தங்களை நியாயப்படுத்துகின்றனர்; இன்னும் சிலர் ''கூடப் பிறந்த அழிவு, ஆக்கிரமிப்பு உள்ளுணர்வுகள்'' அல்லது பல்வேறு சமூகப் புலப்பாடுகள்தான் யுத்தங்களுக்குக் காரணம் என்கின்றனர். ஒரு சில பூர்ஷ்வா சித்தாந்திகள் யுத்தங்களுக்கு முக்கியக் காரணம் ''புவியியல் காரணிகள்'' என்கின்றனர், நிலப்பரப்பின் பற்றாக்குறை, மூலப்பொருள் மற்றும் எரிசக்தி வளங்கள் போதாமை போன்றவற்றை இக்காரணிகளாகக் குறிப்பிடுகின்றனர்.

யுத்தம் பற்றிய நவீன பூர்ஷ்வாத் தத்துவங்கள் வெளிப்பார்வைக்கு வெவ்வேறு வார்த்தை வடிவங்களைக் கொண்டிருந்தாலும் இவற்றில் இனவெறியும் தேசியவெறியும் பகுத்தறிவின் மீதான நம்பிக்கையின்மையும் ஊடுருவியுள்ளன. யுத்தத்தை, ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையை நியாயப்படுத்துவதுதான் இப்படிப்பட்ட பிற்போக்குத் தத்துவங்களின் ஒரே நோக்கமாகும். சர்வதேச

நிலவரத்தை மேம்படுத்துவதில் ஏகபோக முதலாளி வர்க் கத்திற்கு எவ்வித அக்கறையும் இல்லை. மோதல்களை யும் பதட்ட நிலையையும் தூண்டி விடுவது, சோஷலிசம் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களைச் சீர்குலைப்பது, முக்கியமாக உலகம் தழுவிய அளவிலான மேலாதிக்க நாட்டம்—இவைதான் ஏகபோக முதலாளி வர்க்கத்தின் லட்சியங்களாகும்.

யுத்தங்களுக்கு எவ்வித நியாயப்படுத்தலும் இருக்க முடியாது! ஏகாதிபத்தியத்தின் இராணுவவெறி நாட்டங்கள் ஒழிய வேண்டும் என்று உலகெங்கும் உள்ள மக்கள் மேன் மேலும் தீவிரமாகக் குரல் எழுப்புகின்றனர். யுத்தங்கள் சுரண்டல் சமூக பொருளாதார அமைப்புகளுக்கு மட்டுமே உரித்தானவை.

பூர்ஷ்வா சித்தாந்தத்திற்கும் சமுதாய வளர்ச்சியின் உடனடித் தேவைகளுக்கும் இடையிலான பிளவு அதி கரித்து வருவதானது இச்சித்தாந்தத்தின் பிற்போக்கு, மானுட விரோதத் தன்மை வலுப்பட இட்டுச் செல்கிறது. இது அப்பட்டமான கம்யூனிச எதிர்ப்பு, இனவெறி, தேசிய வெறியில் வெளிப்படுகிறது.

கம்யூனிச எதிர்ப்பை வலுப்படுத்துவதன் மூலம் சித் தாந்த முட்டுக்கட்டையிலிருந்து வெளியேற ஏகபோக முத லாளி வர்க்கம் முயலுகிறது. முதலாளித்துவ நாடுகளில் வாழும் மக்களை மேன்மேலும் அதிகமாகக் கவர்ந்து வரும் சோஷலிசக் கருத்துகள், லட்சியங்களை விஞ்சக் கூடிய அளவிற்கு கம்யூனிச எதிர்ப்பு சித்தாந்தத்தை மக்கள் மன தில் புகுத்த இது முயலுகிறது. ஏகாதிபத்திய நாடுகளில் கம்யூனிச எதிர்ப்பு ஆராய்ச்சிகள் பெருகி வருகின்றன, சோஷலிச எதிர்ப்பு "ஆராய்ச்சி மையங்கள்" காளான் களைப் போல் முளைத்து, வளர்ந்து வருகின்றன, வெகு ஜன தகவல் ஒலிபரப்புச் சாதனங்கள் மேன்மேலும் விஷத்

தைக் கக்குகின்றன. சித்தாந்தத் துறையில் பின்பற்றப்படும் கம்யூனிச எதிர்ப்பு முற்போக்குக் கட்சிகள், ஸ்தாபனங் களின் பால் பின்பற்றப்படும் அடக்குமுறைகளுடன் பிரிக்க இயலாதபடி தொடர்புடையது.

சோஷலிசத்தின் மாபெரும் சாதனைகளை மூடி மறைக்க இயலா பூர்ஷ்வா சித்தாந்திகள் இவற்றின் முக் கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடவும், இதற்குச் சற்றும் குறையா சமூகப் பயன்களை முதலாளித்துவத்தால் அடைய முடியும் என்று நிரூபிக்கவும் வீணாக முயலுகின்றனர். சோஷலிச நாடுகளின் சோதர ஒற்றுமை மீது இவர்கள் பழிவாரித் தூற்றுகின்றனர்; ஆனால் அதே நேரத்தில் சோஷலிச லட்சியங்கள் மேன்மேலும் அதிகமான மக் களைக் கவர்ந்து வருவதை இவர்களால் மறுக்க முடிய வில்லை. இதற்கு எதிராக பூர்ஷ்வா சித்தாந்திகள் புதுப் புது கருத்தமைப்புகளை முன்வைக்க முயலுகின்றனர்; முத லாளித்துவத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் ஏதோ காலப்போக்கில் மறைந்து விடும் என்றும், இவையிரண்டும் ஒன்றாக இணையும் காலம் வரு மென்றும் நிரூபிக்க இவை பாடுபடுகின்றன. இவை நிறை வேறா மாயைகளைத் தோற்றுவிக்கின்றன, உழைக்கும் மக்களின் கவனத்தை ஏகாதிபத்தியத்திற்கு எதிரான புரட்சிப் போராட்டத்திலிருந்து திசை திருப்புவதுதான் இவற்றின் ஒரே நோக்கமாகும். அதே நேரத்தில், பூர்ஷ்வா சித்தாந்திகள் நுகர்வு மனப்பாங்கு, பண ஆசை, சுயநலம், தேசியவெறி ஆகியவற்றை மக்கள் மத்தியில் பரப்பவும் முயலுகின்றனர்.

ஏகாதிபத்திய நாடுகளில் பிற்போக்குத்தனமான தேசிய வெறி, குறுகிய தேசிய நலம், நிறவெறி ஆகியவற்றின் விஷ வித்துகள் நன்கு வேரூன்றியுள்ளன. இவற்றை சகல விதங்களிலும் ஊட்டி வளர்த்து சிறுபான்மையினரைத்

தேசிய ரீதியில் ஒடுக்கி இவர்களை இனப்பாகுபாட்டிற்கு ஆளாக்குவது மட்டும் ஏகபோக முதலாளி வர்க்கத்தின் நோக்கமல்ல. இது மக்களின் கவனத்தை சமூக அநீதி யிலிருந்து, முக்கிய குற்றவாளியாகிய ஏகபோக மூலதனத் திற்கு எதிரான போராட்டத்திலிருந்து திசை திருப்பும். தேசியவெறி கண்ணுக்குத் தெரியா விஷத்தைப் பரப்பு கிறது, இது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் சமுதாய வாழ்க்கை முழுவதும் ஊடுருவுகிறது. இது சிவில் சுதந்திரங்களுக்குப் பங்கமேற்படுத்தவும், முற்போக்குச் சக்தி களுக்கு எதிரான போராட்டத்தில் பிற்போக்கின் நிலைகளை வலுப்படுத்தவும், இராணுவவெறி தலைவிரித்தாடவும் ஏற்ற அடித்தளத்தை ஏற்படுத்தும்.

பூர்ஷ்வா சித்தாந்த நெருக்கடி, பகுத்தறிவின் மீது, விவேகமான மனித சிந்தனை மீது அதிகரித்து வரும் நம் பிக்கையின்மை ஆகியவை பல்வேறு அதி தீவிர மத நம்பிக் கைகளும் போக்குகளும்—இவை தம்மைப் பின்பற்றுபவர் களுக்கு "நிரந்தர மகிழ்ச்சி" கிட்டும் என்று பிரசாரம் செய்கின்றன—வளர்ந்து வருவதில் தெட்டத்தெளிவாக வெளிப்படுகின்றன.

பூர்ஷ்வா சித்தாந்த நெருக்கடி மேலைய கலாசார நெருக்கடியில் நன்கு வெளிப்படுகிறது. "வெகுஜன கலா சாரம்" என்ற கருத்து ஏகாதிபத்திய நாடுகளில் மேன் மேலும் பரவி வருகிறது. மிகப் பல்வேறான ரசனைகளுக்கு ஏற்றதாயிருப்பதுதான் இதன் நோக்கமே தவிர இதற்கும் உண்மையான கலாசாரத்திற்கும் பொதுவானது எதுவுமே யில்லை. "வெகுஜன கலாசாரம்" மனிதாபிமான லட் சியங்களைப் பழையவை என்று கூறி நிராகரிக்கிறது. பணம், பாலுணர்வு வெறி, வன்முறை ஆகியவை இதனு டன் கைகோர்த்து நிற்கின்றன. இவற்றின் ஒட்டுமொத்தம் தான் "வெகுஜன கலாசாரம்". நூல்களும் திரைப்படங்

களும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளும் வன்முறை, பலாத்காரம் ஆகியவற்றின் புகழ்பாடுகின்றன, கீழான உணர்வுகளைத் தூண்டுகின்றன.

## ஒழுக்கம் மற்றும் சட்ட நெருக்கடி

ஏகாதிபத்திய நாடுகளில் அரசியலிலும் சித்தாந்தத்திலும் நெருக்கடிகள் காணப்படும் அதே நேரத்தில் ஒழுக்கம், தார்மீகத் துறையிலும் நெருக்கடி தோன்றியுள்ளது. சமுதாயம், குடும்பத்தின் மீதான அக்கறையின்மை, பல்வேறு விதங்களில் தனிநபர் வீழ்ச்சி (இது நரம்புத் தளர்ச்சி, தற்கொலை, குற்றங்களுக்கும், சமூக உறவுகள் மோசமடைவதற்கும் இட்டுச் செல்கிறது) ஆகியவற்றில் இது வெளிப்படுகிறது.

இந்த ஒழுக்க நெருக்கடி குறிப்பாக இளைஞர்களைப் பாதிக்கிறது; இவர்கள் முகஸ்துதி, மதவெறி, பூர்ஷ்வா சமுதாய ஒழுக்க நெறி ஆகியவற்றை ஒப்புக்கொள்ள விரும்பாமல் மேன்மேலும் வெளிப்படையான வடிவங்களில் தம் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர்.

முதலாளித்துவ உலகின் ஆன்மீக மதிப்புகள் மீது இளைஞர்கள் கொண்டுள்ள அதிருப்தியை உயிரியல் காரணிகளால் விளக்க பூர்ஷ்வா சித்தாந்திகள் முயலுகின்றனர். உதாரணமாக, வளர்ச்சி துரிதமடைந்துள்ளது, இளைஞர்கள் உடல் ரீதியிலும் பால் ரீதியிலும் முன்கூட்டியே முதிர்ச்சி அடைகின்றனர், இளைஞர்களின் வாழ்க்கை அனுபவத்திற்கும் மன வளர்ச்சிக்கும் இடையில் பொருத்தமின்மை நிலவுகிறது என்றெல்லாம் காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் ஏகாதிபத்திய நாடுகளில் இளைஞர்களின் இந்த அதிருப்திகளுக்குக் காரணம் உயிரியல் அம்

சங்கள் அல்ல, மாறாக சமூக அம்சங்களாகும். பொருளாயத காரணிகள் மட்டும்—இளைஞர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருதல், தொழிற் கல்வித் தரம் திருப்திகரமாக இல்லாதது, நாளைய தினத்தில் பொருளாதார ரீதியில் நம்பிக்கையின்மை—இதற்குக் காரணம் அல்ல. சித்தாந்த அம்சங்களும் இதில் பெரும் பங்காற்றுகின்றன; இளைஞர்களைக் கவர்ந்து, அவர்களின் ஆக்க பூர்வமான ஆற்றலை ஊக்குவிக்க வல்ல மதிப்புகளைத் தந்து, இதற்கேற்ற சமுதாய வளர்ச்சிப் போக்கைச் சுட்டிக் காட்ட ஆளும் வட்டங்களால், அவற்றின் சித்தாந்திகளால் இயலாதிருப்பதை இங்கே முதலில் குறிப்பிட வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளில் முதலாளித்துவ நாடுகளில் யுத்தம், இராணுவவெறிக்கு எதிராக, ஜனநாயக மாற்றங்கள், உண்மையான வேலை வாய்ப்பு உரிமைகளைக் கோரி இதுவரையில்லா அளவிற்கு இளைஞர் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்துள்ளன. இன்றைய பூர்ஷ்வா சமுதாயத்திற்கு எதிராக—சமூக அநீதி, பிற நாடுகளுக்கு எதிரான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகள், நிறவெறி, இனப் பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிராக—இளைஞர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள் இளைஞர்களின் அதிருப்தி அதிகரித்து வருவதற்குச் சான்று பகர்கின்றன என்று முதலாளி வர்க்கம் அஞ்சுகிறது. எனவே தான் முற்போக்கு இளைஞர் ஸ்தாபனங்கள், அவற்றின் தொண்டர்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், மாணவர் ஊர் வலங்களில் பங்கேற்போர் ஆகியோர் மிரட்டலுக்கும் அடக்கு முறைகளுக்கும் ஆளாகின்றனர். எனவேதான் இளைஞர்களின் எதிர்ப்பை அடக்க, அது முடியாவிடில் தனக்கேற்ற திசையில் அதைத்திருப்ப முதலாளி வர்க்கம் தீவிர முயற்சிகளை மேற்கொள்வதில் இறங்கியுள்ளது.

இந்நோக்கத்தோடு முதலாளிகள் இளைஞர்களின்

நுகர்வு உணர்வுகளைத் தூண்டி விட சகலவிதங்களிலும் முயலுகின்றனர், புதிய பாணி, புதிய பொருட்களின் பின் ஓடும்படிச் செய்கின்றனர், இதன் மூலம் இவர்களை நுகர்வு வாதத்தினுள் இழுத்து, உணர்வுபூர்வமான ஆன்மீக வாழ்க்கைக்குக் கிட்டத்தட்ட நேரமே இல்லாமல் போகும் படிச் செய்கின்றனர். புதிய பொருட்களை வாங்கப் பணம் தேவை. எனவே பணத்தை வணங்க வேண்டுமென்று இளைஞர்களுக்குச் சொல்லித் தரப்படுகிறது. பணம் வெற்றிகளைக் கொண்டுவரும், எனவே இளைஞர்கள் காரிய நாட்டமுடையவர்களாக இருக்க வேண்டும், அப்போது தான் வாழ்க்கையில் வெற்றி கிட்டும் என்று போதிக்கப்படு கிறது. எப்பாடுபட்டாவது வெற்றியடைய வேண்டும், எப் படியாவது செல்வம் சேர்க்க வேண்டும்—இந்த கோஷங்களைத்தான் இளைஞர்களின் மனதில் புகுத்த ஏகாதிபத்திய நாடுகளின் முதலாளி வர்க்கம் முயலுகிறது.

இளைஞர்களுடைய மனநிலையின் சிறப்பு அம்சங் களை, புற உலகைப் புரிந்து கொள்வதில் வெளிப்படும் உணர்ச்சிகளை முதலாளி வர்க்கம் கவனத்தில் கொள் கிறது. இளைஞர்களின் மீது பூர்ஷ்வா ஆன்மீக மதிப்பு களைத் திணிக்க மேலைய நாகரிகத்தின் நவீன "கடவுளர் கள்", கதாநாயகர்கள் உருவாக்கப்படுகின்றனர். பாப் இசை, திரைப்படம், விளையாட்டில் இத்தகைய கதாநாயகர்களைப் பற்றி முதலாளித்துவ நாடுகளின் தகவல் ஒலிபரப்புச் சாத னங்கள் பெரும் பிரசாரம் செய்த வண்ணமிருக்கிறது. இந்த கதாநாயகர்களைக் கண்டு தலைவணங்குங்கள், இவர்களைக் கண்டு பெருமிதமடையுங்கள், இவர்களைப் போல் வாழுங்கள், இவர்களின் புகழ்பாடுங்கள் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. இவர்களைப் போலிருக்க பாடுபடுவதுதான் லட்சியமாக இருக்க வேண்டுமென்ற

கருத்து இளைஞர்களின் மீது திணிக்கப்படுகிறது, இதனால் மற்றவர்களைப் புண்படுத்த நேர்ந்தாலும் பரவாயில்லை என்று சொல்லித் தரப்படுகிறது.

இக்கதாநாயகர்கள் ஒரே மாதிரியின்படித் தோற்று விக்கப்படுகின்றனர். இவர்கள் பிரபலமானவர்களாயிருப்பர், இவர்களிடம் செல்வம் குவிந்திருக்கும், இவர்களுடைய வெளித் தோற்றம் கவர்ச்சிகரமானதாயிருக்கும், எதாவ தொரு "சுவாரசியமான பலவீனம்" இவர்களிடமிருக்கும்—மிகையாக மதுபானம் அருந்துவார்கள் அல்லது போதைப் பொருளைப் பயன்படுத்துவார்கள் அல்லது சட்டத்தை மீறுபவர்களாயிருப்பார்கள்.

கதாநாயகர்களைத் தோற்றுவிப்பது என்பது ஒரு விளையாட்டல்ல, இது இளைஞர்களின் விஷயத்தில் முதலாளி வர்க்கம் கடைப்பிடிக்கும் ஒரு தீவிர கொள்கையாகும். இளைஞர்களின் கவனத்தை சமூகப் போராட்டம், சமத்துவம், நீதியிலிருந்து திசை திருப்புவது, மாயைகளை (இவை மிக அபூர்வமாகத்தான் நிறைவேறும், கோடானு கோடி இளைஞர்க்ளுக்கு இவை இனிப்பான கனவுகளாக, எதார்த்த வாழ்க்கையோடு சம்மந்தமற்றவையாக இருக்கும்) திணிப்பது என்பதுதான் இக்கொள்கையின் நோக்கமாகும்.

"இளைஞர் கலாசாரம்" என்றழைக்கப்படுவதன் உதவியோடும் இளைஞர்களின் கண்ணோட்டங்கள் உருவாவதன் மீது முதலாளி வர்க்கம் தீவிரத் தாக்கம் செலுத்துகிறது. இந்த கலாசாரம் எதோ இளைஞர்களுக்கு மட்டும் தனியாகத் தோற்றுவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. உண்மையில் இதற்கும் "வெகுஜன கலாசாரத்திற்கும்" சாராம்சத்தில் பெரிய வேறுபாடு எதுவுமில்லை, பல சந்தர்ப்பங்களில் இது "வெகுஜன கலாசாரத்தின்" ஒரு பகுதியாக மட்டுமே திகழுகிறது. "இளைஞர் கலாசாரமும்" விவரம் புரியா

நுகர்வாளனுக்கானது. இதுவும் பாலுணர்வு, வன்முறை, அர்த்தமற்ற சிரிப்பு ஆகியவற்றின் அடிப்படையிலானது. “இளைஞர் கலாசாரம்” பரவுவதானது பூர்ஷ்வா சித்தாந்தத்திற்கேற்ற கருத்துகள், உலக கண்ணோட்டங்களை வளர்க்க உதவும். வாழ்க்கையின் அர்த்தமே பொழுது போக்குகளும் கேளிக்கைகளுமாகும் என்பதுதான் இதன் அடிப்படையாகும். எதிர்காலத்தைப் பற்றி, சமூகப் பிரச்சினைகள், நவீன சமுதாயத்தின் குறைபாடுகளைப் பற்றி சிந்திக்கவே கூடாது, முக்கியமாக, ராக் இசை அல்லது ஒழுக்கக்கேடான வாழ்க்கையில் மூழ்கி எதார்த்தத்தை மறக்க வேண்டும் என்கிறது இது.

பூர்ஷ்வா சமுதாயத்தின் ஆன்மீக நெருக்கடி இன்று ஏகாதிபத்திய நாடுகளின் எல்லா சமூகப் பிரிவுகளையும் ஆட்கொண்டுள்ளது. பூர்ஷ்வா சமுதாயத்தில் மேன்மேலும் அதிகரித்து வரும் தனிமையுணர்வும் அன்னியமயப்படும் உணர்வும், எதிர்கால நோக்கங்கள், வாழ்க்கை லட்சியங்கள் இல்லாமல் போவதும், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற குறைபாடுகளின் பெரும் சுமை, எதிர்கால நம்பிக்கையின்மை ஆகியவற்றோடு சேர்ந்து போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் பழக்கம் பெருமளவில் பரவ இட்டுச் சென்றுள்ளது தற்செயல் அல்ல. இன்று இது மிகப் பெரும் ஏகாதிபத்திய நாடுகளில் ஒரு மிக முக்கியப் பிரச்சினையாகியுள்ளது.

போதைப் பொருட்களுக்கும் குடிப்பழக்கத்திற்கும் அடிமையானவர்கள் அதிகமாக இருப்பதை ஏகபோக முதலாளி வர்க்கம் விரும்புகிறது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1980க்களின் நடுப்பகுதியில் போதைப் பொருட்களுக்கும் குடிப்பழக்கத்திற்கும் அடிமையானவர்களின் எண்ணிக்கை 30 மில்லியனுக்கும் அதிகமாகும்; இவர்களில் சுமார் 5 லட்சம் பேர் மிக ஆபத்தான போதை

மருந்தாகிய ஹிரோயினை அடிக்கடிப் பயன்படுத்தினர். ஜப் பான், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதி கரித்து வருகிறது.

போதை மருந்துப் பழக்கம், முதலாளி வர்க்கத்தால் ஒடுக்கப்படும் மக்களின் சமூக கோபத்திலிருந்து முதலாளி களைப் பாதுகாக்கும் வழிகளில் ஒன்றாகியுள்ளது. ஆனால் அதே நேரத்தில் இது பூர்ஷ்வா சமுதாயம் சீர்குலைய இட்டுச் செல்கிறது, உள்ளிருந்தே அதன் அடிப்படைகளைக் குலைக்கிறது, எல்லா சமூகப் பிரிவினரையும்—வேலை யில்லாதோர் முதல் இராணுவத்தினர், உயர் அதிகாரிகள் வரை அனைவரையும்—பாதிக்கிறது.

ஏகாதிபத்திய நாடுகளில் போதை மருந்துகள் பயன் படுத்தப்படுவது குற்றங்கள் அதிகரித்துள்ளதுடன் பிரிக்க இயலாதபடித் தொடர்புடையது. கோடிக்கணக்கில் கிடைக் கும் லாபத்திற்காக சர்வதேச அளவில் போதை மருந்து வியாபாரம் நடைபெறுகிறது, இதில் ஆயிரக்கணக்கானோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஏகாதிபத்திய நாடுகளில் இன்று குற்றங்களும் வன் முறையும் பெரிதும் அதிகரித்துள்ளதற்குப் போதை மருந்து மட்டும் காரணமல்ல. பூர்ஷ்வா ஒழுக்கம், நன்னெறியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிதான் அதன் அடிப்படையாகும்.

அமெரிக்க ஐக்கிய நாடு பல குற்றச் சாதனைகளைப் படைத்துள்ளது. 20ஆம் நூற்றாண்டில் இங்கே 8 லட்சத் திற்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் குற்றவாளிகளின் குண்டுகளுக்குப் பலியாகியுள்ளனர், இது அமெரிக்கா பங்கேற்ற யுத்தங்களில் மாண்டவர்களின் எண்ணிக்கையை விட ஒரு சில லட்சங்களுக்கு அதிகமாகும். பெரும் அமெரிக்க நகரங்களில் வசிப்பவர்கள் இடையறா அச்சத்தில் வாழுகின்றனர், ஏனெனில் இங்கே குற்றம் தொற்று

நோயாகியுள்ளது. குற்றங்கள் அதிகரித்துள்ளதுதான் மக்களுடைய அச்சம், நிம்மதியின்மைக்கான முக்கியக் காரணங்களில் ஒன்றாகும்.

பல பெரும் ஏகாதிபத்திய நாடுகளில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பெரும் குற்றக் கும்பல்கள்—மாஃபியா—உள்ளன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் இந்த மாஃபியாவின் ஆண்டு புரள்வு நியூயார்க் பங்கு மார்க்கெட்டில் ஓராண்டில் விற்கப்படும் பங்குகள், ஸ்டாக்குகளின் மொத்த மதிப்பை விட அதிகமாகும். அமெரிக்க சட்ட அமைச்சகத்தின் மிகத் தோராயமான மதிப்பீட்டின்படி இது ஆண்டிற்கு 120 பில்லியன் டாலர்களாகும்.

"ஒரு சமுதாயம் ஏழ்மையைக் குறைக்காமல் தன் செல்வத்தைப் பெருக்குகிறது என்றால், அச்சமுதாயத்தில் மக்கள்தொகையை விட குற்றங்கள் வேகமாக அதிகரிக்கின்றன என்றால் அச்சமுதாய அமைப்பின் மையத்தில் அழுகிப் போன ஏதோ ஒன்று இருக்க வேண்டும்" என்றார் கா. மார்க்ஸ். *

ஏகாதிபத்திய நாடுகளின் அரசாங்கங்களால் மாஃபியாவை சமாளிக்க முடியவில்லை, ஏனெனில் இது நிலவுவதற்கான முக்கியக் காரணம் சமூக ரீதியில் அநீதியான பூர்ஷ்வா அமைப்பாகும். குற்றங்கள் முன்பின் காணா அளவிற்கு அதிகரித்து வருவதானது மொத்தத்தில் பூர்ஷ்வா சமுதாயத்தின் நெருக்கடி, குறிப்பாக பூர்ஷ்வா நீதி முறையின் நெருக்கடி வலுப்பட்டு வருவதற்கு ஒரு பயங்கர சான்றாகும்.

மிகக் கடுமையான குற்றமிழைத்த ஒருவனுக்கு 2—3 ஆயுள் தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. ஒரு சில ஆண்டுகளில் அவன் விடுதலை செய்யப்படுகிறான். ஏனெனில்

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 16, p. 489.

"செல்வாக்கு மிக்க நண்பர்கள்" அவனுக்காக முறை யிட்டனர். இது என் சாத்தியமாகிறது? எல்லாமே வாங்கி, விற்கப்படும் பூர்ஷ்வா சமுதாயத்தில் பணம் தந்து சிறையி லிருந்தும் வெளிவரலாம்.

பூர்ஷ்வா ஒழுக்கம், சட்டமுறை, சித்தாந்தம், அரசிய லின் நெருக்கடி ஆழமாகி வருகிறது.

பூர்ஷ்வா வாழ்க்கை முறையின் லட்சியங்கள் தம் செல் வாக்கை இழந்து வருகின்றன. சமுதாயத்தை உறுதியோடு புதுப்பிக்க வேண்டுமென்ற நாட்டம் மக்கள் மத்தியில் வளர்ந்து வருகிறது. தொழிலாளி வர்க்கமும் அதன் புரட்சிக் கட்சிகளும் சமுதாயத்தின் முன்னணிப் படை என்ற அங்கீகரிப்பை மேன்மேலும் பரவலாகப் பெற்று வரு கின்றன. புரட்சிகர ஜனநாயக இயக்கமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமும் மேன்மேலும் வளர்ந்து வருகின்றன; இது மனிதனை மனிதன் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி ஆழமாகி வருவதை நன்கு ஊர்ஜிதப்படுத்துகிறது.

20ஆம் நூற்றாண்டில் முதலாளித்துவம் மனிதகுலத் தில் பெரும்பான்மை மீது செலுத்தி வந்த முழு ஆதிக் கத்தை இழந்து விட்டது, உலகில் முதலாளித்துவச் சுரண் டல் கணிசமாக குறுகியுள்ளது. இது தவிர்க்க இயலா அழிவை நோக்கிச் செல்கிறது.

## சொற்றொடர் விளக்கம்

**அடித்தளமும் மேற்கட்டுமானமும்**—சொத்துடைமை உறவுகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார, உற்பத்தி உறவுகள் சமுதாயத்தின் அடித்தளமாகும்; இதன் மீது இது நிர்ணயிக்கும் மேற்கட்டுமானம்—கருத்துகள், சித்தாந்த உறவுகள், சட்ட மற்றும் அரசியல் நிறுவனங்கள் ஆகியவற்றின் முறை—எழுகிறது.

**அடிமையுடைமை அமைப்பு**—மனிதகுல வரலாற்றின் முதல் பகை முரணியல்பான வர்க்க சமூக அமைப்பு; இதில் உற்பத்திச் சாதனங்களும் உழைப்பாளிகளாகிய அடிமைகளும் அடிமையுடைமையாளர்களுக்குச் சொந்தமாக இருந்தனர், மனிதனை மனிதன் சுரண்டுவது இதன் அடிப்படையாக விளங்கியது.

**அரசியல்**—வர்க்கங்கள், மற்ற சமூகக் குழுக்களுக்கு இடையிலான உறவுகளுடன் தொடர்புடைய நடவடிக்கைத் துறை. ஆதிக்கம் செலுத்தக் கூடிய வர்க்கத்தின் அல்லது தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்தின் நலன் கருதி அரசாலோ, அரசியல் கட்சிகளாலோ நடத்தப்படுகிறது.

**அரசு**—பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசியலாட்சிக் கருவி.

**அன்னியச் செலாவணி**—சர்வதேசக் கணக்கு வழக்குகளில் பயன்படுத்தப்படும் அயல்நாட்டு அரசுகளின் பணம்.

**இராணுவ தொழிற்துறை இணையம்**—இது இராணுவ தொழிற்துறை ஏகபோகங்கள், இராணுவம் மற்றும் அரசு அதிகாரப் பிரிவின் கூட்டு; இது ஏகபோக மூலதன ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்காகவும், சொந்த லாபம் சம்பாதிப்பதற்காகவும் ஆயுதப் போட்டியை முடுக்கி விடுகிறது.

**உபரி மதிப்பு**—கூலித் தொழிலாளியால் தன் உழைப்புச் சக்தியின் மதிப்பிற்கு மேல் தோற்றுவிக்கப்படும் மதிப்பு, இதற்கு கூலி வழங்கப்படுவதில்லை, இதை முதலாளி அப்படியே அபகரிக்கிறான்.

**அமித உபரி மதிப்பு**—மிகையான உபரி மதிப்பு; தனி முதலாளி, தன் தொழிற்சாலையில் தோற்றுவிக்கப்பட்ட பண்டத்தின் தனி மதிப்பை, அதே பண்டத்தின் சமூக மதிப்பை விடக் குறைப்பதால் அதை சுவீகரித்து கொள்கிறான்.

**உபரி மதிப்பின் மொத்தம்**—கூலித் தொழிலாளியால் உற்பத்தி செய்யப்பட்டு, தொழிலாளர்களுக்கு எப்பங்கும் தராமல் முதலாளியால் அப்படியே சுவீகரிக்கப்படும் உபரி மதிப்பின் முழுமுதல் அளவு.

**உபரி மதிப்பின் விகிதம்**—தொழிலாளியை முதலாளி சுரண்டும் மட்டத்தைக் காட்டுகிறது. இது உபரி மதிப்பிற்கும் மாறும் மூலதனத்திற்கும் இடையிலான விகிதம், விழுக்காட்டில் வெளிப்படுத்தப்படுகிறது.

**ஒப்பீட்டு உபரி மதிப்பு**—அவசியமான உழைப்பு நேரத்தைக் குறைத்து, உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன்

மூலம் உபரி உழைப்பு நேரத்தைக் கூட்டி பெறப்படும் உபரி மதிப்பு.

**தனிமநிலை உபரி மதிப்பு** — வேலை நாளைக் கூட்டுவதன் மூலமோ, உழைப்பின் தீவிரத் தன்மையை அதிகப்படுத்துவதன் மூலமோ பெறப்படும் உபரி மதிப்பு.

**உழைப்பு:**

**அவசிய உழைப்பு** — அவசிய உற்பத்திப் பொருளைப் படைக்கச் செலவிடப்பட்ட உழைப்பு.

**உபரி உழைப்பு** — உபரி உற்பத்திப் பொருளைப் படைப்பதற்காகப் பொருளுற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் செலவழிக்கும் உழைப்பு.

**உழைப்பின் உற்பத்தித் திறன்** — மக்களுடைய உழைப்பு நடவடிக்கையின் செயல்வன்மை; ஓர் அலகு பொருளைத் தயாரிக்க எவ்வளவு நேரம் செலவிடப்படுகிறது என்பதை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது.

**உழைப்பின் தீவிரம்** — உழைப்பின் தீவிரத் தன்மை; இது ஒரு குறிப்பிட்ட அலகு நேரத்தில் எவ்வளவு உடல், மனச் சக்தி செலவிடப்படுகிறது என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது.

**உழைப்புச் சக்தி** — உழைப்பதற்கு மனிதனுக்குள்ள திறமை, பொருளாயதச் செல்வங்களை உருவாக்கும் பொழுது மனிதன் பயன்படுத்தும் உடல், மனச் சக்தியின் ஒட்டுமொத்தம்.

**உழைப்பு நேரம்:**

**முதலாளித்துவத்தின் கீழ் அவசியமான உழைப்பு நேரம்** — வேலை நாளின் ஒரு பகுதி; இந்நேரத்தில் தொழிலாளி தன் உழைப்புச் சக்தியின் மதிப்பிற்குச் சமமானதைத் தோற்றுவிக்கிறான்.

**முதலாளித்துவத்தின் கீழ் உபரி உழைப்பு நேரம்** — வேலை

நாளின் ஒரு பகுதி; இந்நேரத்தில்தான் தொழிலாளி உபரி மதிப்பைத் தோற்றுவிக்கிறான்.

**உற்பத்தி உறவுகள்**—பொருளாயதச் செல்வங்களின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வுப் போக்கில் மனிதர்களிடையே தோன்றும் சமூக உறவுகளின் ஒட்டு மொத்தம். உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை உறவுகள்தான் இவற்றின் அடிப்படையாகும்.

**உற்பத்திச் சக்திகள்**—உற்பத்திச் சாதனங்கள் மற்றும் அனுபவம், ஞானம், உழைப்புத் திறமையைக் கொண்டு உற்பத்திச் சாதனங்களை இயக்கும் மனிதர்கள் இருவரும் சேர்ந்து உற்பத்திச் சக்திகளை உருவாக்குகின்றனர்.

**உற்பத்திப் பொருள்:**

**அவசிய உற்பத்திப் பொருள்**—பொருளுற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமூக உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி; இது உழைப்பாளி மற்றும் அவன் குடும்பம் உயிர்வாழவும் அவனுடைய கல்வி, பயிற்சிக்கும் அவசியமானது.

**உபரி உற்பத்திப் பொருள்**—அவசியமான உற்பத்திப் பொருளுக்குக் கூடுதலாக உழைப்பாளிகளால் தோற்றுவிக்கப்படும் பொருளாயதச் செல்வங்களின் ஒட்டுமொத்தம்.

**உற்பத்தி முறை**—சமுதாய வளர்ச்சியின் குறிப்பிட்ட காலகட்டத்தில் பொருளாயதச் செல்வங்களை உற்பத்தி செய்யும் முறை. இது உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் ஒற்றுமையாகும்.

**உற்பத்தியின் அராஜகம்**—பொருளாதார விதிகள் தன்னிச்சையாகச் செயல்படும் சூழ்நிலையில் சமூக உற்பத்தி தாறுமாறாக, சீரிசைவின்றி வளருவதாகும். உற்பத்திச்

சாதனங்களின் மீதான தனியுடைமை நிலவும் சமுதாயத்தின் பண்ட உற்பத்திக்கு உரித்தானது.

**உற்பத்தியின் விலை**—முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பண்டத்தின் விலை; இது உற்பத்திச் செலவுகளும் சராசரி லாபமும் சேர்ந்தது; பண்ட மதிப்பின் மாற்றியமைக்கப்பட்ட வடிவம்.

**ஊதியம்:**
**முதலாளித்துவத்தின் கீழ் ஊதியம்**—உழைப்புச் சக்தி என்ற பண்ட மதிப்பின் மாற்றியமைக்கப்பட்ட வடிவம்.

**ஏகபோக விலை**—சந்தை விலையின் வடிவம்; ஏகபோகங்களால் நிர்ணயிக்கப்படும் இது ஏகபோக லாபம் பெற வழிவகுக்கிறது.

**ஏகாதிபத்தியம்**—ஏகபோக முதலாளித்துவம், அதன் வளர்ச்சியில் கடைசி, உச்ச கட்டம்; அழுகி மறையும் முதலாளித்துவம், சோஷலிசப் புரட்சியின் முன்னணைப் பொழுது.

**ஒப்பீட்டு உபரி மக்கள்தொகை**—முதலாளித்துவத்தில் முதலாளிகளுக்குத் தேவைப்படும் உழைப்புச் சக்தியோடு ஒப்பிடும் பொழுது ஒப்பீட்டளவில் மிகுதியான உழைப்பாளிகளின் எண்ணிக்கை.

**ஒருங்கிணைப்பு** — பார்க்க: **முதலாளித்துவ ஒருங்கிணைப்பு.**

**கம்யூனிசம்**—உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுவுடைமையின் அடிப்படையிலான சமூக அமைப்பு; இது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு முழு வாய்ப்பளிக்கிறது. முதலாளித்துவத்திற்கு மாற்றாக வரும் இது மனித சமு



18—1165

தாயத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்தின் உச்ச கட்டமாகும். இது தன் வளர்ச்சியில் சோஷலிசம் என்ற கீழ்நிலை கட்டத்தையும், கம்யூனிசம் என்ற உச்ச கட்டத்தையும் உள்ளடக்கியது.

**காலனியாதிக்கம்**—ஏகாதிபத்திய அரசுகளின் கொள்கை; இது பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகளின் மக்களை நேரடியாக அடிமைப்படுத்துவதாகும்.

**கூலியுழைப்பு**—முதலாளித்துவ தொழில் நிறுவனத்தில் பணி புரிபவர்களின் உழைப்பு; உற்பத்திச் சாதனங்கள் மறுக்கப்பட்ட இப்பணியாளர்கள் தம் உழைப்புச் சக்தியை முதலாளிகளுக்கு விற்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

**சமூக பொருளாதார அமைப்பு**—வரலாற்று ரீதியான சமுதாய வடிவம்; உற்பத்தி முறையால், ஆதிக்கம் செலுத்தும் உற்பத்தி உறவுகளின் முறையால் நிர்ணயிக்கப்படுகிறது; இதில் அடித்தளமும் மேற்கட்டுமானமும் உள்ளன.

**சமூகப் புரட்சி**—பழையவை தூக்கியெறியப்பட்டு, புதியன புகுதல், முற்போக்கு சமூக அமைப்பு நிலைபெறுதல்.

**சித்தாந்தம்**—அரசியல், சட்ட, இன்ன பிற கண்ணோட்டங்கள், கருத்துகளின் முறை, இதுதான் இறுதியில் பார்க்குமிடத்து சமூக உறவுகளைப் பிரதிபலிக்கிறது; இதற்கு வர்க்க சமுதாயத்தில் வர்க்கத் தன்மை உண்டு.

**சொத்துடைமை**—உற்பத்திச் சாதனங்களையும், அவற்றின் உதவியால் தோற்றுவிக்கப்படும் பொருளாயதச் செல்வங்களையும் சுவீகரிப்பது சம்பந்தமாக மனிதர்களிடையே நிலவும் உறவுகள்.

**அரசு முதலாளித்துவச் சொத்துடைமை**—பூர்ஷ்வாச் சொத்துடைமை வடிவம்; இங்கே பூர்ஷ்வா அரசு—"தேசிய முத

லாளி"—மொத்தமாகவோ பகுதியளவிற்கோ உற்பத்திச் சாதனங்களைத் தன்னிடம் வைத்துள்ளது.

**சோஷலிசம்**—கம்யூனிச சமூக அமைப்பின் முதல் கட்டம். உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுவுடைமை, சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்ட, சமவுரிமையுள்ள சமுதாய உறுப்பினர்களின் உழைப்பு ஆகியவற்றின் அடிப்படையிலான சமூக பொருளாதார அமைப்பு; "திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம்" என்ற கோட்பாட்டின்படி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, தனிநபரின் பன்முக வளர்ச்சிக்கு உதவும் நோக்கத்தோடு திட்டமிட்ட வகையில் வளரும் சமுதாயம்.

**தேசிய வருமானம்**—ஒரு நாட்டில் குறிப்பிட்ட காலகட்டத்தில் (சாதாரணமாக, ஒரு வருடத்தில்) மீண்டும் தோற்றுவிக்கப்பட்ட மதிப்பு.

**நவீன காலனியாதிக்கம்**—அரசு சுதந்திரத்தைப் பெற்ற முன்னாள் காலனி நாடுகளை முதலாளித்துவப் பொருளாதார வரம்பிற்குள் வைப்பதற்காக ஏகாதிபத்திய அரசுகள் பின்பற்றும் பொருளாதார, அரசியல், இராணுவ, சித்தாந்தச் சாதனங்களின் ஒட்டுமொத்தம்.

**நிதி மூலதன ஏகபோகக் குழு**—தொழிற்துறை மற்றும் வங்கி ஏகபோகங்களைத் தம் கரங்களில் வைத்துக் கொண்டு வளர்ச்சியடைந்த பெரும் முதலாளித்துவ நாடுகளில் நடைமுறையில் பொருளாதார, அரசியல் ஆதிக்கம் செலுத்தும் பெரும் முதலாளிகளின் சிறு குழு.

**நிலப்பிரபுத்துவம்**—பகை முரணியல்பான வர்க்க சமூக அமைப்பு; இதில் நிலம் நிலப்பிரபுகளுக்குச் சொந்தமானதாயிருந்தது, பண்ணையடிமை விவசாயிகள் பாதியளவு

சொந்தமாக இருந்தனர், நிலப்பிரபுகளால் சுரண்டப்பட்டனர்.

**பங்கு**—இது குறிப்பிட்ட தொகை கூட்டுப் பங்கு கம்பெனியின் மூலதனத்தில் சேர்க்கப்பட்டதற்குச் சான்று பகர்க்கும் ஒரு பத்திரம் ஆகும்; இது இக்கம்பெனியின் காரியங்களில் பங்கேற்கவும் குறிப்பிட்ட அளவு லாபத்தைப் பெறவும் இதன் சொந்தக்காரருக்கு உரிமையளிக்கிறது.

**கட்டுப்பாட்டுப் பங்குத் தொகுதி**—கூட்டுப் பங்கு கம்மெனியில் ஆதிக்கம் செலுத்த உதவும் பங்குகளின் எண்ணிக்கை.

**கூட்டுப் பங்கு கம்பெனி**—பெரும் மூலதனத்தையுடைய பெரிய தொழில் நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு வடிவம்; இம்மூலதனம் பங்குகளை விற்பதால் உருவாக்கப்படுகிறது.

**பணம்**—பண்டப் பரிவர்த்தனையில் சர்வபொது சமானமாக விளங்கும் விசேஷப் பண்டம்.

**பணவியல் நெருக்கடி**—முதலாளித்துவ அரசுகளின் உள்நாட்டு பண மற்றும் நிதி முறைகள், சர்வதேச அன்னியச் செலாவணி, நிதி உறவுகளில் ஏற்படும் கடும் குழப்பம்.

**பணவீக்கம்**—பண்டப் பரிவர்த்தனையின் தேவைகளுக்கு அதிகமான காகிதப் பணத்தைப் பணப் புழக்கத்தில் விடுவது, இதனால் காகிதப் பணம் தன் மதிப்பை இழக்கிறது.

**பண்டம்**—உழைப்பின் உற்பத்திப் பொருள், இது தனிப்பட்ட நுகர்விற்காக அல்ல, விற்பனைக்காக உற்பத்தி செய்யப்படுகிறது.

**பாட்டாளி வர்க்கத்தின் நிலை ஒப்பீட்டளவில் கீழடைதல்**—செல்வம் சேர்க்கும் முதலாளி வர்க்கத்துடன் ஒப்பிடுகையில் பாட்டாளி வர்க்கத்தின் நிலை மோசமடைதல்.

தேசிய வருமானம், மொத்த சமூக உற்பத்திப் பொருள் மற்றும் தேசிய செல்வத்தில் தொழிலாளி வர்க்கத்தின் பங்கு குறைதல் இதன் முக்கிய அறிகுறியாகும்.

**பாட்டாளி வர்க்கத்தின் நிலை நடைமுறையில் கீழடைதல்**—முதலாளித்துவத்தில் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம் கீழடைதல். இது பாட்டாளி வர்க்கத்தின் உழைப்பு மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகள், அதன் சமூக நிலை மோசமடைவதில் வெளிப்படுகிறது.

**புராதன கூட்டுச் சமூக அமைப்பு**—மனிதகுல வரலாற்றில் முதல் சமூக பொருளாதார அமைப்பு. இங்கே உற்பத்தி உற்பத்திச் சாதனங்களின் மீதான தனிப்பட்ட கூட்டுச் சமூகங்களின் கூட்டுச் சொத்துடைமையின் அடிப்படையில் நடைபெற்றது. இது உற்பத்திச் சக்திகளின் எளிய வளர்ச்சி மட்டத்திற்கு ஏற்றதாயிருந்தது.

**பொருளாதாரம்**—வரலாற்று ரீதியில் திட்டவட்டமான உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தம், சமுதாயத்தின் பொருளாதார அடித்தளம்.

**பொருளாதார நலன்கள்**—மக்களுடைய நடவடிக்கையின் புறவய தூண்டுதல்கள்; இவை உற்பத்தியில் வேலை செய்பவர்களின் நிலைக்கும் அவர்களுடைய பொருளாயத தேவைகளுக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்துகின்றன.

**பொருளாதார விதிகள்**—மனித சமுதாய வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் பொருளாயதச் செல்வங்களின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வை ஒழுங்கமைக்கக் கூடிய புறவய விதிகள்.

**போட்டி**—பண்ட உற்பத்தி மற்றும் விற்பனைக்கு அனுகூலமான சூழ்நிலைகளைப் பெறுவதற்காகத் தனிப் பண்ட

உற்பத்தியாளர்களிடையே நடக்கும் பகை முரண்பாட்டுப் போராட்டம்.

**மதிப்பு**—பண்டத்தில் உருக்கொண்டுள்ள பண்ட உற்பத்தியாளர்களின் சமூக உழைப்பு.

**மிகையுற்பத்தியின் பொருளாதார நெருக்கடி**—முதலாளித்துவச் சுழற்சியின் ஒரு கட்டம்; இதில் பண்டங்கள் மிகையாக உற்பத்தி செய்யப்படுகின்றன, பெருமளவில் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிறது, உழைப்பாளிகளின் நிலை பெரிதும் மோசமடைகிறது.

**முதலாளித்துவ ஏகபோகம்**—பெரும் முதலாளித்துவ கம்பெனி (அல்லது இணையம்); இது ஏகபோக உயர் லாபம் பெறுவதற்காகக் குறிப்பிட்ட பொருளின் உற்பத்தி மற்றும் விற்பனையில் கணிசமான பங்கைத் தன்னிடம் வைத்துள்ளது.

**முதலாளித்துவ ஒருங்கிணைப்பு**—முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார, அரசியல் ஒருங்கிணைப்புப் போக்கு; இது அரசுகளுக்கு இடையிலான பொருளாதார, இன்ன பிற உடன்படிக்கைகளின் வடிவத்தை மேற்கொள்கிறது; பெரும் ஏகபோக மூலதனத்தின் நலன்களைப் பூர்த்தி செய்வது தான் இதன் முக்கிய நோக்கமாகும்.

**முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடு**—உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் உழைப்பின் உற்பத்திப் பொருள் தனியார் முதலாளித்துவ வடிவில் சுவீகரிக்கப் படுவதற்கும் இடையிலான முரண்பாடு.

**முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி**—சமூக அமைப்பு என்ற வகையில் முதலாளித்துவம் புரட்சிகர

ரீதியில் தகர்ந்து விழும் கட்டம்; இக்கட்டத்தில் உலக முத லாளித்துவ அமைப்பு உள்ளுக்குள் சிதைகிறது, மேன் மேலும் புதிய அங்கங்கள் அதிலிருந்து பிரிகின்றன, சோஷலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான போராட்டம் உலகம் தழுவிய அளவில் நடைபெறுகிறது.

**முதலாளித்துவம்**—கடைசி சுரண்டல் சமூக பொருளா தார அமைப்பு, நிலப்பிரபுத்துவத்தின் உள்ளே தோன்றி யது; இது சோஷலிசத்தால் மாற்றப்படும். இது உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியார் முதலாளித்துவச் சொத் துடைமை மற்றும் கூலியுழைப்பு சுரண்டல் ஆகியவற்றின் அடிப்படையிலானது.

**அரசு ஏகபோக முதலாளித்துவம்**—ஏகபோக முதலாளித் துவத்தின் வளர்ச்சிக் கட்டம்; இங்கே முதலாளித்துவ அமைப் பை பேணிக் காப்பதற்காகவும், நிதி மூலதனம் அதிகபட்ச லாபத்தைப் பெறுவதற்காகவும், புரட்சிகரத் தொழிலாளர் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குவதற் காகவும், உலக சோஷலிச அமைப்பைச் சேர்ந்த நாடுகளுக்கு எதிராய் போராடுவதற்காகவும் பூர்ஷ்வா அரசு பலம் ஏக போக சக்திகளுடன் இணைக்கப்படுகிறது.

**மூலதன ஏற்றுமதி**—ஏகபோகங்கள், நிதி மூலதன ஏகபோகக் குழுவின் லாபங்களைப் பெருக்குவதற்காகவும், ஏகாதிபத்திய அரசுகள் பல்வேறு விதமான பொருளாதார, அரசியல் அனுகூலங்கள், மேம்பாடுகளைப் பெறுவதற்காக வும் மூலதனத்தை அயல் நாடுகளில் முதலீடு செய்தல்.

**மூலதனத் திரட்சி**—உபரி மதிப்பு மூலதனமாக மாற்றப் படுதல்.

**மூலதனம்**—தானே அதிகரிக்கும் மதிப்பு; இது கூலி உழைப்புச் சக்தி சுரண்டப்படுவதால் உபரி மதிப்பைக்

கொண்டுவருகிறது. மூலதனம் என்பது உற்பத்திச் சாதனங்களைத் தன்னிடம் வைத்துள்ள முதலாளி வர்க்கத்திற்கும் இந்த உற்பத்திச் சாதனங்கள் மறுக்கப்பட்டதால் தம் உழைப்புச் சக்தியை முதலாளிகளுக்கு விற்று உயிர்வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான குறிப்பிட்ட உற்பத்தி உறவாகும். **கடன் மூலதனம்**—பண மூலதனம்; இது குறிப்பிட்ட காலகட்டத்திற்கு, குறிப்பிட்ட வட்டிக்குப் பணம் வைத்திருக்கும் முதலாளியால் இன்னொரு முதலாளிக்கு அளிக்கப்படுகிறது.

**தொழிற்துறை மூலதனம்**—தொழிற்துறை, விவசாயம், போக்குவரத்து, கட்டுமானத்தின் பொருளுற்பத்தித் துறையில் செயல்படும் மூலதனம். **நிதி மூலதனம்**—ஏகபோக வங்கி மூலதனத்துடன் ஒன்று கலந்த ஏகபோக தொழிற்துறை மூலதனம்.

**பண மூலதனம்**—மூலதனமாக மாற்றப்பட்ட பணம், அதாவது உபரி மதிப்பைக் கொண்டுவரக் கூடிய, கூலியுழைப்பைச் சுரண்டுவதற்காகப் பயன்படுத்தப்படக் கூடிய மதிப்பு.

**மாறா மூலதனம்**—மூலதனத்தில் ஒரு பகுதி; இது உற்பத்திச் சாதனங்களை வாங்குவதற்காகச் செலவிடப்படுகிறது. உற்பத்திப் போக்கில் இதன் அளவு மாறுவதில்லை.

**மாறும் மூலதனம்**—மூலதனத்தில் ஒரு பகுதி; உழைப்புச் சக்தியை வாங்குவதற்காக முதலாளி இதைச் செலவிடுகிறான். உற்பத்திப் போக்கில் இதன் அளவு மாறுபடுகிறது.

**வர்த்தக மூலதனம்**—தொழிற்துறை மூலதனத்திலிருந்து பிரிக்கப்பட்ட பகுதி; லாபம் பெறும் நோக்கத்தோடு பண்ட விற்பனையில் ஈடுபடுவதுதான் இதன் முக்கியப் பணி.

**லாப விகிதம்**—உபரி மதிப்பிற்கும் முன்னிடப்பட்ட மூலதனம் முழுவதற்கும் இடையிலான விகிதம்(விழுக்காட்

டில்); இது முதலாளித்துவத் தொழில் நிறுவனத்தின் லாபகரத் தன்மையைக் காட்டும் மிக முக்கியக் குறியீடு.

**சராசரி லாப விகிதம்**—மூலதனத்தின் அங்ககக் கட்டமைவு வெவ்வேறானதாக இருந்தாலும் முதலாளித்துவ உற்பத்தியின் பல்வேறு துறைகளில் முதலிடப்பட்ட ஒரே அளவு மூலதனத்திற்குக் கிட்டும் ஒரே அளவு லாபம்.

**லாபம்:**

**முதலாளித்துவ லாபம்**—உபரி மதிப்பின் மாற்றியமைக்கப் பட்ட வடிவம்; இது முதலாளித்துவ உற்பத்திச் செலவுகள் போக எஞ்சியிருக்கும் வருமானமாகும்.

**வர்த்தக லாபம்**—உற்பத்திப் போக்கில் கூலியுழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்பில் ஒரு பகுதி; வர்த்தக முதலாளியால் சுவீகரிக்கப்படுகிறது.

**வங்கிகள்**—சேமிப்புப் பணத்தைத் தம்மிடம் வைத்து, அதைக் கடனாகத் தரும் நடவடிக்கைகளை நிறை வேற்றும் கடன், நிதி ஸ்தாபனங்கள்.

**வட்டி**—உபரி மதிப்பில் ஒரு பகுதி; இதைத்தான் செயல் படும் முதலாளி (தொழிலதிபர், வியாபாரி) கடன் முத லாளிக்கு, அவனுடைய பணத்தைக் குறிப்பிட்ட காலகட்டத் திற்குப் பயன்படுத்தியதற்காக அளிக்கிறான்.

**வரிகள்**—தனி நபர்கள், தொழிற்சாலைகள், நிறு வனங்களிடமிருந்து அரசு வசூலிக்கும் கட்டணம்.

**வர்க்கங்கள்:**

**சமூக வர்க்கங்கள்**—வரலாற்று ரீதியாகத் திட்டவட்டமான சமூக உற்பத்தியில் தாம் வகிக்கும் இடத்தாலும், உற்பத்திச் சாதனங்களின் பால் தமக்குள்ள உறவாலும் (இது பெரும் பாலும் சட்டத்தால் வரையறுக்கப்பட்டது), உழைப்பின் சமூக

ஒழுங்கமைப்பில் தாம் வகிக்கும் பாத்திரத்தாலும், எனவே சமூக செல்வத்தில் தாம் பெறும் பங்கின் அளவுகளாலும், இதை சுவீகரித்துக் கொள்ளும் முறையினாலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் பெரும் மக்கள் பகுதிகளாகும். வர்க்கங்களுக்கு இடையிலான முக்கிய வேறுபாடு உற்பத்திச் சாதனங்களின் பாலான இவற்றின் உறவுமுறையாகும்.

**பாட்டாளி வர்க்கம்**—முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் இல்லாத கூலித் தொழிலாளர்களின் வர்க்கம்.

**முதலாளி வர்க்கம்**—முதலாளித்துவ சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கம்; அடிப்படை உற்பத்திச் சாதனங்களைத் தன்னிடம் வைத்துள்ள இது கூலியுழைப்பைச் சுரண்டி வாழுகிறது.

**வர்த்தகம்**—கொள்வினை-கொடுப்பினை வடிவிலான உழைப்பின் உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனை.

**வெளிநாட்டு வர்த்தகம்**—குறிப்பிட்ட நாடு பிற நாடுகளுடன் நடத்தும் வர்த்தகம்; இதில் பண்டங்களின் ஏற்றுமதியும் இறக்குமதியும் அடங்கும்.

**வாடகை**—தொழில் நிறுவன நடவடிக்கையோடு தொடர்பற்ற சொத்து, நிலம், மூலதனத்திலிருந்து முறைப்படிக் கிடைக்கும் வருமானம்.

**நில வாடகை**—உபரி உற்பத்திப் பொருளில் ஒரு பகுதி; இது விவசாயத் துறையில் நேரடி உற்பத்தியாளர்களால் தோற்றுவிக்கப்பட்டு, நிலவுடைமையாளரால் சுவீகரிக்கப்படுகிறது.

**விலை**—பண்ட மதிப்பின் பண வெளிப்பாடு.

**வேலையில்லாத் திண்டாட்டம்**—முதலாளித்துவத்தின் உள்ளே காணப்படும் புலப்பாடு; இதனால் உடலுரம்

வாய்ந்த மக்களில் ஒரு பகுதியினர் வேலையின்றி இருக்கின்றனர், உழைப்பு சேமப் படையை ஏற்படுத்துகின்றனர்.

**தீராத வேலையில்லாத் திண்டாட்டம்**—முதலாளித்துவ நாடுகளில் நிலவும் நிரந்தர வெகுஜன வேலையில்லாத் திண்டாட்டம்; இது முதலாளித்துவப் பொது நெருக்கடியின் பொழுது முதலாளித்துவச் சுழற்சியின் எல்லாக் கட்டங்களிலும் காணப்படுகிறது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை “Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR” என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098

**ஷோ-ரூம்**

136, அண்ணாசாலை, சென்னை—600002

**கிளைகள்**

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001
3—4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர்—641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008
செர்ரி ரோடு, சேலம்—636001

**விற்பனை நிலையங்கள்**

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்—627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம்—643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல்—624001

வி. இ. லெனின்

## கூட்டுறவு குறித்து

ஒரு விவசாய நாட்டில் சோஷலிசத்தை நோக்கியப் பாதையில் விவசாயத் துறையில் கூட்டுறவு எப்படி வளர்ச்சியடைய வேண்டும் என்பது பற்றிய லெனினின் விரிவான செயல்திட்டம் இத்தொகுப்பு நூலில் இடம் பெறும் கட்டுரைகளில் அடங்கியுள்ளது.

பிற்குறிப்புகளும் பெயர்க் குறிப்பகராதியும் இதில் தரப்பட்டுள்ளன.

வி. இ. லெனின்

## தேசிய இனப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்

லெனின் இந்நூலை 1913 அக்டோபர்-டிசம்பரில் எழுதினார். இதில் லெனின் தொழிலாளர் இயக்கத்தில் பிளவேற்படுத்துவதற்காகத் தேசியவாத பிரச்சாரத்தை நாடிய சந்தர்ப்பவாதிகளைச் சாடினார். அவர் பூர்ஷ்வா தேசியவாதத்திற்கு மாற்றாகப் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தை முன்வைத்தார். ஒரு நாட்டில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களையும் ஐக்கிய பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களில் அணிதிரட்ட வேண்டுமென்று கோரும் இக்கோட்பாடு பிரிந்து போகும் உரிமை உட்பட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கிறது.